வெளியீடு :29.12.2020 Issued: 29.12.2020

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினைந்தாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(FIFTEENTH ASSEMBLY)

வியாழக்கிழமை, மார்ச் 19, 2020—தொகுதி 76—எண் 1

Thursday, the 19th March 2020—Volume 76—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] **[Price Rs. 3.00**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

19–3–2020

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	vii-xii
Governor and Council of Ministers	xiii-xvii
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xix-xxii
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxiii-xxxii
1. இரங்கற்குறிப்பு—	
முன்னாள் உறுப்பினர் திரு. வே. தம்புசாமி அவர்கள் மறைவு	1-2
2. வினாக்கள்—விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	2-59
3. தகவல் கோரல்—	59-71, 79-80
(அ) கொரோனா வைரஸ் தாக்கம், பொருளாதார மற்றும் பொதுச் சுகாதார பாதிப்புகளைத் தடுக்க வலுவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் வரிச் சலுகைகள் அளித்தல்	59-66
*திரு. துரைமுருகன்	59-60, 63, 65
திரு. மு.க. ஸ்டாலின்	61
மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி	62-63
மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்	63-64
*மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்	64
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	65-66

பக்கங்கள்

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) திருவண்ணாமலை நகராட்சி, கட்டட சொத்து வரி, கடை வரி அதிகமாக வசூலிக்கப்படுதல் 66-71

திரு. எ.வ. வேலு 66-69

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 69-71

(இ) சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, உணவகம் மூடப்பட்டிருப்பது 79-80

*திரு. துரைமுருகன் 79-80

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் 80

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—

கொரோனா வைரஸ் பிரச்சினை காரணமாக வெளிநாடுவாழ் தமிழர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் 71-79

திரு. எஸ். ஆஸ்டின் 72-73

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 73-74

*திரு. எம். தமிமுன் அன்சாரி 74-75

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் 75-78

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 78-79

5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளித்தல்— 80-87

(அ) வினைத்திறன் மிகு மின் அளவிகள் பொருத்துதல், துணை மின் நிலையங்கள் அமைத்தல் மற்றும் தரமுயர்த்துதல், கடலோர மாவட்டங்களிலுள்ள மின் பாதைகளை புதைவடங்களாக மாற்றுதல் உள்ளிட்ட எரிசக்தித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை 80-82

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 81-82

பக்கங்கள்

5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

(ஆ) 1200 குறு, சிறு பாலங்கள் கட்டுதல், ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகள், வாய்க்கால்கள், ஓடைகள் மற்றும் கால்வாய்களின் குறுக்கே சிமென்ட் கான்கிரீட் தடுப்பணைகள் கட்டுதல், தனி நபர் கிணறுகள், சமுதாயக் கிணறுகள் அமைத்தல், ஊராட்சிக்கு ஒரு "முதியோர் சுய உதவிக் குழு" ஏற்படுத்துதல் உள்ளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை 82-84

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 82-84

(இ)பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகள் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் இயற்கை சீற்றங்களால் பழுதடைந்த சாலைகள் சீரமைத்தல், கோயம்புத்துர் மற்றும் மதுரை மாநகரத்தில் திறன்மிகு போக்குவரத்து முறை செயல்படுத்துதல், சென்னையில் புதுமுறைக் காணல் மையம் ஏற்படுத்துதல் 'மியாவாக்கி' முறையில் மரங்கள் நடுதல், அனைத்து துப்புரவுப் பணியாளர்களும் "தூய்மைப் பணியாளர்கள்" என்றழைக்கப்படுதல் உள்ளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை 85-87

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 85-87

பக்கங்கள்

6. எரிக்தி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி மற்றும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி— 87-89

மாண்புமிகு திரு. பி. தங்கமணி 87-88

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 88-89

7. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) 89-269

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ 90, 135 138-151, 157, 193-194, 202-203, 212, 216-217, 220, 222-227, 246-267

*மாண்புமிகு திரு. இரா. காமராஜ் 115, 135-136, 158, 181-182, 184, 186, 189-190, 198, 203-204, 217-218, 228-246

பக்கங்கள்

7. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

*திரு. அ. சௌந்தரபாண்டியன்	111, 136-141, 145-147, 150, 152-156, 159-161
மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்	137
திரு. அர. சக்கரபாணி	143-144
*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	152
மாண்புமிகு திரு. பி. தங்கமணி	157
மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்	159
மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு	162,205
திரு. V.T. கலைச்செல்வன்	162-177
திரு. வி. ராதாகிருஷ்ணன்	177-183, 185-192
திரு. கரி. இராமசாமி	183, 199
*திரு. கு. பிச்சாண்டி	185-186
மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்	186-187, 219
திரு. இ. கருணாநிதி	192
திரு. ச. பாண்டி	194-201, 203-204
மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்	201-202
மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்	204-205
*திரு. கே. பழனி	205-212

பக்கங்கள்

7. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

டாக்டர் இரா. மாசிலாமணி	107, 129, 212-222
திரு. எ.வ. வேலு	220-221
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	225-226

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 269-270

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் – திரு. பன்வாரிலால் புரோகித்

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1.	**முதலமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**
		பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்
2.	**துணை முதலமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**
		நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்
3.	**வனத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:**
		வனம்
4.	**பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:**
		பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

5. **கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

6. **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் இலஞ்ச ஒழிப்பு சட்டம்

7. **நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம்

8. **மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி)

9. **சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

10. **உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

11. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி, இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள்

13. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:**

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

14. உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

15. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:**

கைத்தறி மற்றும் துணிநூல்

16. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:**

கால்நடை பராமரிப்பு

17. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

18. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

19. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம்

20. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:**

வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பம்

21. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:**

வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்

23. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி
24. ஊரகத் தொழில் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள்
25. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வக்ஃபு வாரியம்
26. போக்குவரத்துத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்
27. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்
28. தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்பொருளியல்

29.	**கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:** கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்
30.	**இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** இந்து சமய மற்றும் அறநிலையங்கள்
31.	**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினர் நலன்

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR – THIRU BANWARILAL PUROHIT

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**

 Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home, Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Highways and Minor Ports

2. **Deputy Chief Minister** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

 Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

3. **Minister for Forests** .. **The Hon. Thiru Dindigul C. Sreenivasan:**

 Forests

4. **Minister for School Education, Youth Welfare and Sports Development** .. **The Hon. Thiru K.A. Sengottaiyan:**

 School Education, Youth Welfare and Sports Development Department

5.	**Minister for Co-operation**	.. **The Hon. Thiru Sellur K. Raju:** Co-operation, Statistics and Ex-Servicemen Welfare
6.	**Minister for Electricity, Prohibition & Excise**	.. **The Hon. Thiru P. Thangamani:** Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses and Prevention of Corruption Act
7.	**Minister for Municipal Administration & Rural Development, Implementation of Special Programme**	.. **The Hon. Thiru S.P. Velumani:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Implementation of Special Programme
8.	**Minister for Fisheries and Personnel & Administrative Reforms**	.. **The Hon. Thiru D. Jayakumar:** Fisheries and Fisheries Development Corporation, Personnel and Administrative Reforms, Personnel and Administrative Reforms (Training)
9.	**Minister for Law, Courts & Prisons**	.. **The Hon. Thiru C.Ve. Shanmugam:** Law, Courts and Prisons, Mines & Minerals
10.	**Minister for Higher Education**	.. **The Hon. Thiru K.P. Anbalagan:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology

11. Minister for Social Welfare & Nutritious Noon Meal Programme	..	**The Hon. Dr. V. Saroja:** Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development, Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms & Nutritious Noon Meal Programme
12. Minister for Industries	..	**The Hon. Thiru M.C. Sampath:** Industries, Steel Control and Special Initiatives
13. Minister for Environment	..	**The Hon. Thiru K.C. Karuppannan:** Environment and Pollution Control
14. Minister for Food & Civil Supplies	..	**The Hon. Thiru R. Kamaraj:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control
15. Minister for Handlooms & Textiles	..	**The Hon. Thiru O.S. Manian:** Handlooms & Textiles
16. Minister for Animal Husbandry	..	**The Hon. Thiru Udumalai K. Radhakrishnan:** Animal Husbandry
17. Minister for Health & Family Welfare	..	**The Hon. Dr. C. Vijaya Baskar:** Health, Medical Education and Family Welfare

18. Minister for Agriculture	.. **The Hon. Thiru R. Doraikkannu:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development
19. Minister for Information & Publicity	.. **The Hon. Thiru Kadambur Raju:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press
20. Minister for Revenue and Disaster Management & Information Technology	.. **The Hon. Thiru R.B. Udhayakumar:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies, Disaster Management and Information Technology
21. Minister for Tourism	.. **The Hon. Thiru Vellamandi N. Natarajan:** Tourism, Tourism Development Corporation
22. Minister for Commercial Taxes	.. **The Hon. Thiru K.C. Veeramani:** Commercial Taxes, Registration and Stamp Act
23. Minister for Milk & Dairy Development	.. **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:** Milk and Dairy Development
24. Minister for Rural Industries	.. **The Hon. Thiru P. Benjamin:** Rural Industries including Cottage Industries, Small Industries

25. Minister for Labour	..	**The Hon. Dr. (Tmt) Nilofer Kafeel:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census, Urban and Rural Employment and Wakf Board
26. Minister for Transport	..	**The Hon. Thiru M.R. Vijayabhaskar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
27. Minister for Adi Dravidar & Tribal Welfare	..	**The Hon. Tmt V.M. Rajalakshmi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour
28. Minister for Tamil Official Language & Tamil Culture	..	**The Hon. Thiru K. Pandiarajan:** Tamil Official Language & Tamil Culture and Archaeology
29. Minister for Khadi & Village Industries Board	..	**The Hon. Thiru G. Baskaran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramadhan
30. Minister for Hindu Religious & Charitable Endowments	..	**The Hon. Thiru Sevvoor S. Ramachandran:** Hindu Religious & Charitable Endowments
31. Minister for Backward Classes & Minorities Welfare	..	**The Hon. Tmt S. Valarmathi:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees & Evacuees and Minorities Welfare

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்

மாற்றுத் தலைவர்கள்#

திரு. பி.எம். நரசிம்மன்

திரு. எஸ்.பி. சண்முகநாதன்

திரு. சு. ரவி

திரு. இரா. குமரகுரு

திரு. சு. குணசேகரன்

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

செயலாளர்

திரு. கி. சீனிவாசன்

7-1-2020 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ.	.. சிறப்புச் செயலாளர்
திரு. இரா. சந்திரசேகரன், எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி.	.. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	.. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	.. கூடுதல் செயலாளர்
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல்.	.. மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் [இணைச் செயலாளர் (பதிப்பாளர்) நிலை]
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர்
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. கி. சூரியநாராயணன், எம்.ஏ., பி.ஜி.எல்., டி.டி.எல்., டி.எல்.எல்.	.. மாண்புமிகு பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் [இணைச் செயலாளர் (பதிப்பாளர்) நிலை]
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல்.	.. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	.. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் (இணைச் செயலாளர் நிலை)

திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர்
திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல்.	.. குழு அலுவலர் (பொதுக் கணக்குக் குழு)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. ஸ்ரீ.ரா. ரவி, எம்.காம்., பி.எல்.	.. குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை)
திரு. பா. ரவிச்சந்திரன், பி.எஸ்சி.	.. குழு அலுவலர் (பொது நிறுவனங்கள் குழு)
திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்.	.. தலைமை நிருபர்
திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. க.நா. வளர்வேந்தன், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியின் சிறப்பு நேர்முக உதவியாளர்
திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ.	.. சார்புச் செயலாளர்
திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திருமதி செ. சாந்தகுமாரி, பி.ஏ., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திரு. ஜெ. பாஸ்கரன், பி.ஏ.	.. தலைமை நிருபர்
திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. ஜெ. பாலசீனிவாசன், எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி.	.. சார்புச் செயலாளர்
திருமதி த. இந்திராகாந்தி, பி.ஏ.	.. சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அம்பேத்குமார், திரு. எஸ்.	.. வந்தவாசி (செ.வ.)
2.	அம்மன் கே. அர்ச்சுணன், திரு.	.. கோயம்புத்தூர் தெற்கு
3.	அரசு, டாக்டர் ஆர்.டி.	.. செய்யூர் (செ.வ.)
4.	அரவிந்த் ரமேஷ், திரு. எஸ்.	.. சோழிங்கநல்லூர்
5.	அருண்குமார், திரு. பி.ஆர்.ஜி.	.. கோயம்புத்தூர் வடக்கு
6.	அலெக்சாண்டர், திரு. வீ.	.. அம்பத்தூர்
7.	அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு.	.. திருச்செந்தூர்
8.	அன்பரசன், திரு. தா.மோ.	.. ஆலந்தூர்
9.	அன்பழகன், திரு. க.	.. கும்பகோணம்
10.	அன்பழகன், திரு. கே.பி.	.. பாலக்கோடு
11.	அன்பழகன், திரு. ஜெ.	.. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி
12.	அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு.	.. திருவெறும்பூர்
13.	ஆடலரசன், திரு. ப.	.. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
14.	ஆண்டி அம்பலம், திரு. மெ.ஆ.	.. நத்தம்
15.	ஆறுக்குட்டி, திரு. வி.சி.	.. கவுண்டம்பாளையம்
16.	ஆறுமுகம், திரு. பா.	.. கந்தர்வகோட்டை (செ.வ.)
17.	ஆஸ்டின், திரு. எஸ்.	.. கன்னியாகுமரி
18.	இதயவர்மன், திரு. L.	.. திருப்போரூர்
19.	இரத்தினசபாபதி, திரு. ஏ.	.. அறந்தாங்கி
20.	இரவிச்சந்திரன், திரு. கே.எஸ்.	.. எழும்பூர் (செ.வ.)
21.	இராமசாமி, திரு. கரி.	.. காரைக்குடி

22. இராமச்சந்திரன், திரு. ஆர்.டி. .. குன்னம்
23. இராமச்சந்திரன், திரு. எம். .. ஒரத்தநாடு
24. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. அருப்புக்கோட்டை
25. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு
26. இராஜன் செல்லப்பா, திரு. வி.வி. .. மதுரை வடக்கு
27. இராஜா, திரு. எஸ்.ஆர். .. தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. இரா. .. சேலம் வடக்கு
29. இராஜேந்திரன், திரு. சி.வி. .. பர்கூர்
30. இன்பசேகரன், திரு. பி.என்.பி. .. பெண்ணாகரம்
31. இன்பதுரை, திரு. ஐ.எஸ். .. ராதாபுரம்
32. ஈஸ்வரப்பன், திரு. ஜே.எல். .. ஆற்காடு
33. ஈஸ்வரன், திரு. எஸ். .. பவானிசாகர் (செ.வ.)
34. உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு. .. உடுமலைப்பேட்டை
35. உதயகுமார், திரு. ஆர்.பி. .. திருமங்கலம்
36. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
37. எடப்பாடி கே. பழனிசாமி திரு. .. எடப்பாடி
38. எழிலரசன், திரு. சி.வி.எம்.பி. .. காஞ்சிபுரம்
39. கடம்பூர் ராஜு, திரு. .. கோவில்பட்டி
40. கணேசன், திரு. வெ. .. திட்டக்குடி (செ.வ.)
41. கணேஷ், திரு. ஆர். .. உதகமண்டலம்
42. கந்தசாமி, திரு. ப. .. சூலூர்
43. கருணாநிதி, திரு. இ. .. பல்லாவரம்
44. கருணாஸ், திரு. சே. .. திருவாடனை
45. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
46. கலைச்செல்வன், திரு. V.T. .. விருத்தாசலம்
47. கஸ்தூரி வாசு, திருமதி வி. .. வால்பாறை (செ.வ.)

48. காந்தி, திரு. ஆர். .. ராணிப்பேட்டை

49. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்

50. கார்த்திகேயன், திரு. க. .. ரிஷிவந்தியம்

51. கார்த்திகேயன், திரு. ப. .. வேலூர்

52. கார்த்திக், திரு. நா. .. சிங்காநல்லூர்

53. காளிமுத்து, திரு. வி.எஸ். .. தாராபுரம் (செ.வ.)

54. கிரி, திரு. மு.பெ. .. செங்கம் (செ.வ.)

55. கிருஷ்ணசாமி, திரு. ஆ. .. பூந்தமல்லி (செ.வ.)

56. கீதா, திருமதி ம. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

57. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி

58. குணசேகரன், திரு. சு. .. திருப்பூர் தெற்கு

59. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை

60. கோவிந்தசாமி, திரு. ஆ. .. பாப்பிரெட்டிப்பட்டி

61. கோவிந்தராசு, திரு. மா. .. பேராவூரணி

62. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்

63. சக்திவேல், திரு. எ.பி. .. சேலம் தெற்கு

64. சக்ரபாணி, திரு. மு. .. வானூர் (செ.வ.)

65. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்

66. சண்முகம், திரு. அ. .. கிணத்துக்கடவு

67. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்

68. சண்முகையா, திரு. செ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)

69. சதன் பிரபாகர், திரு. நி. .. பரமக்குடி (செ.வ.)

70. சத்திய நாராயணன், திரு. ப. .. தியாகராய நகர்

71. சத்யா, திருமதி ப. .. பண்ருட்டி

72. சத்யா, திரு. S.A. .. ஓசூர்

73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

75.	சந்திரசேகர், திரு. இரா.	.. மணப்பாறை
76.	சந்திரபிரபா, திருமதி மு.	.. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)
77.	சம்பத், திரு. எம்.சி.	.. கடலூர்
78.	சம்பத்குமார், திரு. வே.	.. அரூர் (செ.வ.)
79.	சம்பத்து, திரு. கோ.	.. சோளிங்கர்
80.	சரவணக்குமார், திரு. க.சு.	.. பெரியகுளம் (செ.வ.)
81.	சரவணன், திரு. எஸ்.எஸ்.	.. மதுரை தெற்கு
82.	சரவணன், டாக்டர் ப.	.. திருப்பரங்குன்றம்
83.	சரஸ்வதி, திருமதி பொன்.	.. திருச்செங்கோடு
84.	சரோஜா, டாக்டர் வி.	.. ராசிபுரம் (செ.வ.)
85.	சித்ரா, திருமதி கு.	.. ஏற்காடு (ஆ.வா.)
86.	சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப.	.. திரு.வி.க. நகர் (செ.வ.)
87.	சிவசுப்பிரமணி, திரு. வே.பொ.	.. மொடக்குறிச்சி
88.	சின்னதம்பி, திரு. ஆர்.எம்.	.. ஆத்தூர் (செ.வ.)
89.	சின்னப்பன், திரு. P.	.. விளாத்திகுளம்
90.	சின்னராஜ், திரு. ஓ.கே.	.. மேட்டுப்பாளையம்
91.	சீத்தாபதி, திருமதி பெ.	.. திண்டிவனம் (செ.வ.)
92.	சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர்.	.. விருதுநகர்
93.	சுதர்சனம், திரு. எஸ்.	.. மாதவரம்
94.	சுந்தர், திரு. க.	.. உத்திரமேரூர்
95.	சுப்பிரமணியன், திரு. மா.	.. சைதாப்பேட்டை
96.	சுப்ரமணி, திரு. பெ.	.. தருமபுரி
97.	சுரேஷ் ராஜன், திரு. என்.	.. நாகர்கோவில்
98.	செங்குட்டுவன், திரு. டி.	.. கிருஷ்ணகிரி
99.	செங்கோட்டையன், திரு. கே.ஏ.	.. கோபிச்செட்டி பாளையம்
100.	செந்தில்குமார், திரு. ஐ.பி.	.. பழனி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

101. செந்தில் பாலாஜி, திரு. V. .. அரவக்குறிச்சி
102. செம்மலை, திரு. S. .. மேட்டூர்
103. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு
104. செல்வமோகன்தாஸ் பாண்டியன், திரு. எஸ். .. தென்காசி
105. செல்வம், திரு. கு.க. .. ஆயிரம் விளக்கு
106. செல்வராசு, திரு. எம். .. முசிறி
107. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)
108. சேகரன், திரு. கே.வி. .. போளூர்
109. சேகர், திரு. C.V. .. பட்டுக்கோட்டை
110. சேகர், திரு. R.D. .. பெரம்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. .. துறைமுகம்
112. சேவூர் எஸ். ராமச்சந்திரன், திரு. .. ஆரணி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
114. தங்கப்பாண்டியன், திரு. சௌ. .. ராஜபாளையம்
115. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
116. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
117. தமிமுன் அன்சாரி, திரு. எம். .. நாகப்பட்டினம்
118. தமிழ்ச்செல்வன், திரு. ரா. .. பெரம்பலூர் (செ.வ.)
119. தனபால், திரு. ப. .. அவினாசி (செ.வ.)
120. தனியரசு, திரு. உ. .. காங்கேயம்
121. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. .. திண்டுக்கல்
122. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)
123. தினகரன், திரு. டிடிவி .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
124. துரை. கி. சரவணன், திரு. .. புவனகிரி
125. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்

126. துரைமுருகன், திரு. .. காட்பாடி
127. தூசி கே. மோகன், திரு. .. செய்யாறு
128. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு கிழக்கு
129. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
130. நடராஜன், திரு. அ. .. பல்லடம்
131. நடராஜ், திரு. ஆர். .. மயிலாப்பூர்
132. நந்தகுமார், திரு. ஏ.பி. .. அணைக்கட்டு
133. நரசிம்மன், திரு. பி.எம். .. திருத்தணி
134. நல்லதம்பி, திரு. அ. .. திருப்பத்தூர்
135. நாகராஜன், திரு. எஸ். .. மானாமதுரை (செ.வ.)
136. நாராயணன், திரு. வெ. .. நாங்குநேரி
137. நிலோபர் கபில், டாக்டர் (திருமதி) .. வாணியம்பாடி
138. நீதிபதி, திரு. பா. .. உசிலம்பட்டி
139. நீலமேகம், திரு. டி.கே.ஜி. .. தஞ்சாவூர்
140. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி மேற்கு
141. பரமசிவம், டாக்டர் V.P.B. .. வேடசந்தூர்
142. பரமேஸ்வாி, திருமதி மு. .. மணச்சநல்லூர்
143. பலராமன், திரு. ப. .. பொன்னேரி (செ.வ.)
144. பவுன்ராஜ், திரு. எஸ். .. பூம்புகார்
145. பழனி, திரு. கே. .. ~பெரும்புதூர் (செ.வ.)
146. பழனிவேல் தியாக ராஜன், முனைவர் .. மதுரை மத்தி
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர். கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்
149. பன்னீர்செல்வம், திரு. வி. .. கலசப்பாக்கம்
150. பாண்டி, திரு. ச. .. முதுகுளத்தூர்

151. பாண்டியராஜன், திரு. க. .. ஆவடி
152. பாண்டியன், திரு. கே.ஏ. .. சிதம்பரம்
153. பாரதி, திரு. பி.வி. .. சீர்காழி (செ.வ.)
154. பாஸ்கரன், திரு. க. .. சிவகங்கை
155. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்
156. பிச்சாண்டி, திரு. கு. .. கீழ்பெண்ணாத்தூர்
157. பிரகாஷ், திரு. ஒய். .. தளி
158. பிரபு, திரு. அ. .. கள்ளக்குறிச்சி (செ.வ.)
159. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்
160. புகழேந்தி, திரு. சு. .. மதுராந்தகம் (செ.வ.)
161. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்
162. பூண்டி கி. கலைவாணன், திரு. .. திருவாரூர்
163. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
164. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
165. பெரியண்ணன் அரசு, திரு. .. புதுக்கோட்டை
166. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ. .. மேலூர்
167. பென்ஜமின், திரு. பா. .. மதுரவாயல்
168. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் .. பொள்ளாச்சி
169. பொன்முடி, முனைவர் க. .. திருக்கோவிலூர்
170. மகாராஜன், திரு. ஆ. .. ஆண்டிப்பட்டி
171. மணிகண்டன், டாக்டர் எம். .. இராமநாதபுரம்
172. மணியன், திரு. ஓ.எஸ். .. வேதாரண்யம்
173. மதிவாணன், திரு. உ. .. கீழ்வேளூர் (செ.வ.)
174. மருதமுத்து, திரு. அ. .. கெங்கவல்லி (செ.வ.)
175. மனோகரன், திரு. அ. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
176. மனோ தங்கராஜ், திரு. த. .. பத்மநாபபுரம்

177. மனோரஞ்சிதம், திருமதி நா. .. ஊத்தங்கரை (செ.வ.)

178. மனோன்மணி, திருமதி ப. .. வீரபாண்டி

179. மஸ்தான், திரு. கே.எஸ். .. செஞ்சி

180. மாசிலாமணி, டாக்டர் இரா. .. மயிலம்

181. மாணிக்கம், திரு. கி. .. சோழவந்தான் (செ.வ.)

182. முத்தமிழ்செல்வன், திரு. ர. .. விக்கிரவாண்டி

183. முருகன், திரு. பி. .. வேப்பனஹள்ளி

184. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

185. முருகையா பாண்டியன், திரு. ஆர். .. அம்பாசமுத்திரம்

186. முஹம்மது அபூபக்கர், திரு. கே.ஏ.எம். .. கடையநல்லூர்

187. மூர்த்தி, திரு. கே.எஸ். .. பரமத்தி-வேலூர்

188. மூர்த்தி, திரு. பி. .. மதுரை கிழக்கு

189. மெய்யநாதன், திரு. சிவ.வீ. .. ஆலங்குடி

190. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

191. மோகன், திரு. எம்.கே. .. அண்ணா நகர்

192. ரகுபதி, திரு. எஸ். .. திருமயம்

193. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்

194. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

195. ராசேந்திரன், திரு. சபா. .. நெய்வேலி

196. ராதாகிருஷ்ணன், திரு. வி. .. மயிலாடுதுறை

197. ராமர், திரு. எ. .. குளித்தலை

198. ராமஜெயலிங்கம், திரு. ஜெ.கே. என். .. ஜெயங்கொண்டம்

199. ராமு, திரு. அ. .. குன்னூர்

200. ராஜலெட்சுமி, திருமதி வி.எம். .. சங்கரன்கோவில் (செ.வ.)

201. ராஜவர்மன், திரு. M.S.R. .. சாத்தூர்
202. ராஜா, திரு. சி. .. சங்கரி
203. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி
204. ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், திரு. ஈ.எம். ஆர். .. அந்தியூர்
205. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி
206. ராஜேந்திரன், திரு. சு. .. அரியலூர்
207. ராஜேந்திரன், திரு. வி.ஜி. .. திருவள்ளூர்
208. ராஜேஷ் குமார், திரு. செ. .. கிள்ளியூர்
209. லெட்சுமணன், திரு. ஏ.எல்.எஸ். .. திருநெல்வேலி
210. லோகநாதன், திரு. கோ. .. கீழ்வைத்திணான்குப்பம் (செ.வ.)
211. வரலட்சுமி, திருமதி ம. .. செங்கல்பட்டு
212. வளர்மதி, திருமதி சீ. .. ஸ்ரீரங்கம்
213. வாகை சந்திரசேகர், திரு. .. வேளச்சேரி
214. விருகை V.N. ரவி, திரு. .. விருகம்பாக்கம்
215. வில்வநாதன், திரு. அ.செ. .. ஆம்பூர்
216. விஜயகுமார், திரு. க.நா. .. திருப்பூர் வடக்கு
217. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு
218. விஜயபாஸ்கர், திரு. எம்.ஆர். .. கரூர்
219. விஜய பாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை
220. விஜியகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
221. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை
222. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை
223. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு
224. வெல்லமண்டி ந. நடராஜன், திரு. .. திருச்சிராப்பள்ளி கிழக்கு
225. வெற்றிவேல், திரு. ச. .. ஓமலூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

226. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை
227. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்
228. ஜக்கையன், திரு. எஸ்.டி.கே. .. கம்பம்
229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
230. ஜெயராமகிருஷ்ணன், திரு. இரா. .. மடத்துக்குளம்
231. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்
232. ஸ்டாலின் குமார், திரு. செ. .. துறையூர் (செ.வ.)
233. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி) .. நியமனம்
234. வெற்றிடம் .. திருவொற்றியூர்
235. வெற்றிடம் .. குடியாத்தம் (செ.வ.)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. விஜய் நாராயன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, பங்குனி 6, திருவள்ளுவர் ஆண்டு–2051

2020 மார்ச் 19, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.”

உணவுப் பொருள்களை விளைவிப்பவர்கள் உழவர்களே. எனவே, உலக மக்களைத் தாங்குகின்ற உழவர்கள், உலக மக்களாகிய தேருக்கு அச்சாணிபோல் உறுதுணையாக உள்ளனர்.

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. வே. தம்புசாமி அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற்குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. வே. தம்புசாமி அவர்கள் 7–3–2020 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி அவர்கள் 1989–1991 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் திருவாரூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

126—

நூலகம்

***57401—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்**:

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், ராஜக்காபட்டி ஊராட்சி, குமாரபாளையத்தில் புதிய நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், ராஜக்காபட்டி ஊராட்சி, குமாரபாளையத்தில் புதிதாக நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத காரணத்தால், இந்த ஆண்டு நூலகம் அமைக்க இயலவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை

வணங்குகிறேன். இனமான பேராசிரியர் அவர்களையும், எங்கள் இயக்கத் தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், ராஜக்காபட்டி ஊராட்சி, குமாரபாளையத்தில் புதிய நூலகம் அமைத்துத்தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதியில் 6 கிளை நூலகங்கள், 8 ஊரக நூலகங்கள், 14 பகுதி நூலகங்கள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோல, நூலகம் அமைக்க வேண்டுமென்றால் 5 சென்ட் நிலம் தேவை. தற்காலிகமாக நூலகம் அமைக்க வேண்டுமென்றால், வாடகையில்லாக் கட்டடம் தருவாரேயானால், அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான 5 சென்ட் இடவசதி இருக்கிறது. இல்லையென்றாலும் கட்டடம் வாடகையின்றி தரத் தயாராக உள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நத்தம் ஊராட்சி ஒன்றியம், முல்லையூர் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் சுமார் 540 மாணவர்கள் படிக்கின்றார்கள். இவர்கள் நத்தத்திற்கு வரவேண்டுமென்றால் 9 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டியுள்ளது. 2018 ஆம் ஆண்டு பள்ளியைத் தரம் உயர்த்துவதற்காக பணம் கட்டியுள்ளார்கள். எனவே, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். மேலும், நத்தம் ஒன்றியம், பிள்ளையார்நத்தம் ஊராட்சி, பிள்ளையார்நத்தத்தில் சுமார் 350 முதல் 400 மாணவர்கள் வரை படிக்கின்றனர். இதற்கும் 2018 ஆம் ஆண்டில் பணம் கட்டியுள்ளார்கள். உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த மாணவர்கள் மேல்நிலைப் பள்ளி உள்ள

செந்துறைக்கு வரவேண்டுமென்றால், சுமார் 12 கிலோ மீட்டர் தூரம் வரை வர வேண்டியுள்ளது.

நத்தம் ஊராட்சி ஒன்றியம், வேலம்பட்டி ஊராட்சியில், சேரூவீடு பள்ளியில் சுமார் 200 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி தர 2016 ஆம் ஆண்டில் பணம் கட்டியுள்ளார்கள். அதையும் இந்தக் கல்வி ஆண்டிலேயே தரம் உயர்த்தித் தர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிள்ளையார்நத்தம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையும், அதேபோல், வேலம்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்றும் உறுப்பினரால் இரண்டு கோரிக்கைகள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10–05

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு பள்ளிகளையும் தரமுயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு, 5 கிலோ மீட்டர் தூரம் மற்றும் அதிலே மாணவர்கள் 50 பேர் இருப்பார்களேயானால், அதுபற்றி அரசு பரிசீலித்து, கவனமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு பள்ளிகளையும் தரம் உயர்த்த தேர்வு செய்ய வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கின்றார்கள். அதில் எந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று கடிதங்கள் தருவார்களேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு அது எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் ஒன்றியம், கோவடி ஊராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளி 2005 ஆம் ஆண்டு முதல் தரமுயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளியாக இயங்கி வருகிறது. அந்தப் பள்ளியில் 110 மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். அனைத்துப் பாடங்களுக்கும், அதாவது, தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் போன்ற பாடங்களுக்கும் தலைமை ஆசிரியர் உள்பட அனைத்து ஆசிரியப் பெருமக்களும் இருக்கின்றார்கள். ஆனால், இந்த உயர்நிலைப் பள்ளிக்கென்று ஒரு தனி கட்டட வசதியே இல்லை. அங்குள்ள ஆரம்பப் பள்ளியின் துணை நிலைக் கட்டடத்தில்தான் அந்த உயர்நிலைப் பள்ளியே இயங்கி வருகிறது. 110 மாணவர்கள் என்பதால் அங்கு போதுமான இட வசதி இல்லை. அதனால், மரத்தடியிலும், தரையிலும் அமர்ந்து மாணவர்கள் கல்வி பயின்று வரக்கூடிய ஓர் அவலநிலை இருந்து வருகின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பள்ளியை நேரடியாக ஆய்வு செய்தால்கூட மிக நன்றாக இருக்குமென்று நான் நினைக்கின்றேன். குறிப்பாக, அந்த மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது, ஆசிரியர்கள் அமருவதற்கான இட வசதியும் கிடையாது, அந்த ஆரம்பப் பள்ளியில் எந்தவிதமான சுற்றுச் சுவரும் கிடையாது. ஆக, அனைத்து வசதிகளுடன்கூடிய ஓர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தைக் கட்டித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, அந்த நிலைமை தமிழ்நாட்டிலே இருக்கக் கூடாது என்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதற்காகவே நிதியினை அள்ளித் தந்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுகூட நபார்டு திட்டத்தின் மூலமாக 273 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப்

பிறகு, ஏறத்தாழ 952 கோடி ரூபாய் அளவுக்கு நிதியினை ஒதுக்கி ஒரு வரலாறு படைத்திருக்கிற அரசாக நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் பவனி வந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நினைவிலே வைத்து, உடனடியாக நபார்டு திட்டத்தின் மூலமாக அங்கு புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு இந்த ஆண்டு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

127—

துணை மின் நிலையம்

***35122—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம், குத்தியாலத்தூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம், குத்தியாலத்தூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் எங்கேயாவது தனியார் இடத்தை மாண்புமிகு உறுப்பினர் வாங்கிக் கொடுப்பாரேயானால் நடவடிக்கை எடுக்கப்படும்; நிலம் கண்டறியப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

2020 மார்ச் 19]

ஏனென்று சொன்னால், அங்கு துணை மின் நிலையம் தேவையான ஒன்றாகும். அங்கு மலைவாழ் மக்கள் அதிகமாக வசிக்கின்ற காரணத்தினால், தனியார் நிலம் இல்லாத காரணத்தினால், துணை மின் நிலையம் அமைப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் நிலம் அடையாளம் காணப்பட்டு, இடம் வாங்கிக் கொடுப்பார்கள் என்று சொன்னால், அங்கு துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. எஸ். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழின மக்களின் வாழ்வில் இமயம்போல் திட்டங்களைத் தந்து, மக்களின் இதயக் கோயிலாக இருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறங்குகின்ற திசை நோக்கிப் பணிந்து வணங்குகின்றேன். மின் பாதை ஏற்படுத்த இயலாத வனப் பாதையில் அமைந்துள்ள மல்லியம்மன்துர்கம் மற்றும் ராமரணை ஆகிய பகுதிகளில் சூரிய சக்திமூலம் (Solar power) மின் வசதியை ஏற்படுத்திக் கொடுத்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, பணிந்து வணங்குகிறேன்.

பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கடம்பூர்மலைப் பகுதி, குத்தியாலத்தூர் ஊராட்சியையொட்டி மூன்று ஊராட்சிப் பகுதிகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன. இக்குக்கிராமங்களில் உள்ள மக்கள் முக்கியமாக விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றார்கள். இப்பகுதியில் குறைந்த மின்னழுத்தம் ஏற்படுவதால், விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த குத்தியாலத்தூர் ஊராட்சியில் உள்ள பவளக்குட்டை என்ற பகுதியில் அரசுப் புறம்போக்கு நிலம் உள்ளது. அந்தப் பகுதியில் மிக விரைவில் இடத்தைக் கண்டறிந்து, புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று சொன்னதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலமலைப் பகுதி, தாளவாடி வட்டத்தில் நான்கு ஊராட்சிகள் மற்றும் ஐம்பது குக்கிராமங்கள் உள்ளன. இப்பகுதியில் குறைந்த மின்னழுத்தம் ஏற்படுகின்றது. எனவே, அந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் ஏற்படுத்தித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே அரசுப் புறம்போக்கு நிலம் இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். அப்படியிருக்கிறது என்று சொன்னால், வருவாய்த் துறை அதிகாரிகளோடு அதுகுறித்து கலந்து பேசி, உடனடியாக அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். ஏனென்று சொன்னால், பெரும்பள்ளம் பகுதி துணை மின் நிலையத்திலிருந்துதான் கடம்பூர் மலைப் பகுதிகளுக்கு மின்சாரம் சென்று கொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 41.3 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்ற காரணத்தினால் மின்னழுத்தம் குறைவாக இருக்கின்றது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் தேவைதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே அரசுப் புறம்போக்கு நிலத்தைக் கண்டறிந்து கொடுத்தால், உடனடியாக துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, தலமலைப் பகுதி, தாளவாடி வட்டத்திற்கு துணை மின் நிலையம் கேட்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதியிலும் அதேபோன்ற பிரச்சினைதான். மலைவாழ் பகுதிகளைப் பொறுத்தவரையில், அரசுப் புறம்போக்கு நிலம் கிடைப்பது கடினமாக இருக்கின்றது. அது conditional patta ஆக இருக்கின்ற காரணத்தினால், அங்கே துணை மின் நிலையம் அமைப்பது கடினமாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதிக்கும் அதேபோன்ற இடமிருக்கிறது என்று சொன்னால், இடம் கண்டறியப்பட்டு அங்கேயும் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படும். துணை மின் நிலையம் தேவைதான் என்பது எங்களுக்கும் தெரியும்.

2020 மார்ச் 19]

இடமில்லாத காரணத்தினால் அந்தப் பணி நிற்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. எஸ். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி வட்டம், தலமலை ஊராட்சிப் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான நிலத்தை மிக விரைவிலே கண்டறிந்து, மின்சாரத் துறைக்கு அந்த நிலத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்து தருகிறோம் என்ற உத்தரவாதத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அதே பகுதியில் உகினியம், நந்திபுரம், ஒசட்டி மற்றும் குளியாடா ஆகிய பகுதிகளில் மும்முனை மின்சாரம் இல்லாத நிலை உள்ளது. எனவே, அந்தப் பகுதிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டுக்கொண்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் நிலமிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். அதனால் துறை அதிகாரிகளோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களை கலந்து பேசச் சொல்லி, அங்கே இடமிருக்கிறது என்று சொன்னால், உடனடியாக ஆய்வு செய்து, நிலமெடுப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒருமுனை மின்சாரம் இருக்கின்றது; அதை மும்முனை மின்சாரமாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டிருக்கின்றார். வீடுகள் இருக்கின்ற பகுதியிலே ஒருமுனை மின்சாரம் மட்டும்தான் இருக்கின்றது. அந்தப் பகுதி விவசாயம் நிறைந்த பகுதியாக இருந்தால், அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் போளூர் சட்டமன்றத் தொகுதியில், போளூர் ஒன்றியம், கேளூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு அனுமதி வழங்கியும், அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, கிரயமும் பெற்று 2 ஆண்டுகள் முடிந்துள்ளன. அரசு இதில் உடனடியாக கவனம் செலுத்தி, அங்கே துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில், 2 ஆண்டுகளுக்கு முன்பாகவே இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்; பணிகள் துவங்கப்பட்டதா என்று தெரியவில்லை. பணிகள் துவங்கப்படவில்லை என்றால், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கும் என்று நினைக்கின்றேன். அப்படியிருக்குமாயின், விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த 3 ஆண்டு காலத்தில் மட்டும் 340 துணை மின் நிலையங்களை அமைத்திருக்கிறது. இந்த 9 ஆண்டு காலத்தில் கிட்டத்தட்ட 626 துணை மின் நிலையங்களை அமைத்திருக்கின்றோம். மின்னழுத்தம் குறைவாக இருக்கின்ற பகுதிகள் கண்டறியப்பட்டு, உடனடியாக அந்தப் பகுதிகளில் துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் நோக்கம். அந்தப் பகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை உடனடியாக ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் கிட்டத்தட்ட 10,000 பேர் வீடுகளுக்கு மின்னிணைப்பு கேட்டு காத்திருக்கிறார்கள். தற்பொழுது, உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி, பழங்குடியினர் வசிக்கின்ற இடங்களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று, பிற இன மக்கள்

2020 மார்ச் 19]

வசிக்கின்ற பகுதிகளுக்கும் மின்னிணைப்பு கொடுக்கப்பட வேண்டும். Hydro Power Projects அதிகமாக இருக்கிற அந்தப் பகுதியில் அதாவது, மின் உற்பத்தி செய்கிற இடத்திலே மின்சாரம் கிடைக்காமல், 10,000 பேர் கிட்டத்தட்ட 10, 20 ஆண்டுகளாக மின் வசதியில்லாமல் வசித்து வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்றத்தின் order–ஐ இதர பகுதிகளில் இருப்பவர்களுக்கும் வழங்கினால் அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் கிடைக்க வாய்ப்பிருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்துதர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே இந்த அவையில் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கின்றார். உச்ச நீதிமன்றத்தில் தடையாணை இருக்கின்ற காரணத்தினால்தான் அந்தப் பகுதியிலே மின்சாரம் கொடுக்க முடியாமல் இருக்கின்றது. அங்கே வனத் துறை அனுமதி கொடுக்க மறுத்து வருகிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள் கேட்டதைப்போல, மின்சாரம் கொடுக்க முடியாத பகுதிகளில் Solar Power Plant போட்டுக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியில் Solar Power Plant இல்லையென்று சொன்னால், உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்று சொன்னால், உச்ச நீதிமன்றத்தின் ஆணையை மீறி, வனத் துறையை மீறி அங்கே மின்சாரத்தைக் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை இருக்கின்றது. இருக்கின்ற வீடுகளுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். அதில் மாற்றுக் கருத்து கிடையாது. இருந்தாலும், அங்கே சட்டம் இடம் கொடுக்காத காரணத்தினால்தான் இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. இருந்தாலும், அங்கே Solar Power Plant போடப்பட்டிருக்கின்றனவா, இன்னும் வேறு பணிகள் ஏதாவது விடுபட்டிருக்கின்றனவா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடிதம் வாயிலாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2020 மார்ச் 19

முற்பகல் 10–15

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய துணை மின் நிலையம் அமைப்பது குறித்த பணியும் பல ஆண்டுகாலமாக உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்ற காரணத்தினால் முடியாமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுகுறித்து கேள்வி கேட்கவில்லை என்றாலும்கூட, ஏற்கெனவே அவர் கோரிக்கை வைத்தது எனக்கு ஞாபகத்தில் இருக்கின்ற காரணத்தினாலும், வழக்கு நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினாலும், அங்கு துணை மின் நிலையம் அமைக்க தடையாணை இருக்கின்ற காரணத்தினாலும்தான் பணிகளை மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

128—

கூடுதல் கட்டடம்

***7261—திரு. ஐ.பி. செந்தில்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றியம், பாலசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பழனி தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றியம், பாலசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் போதுமான அளவில் வகுப்பறைகள் பயன்பாட்டிலுள்ள நிலையில், கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி புறநகர், பாலசமுத்திரத்தில் அமைந்திருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை தற்பொழுது நடைபெற்று வருகிறது. எட்டு வகுப்பறைகளில் இப்போது வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதில், ஐந்து வகுப்பறைகள் 2008 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் அனைவருக்கும் கல்வி இயக்கம் திட்டத்தின் சார்பில் கட்டப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல மீதமிருக்கின்ற 3 வகுப்பறைகள், 1930 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அந்தக் கட்டடம் இன்றைக்கு அச்சத்திற்குரிய வகையில் இருக்கக்கூடிய சூழ்நிலையில், மாணவர்களுடைய எதிர்கால நலனைப் பாதுகாக்க அந்தக் கட்டடத்தை அகற்றி, புதிய கூடுதல் கட்டடத்தை அங்கே கட்ட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

அதேபோல, பாலசமுத்திரம் பகுதியைச் சுற்றி பல தனியார் கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. ஆக, கடுமையான இந்தச் சூழ்நிலையில், இந்தப் பள்ளியில் 239–க்கும் அதிகமான மாணவர்கள் பயில வந்திருப்பதை அரசு வரவேற்க வேண்டும். எனவே, கூடுதல் கட்டடத்தைக் கட்டிக் கொடுப்பதோடு, கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். அதுமட்டுமின்றி, அங்கே நீராதாரம் இல்லாத சூழ்நிலை இருந்தது. கடந்த 2019–2020 ஆம் நிதியாண்டில் என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, அங்கே ஒரு borewell அமைத்து அந்தப் பள்ளிக்கு நான் வழங்கியிருக்கிறேன். நிருவாக அனுமதிகூட இப்போது கிடைத்திருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள் வாயிலாக நான் கனிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவது, அந்தப் பழைய கட்டடத்தை, கிட்டத்தட்ட 90 ஆண்டுக்கால கட்டடத்தை அகற்றி, புதிய கட்டடத்தை, கூடுதல் கட்டடத்தை நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றியம், பாலசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் மொத்தம் 202 மாணவ, மாணவியர் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயின்று வருகிறார்கள்; இதில், 96 மாணவர்கள் மற்றும் 106 மாணவிகள் இருக்கின்றார்கள். இப்பள்ளியில் தலா 3 வகுப்பறைகள் கொண்ட 2 கான்கிரீட் கட்டடங்கள் உள்ளன. அவற்றில் 5 வகுப்பறைகளில் மாணவ, மாணவிகளுக்கு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. ஒரு வகுப்பறை தலைமை ஆசிரியரின் அலுவலகப் பயன்பாட்டில் உள்ளது. மேலும், இப்பள்ளியில் 5 வகுப்பறைகள் கொண்ட 3 ஓட்டுக் கட்டடங்கள் உள்ளன. அவற்றில், 3 வகுப்பறைகளில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள அறைகள் பொருட்கள் வைக்கும் இருப்பு அறையாகவும், அங்கன்வாடி மையமாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

பாலசமுத்திரம் பகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு 8 வகுப்பறைகள் போதுமானது என்றுதான் அதிகாரிகள் பதில் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அந்த 3 ஓட்டுக் கட்டடத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். துறையின் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, பழுதடைந்திருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேபோல, கழிப்பறை வசதி, குடிநீர் வசதி பற்றியும் கேட்டார்கள். அதுவும், துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அவசியம் இருப்பின், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பழனி சட்டமன்றத் தொகுதியினுடைய தலைமையிடமாக இருக்கக்கூடிய பழனி நகரத்தின் மையப் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய, நகராட்சி நிருவாகத்தின்கீழ் இயங்குகிற ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், கிட்டத்தட்ட 500–க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்போது பயின்று வருகிறார்கள். இந்தப் பள்ளியானது, 1918 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது, கிட்டத்தட்ட

2020 மார்ச் 19]

102 ஆண்டுகளைக் கடந்திருக்கிறது. மாநிலத்தில் இருக்கக்கூடிய நூறாண்டுகளைக் கடந்த சில பள்ளிகளின் பட்டியலில் இந்தப் பள்ளியும் ஒன்று. அதுவும், அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் அமைந்திருக்கக்கூடிய, வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த நகரத்தில் அமைந்திருக்கக்கூடிய அந்தப் பள்ளியின் மொத்தப் பரப்பளவு 11½ ஏக்கர்.

முற்பகல் 10–20

நான் இந்த அரசினிடத்தில் கேட்டுக்கொள்ள விரும்புவது, அரசினுடைய விதிகளில் 10 ஏக்கர் நிலத்திற்குமேல் இருக்கக்கூடிய பள்ளிகளில் ஒரு Mini Stadium அமைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. இது 11.50 ஏக்கரை பரப்பளவாகக் கொண்டிருக்கக்கூடிய பள்ளி. மாவட்டத்தினுடைய இரண்டாவது பெரிய தலைநகரம் பழனி. எனவே, இந்தப் பள்ளியில் ஒரு Mini Stadium அமைப்பதற்கு அரசு முன்வர வேண்டும். அதுமட்டுமல்ல, இங்கு கழிப்பிட வசதியை மேம்படுத்தித் தர வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. குறிப்பாக துப்புரவுப் பணியாளர்கள், காவலர்கள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. நகராட்சி நிருவாகத்தின்கீழ் இயங்குகின்ற பள்ளியில், நகராட்சி நிருவாகத்தின் மூலமாகவோ அல்லது பள்ளிக் கல்வித் துறையின் மூலமாகவோ அந்தப் பணியிடங்களை நிரப்பித் தர அரசு முன்வர வேண்டும். குறிப்பாக, அதிக விளையாட்டு வீரர்களைப் பெற்றிருக்கக்கூடிய பழனி சுற்று வட்டாரப் பகுதிகளில் அவர்களுக்கு பயன்படக்கூடிய வகையில் அந்தப் பள்ளியில் ஒரு Mini Stadium அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நகராட்சிப் பள்ளியா அல்லது அரசுப் பள்ளியா? கடைசியாக நகராட்சிப் பள்ளி என்று குறிப்பிட்டார்கள். நகராட்சிப் பள்ளி என்கிறபட்சத்தில் அது எங்களுடைய துறைக்குத்தான் வரும். அந்தப் பள்ளி நூறாண்டுகளுக்கு மேலாக உள்ள ஒரு பாரம்பரியமான பள்ளி என்று குறிப்பிட்டார்கள்.

அங்கே 11.50 ஏக்கர் நிலம் இருப்பதாகவும், பல அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் கோரியிருந்தார்கள். அங்கே பழனி திருக்கோயில் இருக்கின்றது. அது ஒரு பிரசித்திபெற்ற நகரம். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. 11.50 ஏக்கர் நிலம் இருப்பதாகவும் அங்கே ஒரு விளையாட்டு அரங்கம் வேண்டும் என்றும் கோரியுள்ளார்கள். இது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். அவரும் அதனைக் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றார். உங்களுடைய கோரிக்கையானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு சொல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று நகராட்சி சார்பாக அங்கே என்னென்ன வசதிகள் தேவைப்படும் என்பதைத் துறையின் வாயிலாக ஆய்வு செய்து, கண்டிப்பாக எங்கள் துறை சம்பந்தப்பட்ட பணிகள் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, அவசியம் இருப்பின் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். வணங்கும் கைகள் விலகும்முன்னே வரம் கொடுத்த அம்மாவைப்போல, நாங்கள் கேட்ட கோரிக்கையை ஏற்று எங்கள் தொகுதிக்கு 300 கோடி ரூபாயை நீர் ஆதாரத்திற்காக வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் சார்ந்திருக்கின்ற இலக்கியம்பட்டி ஊராட்சி, மிகப் பெரிய ஊராட்சி. ஏறத்தாழ 34,000 வாக்காளர்கள் இங்கே இருக்கின்றார்கள். 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 493 தெருக்கள் இருக்கின்றன. ஏறக்குறைய 17,000 வீடுகள் இருக்கின்றன. ஆனால், அங்கே துப்புரவுப் பணியாளர்கள் வெறும் 17 பேர்தான் பணிபுரிகின்றார்கள். எனவே, மாண்புமிகு அம்மாவின் அரசு உள்ளாட்சித் துறையில் அதிகப்படியான சாதனைகளைப் படைத்து விருதுகளை வாங்கி இருக்கின்ற நிலையில், எங்கள்

2020 மார்ச் 19]

ஊராட்சிக்குக் கூடுதலாக 40 முதல் 50 வரை துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்புரவுப் பணியாளர்களைப் பொறுத்தமட்டில், கிட்டத்தட்ட 17,000 பேர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மட்டும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அதேபோன்று கிட்டத்தட்ட 26,000 பேரின் பணி upgrade செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் யாருமே செய்திராத வகையில், 66,000 தூய்மைக் காவலர்களை வைத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நிதி நிலைமை அதிகமாக இருக்கின்றபட்சத்தில், அந்தந்த ஊராட்சிகளே இந்தப் பணியாளர்களை outsourcing முறையில் பணியமர்த்தலாம். இருந்தாலும்கூட, துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், திருக்கலம்பூர் ஊராட்சியை திருக்கலம்பூர், கருப்புகுடிபட்டி என இரண்டு ஊராட்சிகளாகப் பிரிப்பதற்காக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பொதுமக்களுடைய கருத்துக் கேட்பும் முடிந்த நிலையில், 2016 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் வந்ததால் அது ஒத்திவைக்கப்பட்டது. இப்போது உள்ளாட்சித் தேர்தல் முடிந்துவிட்ட நிலையில், திருக்கலம்பூர் ஊராட்சியை இரண்டு ஊராட்சிகளாகப் பிரித்துத் தர வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும். அதேபோன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் பொன்னமராவதி பேரூராட்சி நகராட்சியாகத்

தரம் உயர்த்தித் தரப்படும் என்ற அறிவிப்பைத் தந்தார்கள். அது இன்னும் அறிவிப்பாகவே இருக்கின்றது. அதனைச் செயல்படுத்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்து, பெரிய ஊராட்சிகளை இரண்டு ஊராட்சிகளாகவோ அல்லது பேரூராட்சிகளாகவோ தரம் உயர்த்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையையும், அதேபோன்று தகுதியுள்ள பேரூராட்சிகளை நகராட்சிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையையும் நிறைவேற்ற இந்த அரசு முன்வருமா என தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதேபோல, பொன்னமராவதி பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டும் எனவும் கோரியுள்ளார்கள். அதற்கு அறிவிப்புகூட வெளியிடப்பட்டது என்று சொன்னார்கள். ஊராட்சியை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றால், அங்கே இருக்கக்கூடிய மன்றத்தில் கூட்டங்கள் நடத்தி, தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இரண்டு கூட்டங்கள் நடத்துவார். அவசியம் இருப்பின் எங்களுடைய துறை அலுவலர்கள், Commissioner, Secretary ஆகியோர் மூன்றாவது கூட்டத்தை நடத்துவார்கள். அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அரசுக்குப் பரிந்துரை வந்தால், கண்டிப்பாகப் பிரிக்கப்படும். இதுபோன்ற பல்வேறு கோரிக்கைகளை பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்துள்ளார்கள். கண்டிப்பாக அவசியம் இருப்பின், அவை செய்து தரப்படும். இப்போது பேரூராட்சி, நகராட்சி தேர்தல் நடக்கவிருக்கிறது. எனவே, அதனை தற்போது செய்ய இயலாது. ஆனால், ஊராட்சித் தேர்தல் முடிந்து விட்டது. ஆகையால், பேரூராட்சித் தேர்தல் முடிந்த பிறகு, அவசியமான ஊராட்சிகள், நகராட்சிகளைப் பிரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

129—

ஒளி உமிழ்வு இருமுனைய மின்விளக்குகள்

***56200—திருமதி பி. கீதா ஜீவன்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி தொகுதியில் உள்ள பழைய மீன்பிடி துறைமுகத்தில் ஒளி உமிழ்வு இருமுனைய (LED) மின்விளக்குகள் பொருத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி தொகுதியில் உள்ள தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக வளாகத்தில் தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக மேலாண்மை சங்கத்தின் நிதியிலிருந்து ரூ.1.50 இலட்சம் செலவில் ஒளி உமிழ்வு இருமுனைய மின்விளக்குகள் 45 எண்ணம் 60 வாட்ஸ் திறன் கொண்ட மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களுக்கும், கழகப் பொருளாளர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய இந்தக் கேள்வி மூன்றாண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கொடுத்தது. இப்போது அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது;

அது அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மீன்பிடித் துறைமுகத்தில் cycle shed சிதிலமடைந்து, பராமரிப்பின்றி உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே, மீன்பிடித் துறைமுகத்திலுள்ள cycle shed–ஐயும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே இருக்கக்கூடிய மீனவர்களின் நலனுக்காக அமைத்துத் தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், திரேஸ்புரம் கடற்கரையில் உள்ள படகு அணைதளம் உடைந்து, சிதிலமடைந்து பயணிக்க முடியாத நிலையில் சாலையில் உள்ளதால் மீன் சுமந்து செல்லும் வண்டிகூட செல்ல முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அதையும் சீர்படுத்தித் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, திரேஸ்புரம் கடற்கரைப் பகுதியில், படகுகள் கட்டி வைக்கும் இடத்தில் மண் திட்டு உருவாகி, படகுகளை நிறுத்தி வைக்க இயலாத ஒரு நிலையும் இருக்கிறது. ஆகவே, அந்தக் கடற்கரைப் பகுதியில் படகு நிறுத்துமிடத்தில் உள்ள மண் திட்டை ஆழப்படுத்தித் தந்திடுமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, திரேஸ்புரம் கடற்கரைப் பகுதியை நீட்டித்துத் தர வேண்டும் என ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தேன். தூண்டில் வளைவை 285 மீட்டர் அளவுக்குக் கூடுதலாக நீட்டித்துத் தர வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தைப் பொறுத்தவரை, 12 கோடி ரூபாய் செலவில் அது நவீனமயமாக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்படத் தேவையில்லை. 35 கோடியே 75 இலட்சம் ரூபாய்க்கான அடிப்படை வசதிகள் குறித்து அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. விரைவில் அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் சொல்கின்ற எல்லாப் பிரச்சினைகளும் அதில் cover ஆகிவிடும். அதில் cover ஆகாமல், வேறு ஏதாவது பிரச்சினை இருந்தால், எங்களிடம் சொல்லுங்கள். உங்களுடைய பிரச்சினையையும் கவனிக்கின்ற அரசு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

2020 மார்ச் 19]

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பணி, அங்கே இருக்கக்கூடிய பிரச்சினைகளை அரசுக்குத் தெரிவிப்பதுதான். ஆகவே, எங்களுடைய கடமையை நாங்கள் சரியாகச் செய்து கொண்டிருக்கிறோம். அடுத்ததாக, கடந்த முறை கேள்வி நேரத்தில், இனிகோ நகரில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் அமைக்கக் கோரிக்கை வைத்தேன். இனிகோ நகர் கடற்கரையில் தூண்டில் வளைவுதான் அமைத்துத்தரப்பட வேண்டும் என்று நம்முடைய மீனவப் பெருமக்கள் கோரிக்கை வைக்கின்றார்கள். ஆகவே, இனிகோ நகர் கடற்கரையிலும் மீன் வளத் துறையின்மூலம் தூண்டில் வளைவு அமைத்துத்தர வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியபடி, ஒட்டுமொத்தமாக 35 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் எல்லா அடிப்படை வசதிகளும், அதில் தூண்டில் வளைவு நீட்டிப்பு உட்பட கரை அணைதளம், அதேபோல் shore facilities என்று சொல்லக்கூடிய கரையில் செய்யக்கூடிய அடிப்படை வசதிகள் போன்ற அனைத்தும் cover ஆகியுள்ளன. அதில் cover ஆகி வராதது எதுவோ, முழுமையாக இந்த வருடம் அதுகுறித்தும் ஆய்வு செய்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இது குறித்து விரிவான அறிக்கைகள் பெறப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

130—

மகளிர் கல்லூரி

***51553—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2020 மார்ச் 19

துறைமுகம் தொகுதியிலுள்ள பாரதி மகளிர் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலே நடைபெறும் ஆட்சியில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா நினைவாக, தமிழகத்தில் உள்ள 68 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலே கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகங்கள், கழிப்பறைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 210 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். அந்தவகையில், துறைமுகம் தொகுதியிலுள்ள பாரதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 10 புதிய வகுப்பறைகளும், 2 ஆய்வகங்களும், ரூ.3.00 கோடி அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, இன்றைக்கு மாணவிகளுடைய பயன்பாட்டிலே அந்தக் கட்டடங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். சமச்சீர் கல்வி நாயகன், தலைவர் கலைஞர் அவர்களுக்கு ஒரு வணக்கம். சென்னை மாநகராட்சியில் மகளிர் பள்ளியை முதன்முதலில் துவக்கிய மகத்துவம், உழைப்பின் உச்சம், எங்கள் ஆருயிர் தளபதி அவர்களுக்கு ஒரு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதலாக வகுப்பறைகளைக் கட்டியிருப்பதாகக் குறிப்பிட்டார்; வரவேற்கிறேன். பல மொழிகளில் பயிற்சியும், பாண்டியத்துவமும் பெற்றிருந்தாலும், “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்” என்று தமிழுக்கு அணிகலன் சூட்டி, உலகறியச் செய்தவன், மகாகவி பாரதி. பாரதியாரின் திருப்பெயரில் இயங்கி வருகின்ற இந்தப் பள்ளியில்,

2020 மார்ச் 19]

4,446 மாணவிகள் பயில்கின்றார்கள். அங்கே நாங்கள் கடந்த மாதம் நாடாளுமன்ற உறுப்பினர்களோடு ஆய்விற்குச் சென்றபோது, ஒரு நூலகத்திற்குக் கூடுதலாகக் கட்டடங்களும், அறைகலன்களும், அதேபோல் விலங்கியல் துறைக்குத் தனியாக ஒரு கட்டடமும், அதேபோல் விலங்கியல் துறை, வேதியியல், உயிர் வேதியியல் துறை என block முழுவதுமாக செப்பனிடப்பட்டு, பராமரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்திருக்கின்றார்கள். ஏனென்றால், இக்கல்லூரியில் ஆண்டுக்காண்டு விண்ணப்பங்கள் அதிகரிப்பதால், 10 சதவிகிதம், 15 சதவிகிதம் என கூடுதலாக மாணவியர் சேர்க்கைக்கு உத்தரவிடுகிறீர்கள். அவ்வாறு கூடுதலாக மாணவியர் சேர்க்கை வருகின்றபோது, அதற்கேற்றாற்போல் கட்டடங்களும் அதிகரிக்கப்பட வேண்டும், ஆசிரியர்களும் அதிகரிக்கப்பட வேண்டும். இந்தக் கல்லூரியைப் பொறுத்தளவில், மொத்தப் பணியிடங்கள் 172. அதில் விரிவுரையாளர்கள் 129 பேர் இருக்கிறார்கள், கௌரவ விரிவுரையாளர்கள் 23 பேர் இருக்கின்றார்கள். ஏற்கெனவே இந்தக் கல்லூரியில் காலி இடங்கள் 20 இருக்கின்றன. தற்போது 4 ஆண்டுகளாக கூடுதலாக 15 சதவிகித மாணவியர் சேர்க்கை ஒதுக்கீடு செய்ததையும் கருத்தில்கொண்டு, கூடுதலாக ஆசிரியர்களை நியமிப்பதோடு கூடுதல் கட்டடங்களையும் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்காண்டு மாணவியருடைய சேர்க்கை கூடுதலாக இருக்கின்ற காரணத்தால்தான், தமிழக முதலமைச்சராக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்தில் கல்லூரிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.100 கோடியை ஒதுக்கித் தந்தார்கள். அவர் ஒதுக்கித் தந்த ரூ.100 கோடியில், துறைமுகம் தொகுதியில் இருக்கக்கூடிய பாரதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 1 கோடியே 46 இலட்சம் ரூபாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்தில் ஒதுக்கி அங்கு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய

தலைமையில் இருக்கக்கூடிய அரசானது, 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டுகளில் ஆண்டுதோறும் பழுதுபார்ப்பதற்காக நிதியை ஒதுக்கித் தந்ததன் அடிப்படையில், அந்தக் கல்லூரியின் மேம்பாட்டிற்காக பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக, RUSA திட்டத்தின்மூலம் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதுகலை மாணவிகளுக்கு விடுதிக் கட்டடம், 2 வகுப்பறைகள் மற்றும் பல்நோக்கு அறைகள் மற்றும் அறைகலன்கள், கல்லூரிக்கான உபகரணங்கள், மின் வசதி உள்ளிட்ட பணிகள் முடிக்கப்பட்டு, இன்றைக்கு மாணவிகளுடைய பயன்பாட்டில் அவை இருக்கின்றன. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், 92 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு சிறப்பு மானியமாக, ரூ.116 கோடியை ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். பழமைவாய்ந்த கட்டடங்களைப் பராமரிப்பு செய்வதற்காகவும், சிறப்புப் பழுதுபார்ப்புக்காகவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகவும், இந்த ஆண்டு 4 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்து பெருமை சேர்க்கின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல், அந்தக் கல்லூரியில் 4,446 மாணவிகள் இன்றைக்கு படித்துக் கொண்டிருக்கிறார்கள். 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, தமிழ்நாட்டில் மாணாக்கர்கள் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, ஒட்டுமொத்தமாக 1,666 புதிய பாடப் பிரிவுகளைத் தோற்றுவித்த வகையில், அந்தக் கல்லூரியில் மட்டும் முதுகலைப் படிப்பு படிக்கும் மாணவிகளுக்கு ஏதுவாக 6 பாடப் பிரிவுகளும், M.Phil. படிக்கின்றவர்களுக்கு 3 பாடப் பிரிவுகளும், Ph.D., பிரிவில் படிக்கின்றவர்களுக்கு 3 பாடப் பிரிவுகளும் ஒதுக்கித் தரப்பட்டுள்ளன.

முற்பகல் 10–35

தொடர்ந்து அங்கே கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியும், பாடப் பிரிவுகளை கூடுதலாக வழங்கியும் வருவதோடு, ஆசிரியப் பெருமக்களையும் நியமனம் செய்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. நிரந்தரப் பணியாளர்களாகப் பணியாற்றுகின்றவர்கள் போக, மீதம் இருக்கின்றவர்களுக்கு சுழற்சி 1–ல் தமிழகம் முழுவதும் கிட்டத்தட்ட 2,423 ஆசிரியப் பெருமக்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள்; சுழற்சி 2–ல் 1,661 ஆசிரியப் பெருமக்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரை, சுழற்சி 1–ல் 3,809 மாணவிகள்

2020 மார்ச் 19]

படித்துக் கொண்டிருக்கிறார்கள். சுழற்சி 2–ல் 637 மாணவிகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான ஆசிரியப் பெருமக்களெல்லாம் நியமனம் செய்யப்பட்டு, தரமான கல்வி கற்றுத் தரப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!”

என்று பாடினார் மகாகவி பாரதி அவர்கள். அந்த பாரதியாரின் கூற்றுப்படி, பாரதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முழுக்க பெண்களே படிக்கின்றனர். இந்தக் கல்லூரியானது 1964 ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டிருந்தாலும், அந்தத் தொகுதியினுடைய சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களாக இருந்த மறைந்த முத்தமிழ் அறிஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் அந்தக் கல்லூரியில் பல்வேறு கட்டமைப்புகளை மேம்படுத்தித் தந்திருக்கின்றார்கள். அந்தவகையிலே, இந்தக் கல்லூரியிலே படிக்கின்ற பெண்களை எடுத்துக்கொண்டால், வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழ்பவர்கள்தான் அதிகளவில் படிக்கின்றார்கள். பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவப் படிப்பிற்கும் அதிக அளவில் பொருளாதாரத்தைச் செலவு செய்து படிக்கின்ற சூழ்நிலை இல்லாத ஏழையெளிய மக்கள், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சாலையோரங்களிலே வசிக்கின்றவர்கள் மட்டுமல்லாது, குடும்பத்தின் முதல் பட்டதாரி மாணவிகள்கூட இந்தக் கல்லூரியில்தான் படித்து வருகிறார்கள். இந்தக் கல்லூரி, பிரகாசம் சாலையிலே அமைந்திருக்கிறது. கல்லூரியின் முதல் கட்டடமும், இரண்டாவது கட்டடமும் இணைகின்ற இடத்தில் அவ்வப்போது விபத்துகள் மற்றும் உயிரிழப்புகள் கடந்த காலங்களில் ஏற்பட்டிருக்கின்றன. அதற்காக நடை மேம்பாலம் ஒன்று அமைக்க திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது. உடனடியாக அந்த நடை

மேம்பாலத்தைக் கட்டித் தந்தால், விலைமதிப்பற்ற உயிர்கள் காப்பாற்றப்படும், மாணவிகளிடத்திலே இருக்கின்ற அச்சமும் குறையும். இந்தக் கல்லூரிக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துப் பேசுகிறேன் என்றால், ஒரு பெண்ணினுடைய கல்வி, உயர் கல்வி பயில்கின்றபோதுதான் வாழ்க்கை சீராக்கப்படுகின்ற ஒரு நிலை உருவாகும். அந்த உயர் கல்வி படிப்பினை முழுவதுமாகப் படித்து முடித்த பிறகுதான் அவர்களுடைய வாழ்வாதாரம் சிறக்கும், பொருளாதாரம் சிறக்கும், அவர்களுடைய வாழ்க்கையும் மேம்படும். தமிழ்நாடு முழுவதற்குமான திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே, பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற வகையில், இந்தக் கல்லூரிக்குத் தேவையான கட்டடங்களைக் கட்ட, அமைச்சர் சொன்ன திட்டத்தில் இந்தக் கல்லூரியை சிறப்பு அந்தஸ்தாக எடுத்துக்கொண்டு, ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியில் 30 சதவிகிதத்தையாவது இந்தக் கல்லூரிக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் வைத்து அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல, அந்தக் கல்லூரியானது, இடையிலே சாலை, இரண்டுபுறமும் கட்டடங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த மாணவிகள் சாலையைக் கடக்காமல், இரண்டு பக்கங்களையும் இணைக்கின்ற வகையிலே நடை மேம்பாலம் அமைக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த முன்மொழிவினுடைய மதிப்பீடு 1 கோடியே 21 இலட்சம் ரூபாய் ஆகும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்தக் கல்லூரிக்கு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 1 கோடியே 21 இலட்சம் ரூபாயை வழங்கி, அந்த நடை மேம்பாலத்தை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரை, மாணவிகளுடைய சேர்க்கை கூடுதலாக வந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால், அங்கு

2020 மார்ச் 19]

101 வகுப்பறைகளும் 21 ஆய்வகங்களும் தேவைப்படுகின்றன. இப்போது அங்கே 91 வகுப்பறைகளும், 21 ஆய்வகங்களும் இருக்கின்றன. கூடுதலாக அங்கே 10 வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. கடந்த ஆண்டு உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் நடைபெற்றதற்குப் பிறகு, விதி 110–ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், கல்லூரிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்காக 150 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து, பெருமை சேர்த்திருக்கின்றார்கள். அந்த நிதியிலிருந்து, வரக்கூடிய கல்வியாண்டிற்குள்ளாக அந்த 10 வகுப்பறைகளை மாண்புமிகு அம்மாவின் அரசானது கண்டிப்பாக பாரதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குக் கட்டித் தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையில் பேசியபோது, சுழற்சி முறையில் இயங்கும் கல்லூரிகளை மூடுவதற்கான முயற்சிகளை செய்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். பாரதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 4,000–க்கும் மேற்பட்ட மாணவிகள் படித்துக்கொண்டிருப்பதாக நீங்களே சொல்கிறீர்கள். அங்கே 10 வகுப்பறைகள் கட்ட வேண்டிய சூழ்நிலையும் இருக்கின்றது. ஆகவே, தொடர்ந்து சுழற்சி முறையில் அந்தக் கல்லூரியை நடத்துவதற்கு வாய்ப்புகள் இருக்குமா? அந்தக் கல்லூரியை சுழற்சி முறையில் நடத்தினால்தான் அந்த மாணவிகளுக்கு அது பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, இதுபோன்ற சூழ்நிலையில் அந்தக் கல்லூரியைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் நிதியைக் கொடுக்க தயாராக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த சுழற்சி முறை கல்லூரி என்பது காலத்தின் கட்டாயம். இன்று மாணவிகள் அரசு கல்லூரிகளில் அதிகளவில்

[2020 மார்ச் 19

படிக்கின்றார்கள். நீங்கள் கட்டடங்களைக் கட்டுவதில் ஒன்றும் தவறில்லை, ஆனால், அது சீக்கிரம் வராது; அது வருகிறவரை, இந்தச் சுழற்சி முறை கல்லூரிகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு முழுமையாக ஆய்வுகளை மேற்கொண்ட பிறகுதான், இதை நான் அறிவித்தேன். சுழற்சி 2–ல் 637 மாணவிகள் அங்கு படித்துக் கொண்டிருக்கின்றார்கள்; கூடுதலாக, அங்கு 10 வகுப்பறைகள் தேவைப்படுகின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்டியுள்ளேன். ஆக, அந்த 10 வகுப்பறைகளைக் கட்டிய பிறகு, சுழற்சி 2–ல் இருக்கக்கூடிய மாணவிகளும், சுழற்சி 1–ல் இருக்கக்கூடிய மாணவிகளும் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து ஒரே சுழற்சி முறையில் படிக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

ஆகவே, சுழற்சி 1 மற்றும் சுழற்சி 2–ல் இருக்கக்கூடிய கௌரவ விரிவுரையாளர்களுக்கெல்லாம் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. கல்லூரியானது காலையில் 8–30 மணிக்குத் தொடங்கி மதியம் 1–30 மணிக்கு முடிகிறது. மீண்டும் 1–30 மணிக்குத் தொடங்கி, மாலை 5–30 மணிக்கு முடிகிறது. ஆகவே, மாணவிகள் வீட்டிலிருந்து கல்லூரிக்கு வந்து, பின்னர் அவர்கள் வீட்டிற்கு காலதாமதமாக செல்வதிலுள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டுதான், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒட்டுமொத்த மாணாக்கர்களுடைய எட்டாக்கனியாக இருந்த உயர் கல்வியை அனைவருக்கும் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் புதிய பாடப் பிரிவுகள் கூடுதலாக அறிவிக்கப்பட்டன. அம்மா அவர்கள் இருக்கின்றபோது 961 பாடப் பிரிவுகளை அறிவித்தார்கள். அதன்பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 705 பாடப் பிரிவுகளை அறிவித்தார்கள். ஆக, 1,666 பாடப் பிரிவுகளை புதிதாகக் கொண்டு வருகின்றபோது, வகுப்பறைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது. அதற்காகத்தான் சுழற்சி–1 மற்றும் சுழற்சி–2 எனக் கொண்டு வரப்பட்டு, ஆசிரியர் பெருமக்களை சரியான முறையில் நியமனம் செய்து கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றது. தொடர்ந்து கட்டமைப்பு வசதிகளின் தேவை அதிகமாகி வருகின்ற இந்தக் காலகட்டத்தில், 150 கோடி ரூபாயை கூடுதலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

2020 மார்ச் 19]

106 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 56 கல்லூரிகளுக்கு மட்டும்தான் இதுபோன்று கூடுதல் கட்டடங்கள் தேவைப்படுகின்றன. ஆக, இந்த 56 கல்லூரிகளுக்கும் வரக்கூடிய கல்வி ஆண்டிற்குள்ளாக இந்தத் தொகையைப் பயன்படுத்தி வகுப்பறைகள், ஆய்வகங்கள் கட்டி முடிக்கப்பட்ட பிறகு, ஒரே சுழற்சி முறையில் வகுப்புகளை நடத்துவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்ற காரணத்தினால்தான் அதை நான் அறிவித்தேன். ஆகவே, மாணாக்கர்களுடைய கல்வியையும், அவர்களுடைய வளர்ச்சியையும் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு அம்மாவின் அரசானது இந்த முடிவை எடுத்திருக்கிறது. வகுப்பறைகள் இல்லாமல், ஆசிரியர் பெருமக்கள் இல்லாமல், மேலும், கௌரவ விரிவுரையாளர்களாக இருப்பவர்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல், கல்லூரிகளை நடத்துகின்ற வகையில்தான் அரசு இதை அறிவித்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அரசினர் மகளிர் தன்னாட்சி கல்லூரி, பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்களால் தொடங்கப்பட்டு, நமது பேரறிஞர் அண்ணா அவர்களால் 1969 ஆம் ஆண்டில் அதற்கான கட்டடம் திறக்கப்பட்டு தற்போது சுமார் 4,600 மாணவர்களுக்குமேல் கல்வி பயில்கின்ற, பழமையான, பாரம்பரியமிக்க, சிறப்பாகச் செயல்படுகின்ற கல்லூரியாகும். இதன் நிருவாகத்தில் உள்ள முதன்மை தங்கும் விடுதியில் BC, MBC, SC வகுப்பு பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 300 மாணவிகள் தங்கிப் படிக்கிறார்கள். இந்தக் கட்டடம் பழுதாகியிருப்பதால், இடப் பற்றாக்குறையின் காரணமாக 150 மாணவிகள் மட்டுமே தற்போது தங்கிப் படிக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது.

மேலும், இக்கல்லூரியில் தனியாக நூலகக் கட்டடம் இல்லாத காரணத்தினால், ஒரு வகுப்பறையில் இது செயல்படுகின்றது. மாணவிகள் படிக்கின்ற மகளிர் கல்லூரியில் பாதுகாப்பான சுற்றுச்சுவர் இல்லை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 1½ கோடி ரூபாய்க்குமேல் நிதியை அளித்து

12 வகுப்பறைக் கட்டடங்களைக் கட்டி, ஓரளவிற்கு நிறைவாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இக்கல்லூரிக்கு முதன்மை விடுதி, கழிப்பறை வசதியுடன்கூடிய கூடுதல் கட்டடம், நூலகத்திற்கு என புதிய கட்டடம் மற்றும் கல்லூரிக்கு சுற்றுச் சுவர் என மாணவிகளுடைய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கௌரவப் பேராசிரியர்களாக 80–க்கும் மேற்பட்டோர் அங்கே பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கோ அல்லது அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை அதிகரித்து வழங்குவதற்கோ இந்த அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பழமை வாய்ந்த கும்பகோணம் கல்லூரிக் கட்டடத்தைச் சீரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்துதர வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்தார். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, 116 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கும்பகோணம் கல்லூரியும் அதிலே இடம் பெற்றிருக்கிறது. ஆகவே, சிறப்பு நிதியாக ஒதுக்கப்பட்டுள்ள 116 கோடி ரூபாய் நிதியிலிருந்து அந்தக் கல்லூரியின் பழமை வாய்ந்த கட்டடத்தைச் சீரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சீரமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அந்தக் கல்லூரியினுடைய சுற்றுச் சுவர் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். சுற்றுச் சுவர் கட்டுவதற்காக ஒட்டுமொத்தமாக 37 கோடியே 52 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 68 கல்லூரிகளில் சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதிலே அந்தக் கல்லூரியும் இடம் பெற்றிருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஆக, 37 கோடியே 52 இலட்சம் ரூபாய் சுற்றுச் சுவர் கட்டுவதற்காக மட்டும்

2020 மார்ச் 19]

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் கண்டிப்பாக அந்தக் கல்லூரியும் அதிலே இடம் பெற்றிருக்கும். சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டிருக்கும் அல்லது அங்கே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கௌரவப் பேராசிரியர்களாக அங்கே பணிபுரிபவர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வைத்தார். அனைவரையும் பணி நிரந்தரம் செய்வதற்குண்டான வாய்ப்பு குறித்து சொன்னார்; அனைவரையும் அல்ல. ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக, 2,331 பணியிடங்களை மட்டும் பூர்த்தி செய்வதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதிலே விண்ணப்பித்தவர்களில், தகுதி வாய்ந்தவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். கௌரவ விரிவுரையாளர்களாக நீண்ட நாட்களாகப் பணியாற்றி வருபவர்களுக்கு வாய்ப்பை உருவாக்கும் வகையில் இது அமைந்துள்ளது. இதை முழுமையாக நிறைவு செய்தபிறகு, அடுத்த கல்வியாண்டில், கௌரவ விரிவுரையாளர்களாகப் பணிபுரிகின்றவர்களுக்கு வழங்கப்படும் ஊதியமான 15,000 ரூபாயை உயர்த்தி வழங்குவதற்கான ஆய்வை அரசு மேற்கொள்ளும், பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

131—

கால்நடை கிளை நிலையம்

***13501—திருமதி நா. மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், சந்திரப்பட்டி ஊராட்சி, செங்கல்பட்டி மற்றும் வேடப்பட்டி ஆகிய கிராமங்களில் கால்நடை கிளை நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், சந்திரப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட வேடப்பட்டி மற்றும் செங்கல்பட்டி கிராமங்களில் 1,065 கால்நடை அலகுகள் உள்ளன. இக்கிராமங்களுக்கு அருகிலுள்ள புதூர் புங்கனை, கோணப்பட்டி, அமியம்பட்டி, முருகந்தாழ், ஓட்டப்பட்டி, மண்ணாடிப்பட்டி, பொன்னநகர்பட்டி, ஊமைகவுண்டம்பட்டி, காட்டுசிங்கரிப்பட்டி, சிட்லட்சி ஆகிய கிராமங்களைச் சேர்த்து, மொத்தம் 5,057 கால்நடை அலகுகள் உள்ளன. ஆகவே, இதுகுறித்து அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம் அவர்கள்.

திருமதி நா. மனோரஞ்சிதம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறங்கும் திசைநோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

எங்களுடைய மாவட்டத்திற்கு அனைத்துக் கல்லூரிகளையும் வழங்கியதோடு, மருத்துவக் கல்லூரியையும் வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மாவட்டம் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், சந்திரப்பட்டி ஊராட்சி, செங்கல்பட்டி மற்றும் வேடப்பட்டி ஆகிய கிராமங்களில் கால்நடை கிளை நிலையம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு அமைச்சர்

2020 மார்ச் 19]

அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

132—

அவசர சிகிச்சை மையம்

***52632—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டையில் உள்ள அரசு மருத்துவமனையானது 90 படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனையாகும். நாளொன்றுக்கு 800 புறநோயாளிகளும், 30 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும், ஒரு மாதத்திற்கு 3 பிரசவங்கள் நடைபெறக்கூடிய மருத்துவமனையாகும். 24x7 என இரவு நேரத்திலும், அவசர சிகிச்சையில் மருத்துவர்கள் பணியில் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொண்டு என்ன தேவைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொல்கிறாரோ அதையும் செய்து கொடுப்பதற்கு அரசு தயாராக உள்ளது. செங்கோட்டை அரசு மருத்துவமனையில் Isolation Ward உட்பட 6 படுக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளன. சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்வி வந்ததற்குப் பின்னால் STEMI என்று சொல்லக்கூடிய இருதய சிறப்புச் சிகிச்சைக்காக, தற்போது ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு மருத்துவர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட செங்கோட்டை என்பது கேரள மாநில எல்லையின் அருகில் இருக்கக்கூடிய பகுதியாகும். அங்கிருக்கக்கூடிய மருத்துவமனையில் 8½ ஏக்கர் அளவில் நிலப் பரப்பு உள்ளது. ஆனால், அதில் தற்போது 2½ ஏக்கர் அளவிற்குத்தான் கட்டட வசதிகள் உள்ளன. அங்கிருக்கக்கூடிய அவசர சிகிச்சைப் பிரிவு என்பது தற்போது casualty–ல்தான் செயல்பட்டு வருகின்றது. தற்போது தென்காசி தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேலும், இது கேரளாவின் அருகில் இருக்கக்கூடிய பகுதியாக இருக்கிறது. அங்கு அதிகமாக accidents நடக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளது. அதுபோல் இன்றைக்கு இருக்கக்கூடிய கொரோனா வைரஸ் பாதிப்புகள் எல்லாம் கேரளாவின் அருகில் இருக்கக்கூடிய அண்டைப் பகுதியில் அதிகம் இருப்பதனால் அங்குள்ளவர்கள் என்ன சொல்கின்றார்கள் என்றால், அந்த மருத்துவமனையை நிரந்தரமாகத் தரம் உயர்த்தும் வகையில், Emergency பிரிவில் குறைந்தது பத்து படுக்கைகள் கொண்ட பிரிவை உருவாக்க வேண்டுமென்றும், பிணவறை ஒன்றை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்றும், அறுவை சிகிச்சை அரங்கத்தினை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்றும் சொல்கிறார்கள். மேலும், அவசர சிகிச்சைப் பிரிவு, அதாவது ICU Ward குறைந்தது 6 படுக்கைகள் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் கேட்கிறார்கள். அதுபோல் பெண்களுக்கான தனி Ward 30 படுக்கைகள் கொண்டதாகவும், ஆண்கள், பெண்களுக்கென தனியாக கழிவறைகளை உருவாக்கி தர வேண்டுமென்றும் கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர், கேள்வியை முடியுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி முடிந்துவிட்டது. மேலும், அங்கு இடம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கு Nursing College ஒன்றினை உருவாக்கித் தர வேண்டும் என்ற கோரிக்கையையும்

2020 மார்ச் 19]

தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை அரசு மருத்துவமனையிலிருந்து 10 நிமிட பயண தூரத்தில் அமைந்துள்ள தென்காசியிலுள்ள மருத்துவமனை மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுத்திருக்கின்ற கோரிக்கையில், செங்கோட்டை மருத்துவமனையில் எவை எவற்றிற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ அவற்றை உடனடியாக அரசு ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி; உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறேன். அதுபோல் எனது தொகுதியில் அதிகமான வனப் பகுதி இருக்கின்றது. அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கெல்லாம் சுற்றுச் சுவர் இல்லாமல் இருக்கின்றது. அவற்றையெல்லாம் கட்டிக் கொடுப்பதற்கு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், 30,000 மக்கள்தொகை கொண்ட வடகரை கீழ்படாகை ஆரம்ப சுகாதார நிலையத்தை ஒரு வட்டார மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும். தென்காசி மாவட்டத்தில், அதிகமான மக்கள்தொகை கொண்ட கடையநல்லூர் நகராட்சியில் மட்டும் 1,20,000 பேர் இருக்கிறார்கள். சுற்றுவட்டாரத்தில் உள்ளவர்களையெல்லாம் சேர்த்தோமென்று சொன்னால், கூடுதலாக 50,000 பேர் இருப்பார்கள். ஆகவே, மிகப் பெரிய அளவில் உள்ள கடையநல்லூர் மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் இந்த நேரத்தில் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2020 மார்ச் 19

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர், மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துதல், மாவட்ட தலைமை மருத்துவமனை எனப் பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். பொதுவாக, மருத்துவக் கல்லூரியினை நாம் வழங்கியதற்குப் பின்னர், ஒரு மாவட்ட தலைமை மருத்துவமனையை இன்னொரு மாவட்டத்திற்கு மாற்றுகின்ற வழிவகை தற்போது இல்லை. ஏற்கெனவே அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்டிருக்கின்றார்கள். எந்தெந்த மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளை வழங்கியுள்ளோமோ அந்த மாவட்ட தலைமை மருத்துவமனையினை இன்னொரு நகராட்சிக்கு மாற்றக்கூடிய நிலை இல்லை. நீங்கள் என்ன வசதிகளை விரும்புகிறீர்களோ, மாவட்ட தலைமை மருத்துவமனை அளவிற்கு அல்லது வட்டார தலைமை மருத்துவமனை அளவிற்கு அங்கு வரக்கூடிய நோயாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து வசதிகள் செய்யப்படும். சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில், அங்கு என்ன தேவை என்பதை ஆய்வு செய்து, நிச்சயமாக அங்கு பொதுமக்களுக்குத் தேவையான உரிய வசதிகளை அரசு செய்து கொடுக்கும். நீங்கள் சொன்னதுபோல, செங்கோட்டை மருத்துவமனை கேரள மாநில எல்லையை ஒட்டியுள்ளதால், அதற்கு முக்கியத்துவம் கொடுத்து isolation ward–ஐ ventilator வசதியுடன் நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். மேலும் சட்டமன்ற உறுப்பினர் வைத்த கோரிக்கையினை அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

முற்பகல் 10–55

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, தேசிய நெடுஞ்சாலையில் இருக்கின்ற தொகுதி. அது தற்போது புதிய தாலுகாவாக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, அங்குள்ள மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாக மாற்ற வேண்டும். அதுமட்டுமல்லாமல், நாய்க்கடிக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்து இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் ஒரு

2020 மார்ச் 19]

vial–ஐ 5 பேருக்குப் போட வேண்டுமென்று மருத்துவக் கிடங்கு அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்றால், ஒருவருக்காக இப்பொழுது போட முடியாது, நீங்கள் போங்கள்,** என்று சொல்கிறார்கள். 25, 30 பேர் நாய்க் கடியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நாய் கடித்து யாராவது ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றால், அதற்கு injection போடமாட்டேன் என்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாய் கடித்து ஒருவர் வந்தாலும் அவருக்குத் தரக்கூடிய வகையில் மருந்துகளை உற்பத்தி செய்து தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் தமிழ்நாட்டில் இப்பொழுது 4 இலட்சம் தெரு நாய்கள் இருக்கின்றன. இன்றைக்கு தெரு நாய்கள் கடித்து அதிகளவில் மக்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. இதையெல்லாம் உணர்ந்து கிராமப்புற மக்கள் நாய்க்கடியால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் அந்த மருந்தை ஒரு ampoule வழியிலே வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்கள் கேள்வி நேரத்தில், ஒருத்தருக்குக் கடித்தால்** என்று சொல்வது அவைக் குறிப்பில் இருப்பது ஏற்புடையதாக இருக்காது என்று கருதுகிறேன்.

அதுபோன்ற நிலை இல்லை. ஒரு நாளைக்கு 8 இலட்சம் நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கின்றோம். ஒவ்வொரு நோயாளியும் அரசுக்கு மிகமிக முக்கியம். ஒவ்வொரு நோயாளிக்கும் உரிய சிகிச்சையை அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் கனிவோடு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் சொன்னதுபோல, இரண்டாவது முக்கியமான விஷயம். ARV எனச் சொல்லக்கூடிய Anti Rabies Vaccine நிச்சயமாக தாலுகா மருத்துவமனையிலும், additional P.H.C.–லும் இருக்கிறது. அன்றைக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இதுகுறித்து ஒரு கேள்வியை எழுப்பியவுடனே உடனடியாக 2 நாட்களில்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

Animal Husbandry Department–உடன், அதாவது கால்நடை பராமரிப்புத் துறை உயரதிகாரிகளுடன் நாங்கள் meeting நடத்தி, ஒருவேளை நாய் கடித்தாலும் இன்றைக்கு அந்த நோய்த் தொற்று பரவாத அளவிற்கு மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிவிப்பில் தெரிவித்திருக்கிறார். அதற்குத் தேவையான நடவடிக்கைகளெல்லாம், நீங்கள் கேட்டதற்குப் பிறகு 2 announcements–ஆகக் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்த யோசனையையும் அரசு ஏற்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பது வேண்டாம். அதை எடுத்துவிடலாம்; அதை எடுத்துவிடுவோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினுடைய எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களை வணங்கி மகிழ்கின்றேன். எனது திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் அரசு மருத்துவமனை இயங்கி வருகிறது. இந்தப் பகுதியில் அதிகமான அளவிற்கு விபத்துகள் நடைபெற்று வருகின்றன. இந்த விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாகக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால், ஒன்று அங்கிருந்து 85 கி.மீ. தூரத்தில் இருக்கின்ற திருச்சி மருத்துவமனைக்குத்தான் கொண்டு செல்ல வேண்டும். அதேபோல் விழுப்புரம் கொண்டு செல்ல வேண்டுமென்றாலும் அங்கிருந்து 80 கி.மீ. தாண்டித்தான் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டக்குடி அரசு மருத்துவமனையில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு, casualty ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல் உள்நோயாளிகள் தங்குவதற்கு கட்டட வசதியில்லாமல் இருக்கின்றது. மாண்புமிகு கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்தபோது, நாங்கள் இரண்டு கட்டடங்களைப் புதியதாகக் கட்டித் துவக்கி வைத்தோம். இப்போது உள்நோயாளிகள் தங்குகின்ற வசதியில்லாமல் இருக்கின்ற நிலையைக் கருத்தில் கொண்டு, புதிய கட்டடம் ஒன்றைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அடுத்து, CT scan கருவியும் இல்லை. CT scan கருவியை உடனே வாங்கித் தருவதற்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். Digital X–Ray machine இல்லை. Digital X–Ray machine வாங்கி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. மிகவும் சிரமமாக இருக்கிறது. அந்த மருத்துவமனைக்குச் சென்று மருத்துவர்களை சந்தித்து கேட்டபோது Digital X–Ray machine வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கருத்துகளையெல்லாம் மனதில் கொண்டு உடனடியாக மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் இதை நிறைவேற்றித் தருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்றபொழுது விழுப்புரத்திற்கும் திருச்சிக்கும் நடுவில் விபத்து கால சிகிச்சை மையங்கள் அவசியம் தேவை என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். திருச்சி, விழுப்புரம் இரண்டிற்கும் நடுவில் உள்ள பெரம்பலூரில் மாவட்ட தலைமை மருத்துவமனை விபத்து கால சிகிச்சை மையமாக, CT scan, MRI scan போன்ற கருவிகளையெல்லாம் கொண்டு சிறப்பாக உருவாக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் ஒரு மாதத்திற்கு முன்னதாக நானும், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினரும், வேப்பூரில் அந்த zone–ல் நடக்கும் விபத்து கால accident–ஐ சமாளிப்பதற்காகவே விபத்து கால சிகிச்சை நிலைப்படுத்தும் மையத்தை 1 கோடி ரூபாய் செலவில் உருவாக்கி, தற்போது ஒரு நாளைக்கு 15, 16 அவசர சிகிச்சைகள் அங்கே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: அதைப் பற்றி நேற்றும் இந்த அவையில் குறிப்பிட்டேன். திட்டக்குடியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற புதிய கட்டடப் பிரிவு, digital x–ray போன்றவற்றை அமைப்பது குறித்து அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு இடவசதி போதுமானதாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இதை நாங்கள் தொடர்ந்து கேட்டு வருகிறோம். அதேபோல, MRI Scan வேண்டுமென்றும் கேட்டிருந்தோம். அதை வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் உடனடியாக வழங்குவதற்குத் தயாராக இருக்கிறார்களா? இன்னொரு செய்தி. இன்றைய நிலையிலே கொரோனா வைரஸின் நிலை தமிழகத்தைப் பொறுத்தமட்டில் என்ன நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தில் வைத்த கோரிக்கையின்படியே, காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் விபத்து காய சிகிச்சை மையம் அமைக்க ரூ.5 கோடிக்கு டெண்டர் விடப்பட்டு, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வந்துள்ளது. தாங்கள் தொடர்ந்து அவசர சிகிச்சைப் பிரிவை மேம்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்து வருகின்றீர்கள். MRI Scan வேண்டுமென்றும் உறுப்பினர் அவர்கள் கேட்டிருந்தார்கள். காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அதை வழங்குவது குறித்து பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அதன் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து, விரைவில் அரசு அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸின் தற்போதைய நிலை என்ன என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே காஞ்சிபுரத்தைச் சார்ந்த 45 வயது மதிக்கத்தக்க ஒருவருக்கு positive என்று result வந்து, நம்முடைய மருத்துவர்களால் மிகச் சிறப்பாக அவருக்குக் கூட்டு மருந்து சிகிச்சைகளெல்லாம் வழங்கப்பட்டு, அவர் குணமடைந்து discharge செய்யப்பட்டு, தற்பொழுது அவர்

2020 மார்ச் 19]

home quarantine–ல் இருக்க வேண்டுமென்று நாங்கள் அவருக்கு advise செய்திருக்கிறோம்.

இரண்டாவதாக, நேற்றையமுன்தினம் வட இந்தியாவைச் சேர்ந்த, குறிப்பாக, புதுடெல்லியைச் சேர்ந்த 20 வயது மதிக்கத்தக்க ஒரு north Indian, அவர் டெல்லியிலிருந்து இரயிலில் பயணம் செய்து சென்னைக்கு வந்திருக்கிறார். வந்தபொழுது அவருக்கு symptom இல்லை. அவருக்கு symptom வந்து, அவர் மருத்துவமனைக்கு வந்தவுடன் அவரிடமிருந்து sample எடுக்கப்பட்டது. நேற்று மாலை 4–00 மணியளவில் அவருடைய sample test–ல் அவருக்கு positive என்று result வந்தது. உடனே நாங்கள், ஊடகத் துறை, பத்திரிகைத் துறை நண்பர்களிடம் அந்த நபருக்கு positive என்று result வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்தோம். அந்த நபர் தற்போது சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் Isolation Ward–ல் தீவிர கண்காணிப்புப் பிரிவில், மருத்துவர்களின் கண்காணிப்பில் treatment–ல் இருக்கிறார். அந்த patient, stable ஆக இருக்கிறார். அந்தச் செய்தி வந்தவுடன், அவர் யார் யாருடனெல்லாம் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டதற்கான வாய்ப்பு இருந்தது என்பதைக் குறித்து ஆராய்ந்து வருகிறோம். எப்படி காஞ்சிபுரம் Engineer பாதிக்கப்பட்டிருந்தபோது, அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் மற்றும் மொத்தம் 27 பேருடைய contact history–யை எடுத்து quarantine செய்தோமோ, அதேபோல, இந்த நபருக்கும் நேற்று மாலை செய்தி கிடைக்கப் பெற்றதிலிருந்து இரவோடு இரவாக, இன்று காலை வரையில், இவரோடு தொடர்பு கொண்ட contact history–ல் உள்ள 10 பேரை மக்கள் நல்வாழ்வுத் துறைமூலம் trace செய்து, track செய்து அவர்களையும் நாங்கள் quarantine செய்திருக்கிறோம் என்ற தகவலையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் தவிர, தமிழகத்தில் வேறு யாருக்கும் இந்த நோய் இல்லை. தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 32 பேர் மருத்துவமனைகளில், அதாவது, திருச்சி, கோயம்புத்தூர், சென்னை போன்ற அரசு மருத்துவமனைகளில் Isolation Ward and Observation Wards–ல் observation–க்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் யாருக்கும் இதுவரை symptom இல்லை. தொடர்ந்து நாங்கள் நிறைய samples–ஐ lift செய்து கொண்டிருக்கிறோம். இதற்காக OP–யே வைத்திருக்கிறோம். இன்று காலையில்கூட நான் Stanley Hospital–ல் ஒரு மணி நேரம் ஆய்வு மேற்கொண்டேன். அங்கு fever OP, அதாவது help desk மாதிரி வைத்திருக்கிறோம். அங்கு, நிறைய பேர், நான் மும்பையிலிருந்து வந்தேன்; நான் வட இந்தியாவிற்குச் சென்று வந்திருக்கிறேன் என்று

தாமாகவே முன்வந்து சொல்கிறார்கள். அவர்கள் எல்லோரையுமே நம்முடைய மருத்துவர்கள் help desk மூலமாக receive செய்து, அவர்களுடைய panic situation–ஐக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். கூடுதலாக யாராவது sample கொடுக்க வேண்டுமென்றாலும்கூட, தேவைப்பட்டால், மருத்துவர்களின் அறிவுரையின்படி, அவர்களுக்கும் கூடுதலாக samples–ஐ lift செய்து கொண்டிருக்கிறோம் என்ற தகவலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்று, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் இருப்பதைப் பற்றிச் சொல்லியிருந்தேன். இன்னும் ஓரிரு நாட்களில் சென்னை Stanley மருத்துவமனையிலும் இதை test செய்யக்கூடிய diagnostic facility–ஐ setup செய்வதற்குண்டான அறிவுரைகளை வழங்கியிருக்கிறோம் என்பதை தற்போதைய நிலையாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

முற்பகல் 11–05

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸுக்கான சிகிச்சைக்கு test எடுக்கச் சென்றால், Private Hospitals–ல் 5,000 ரூபாய் கேட்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்வதைச் சொல்லுங்கள். இல்லை, இல்லை என்று நீங்கள் சொல்லிக்கொண்டேயிருந்தால் என்ன செய்வது? கொரோனா வைரஸிற்கு பயந்து போய் போனவர்களிடம் கேட்கிறார்கள். கொரோனா வைரஸ் சிகிச்சைக்கு, கலைஞர் காப்பீட்டுத் திட்டம் உள்ளிட்ட அனைத்து insurance companies மூலமாக சிகிச்சைக்கான செலவினை அரசே ஏற்குமா என்பதை தெரிந்துகொள்வதற்காகத்தான் கேட்கிறேன். 10 நாட்கள், 11 நாட்கள், 1 மாதம் என்று மருத்துவமனையில் தங்க வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு test எல்லாம் free ஆக செய்யப்படுகிறதா அல்லது கட்டணம் செலுத்த வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2020 மார்ச் 19]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் சிகிச்சை குறித்து எந்தப் பயமும், பதற்றமும் வேண்டாம்; சிகிச்சை செலவு குறித்தும் எந்தப் பயமும், பதற்றமும் வேண்டாம் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அரசு மருத்துவமனைகளில் reagent எல்லாம் முழுமையாக மத்திய அரசின் ICMR–லிருந்து வழங்கப்படுகிறது. அத்தனை diagnostic procedures–ஐயும் எந்தவித கட்டணமுமில்லாமல்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம். தனியார் மருத்துவமனைகளில் 5,000 ரூபாய் கட்டணம் வசூலிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்பதையும் பதிவு செய்ய விரும்புகின்றேன். காரணம் என்னவென்றால், இதுவரை எந்தவொரு தனியார் மருத்துவமனைக்கும் ICMR இன்னும் approval கொடுக்கவில்லை. இப்போது தனியார் மருத்துவமனைகள் பற்றி அனைவரும் கேட்கிறார்கள். கொரோனா வைரஸ் தாக்கம் சைனாவில் வந்தபோது, இந்தியா முழுமைக்கும், கொரோனா வைரஸைக் கண்டுபிடிக்கக்கூடிய வசதி புனேயில் இருக்கக்கூடிய National Institute of Virology (NIV) என்ற ஒரு lab–ல் மட்டும்தான் இருந்தது. அதற்கடுத்ததாக, இந்தியாவிலேயே இரண்டாவது இடமாக நமது சென்னையிலுள்ள கிண்டி King Institute of Preventive Medicine and Research இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுதும் அது நமக்கு sufficient ஆகவே இருக்கிறது.

தற்போது, நமது தமிழக அரசு மூலமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சென்னையைத் தொடர்ந்து தேனி, அதைத் தொடர்ந்து திருவாரூர், அடுத்து திருநெல்வேலி, அதைத் தொடர்ந்து தற்போது சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை என சிகிச்சை மையங்களை நாம் தொடர்ந்து increase செய்து கொண்டேயிருக்கிறோம்.

கடந்த ஓரிரு நாட்களுக்கு முன்னர், இந்தியா முழுவதுமே testing laboratories–ன் எண்ணிக்கை என்பது வெறும் 11 தான் என்பதைத் தகவலுக்காக நான் சொல்கிறேன். தனியார் மருத்துவமனைகளுக்கு ICMR இன்னும் approval கொடுக்கவில்லை. அதனால் அவர்கள் கட்டணம் வசூலிக்கக்கூடிய நிலை இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்த வினாவினை எழுப்பியதால், உடனடியாக அரசுத் துறை அதிகாரிகளோடு நாங்கள் ஆய்வு செய்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும்

Vellore CMC–ல் request செய்கிறார்கள் என்று சொன்னார்கள். Vellore CMC, Chennai Apollo Hospitals போன்ற மருத்துவமனைகள் இடம் பெற வாய்ப்பு உள்ளது. யார் well equipped Lab வைத்திருந்தாலும் please come forward, உங்களுக்கு நாங்கள் recommend செய்கிறோம். மத்திய அரசின் ICMR இடமிருந்து approval–ஐ வாங்கித் தருவதற்கான ஏற்பாட்டை நாங்கள் செய்து தருகிறோம். ஆனால், decision எடுக்க வேண்டியது ICMR தான்.

அதேபோன்று செலவுகளை பற்றிச் சொன்னார்கள். அரசு மருத்துவமனைகளில் முழுக்க முழுக்க எந்தவிதக் கட்டணமும் இல்லாமல்தான் சிகிச்சை தந்து கொண்டிருக்கிறோம். தனியார் மருத்துவமனைகளிலும் படுக்கை வசதிகளை உருவாக்கச் சொல்லி, நேற்று எல்லா தனியார் மருத்துவமனைகளின் Authorities–ஐயும் அழைத்து detailed ஆக Video Conference நடத்தியிருக்கிறோம். அவர்கள் எல்லோருமே Isolation Ward ready செய்கிறார்கள். தயார் செய்த பின்னர் அரசுக்குத் தகவல் தெரிவித்தால், அரசு சார்பில் Microbiologist, Dean அடங்கிய Committee சென்று ஆய்வு செய்கிறார்கள். Isolation Ward–க்கு உரிய specifications perfect ஆக இருக்க வேண்டும். Just 6 படுக்கைகளைப் போட்டால், community spread வருவதற்கு வாய்ப்பு இருப்பதால், மிகுந்த கவனத்துடன், கண்ணும் கருத்துமாக 3 அடுக்கு பாதுகாப்போடு, Isolation Ward என்றால் மிகச் சிறப்பான Isolation Ward ஆக இருக்க வேண்டுமென்று நாங்கள் அறிவுறுத்தியுள்ளோம். அதை நாங்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். மிகுந்த கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் இருக்கிறோம். கொரோனா வைரஸ் தொற்றுள்ள நோயாளிகளின் சிகிச்சைக்குண்டான கட்டணத்தைச் செலுத்த வேண்டிய நிலை இதுவரை தமிழகத்தில் இல்லை. அவ்வாறு ஒருவேளை தனியார் மருத்துவமனைகளில் நோயாளிகள் அனுமதிக்கப்பட வேண்டிய நிலை வந்து, அந்நிலையில் அவர்களுக்குக் கட்டணச் சலுகை வேண்டுமென்று சொன்னால், அந்த நேரத்தில் நிச்சயமாக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நோயாளிகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல் அரசே ஏற்று செய்வதற்கான வழிவகையும் இருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் தற்போது அந்த நிலை இல்லை. அவ்வாறு, panic இல்லாத situation–ஐ நாம் தொடர்ந்து maintain செய்து கொண்டேயிருக்கிறோம் என்பதையும்

2020 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இருக்கட்டும். ஒரு மூலக் கேள்விக்கு எத்தனை துணை வினாக்களை அனுமதிக்க முடியும்? உட்காருங்கள். (குறுக்கீடு) கேளுங்கள், அடுத்த வாய்ப்பு வந்தால் வழங்கப்படும்.

133—

வருவாய் கிராமம்

***27397—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், அரியப்பபுரம் ஊராட்சியை தனி வருவாய் கிராமமாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 2681–ன்படி, புதிய வருவாய் கிராமம் அமைக்க குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி 2,000 முதல் 2,500 ஏக்கர் வரை நன்செய் நிலமும், 4,000 முதல் 5,000 ஏக்கர் வரை புன்செய் நிலமும் இருக்க வேண்டும்.

ஆனால், புதிதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள அரியப்பபுரம் கிராமத்தில்

338.38 ஏக்கர் நன்செய் மற்றும் 883.33 ஏக்கர் புன்செய் நிலம் மட்டுமே உள்ளதால், எனவே, குறிப்பிட்டுள்ள நிலம் தொடர்பான நிபந்தனை பூர்த்தியாகவில்லை. எனவே, அரசாணையின்படி அரியப்பபுரம் புதிய வருவாய் கிராமம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

முற்பகல் 11–10

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை வாழவைத்த இரு தெய்வங்களாகிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மாவின் அரசை சிறப்பாக நடத்தி வரக்கூடிய விவசாயிகளுடைய நண்பன் மரியாதைக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். அவருக்கு உற்ற துணையாக இருக்கக்கூடிய தமிழகத்தின் துணை முதல்வர் அண்ணன் OPS அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து பிரித்து தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் உருவாக்க வேண்டுமென்று என்னுடைய கன்னிப் பேச்சில் பேசும்போது, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், ‘உங்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மாவினுடைய அரசின் பார்வைக்கு கனிவோடு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும்’ என்று கூறினார்கள். எல்லா நிலைகளிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டத்தை உருவாக்கினார். தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டமாக அறிவிப்பதற்கு உற்ற துணையாக இருந்த மரியாதைக்குரிய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அண்ணன் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 19]

அரசாணை எண் 2681–ன்படி, அரியப்பபுரம் ஊராட்சியை வருவாய் கிராமமாக மாற்றுவதற்கு சாத்தியமில்லையென்று கூறினாலும்கூட, அரியப்பபுரம் ஊராட்சியின் மக்கள்தொகை என்று பார்த்தால், 15,000 ஆக உள்ளது. அதிலே என்ன ஒரு பிரச்சினை என்று சொன்னால், அரியப்பபுரம் ஊராட்சியிலிருக்கக்கூடிய மக்களில் பாதிபேர் ஆவுடையானூர் வருவாய் கிராமத்திற்குச் செல்கிறார்கள். அதேபோல, அரசு கொடுக்கின்ற நலத் திட்ட உதவிகள் பொங்கலாக இருந்தாலும் சரி, தீபாவளியாக இருந்தாலும் சரி, விழாக்காலங்களில் கொடுக்கக்கூடிய அரசின் நலத் திட்டங்களைப் பெறுவதற்காக ஆவுடையானூர் வருவாய் கிராமத்திற்குப் பாதி பேரும், திப்பனம்பட்டி வருவாய் கிராமத்திற்குப் பாதி பேரும் செல்கிறார்கள். பல சிரமங்களை அந்த மக்கள் ஆண்டாண்டுகளாக அனுபவித்து வருகிறார்கள். எனவே, இந்தச் சிரமத்தை எல்லாம் போக்குவதற்கு அரியப்பபுரம் ஊராட்சியை தனி வருவாய் கிராமமாக மாற்றுவதற்கு நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியா சுதந்திரமடைந்ததற்குப் பிறகு 13 மாவட்டங்கள் இருந்தன. தற்போது 37 மாவட்டங்கள் இருக்கின்றன. புதிதாக ஒரு மாவட்டத்திற்குரிய பரிசீலனையும் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலே, வருவாய்த் துறையினுடைய வரலாற்றிலே, சுதந்திர இந்தியாவிற்குப் பிறகு ஒரே ஆண்டில் 5 புதிய மாவட்டங்களை உருவாக்கி சரித்திர சாதனையை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உருவாக்கி, அதிலும் முதல் மாவட்டமாக தென்காசி மாவட்டத்தை அறிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்களுடைய அந்த நீண்டநாள் கோரிக்கையை, அந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்தது. மாவட்டத்தையே உருவாக்கித் தந்த மாண்புமிகு அம்மாவின் அரசு வருவாய் கிராமத்தையும் உருவாக்கும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தபோதிலும், அரசாணையின்படி விதிமுறைகள் பூர்த்தியாகாத காரணத்தாலே மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவரின் கனிவான பார்வைக்கு வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலிக்கப்படும் என்று கூறினாலே அவர்கள் கட்டாயமாக நிறைவேற்றித் தருவார்களென்ற நம்பிக்கை உள்ளது. தென்காசி தாலுகாவில் கல்லூரணி கிராமம் அமைந்துள்ளது. அந்த கல்லூரணி கிராமத்தில் முக்கியமான ஊரென்று சொன்னால் அது பாவூர்சத்திரம். அந்த ஊரில் உள்ள 218, 219/1 ஆகிய இரண்டு சர்வே எண்களிலும் கிட்டத்தட்ட 1968–1969–லிருந்தே 350 குடும்பங்கள் மட்டுமல்லாது, கல்லூரணி பஞ்சாயத்து ஆபிஸ், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி போன்றவையும் அமைந்திருக்கின்றன. இப்போது நான் சொல்ல வருவது என்னவென்றால், தரை வாடகை உள்ளிட்டவற்றை ஊராட்சி ஒன்றியத்திற்கு அவர்கள் பணமாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பட்டாவானது குற்றாலம் சத்திரம் என்கிற மூதாதையர் யாரோ ஒருவருடைய பெயரில் இருக்கிறது. அந்தப் பகுதியில் வாழக்கூடிய 350 குடும்பத்தினரும் பட்டா வாங்குவதில் மிகவும் சிக்கலுக்குள்ளாகி இருக்கிறார்கள். மேலும், SH 39 சாலை விரிவாக்கப் பணிகளுக்காக, அரசு ஔவையார் மேல்நிலைப் பள்ளிக்குக் கிடைக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை வாங்குவதில்கூட நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. அதனால், நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வருவாய்த் துறையை முடுக்கிவிட்டு, சர்வே எண்கள் 218, 219/1 என்பதன்கீழ் இருக்கக்கூடிய மக்களுக்குப் பட்டா கிடைப்பதற்கும், அந்தப் பள்ளிக்குக் கிடைக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை கிடைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டா குறித்தும், இழப்பீடு

2020 மார்ச் 19]

குறித்தும் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார்கள். வருவாய் ஆவணங்களிலே நிலத்தின் வகைப்பாடு என்ன குறிக்கப்பட்டிருக்கின்றதோ, அதையொட்டித்தான் இழப்பீட்டுத் தொகை வழங்குவதை நாம் நடைமுறையிலே கடைப்பிடித்து வருகின்றோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கையை மாவட்ட நிருவாகத்தினுடைய கவனத்திற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு எடுத்துச் சென்று, உரிய தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். என்னுடைய தொகுதிக்குட்பட்ட அனுப்பர்பாளையம் கிராமம் இரண்டு தாலுகாக்களில் அமைந்துள்ளது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய வீடுகூட பக்கத்தில் வடக்கு தாலுகாவிலும், அதற்கு அருகேயுள்ள தெற்கு தாலுகாவிலும் அமைந்துள்ளது. இதனால், அரசாங்கத்தினுடைய சலுகையைப் பெறுவதற்கு ஏழையெளிய மக்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. இதனால் நிருவாகச் சிக்கல் ஏற்படுகின்றது. மேலும், வடக்கு தாலுகா மிகப் பெரிய தாலுகாவாக உள்ளதால், தெற்கு தாலுகாவிலே உள்ள அனுப்பர்பாளையம் கிராமத்திற்கு முழு உரிமையையும் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள், ஏற்கெனவே இதுகுறித்து என்னுடைய

கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அக்கிராமம் இரண்டு தாலுகாக்களிலே இருக்கிறபோது, நிருவாக நலன்கருதி, அரசின் நலத் திட்ட உதவிகளைப் பெறுவதிலே பல்வேறு சிரமங்கள் மக்களுக்கு ஏற்படுகின்றன என்பதை மக்களின் நலன் சார்ந்து முன்வைத்திருக்கின்றார்கள். அதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று, உடனடியாக மாவட்ட நிருவாகத்திற்குத் தெரிவித்து, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் கையிருப்பு, நாளைய தமிழக முதல்வர், ஆருயிர் அண்ணன் தளபதி அவர்களை வணங்குகிறேன். நான் சார்ந்திருக்கிற திருவிடைமருதூர் தொகுதியில் திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் திருமண உதவித் தொகை, கர்ப்பிணி பெண்கள் உதவித் தொகை, முதியோர் உதவித் தொகை ஆகிய உதவித் தொகைகளைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் e–mail–ல் பதிவிறக்கம் செய்யப்பட்டு உதவித் தொகைகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது; அதுதான் நடைமுறையில் இருக்கிறது. ஆனால் server–ல் ஏற்படுகிற ஒருசில பிரச்சினைகளால் குறிப்பிட்ட காலத்தில் அந்த விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படாமல், காலம் கடந்து கேட்கிறபோது, ‘காலதாமதமாகிவிட்டது, நீங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகலாம்’ எனச் சொல்லிவிடுகிறார்கள். எனது தொகுதியில் மட்டும் சுமார் 15 பேருக்கு திருமண உதவித் தொகை, server பிரச்சினையால் கிடைக்காமல் இருக்கிறது. இதுபோன்ற பிரச்சினை எல்லா தொகுதிகளிலும் இருக்கும் என்றுதான் கருதுகிறேன். எனவே, தவிர்க்க முடியாத ஒருசில காரணங்களினால் ஏற்படுகின்ற அந்தக் காலதாமதத்தை, உள்ளபடியே இலாகா ரீதியாக ஏற்படுகிற இடர்பாடுகளைக் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடி கவனம் செலுத்தி, அவற்றைக் களைந்து, தகுதியுடைய பயனாளிகளுக்கு, ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித் தொகையினை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

2020 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நடைமுறையில் இருக்கக்கூடிய technical problem காரணமாக நலத் திட்ட உதவிகள் கிடைக்காமல் போகின்றன; அது தவிர்க்கப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, கால அவகாசம் என்பதை திருமண உதவித் தொகைக்கு மட்டும்தான் வைத்திருக்கிறோம். அந்தக் கால அவகாசத்திற்குள்ளே அந்த விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். Manual ஆக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுகிறபோது அந்தப் பிரச்சினைகள் இல்லை. இப்போது online மூலமாக computer–ல் பதிவு செய்ய வேண்டியுள்ளதால் அந்த எண்ணிக்கை விடுபடுகிற நேர்வில், உதவித் தொகையினை அவர்கள் claim செய்ய முடியாது. அந்த அடிப்படையில்தான், நீங்கள் தற்போது சொல்லியிருக்கிறீர்கள். அங்கே உடனடியாக விசாரணை செய்து, உரிய நடவடிக்கையை எடுத்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தீர்வு காணும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

134—

பேருந்து வசதி

***55963—திரு. கி. மாணிக்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக வாடிப்பட்டியிலிருந்து சென்னைக்குப் பேருந்து இயக்க சாத்தியமில்லை. மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக மதுரையிலிருந்து சென்னைக்கு தடம் எண் 137–ல் 60 பேருந்துகள் வாயிலாக 80 நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. தென்மாவட்டங்களிலிருந்து மதுரை வழியாக சென்னைக்கு அதிகளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேற்கூறிய பேருந்துகளுக்கு இணையதளம் மூலமாக முன்பதிவு செய்யும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, வாடிப்பட்டியிலிருந்து சென்னை செல்லும் பயணிகள் நகர் மற்றும் புறநகர் பேருந்து வசதியினை பயன்படுத்தி, சுமார் 28 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மதுரையை வந்தடைந்து, மேற்கூறிய பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.

திரு. கி. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமே எனது குடும்பம், தமிழக மக்களே என் பிள்ளைகள் என வாழ்ந்து, இந்த மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதில் என்றென்றும் குடிகொண்டிருக்கும் தமிழர் குலசாமி, எங்கள் குடும்ப குலதெய்வம் அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து 2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆளுமைக்கான விருதை தமிழகத்திற்குப் பெற்றுத் தந்தது மட்டுமல்லாமல், இந்தியாவிலேயே சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையைப் பெற்றுத் தந்து, மீத்தேன், ஹைட்ரோ கார்பன் போன்ற விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய எந்தத் திட்டமும் தமிழகத்தில் நுழையாதவண்ணம் டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தும், மதுரையில் உலகத் தரம்வாய்ந்த AIIMS மருத்துவமனை மற்றும் ஒரே ஆண்டில்

2020 மார்ச் 19]

11 மருத்துவக் கல்லூரிகளை வழங்கியும், நீர் ஆதாரங்களைப் பெருக்கிட குடிமராமத்துத் திட்டத்தைத் தந்தும், நதிகளை இணைக்க நிதி ஒதுக்கீடு செய்தும், உலகே வியக்கும் உன்னதத் திட்டங்களைத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றையதினம் நடைபெற்ற பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில், நான் கோரிக்கை வைத்த எனது தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான எனது தொகுதிக்குட்பட்ட, பழமைவாய்ந்த சித்தணையைப் புனரமைக்க ரூபாய் 5 கோடியை தாயுள்ளத்தோடு ஒதுக்கீடு செய்துள்ள வாழும் பாரிவள்ளல், குடிமராமத்து நாயகன், காவேரி காப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவருக்கு உற்ற துணையாக தாய்த் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையிலே கொண்டு செல்லவும், வளமான தமிழகத்தை உருவாக்கிடவும், புதிய வரிகளே இல்லாத உலகம் போற்றும் உன்னத நிதிநிலை அறிக்கையைத் தந்திட்ட இதய தெய்வம் அம்மா அவர்களின் நம்பிக்கை நட்சத்திரம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் மாணிக்கம், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. கி. மாணிக்கம்: விசுவாசத்தின் மறு உருவம், எளிமையின் அடையாளம், பொறுமையின் சிகரம், தேனி தந்த பூந்தென்றல் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஜல்லிக்கட்டு நாயகன் அவர்களையும், எனது மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிப்பட்டி பகுதி என்பது 2 பேரூராட்சிகளையும், 23 ஊராட்சிகளையும் உள்ளடக்கிய பகுதியாகும். இந்தப் பகுதியில் ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களும், வியாபாரப் பெருங்குடி மக்களும் வசித்து வருகிறார்கள். நான்கு வழிச் சாலை அமைப்பதற்கு முன்பு, வாடிப்பட்டி நகர் வழியாக திண்டுக்கல் போவதாக இருந்தாலும் சரி, சேலம் போவதாக இருந்தாலும் சரி, பழனி போவதாக இருந்தாலும் சரி அனைத்துப் பேருந்துகளும் சென்று கொண்டிருந்தன. இப்பொழுது நான்கு வழிச் சாலை அமைக்கப்பட்ட காரணத்தால், அனைத்துப் பேருந்துகளும் by–pass, நான்கு வழிச் சாலை வழியாகச் சென்று விடுவதால் வாடிப்பட்டியிலிருந்து

எந்தப் பயணிகளும் பயணிக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த வாடிப்பட்டி பேருந்து நிலையத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மூன்றரை கோடி ரூபாய் செலவில் புதுப்பித்துத் தந்திருக்கிறார்கள். அந்த இணைப்புச் சாலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10 கோடி ரூபாய் செலவில் சிறப்பான முறையில் செய்திருக்கிறார்கள். எனவே அந்தப் பேருந்துகள் உள்ளே வந்து சென்றால் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு ஏதுவாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவாகக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிப்பட்டி, மதுரை–திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் மதுரையிலிருந்து 28 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. வாடிப்பட்டி பயணிகளுக்காக பயணிகளின் அடர்வுக்கேற்ப முன்பதிவில் இட ஒதுக்கீடு செய்து வாடிப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் குறிப்பிட்ட பேருந்துகள் நின்று செல்ல வழிவகை செய்து கொடுத்தால் அதுவே போதுமானதாக இருக்குமென்று கருதுகிறேன். எனவே, வாடிப்பட்டி பயணிகள் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம்.

திரு. கி. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிப்பட்டி பேருந்து நிலையத்திற்குப் பேருந்துகள் வந்து செல்லும் என்று சொன்னதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருமங்கலம், குருவித்துறைக்கு ஒரு பேருந்தும், டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்திலிருந்து முள்ளிப்பள்ளத்திற்கு ஒரு பேருந்தும் வழங்க வேண்டுமாய் அன்புடன் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2020 மார்ச் 19]

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து அஸ்தம்பட்டி, கோரிமேடு, கொள்ளப்பட்டி வழியாக கன்னங்குறிச்சிக்கு ஒரு நகரப் பேருந்து இயக்கப்படுமா? அதைப்போல சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து Court road வழியாக ஒரு நகரப் பேருந்து இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த வழித்தடத்தில் எவ்வளவு பேருந்துகள் இயங்குகின்றன, அந்த வழித்தடத்தில் பயணிகள் அடர்வு என்ன என்பதை ஆய்வு செய்து அந்த வழித்தடத்தில் பேருந்துகளை இயக்க அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

135—

இசைக் கல்லூரி

***38676—திரு. பி.வி. பாரதி**:

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழியில் உள்ள இசைக் கல்லூரிக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

[2020 மார்ச் 19

முற்பகல் 11–25

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், தாடாளன்கோவில் கிராமத்தில், சீர்காழி அரசு இசைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்ட இடம் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கான விரிவான கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆணையினைப் பெற்று, சுமார் ரூ.1.1 கோடி செலவில் சீர்காழியிலுள்ள இசைப் பள்ளிக்குப் புதிதாகக் கட்டடம் கட்ட அரசு விரைவில் ஆவன செய்யும். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆணையினைப் பெற்று, விரைவில் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், உங்களுக்கு ஏற்கெனவே ஒரு மூலக் கேள்வி கேட்கவும், இரண்டு துணைக் கேள்விகள் கேட்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது அனுமதியளிக்கிறேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். நாங்கள் வணங்குகின்ற தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்கி, காவேரி காப்பாளர், எளிமையின் சிகரம் மாண்புமிகு முதல்வர் அவர்களையும். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வாய்ப்பில் பார்க்கலாம், உட்காருங்கள்.

திரு. பி.வி. பாரதி: 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சீர்காழி பகுதியில் அமைந்துள்ள இசைப் பள்ளியானது, தற்போதும் வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. ஒரு கிராமப்

2020 மார்ச் 19]

பகுதியில், ஒரு மாவட்ட இசைப் பள்ளியானது, அதுவும் குறிப்பாக, சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் வாழ்ந்த ஊரான எங்கள் ஊரில் தொடங்கப்பட்டுள்ளது. அந்த இசைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்குரிய இடத்தையும் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பாகவே நாங்கள் கண்டறிந்து கொடுத்துள்ளோம். அந்த இசைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை ஆண்ட முதல்வர்களில் பெருந்தலைவர் காமராஜர் அடித்தளமிட்டது கல்விமிகை தமிழகம்; புரட்சித் தலைவர் அவர்கள் அடித்தளமிட்டது உணவுமிகை தமிழகம்; புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அடித்தளமிட்டது மின்மிகை தமிழகம்; தற்போது அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அடித்தளமிட்டுக்கொண்டிருப்பது நீர்மிகை தமிழகம்; இந்த நால்வரும் சேர்ந்து அடித்தளமிட்டு, தமிழகத்திற்குத் தந்திருக்கின்ற வரம் கலைமிகு தமிழகம் ஆகும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், கலைகள் மிகுந்திருக்கக்கூடிய அளவிற்கு எண்ணற்ற திட்டங்களை கலை மற்றும் பண்பாட்டுத் துறைக்காகத் தந்திருக்கிறார்கள். 40 ஜவஹர் சிறுவர் மன்றங்களாக இருக்கட்டும், இதே சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பெயரில் இயங்கக்கூடிய 31 கல்லூரிகள் இணைந்திருக்கும் கவின் கலை மற்றும் இசைப் பல்கலைக்கழகமாக இருக்கட்டும், 17 இசைப் பள்ளிகளாக இருக்கட்டும், இவை எல்லாவற்றிற்கும் மேலாக இசைப் பள்ளிகள் எல்லாவற்றையும் Community College ஆக, அதாவது, சமுதாயக் கல்லூரியாக மாற்றும் பணியாக இருக்கட்டும், அனைத்தும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அதனால்தான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'இசைக் கல்லூரிக்கு' என்று கேள்வி கேட்டிருக்கின்றார்கள்; சமுதாயக் கல்லூரிக்கான இடத்தைக் கண்டறிந்துள்ளோம். எல்லா இடங்களிலும், குறிப்பாக இன்னும் 6 மாவட்டங்களில் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற கொள்கைரீதியான முடிவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அதனடிப்படையில், வெகு விரைவில் சீர்காழியிலுள்ள இசைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்ட ஆணை பிறப்பிக்கப்படும்

என்று நான் நம்புகிறேன். அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் துறை செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அதே இடத்தில் 17½ சென்ட் அரசுப் புறம்போக்கு களம் என்ற வகைப்பாட்டில் இருக்கின்ற நிலம் கண்டறியப்பட்டுள்ளது; Enter upon permission–ம் வாங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணை பெறப்பட்டவுடன், விரைவில் அந்த இடத்தில் சொந்தக் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது, அவர்கள், தன்னுடைய துறையை மிகச் சிறப்பாக வழி நடத்திச் சென்று கொண்டிருக்கிறார்கள். தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழிசை மூவர் விழாவிற்காக சீர்காழிக்கு வருகை தந்திருந்தார்கள். தமிழிசை மூவருக்கு சிறப்பு செய்ததன் காரணமாக, எங்களுடைய சீர்காழிக்குச் சொந்தக்காரரான சீர்காழி கோவிந்தராஜன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்துத் தர வேண்டும். இதுகுறித்து மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களை நீங்கள் வலியுறுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் இசைப் பள்ளியைப் பொறுத்தவரையில், ஏழையெளிய மாணவச் செல்வங்கள், குறிப்பாக பெண்கள் மிகச் சிறப்பாகப் பயின்று வருகிறார்கள். அங்கு குரலிசைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. குறிப்பாக நாதஸ்வரத்தைப் பொறுத்தவரையில், பெண்களும் மிகச் சிறப்பாகப் பயின்று வருகிறார்கள். எனவே, அந்த இசைப் பள்ளிக்கு விரைவில் கட்டடம் கட்ட ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

2020 மார்ச் 19]

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து இசைப் பள்ளிகளையும் சமுதாயக் கல்லூரிகளாக மாற்றம் செய்யும் பணியும், அனைத்து இசைப் பள்ளிகளிலும் நாட்டுப்புறக் கலைகளைக் கற்பிப்பதற்கான திட்டமும் இந்த ஆண்டிலிருந்து துவங்கவிருக்கின்றன. அதேபோன்று, சொந்தக் கட்டடம் கட்டும் பணி முடிவடைந்தவுடன், கண்டிப்பாக உங்களுடைய கோரிக்கையை செய்தித் துறை மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எடுத்துச் சென்று, தமிழிசை மூவர் பிறந்த சீர்காழியிலே, சீர்காழி கோவிந்தராஜன் அவர்களுக்கு சிறப்பு செய்வதற்கான பரிந்துரையை எங்கள் துறை மூலமாகச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே, கலாஷேத்ரா மூலமாகவும், தஞ்சை தென் மண்டல கலை பண்பாட்டு மையம் என்ற மத்திய அரசாங்கத்தின் அமைப்பு மூலமாகவும் சீர்காழியை மையமாக வைத்து பல நிகழ்ச்சிகளை அங்கு நடத்துவதற்கு இந்த ஆண்டு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

(அ) கொரோனா வைரஸ் தாக்கம், பொருளாதார மற்றும் பொதுச் சுகாதார பாதிப்புகளைத் தடுக்க வலுவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் வரிச் சலுகைகள் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் நோய் வந்து நாட்டையே புரட்டிப் போட்டுவிட்டது. காரணம், எல்லா இடங்களிலும், வியாபார ஸ்தலங்கள் மூடப்பட்டுள்ளன; ஹோட்டல்களை

மூடிவிட்டோம்; சினிமா தியேட்டர்களை மூடிவிட்டோம்; கல்விக் கூடங்களையும் மூடிவிட்டோம். சிறு கடை வியாபாரிகளும் மூடிவிட்டார்கள். இலட்சக்கணக்கான கோழிகள் செத்துப்போய் விட்டன; இலட்சக்கணக்கான முட்டைகள் வீணாகிவிட்டன. ரோடுகள் எல்லாம் காலியாகக் கிடக்கின்றன. கோயில்களையும் மூடிவிட்டோம். திருமணத்திற்கு restrictions போட்டுவிட்டோம். Military hotels–ஐ மூடியதால் ஆடுகள் தப்பித்தன. மூடப்படாமல் இருப்பது சட்டமன்றம். இதுதவிர மற்ற எல்லாவற்றையும் மூடிவிட்டோம். (குறுக்கீடுகள்) டாஸ்மாக்கையும் மூடவில்லை. இந்த இரண்டே இரண்டுதான் மூடப்படவில்லை. நேற்றுகூட டி.வி–யில் பார்த்தபோது, ஒரு அம்மா அழுகிறது; 'நான் கூலி வேலை செய்பவள், ஒரு நாளைக்கு 500 ரூபாய் சம்பாதிக்கிறேன். எனக்கு வருவாய் போய்விட்டதே! ஆனாலும், என்ன செய்வது? நாட்டுக்காக. . .' என்று அந்த அம்மா அழுகிறது. சிறு கடை வியாபாரிகள், மூட்டை தூக்குபவர்கள், வண்டி இழுப்பவர்கள் என எல்லோரும் பாதிக்கப்பட்டு விட்டார்கள். ஆகையால், மக்கள் மிகவும் அவஸ்தைப்படுகிறார்கள். ஓட்டல்களை மூடினால் மிகவும் கஷ்டம். ஏனென்றால், March end இது. இப்போதுதான் வியாபாரிகள் எல்லோரும் advance tax கட்ட வேண்டும், G.S.T. கட்ட வேண்டும், வரி கட்ட வேண்டும். இதையெல்லாம் கட்டுவதற்கு இப்போதிருக்கிற நிலைமையில் அவர்களிடம் பணம் கிடையாது. கூலி வேலை செய்பவர்களுக்கு, நித்தம் நித்தம் வண்டி இழுப்பவர்களுக்கு, மூட்டை தூக்குபவர்களுக்கு அன்றாடம் 500 ரூபாய் கிடைத்தால்தான் சாப்பிட முடியும் என்று டி.வி.–யில் சொல்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் அரசாங்கம் ஏதாவது, எப்படியாவது உதவி செய்ய முடியுமா? இரண்டாவதாக, வியாபாரிகளெல்லாம் tax–ஐ 30 ஆம் தேதிக்குள் கட்ட வேண்டும். எனவே, 6 மாத காலத்திற்கு tax holiday விடப்படுமா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இதே பொருள் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் திரு. அர. சக்கரபாணி, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோர் விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அமைச்சர், ஒரு நிமிடம் உட்காருங்கள். அதையொட்டி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

2020 மார்ச் 19]

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்து வைத்த அதே கோரிக்கையின் அடிப்படையிலே இன்னும் சில விளக்கங்களை இந்த அரசின் மூலமாகப் பெறுவதற்கு நான் விரும்புகிறேன். குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களெல்லாம் மூடப்படக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறதென்பதை நாம் உணர்வுபூர்வமாக உணருகிறோம். அதனால் வேலை இழப்பு, தொழில் இழப்பு, வருமான இழப்பெல்லாம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை ஒரு பொருளாதார emergency ஆக Britain அறிவித்து, business package என்று ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது. அதன்படி அங்கிருக்கக்கூடிய சிறு தொழில்களுக்கு ரொக்க மானியம் வழங்குவதாக அந்தச் செய்தியிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோல், France நாட்டிலே தொழில்களுக்கு மானியம் அளிக்கப்படும் என்றும், வரி, வாடகை, குடிநீர், மின் மற்றும் சமையல் எரிவாயுக் கட்டணங்கள் வசூல் எல்லாம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படும் என்றும் அந்த நாடு அறிவித்திருக்கிறது. சம்பளம் வழங்குதல், வரிச் சலுகை போன்ற மீட்பு packages–ஐ நியூசிலாந்து அறிவித்திருக்கிறது. வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்கான சலுகைகளை அதிகரிப்பது, சிறு தொழில்கள், கம்பெனிகளுக்கு ஆதரவளிக்கும் சலுகைகள், வரி, கடன் செலுத்துவதற்கு கால அவகாசம் போன்றவற்றை இத்தாலி நாடு அறிவித்திருக்கிறது. தொழில்கள், வேலைவாய்ப்பு போன்றவற்றைப் பாதுகாக்க வரம்பில்லாத கடன் வழங்கும் முறையை ஜெர்மனி அறிவித்திருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்தியாவில் இருக்கக்கூடிய ஒடிசா மாநிலத்தில், கொரோனா நோயைத் தடுப்பதிலே ஒரு புதிய யுக்தியைக் கண்டுபிடித்து அதை வெளியிட்டிருக்கிறது. அதாவது வெளிநாடு சென்று வந்தவர்கள் தாங்களாகவே அரசிடம் பதிவு செய்துகொண்டு தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக்கொண்டால் 15,000 ரூபாய் ரொக்கப் பரிசு என்றவொரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. ஆகவே, மேற்கண்ட இந்த மாதிரிகளை நம்முடைய தமிழக அரசும் கடைப்பிடித்து, கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஏற்படக்கூடிய பொருளாதார, பொதுச் சுகாதார பாதிப்புகளைத் தடுக்க வலுவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதைத் தங்கள் மூலமாக வலியுறுத்திக் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் ஒன்றும் அறிவிப்பு கொடுக்கவில்லை, இருங்கள்.

[2020 மார்ச் 19

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார் அல்லவா, உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, நான் அதை என்னவென்று பார்க்கிறேன், இருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) அதை நான் என்னவென்று பார்க்கிறேன், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மேலை நாடுகளிலே எடுக்கப்பட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். உலக அளவிலே முதலிலே அந்த வைரஸ் கிருமிகளெல்லாம் உருவான நாடாக இருந்த காரணத்தினால், முன்னெச்சரிக்கையாக, நீண்ட காலம் கிட்டத்தட்ட 2, 3 மாதங்களுக்கு முன்பாகவே அந்தப் பகுதிகளிலே அந்தப் பிரச்சினை ஏற்பட்டதன் காரணமாக, அவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றார்கள். அதன்காரணமாக பல்வேறு சலுகைகளெல்லாம், பல்வேறு மேலைநாடுகளிலே வழங்கியிருப்பது நாம் அறிந்த உண்மைதான். ஆனால், இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகள், இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களெல்லாம் உற்று கவனிக்கக்கூடிய அளவிலேயும், பல்வேறு தலைவர்கள் எல்லாம் போற்றக்கூடிய அளவிலேயும் (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளன. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, மக்கள் அதிக அளவிலே கூடக்கூடிய mall என்று சொல்லக்கூடிய வியாபாரத் தலங்கள், சினிமா தியேட்டர்கள், பள்ளிக்கூடங்கள் இவற்றையெல்லாம் மூடுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உத்தரவிட்டிருந்தாலும், சிறு வணிகம் இயல்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, சலுகைகளைப் பெறுவதற்கு, நாம் சரக்கு மற்றும் சேவைகள் வரி மன்றத்திலே வற்புறுத்த வேண்டும். தேசிய அளவிலே, அந்த மன்றம் முடிவெடுக்க வேண்டும்.

2020 மார்ச் 19] [திரு. கே.சி. வீரமணி]

அந்த மன்றத்தில் எடுக்கக்கூடிய முடிவை, நம்முடைய மாநில அரசும் கண்டிப்பாகப் பின்பற்றும். ஆனால், அந்த நிலை இன்னும் உருவாகவில்லை. G.S.T. மன்றத்திலிருந்து இன்னும் அறிவிப்புகள் ஏதும் வராமல் இருக்கின்றன. வரி செலுத்துவதிலே சலுகைகள், அதற்குக் கால அவகாசங்கள் போன்றவற்றைக் குறித்து இங்கே கேட்டிருக்கின்றார்கள். இதைப் பொறுத்தமட்டில், மன்றம் முடிவு செய்ய வேண்டிய விஷயம். ஆகவே, மன்றத்திலே வற்புறுத்துவதற்கு, மாநில அரசின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைகளைப் பெற்று, மாநிலத்தில் இருக்கக்கூடிய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு, கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) G.S.T. Council என்பது மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடியது. (குறுக்கீடு) மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடியது G.S.T. Council.

திரு. துரைமுருகன்: அந்த G.S.T. Council–லில், மாநில அரசு இந்தப் பிரச்சினை குறித்து வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரக்குகளைப் பொறுத்தவரையில், வரி விதிப்பு, வரி விலக்கு, வரிச் சேவைகள் இதுபோன்ற பல்வேறு சலுகைகளை அறிவிப்பது மாநில அரசால் இயலாத ஒன்று. இதற்கு அதிகாரம் பெற்றது, மத்திய அமைப்பான G.S.T. Council. எனவே, உங்களுடைய கருத்துகளுக்கெல்லாம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, G.S.T. Council–லில் அழுத்தம் கொடுக்கப்படும்.

அதேபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வதைப்போல, உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்

இருக்கின்றார்கள். எனவே, நாடாளுமன்றத்திலே தகுந்த அழுத்தத்தை அவர்களும் கொடுக்க வேண்டும். எனவே, உங்களுடைய கருத்துகள் G.S.T. Council–லில் பிரதிபலிக்கப்படும். (குறுக்கீடு) இல்லை, அனைத்தும் G.S.T.–ன் அதிகாரத்திற்கு உட்பட்டதுதான். எனவே, இது G.S.T. Council எடுக்க வேண்டிய முடிவு. G.S.T. Council–லில் உங்களுடைய கருத்துகளெல்லாம் பிரதிபலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, இலட்சக்கணக்கான கோழிகள் இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். அந்த நிலை தமிழகத்தில் இல்லை. ஏனென்று சொன்னால், பண்ணைகளிலே இருக்கின்ற கோழிகளின் விற்பனை குறைந்திருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே கோழிப் பண்ணை உரிமையாளர்கள், முட்டை உற்பத்தியாளர்களை எல்லாம் அழைத்துப் பேசி, அதற்குத் தகுந்தாற்போல உற்பத்தியை உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள்.

முற்பகல் 11–40

இப்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைத் தொடர்புகொண்டு, நாங்களெல்லாம் பேசியிருக்கிறோம். அதிகளவிலே கோழிகளை நீங்கள் வாங்கிச் சாப்பிடலாம், அதனால் கொரோனா வராது என்று சொன்ன காரணத்தினாலே, இப்போது கோழியினுடைய விற்பனை அதிகரித்திருக்கின்றது. அதேபோல, கோழி முட்டைகளைப் பொறுத்தவரையில், தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. கோழி முட்டைகளை சத்துணவு மையங்கள் மூலமாகவும், மற்றவர்கள் மூலமாகவும் கொடுப்பதற்குண்டான வழிவகைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எங்களுக்குச் சொல்லியிருக்கின்றார்கள், அதன்படி சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, இலட்சக்கணக்கான கோழிகள் இறந்திருக்கின்றன என்பது தவறான செய்தி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

2020 மார்ச் 19]

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழிகளெல்லாம் இறந்து போய், அவற்றை எடுத்துச்சென்று கொட்டுவது குறித்து டி.வி.–யில் காண்பிக்கப்பட்டது. நான் டி.வி.–யில் பார்த்துச் சொல்கிறேன். இரண்டாவது, இப்போது கோழிகளினுடைய விலையே குறைந்துவிட்டது. கோழி முட்டை போடுவதை நிறுத்த முடியுமா? கோழி முட்டை போடுமே, அதை நீங்கள் என்ன செய்வீர்கள் இப்போது? கோழி முட்டையிடுவதை நீங்கள் ban செய்வீர்களா? இனிமேல் இந்தக் கோழிகளெல்லாம் 3 ஆம் தேதியிலிருந்து முட்டை போடக் கூடாது என்று சொல்வீர்களா? விலை குறைந்துவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, சிறு தொழில்களை பற்றிச் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், சிறு தொழில் எங்கேயும் மூடப்படவில்லை. இதுசம்பந்தமான அச்ச உணர்வே தேவையில்லை. சிறு தொழில்களெல்லாம் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. அதில் பணிபுரிகின்ற தொழிலாளர்களெல்லாம் பணிபுரிந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். முன்னெச்சரிக்கையாக தொழிலாளர் நலத் துறையின் செயலாளர் அவர்கள் தகுந்த எச்சரிக்கையை அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். அவர்களெல்லாம் எப்படி எச்சரிக்கையோடு இருக்க வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். மேலும், தொழில் துறைச் செயலாளர் அவர்களும் மிகப் பெரிய தொழில் நிறுவனங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களை எப்படியெல்லாம் பாதுகாக்க வேண்டும், எப்படியெல்லாம் முன்னெச்சரிக்கையாக நடக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் அவர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, எந்தவிதமான அச்சமும் தேவையில்லை. இன்றைக்கு சிறு தொழில்களாக இருந்தாலும் சரி, பெருந்தொழில்களாக இருந்தாலும் சரி, தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் பல நாடுகளைப் பற்றி இங்கே சுட்டிக்காட்டினார்கள். இத்தாலி போன்ற நாடுகளிலெல்லாம் வெகுவாகப் பரவிவிட்டது. அது மேலும் பரவாமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான்

முன்னெச்சரிக்கையாக அங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு, கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்குண்டான தடுப்பு நடவடிக்கை முழு மூச்சோடு எடுக்கப்பட்டு வருகின்றது. வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்கள் மூலமாகத்தான் நமக்கு இப்போது வருகின்றதேயொழிய, நம்முடைய மாநிலத்தில் உள்ளவர்கள் மூலமாக அந்த நோய் வருவதில்லை. எனவே, வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்களைப் பரிசோதனை செய்து, ஏதாவது அறிகுறி இருந்தால், அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, உரிய சிகிச்சை அளிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தவிதமான அச்சமும் தேவையில்லை என்பதையும் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) திருவண்ணாமலை நகராட்சி, கட்டட சொத்து வரி, கடை வரி அதிகமாக வசூலிக்கப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, என்ன சொல்லுங்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கவும்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகராட்சிக்கு உட்பட்டிருக்கின்ற கட்டட சொத்து வரி, நகராட்சி கடை வரியை அதிகப்படியாக வசூல் செய்வது குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நகராட்சிக்குச் சொந்தமான தேரடி தெருவிலுள்ள ஜோதி மார்கெட் 60 ஆண்டுக்காலமாக அந்தப் பகுதியில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அங்கே இருக்கின்ற பூக்கடையின் மாத வாடகை 3 ரூபாயில் ஆரம்பித்து இன்றைய நிலையில் 542 ரூபாய் என வசூலித்து வந்தனர். தற்போது 5,920 ரூபாய் அளவுக்குக் கடை வாடகை உயர்த்தப்பட்டிருப்பதால் அங்கே பிரச்சினை எழுந்திருக்கின்றது. கிட்டத்தட்ட 1,000 சதவிகிதம் ஏற்றப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, பக்கத்தில் இருக்கின்ற வேலூர் என்பது மாநகராட்சி. அங்கே உள்ள பூக்கடைக்கு 383 ரூபாய் வரி வசூலித்து வந்தனர். இப்போது 1,200 ரூபாய் ஏற்றியிருக்கிறார்கள். அதேபோன்று, நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில்

உள்ள நகராட்சிக் கடைகளுக்கு G.S.T. உள்பட மாத வாடகை 3,160 ரூபாய் செலுத்தி வந்தார்கள். தற்போது, 19,911 ரூபாய். அதாவது, 680 சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கின்ற வேலூர் மாநகராட்சியில் 1,224 ரூபாய் வாடகை இருந்தது. ஆனால், 4,050 ரூபாய்தான் அங்கே ஏற்றியிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல, திருவண்ணாமலையைப் பொறுத்தளவுக்கு மொத்தம் வார்டுகள் 39. அதில், 22 வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 17 வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. 22 வார்டுகளில் மொத்தம் 19,000 இணைப்புகள் கொடுக்க திட்டம் போடப்பட்டது. ஆனால், 11,700 இணைப்புகள்தான் நடைமுறையில் உள்ளன. இந்தத் திட்டத்திலே முழுமை பெறாத நிலையில் இருக்கின்ற பாதாள சாக்கடை இணைப்புகளுக்கு 2016 முதல் கணக்கிட்டு 5 ஆண்டுகளுக்கு இப்போது வரி வசூல் செய்யப்பட வேண்டுமென்று notice கொடுக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, அண்ணாமலையார் திருக்கோயில் அருகில் இருக்கின்ற பேய்கோபுரம், தேரடி வீதி, பெரிய தெரு ஆகிய இடங்களில் deposit தொகையைப் பெற்றுக்கொண்டு, ஆண்டுக்கணக்கில் இணைப்பு தராமல் வரி மட்டும் விதித்துக் கொண்டிருக்கின்றார்கள். கழிவறை இல்லாத கடைகளுக்குக்கூட பாதாள சாக்கடை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆறு மாதங்களுக்கு முன்பு இணைப்பு கொடுத்துவிட்டு, ஐந்தாண்டுகளுக்குக் கொடுங்கள் என்று இன்றைக்கு வரி வசூல் செய்கின்ற காரணத்தினால், மக்கள் மத்தியிலே ஒரு பீதி ஏற்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்ல, குப்பைகளை வாருவதைப் பொறுத்தமட்டில், ஒவ்வொரு இல்லங்களுக்கும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக. . .

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ.வ. வேலு, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. எ.வ. வேலு: ஒரேயொரு நிமிடம், ஒரு பிரச்சினையை மட்டும் சொல்லி விடுகிறேன். திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ரூ.20/–, ரூ.30/–, ரூ.50/–, ரூ.100/– என்ற அடிப்படையில்தான் அருகில் இருக்கக்கூடிய மாநகராட்சியில் வசூல் செய்கிறார்கள். ஆனால், திருவண்ணாமலையில் ஒட்டுமொத்தமாக ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.120/– என்ற அடிப்படையிலே வசூல் செய்யப்படுகிறது. இப்படி தங்கும் விடுதி,

உணவகம், திருமணக்கூடங்கள், பள்ளிகள், நர்சரி பள்ளிகள், மருத்துவமனைகள் போன்றவற்றில் வேலூர் மாநகராட்சியைவிட, திருவண்ணாமலை நகராட்சியிலே கூடுதலாக வரி வசூல் செய்த காரணத்தினால் நானே முன்நின்று ஒரு போராட்டத்தை நடத்தினேன். அரசு அதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, வரியைக் குறைக்க வேண்டும், 50 சதவிகிதத்திற்குமேல் வரியை ஏற்றக் கூடாது என்று சொல்லி அதை நிறுத்தினார்கள். அதன் தொடர்ச்சியாக, உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் ஒரு பேட்டியிலே, அமைச்சர் அவர்கள் பழைய வரிதான் வாங்கப்படும் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ.வ. வேலு, உரையை முடியுங்கள்.

திரு. எ.வ. வேலு: G.O.–ஐ நீங்களே வெளியிட்டீர்கள். அப்போது பாதி வரிகூட அல்ல, பழைய வரி வாங்க வேண்டுமென்று ஆணையிட்டீர்கள். இன்னும் சொல்லப்போனால், பத்திரிகைகளில் எல்லாம் நீங்கள் பேட்டி கொடுத்தீர்கள். அதனடிப்படையிலே, இன்றைக்கு திருவண்ணாமலை மட்டுமல்ல, மன்னார்குடி நகராட்சியில் இருக்கக்கூடிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜா அவர்களின் தலைமையில் அங்கே போராட்டம் நடைபெற்றது. அந்தப் போராட்டத்தில் அவரே முன்னின்று போராட்டம் வேண்டாம், இதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன் என்று சொன்னார். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 4,000 ரூபாய் கட்ட வேண்டிய இடத்தில் 88,000 ரூபாய் வசூல் செய்கிறார்கள் என்று பெரிய அளவில் போராட்டமே அங்கு நடைபெற்றது. அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று அவரும் சொல்லியிருக்கிறார். அவருடைய பிரச்சினையையும் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆக, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் G.O. போடப்பட்டு, பழைய வரிதான் வாங்க வேண்டுமென்று சொன்ன பின்பும்கூட, திருவண்ணாமலையில் நகராட்சியினர் இன்றைக்கு வலுக்கட்டாயமாக வரி வசூலில் ஈடுபடுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திரு. எ.வ. வேலு: இதன் காரணமாக, இரண்டு தினங்களுக்கு முன்பாக 6,000 கடைகள் திருவண்ணாமலையில் மூடப்பட்டன.

அனைத்து வியாபாரிகளின் தலைமையிலே அங்கே ஓர் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எங்களுடைய உள்ளூர் அமைச்சர் அவர்களுக்கும் இதுபற்றித் தெரியும். அங்கேயிருக்கிற அதிகாரிகளை வைத்து மீண்டும் மீண்டும் மதிப்பீடு செய்வது என்றில்லாமல், உங்கள் துறை இயக்குநர் அலுவலகத்தின்மூலம் ஒரு குழுவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்து, திருவண்ணாமலைக்கு அனுப்பி அந்த வரியை முறைப்படுத்த வேண்டும். முறைப்படுத்திய பின்புதான் நீங்கள் மீண்டும் வரி வசூலில் ஈடுபட வேண்டும். ஏனென்று சொன்னால், தொடர்ந்து அங்கே சட்டம்–ஒழுங்கு கெடுகிற அளவிற்கு வியாபாரிகளின் மத்தியிலே ஒரு கொந்தளிப்பு இருக்கிறது. எனவே, இதனை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மன்னார்குடி மற்றும் திருவண்ணாமலை நகராட்சிகளுக்கு உடனடியாக நல்லதொரு தீர்வை வகுக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பை திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான திரு. எ.வ. வேலு அவர்களும், அதேபோல மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்களும் நகராட்சிக் கடைகளுக்கு வாடகை உயர்த்தியது சம்பந்தமாக இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தார்கள். திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மார்க்கெட்டில் உள்ள கடைகளுக்கு அதிக வாடகை நிர்ணயித்திருப்பது குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசினார்கள். இதிலே வரி உயர்வு குறித்தும் பேசினார்கள். திருவண்ணாமலை நகராட்சி மற்றும் மன்னார்குடி நகராட்சிகளுக்குட்பட்ட கடைகளுக்கு உயர்த்தப்பட்ட வாடகையைக் குறைக்குமாறு கோரியுள்ளார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அரசாணை எண் 92, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 3–7–2007–ல் வெளியிடப்பட்டது. அந்த அரசாணையின்படி, நகராட்சிக் கடைகளின் குத்தகை, ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்குப் பின்னர் 9 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படுகிறது. 9 ஆண்டுகளுக்குப் பின்னர், மேற்கூறிய அரசாணையின்படி, அந்தக் கடைகளுக்கு சந்தை மதிப்பீடு மற்றும் பொதுப் பணித் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, குத்தகை மறு நிர்ணயம்

செய்யப்படுகிறது. உயர்த்தப்பட்ட வாடகையை குத்தகைதாரர்கள் ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில், அவர்களுக்குக் குத்தகை நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்படுகிறது. அவர்கள் ஏற்றுக்கொள்ளாதபட்சத்தில், பொது ஏலம்மூலம் கடைகள் வாடகைக்கு விடப்படுகின்றன. நகராட்சிக் கடைகளின் குத்தகைதாரர்கள், வாடகைத் தொகையினை உயர் நீதிமன்ற அறிவுரையின்படி குறைக்கக் கோரி அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளனர்.

முற்பகல் 11–50

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக, அரசாணை எண் 14, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27–01–2020–ன்படி ஓய்வு பெற்ற I.A.S. அதிகாரி, திரு. R. வெங்கடேசன் அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரையின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று திருவண்ணாமலை மற்றும் மன்னார்குடி நகராட்சிகளில் கடை வாடகை உயர்வு குறித்த மேல்முறையீடு இக்குழுவின் பரிசீலனையில் உள்ளது. அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, பாதாள சாக்கடைத் திட்டத்தில் இணைப்புகள் கொடுக்கவில்லை, எனினும் அதற்கும் சேர்த்து வரி போட்டிருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். வரி உயர்வு பற்றி என்னுடைய துறையின் மானியக் கோரிக்கையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள், அதற்குப் பதில் சொல்லியிருக்கின்றேன். வரி உயர்வு முழுமையாக நிறுத்தி வைக்கப்பட்டு பழையபடிதான் வசூல் செய்யப்படுகிறது. அதற்கும் குழு போடப்பட்டிருக்கின்றது. அதேபோன்று திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் குறித்துப் பேசினார்கள். ஆக, திருவண்ணாமலை மாவட்டம் சம்பந்தமாக அவர் நிறைய விஷயங்களைப் பேசினார். அந்தமாதிரியான ஒரு நிலை அங்கே இல்லை என்பதைப்போல்தான் எனக்குச் சொல்லியிருக்கின்றார்கள். ஆக, இதைப் பொறுத்தளவில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் குழுவில் மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் சொன்ன வரி உயர்வும் எடுத்துச் சொல்லப்பட்டு, மறுபரிசீலனை செய்து கண்டிப்பாகக் குறைக்கப்படும். இன்றைக்கு நாம் வரியும் வசூல் செய்வதில்லை, அதேபோன்று வாடகையும் வசூல் செய்வதில்லை. ஆக, ரொம்ப காலமாக வசூலே செய்யவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 2016 ஆம் ஆண்டிற்குப் பிறகு வரியே உயர்த்தப்படவில்லை.

2020 மார்ச் 19] [திரு. எஸ்.பி. வேலுமணி]

இங்கே இருக்கக்கூடிய வாடகை buildings அனைத்திலும் எந்த வாடகையையும் நாம் வசூல் செய்யக் கூடாது எனும்போது அடிப்படை வசதிகளை நாம் எப்படி செய்து கொடுக்க முடியும்? அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை தற்போது இருக்கின்றது. அங்கே private buildings–ல் இருக்கக்கூடிய கடைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகையின் அடிப்படையில்தான் வாடகையை நிர்ணயம் செய்திருக்கின்றார்கள். இருந்தாலும்கூட, இங்கே பல்வேறு கோரிக்கைகள் வந்துள்ளன. நீங்கள் மட்டுமல்ல, பல்வேறு வணிகர் சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் வைத்திருக்கின்றார்கள். ஒரு குழுவை அமைத்திருக்கின்றோம். பல்வேறு சமயங்களில் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்கூட அங்கே இருக்கின்ற பிரச்சினைகளை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். கவன ஈர்ப்பும் கொடுத்திருக்கின்றார்கள். மேலும், பல்வேறு உறுப்பினர்களும் கொடுத்திருக்கின்றார்கள். கண்டிப்பாக இது மறுபரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

கொரோனா வைரஸ் பிரச்சினை காரணமாக வெளிநாடுவாழ் தமிழர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். பிலிப்பைன்ஸ், ஈரான் போன்ற வெளிநாடுவாழ் தமிழர்கள் கொரோனா வைரஸ் பிரச்சினை காரணமாக திரும்ப வர இயலாத நிலை குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், திரு. அர. சக்கரபாணி, திரு. ஒய். பிரகாஷ், திரு. பி. முருகன், திரு. S.A. சத்யா, திரு. என். சுரேஷ் ராஜன், திரு. எஸ். ஆஸ்டின், திரு. உ. மதிவாணன், திரு. டி.ஆர்.பி. ராஜா ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. வி.எஸ். காளிமுத்து, திரு. ச. பாண்டி, திரு. ஆர். கணேஷ், திரு. செ. ராஜேஷ் குமார் அவர்களும் மற்றும் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்களும் விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். கட்சிக்கு ஒருவர்வீதம் இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இதை நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

[2020 மார்ச் 19

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 596 மீனவர்கள் உள்ளிட்ட தமிழகத்தைச் சேர்ந்த சுமார் 712 மீனவர்கள் ஈரான் நாட்டிலுள்ள 6 தீவுகளில் உணவு கிடைக்காமல் தண்ணீரின்றி தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோல, நாகப்பட்டினத்தைச் சேர்ந்த சுமார் 20 மீனவர்கள் ஈரான் நாட்டில் உள்ள சிரோ கடலில் படகிலிருந்து கரையேறுவதற்கு வழி இல்லாமல் தடை செய்யப்பட்டு, உணவின்றி தவித்துக்கொண்டிருக்கின்றார்கள். இன்று காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்களிடம், அவர்களுடைய நிலை குறித்து video எடுத்து அனுப்பியிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதேபோல் தமிழகத்திலிருந்து சுமார் 300–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர், பிலிப்பைன்ஸ் நாட்டில் மருத்துவம் மற்றும் பட்ட மேற்படிப்பு படித்து வருகின்றார்கள். அங்கே கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக கல்லூரிகளையெல்லாம் மூடிவிட்ட பிலிப்பைன்ஸ் அரசு, அவர்களை சொந்த நாட்டுக்குத் திரும்ப வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கின்றது. அதேநேரத்தில் நம்முடைய இந்திய அரசும் பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வருவதற்கு தடையை விதித்திருக்கின்றது. எனவே, அந்த மாணவ, மாணவியர் எல்லாம் எங்கு செல்வது என்று தெரியாமல் மணிலாவில் தவித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, கடந்த 28 ஆம் தேதி ஈரானில் தவித்துக் கொண்டிருக்கக்கூடிய மீனவர்களை மீட்டெடுப்பதற்காக மாண்புமிகு வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார்கள். அதேபோன்று எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியில் மாண்புமிகு வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களையும், அதிகாரிகளையும் சந்தித்து வலியுறுத்தியிருக்கின்றார்கள். கடந்த வாரம் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த பங்குத் தந்தை மற்றும் மீனவர்களுடைய பிரதிநிதிகள் எல்லாம் டெல்லிக்குச் சென்று வெளியுறவுத் துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து கோரிக்கை கொடுத்திருக்கின்றார்கள். இவ்வளவு அழுத்தம் கொடுத்த பிறகும் நம்முடைய மத்திய அரசினுடைய வெளியுறவுத் துறை மிக மெத்தனமாகச் செயல்படுவது உண்மையிலேயே வேதனையாக இருக்கின்றது.

முற்பகல் 11–55

ஈரானில் உள்ள இந்திய மீனவர்கள் தற்போது மீட்கப்பட மாட்டார்கள் என்று வெளியுறவுத் துறை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் தெரிகின்றது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. மீனவர்களும், மாணவர்களும் இன்றைக்கு ஈரானிலும், பிலிப்பைன்ஸிலும் உயிரை கையிலே பிடித்துக்கொண்டு எங்கு செல்வது என்று தெரியாமல், உணவில்லாமலும், தண்ணீர் இல்லாமலும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதுவதோடு மட்டும் விட்டுவிடாமல், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களையும், மூத்த அமைச்சர்களையும் டெல்லிக்கு அனுப்பி, மாண்புமிகு வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையும் சந்தித்து, பிரச்சினைகளை அவர்களிடத்திலே வலியுறுத்தி, தனி விமானத்தை ஏற்பாடு செய்து அவர்களை ஈரானிலிருந்தும், பிலிப்பைன்ஸிலிருந்தும் நம்முடைய நாட்டிற்குக் கொண்டு வருவதற்கு போர்க்கால அடிப்படையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு, அரசினுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து சுமார் 630 பேர் உட்பட, மொத்தம் 730–க்கும் அதிகமான மீனவர்கள் ஈரான் நாட்டில் மீன் பிடிக்கச் சென்றார்கள். பல்வேறு முதலாளிகளின்கீழ் வேலை பார்க்கிறார்கள். அவர்கள் boat–லேயே தங்கியிருக்கிறார்கள், கரைக்கு வர முடியாத சூழ்நிலை உள்ளது. எங்களைப் பாதுகாத்திடுங்கள், எங்களை எப்படியாவது கரைக்குக் கொண்டு வந்துவிடுங்கள் என்று அவர்களின் நிலைமையை video–வில் பதிவு செய்து whatsapp–ல் அனுப்புகிறார்கள். எங்களுக்கு ஒரு வழியும் இல்லை என்று வேதனைப்படுகிறார்கள். இந்தப் பிரச்சினை குறித்து வெளியுறவுத் துறை அமைச்சகம் கண்டுகொள்ளவேயில்லை. M.P.–க்கள் சென்று பார்த்திருக்கிறார்கள். எங்களுடைய பகுதியில் உள்ள சாமிமார்களும் பிரத்யேகமாக சென்று

பார்த்து, ஏதாவது செய்யுங்கள் என்று request செய்துள்ளார்கள். இவ்வாறு பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். எந்தவிதமான response–ம் இல்லை. அதேபோல, பிலிப்பைன்ஸ் நாட்டில் அதிகமான மாணவர்கள் medical science படிக்கச் சென்றுள்ளார்கள். மாணவர்கள் இந்தியா வர முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள், அழுது கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றம் நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது, நீங்கள் பேசி ஏதாவது வழி செய்யுங்கள் என்று பெற்றோர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக ஏதாவது தீர்வு செய்யப்பட வேண்டும். ஈரான் நாட்டில், மலேசியா நாட்டில் பல்வேறு தொழில்கள் செய்து கொண்டிருக்கக்கூடியவர்கள் திரும்பி வர முடியாத, கஷ்டப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அரசு தனிக் கவனம் எடுத்து உடனடியாக அவர்களைப் பாதுகாப்போடு இங்கு கொண்டு வரக்கூடிய நடவடிக்கைகளை எடுக்குமா என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, corona பாதிப்பு உலகின் எல்லா பகுதிகளையும் ஆட்கொண்டு இருப்பதுபோல, ஆசியன் நாடுகள் என்று சொல்லப்படக்கூடிய தென் கிழக்கு ஆசிய நாடுகளை மிக அதிகளவில் பாதித்திருக்கிறது. வரலாற்றில் இல்லாத வகையில், முதன்முறையாக சிங்கப்பூர், மலேசியாவினுடைய எல்லை மூடப்பட்டிருக்கிறது. பிலிப்பைன்ஸில் மருத்துவம் படிக்கச் சென்ற நம்முடைய தமிழக மாணவர்கள் 300–க்கும் மேற்பட்டோர் பிலிப்பைன்ஸிலிருந்து புறப்பட்டு, நேரடி விமானச் சேவை இல்லாத காரணத்தினாலே, மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூர் விமான நிலையத்தில் தங்கி அங்கிருந்தவாறு காணொலிகள், சமூக வலைதளங்கள் வழியாக தங்களுடைய அவதியை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். விமான சேவை தடை செய்யப்பட்டுள்ள இந்த நேரத்தில், கோலாலம்பூர் விமான நிலையத்தில் அவர்கள் தங்குவதற்கு உரிய ஏற்பாடுகளை இந்திய தூதரகம் செய்திருக்கிறதா அல்லது அவர்களுக்குப் பாதுகாப்பான முகாம் ஏதேனும் அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதை நம்முடைய தமிழக அரசு, மத்திய அரசின் வாயிலாகக் கேட்டு, அவர்களை மீட்டு வரவோ அல்லது அங்கேயே பாதுகாப்பான ஒரு சூழலில் தங்க வைக்கவோ உரிய ஏற்பாடுகளை நம்முடைய

2020 மார்ச் 19] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

வெளியுறவுத் துறை அமைச்சகம்மூலம் செய்ய வேண்டும். அதற்கான முன் முயற்சிகளை நம்முடைய அரசு ஏதாவது எடுத்திருக்கிறதா என்பதையும், அதேபோன்று நாகப்பட்டினம், கன்னியாகுமரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்களும் ஈரானில் கரையோரங்களில் படகுகளில் இருந்தவாறு பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்களை மீட்டு வர என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? மேலும், அவர்களுடைய குடும்பத்தாருக்கு தகவல் முறையாக அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் தங்கள் வாயிலாக இந்த அரசிடம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு வெளிநாடுகளிலிருந்து நம்முடைய தமிழர்களை, இந்தியர்களை மீட்பதற்குரிய நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே தங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார்கள். குறிப்பாக, பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்தும், ஈரான் நாட்டிலிருந்தும், மலேசியாவிலிருந்தும் மீட்டுவர என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து இங்கே கேட்டிருக்கின்றார்கள். பிலிப்பைன்ஸில் உள்ள மணிலாவில் இந்திய மாணவர்கள் தவித்து வருகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை சமூக வலைதளங்களில்கூட சொல்லப்பட்டிருக்கிறது. Corona virus நோய் பாதிப்பினைத் தொடர்ந்து, இந்திய விமானங்கள் இரத்து செய்யப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்களும், இந்த நாடும் நன்கு அறியும். பிலிப்பைன்ஸில் உள்ள மணிலாவில் இந்திய மாணவர்களுக்கு உணவு கிடைக்கிறதா, குடிநீர் கிடைக்கின்றதா என்கின்ற ஓர் ஐயப்பாட்டையும் இங்கே எழுப்பியிருந்தார்கள். அவர்களுக்குத் தேவையான உணவு வழங்கி, அவர்களை தாய்நாட்டிற்குக் கொண்டு வருவது தொடர்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து இந்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று குறிப்பாக, வெளியுறவுத் துறை அமைச்சகத்திற்கும், இந்தியத் தூதரகத்திற்கும் ஒவ்வொரு நாளும், காலையிலும் மாலையிலும் தொடர்புகொண்டு, அதுகுறித்த விவரங்களைக் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்பதையும், விமானம்மூலம் மீட்புப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசுக்குக் கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன என்பதையும், அவர்கள்

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2020 மார்ச் 19

பாதுகாக்கப்பட, மீட்கப்பட, உரிய உணவு மற்றும் மருத்துவ வசதிகள் கிடைப்பதையும், மத்திய அரசுமூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதையும் இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12–00

அதேபோல், மலேசியா நாட்டின் கோலாலம்பூர் விமான நிலையத்தில் 200 இந்திய மாணவர்கள் தவித்து வருவதைப் பொறுத்தவரையில், நம்முடைய தாய்நாட்டிற்கு அவர்களை அழைத்து வருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் 17–3–2020 அன்று தமிழ்நாட்டு அதிகாரிகள் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தையும், கோலாலம்பூரிலுள்ள இந்தியத் தூதரகத்தையும் தொடர்ந்து தொடர்பு கொண்டு, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதனையடுத்து, மலேசியாவிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் மற்றும் வெளியுறவுத் துறையின் வாயிலாக கோலாலம்பூரில் சிக்கித் தவித்த 120 மாணவர்கள், விமானம்மூலம் விசாகப்பட்டினத்திற்கு அழைத்து வரப்பட்டிருக்கின்றார்கள் என்கின்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த துரித நடவடிக்கைகள், போர்க்கால நடவடிக்கைகளின் காரணமாக அவர்கள் அழைத்து வரப்பட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு அழைத்து வரப்பட்டவர்கள் உரிய தனிமைப்படுத்தும் முறைகளுக்குப் பின், வீடு திரும்புவார்கள் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல் ஈரான் நாட்டில், Kish மற்றும் Chiruyeh துறைமுகங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைமுகப் பகுதிகளில் சிக்கித் தவித்த ஏறக்குறைய 2,000 இந்தியர்களில், தமிழ்நாட்டைச் சார்ந்த 659 மீனவர்களை மீட்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் அனுப்பினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதுதில்லிக்குச் சென்று நேரிலே வலியுறுத்த வேண்டும் என்று சொன்னார்கள், அவர்கள் சொல்வதற்கு முன்பாகவே, இப்பொருள் குறித்து, அதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் ஆகியோர் மத்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து அழுத்தம் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2020 மார்ச் 19] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

ஈரானிலுள்ள இந்தியத் தூதரகம், தமிழ்நாடு உள்ளிட்ட சில மாநிலங்களின் மீனவர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதாக நமக்கு தகவல்கள் வந்திருக்கின்றன. முதல் கட்டமாக 10–3–2020 அன்று விமானம்மூலம் மீட்புப் பணிகள் துவங்கியுள்ளன என்கிற நல்ல செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது. குறிப்பாக சுற்றுலா சென்றவர்கள், கோயில்களுக்குச் சென்றவர்கள் ஆகியோர் முன்னுரிமை அடிப்படையில் வந்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களுக்கு தங்கும் இடம், உணவு போன்றவற்றைக் கொடுப்பது பெரிய சவாலாக இருக்கிறது. மாணவர்கள் மற்றும் மீனவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு உணவு போன்றவை தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருப்பதை உறுதிசெய்து கொண்டிருக்கின்றோம். ஆகவே, அவை கிடைக்காத சுற்றுலாப் பயணிகள் அனைவரும் முன்னுரிமை அடிப்படையில் அழைத்து வரப்படுகின்றார்கள் என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் Corona Virus குறித்து இந்த அவையில் பெருமையாகவோ, சாதனையாகவோ சொல்லவில்லை, ஏனென்றால். உலகெங்கும் அச்சத்தோடு இருக்கின்ற இந்த வேளையில், தாய்த் தமிழகம் உலகத்திற்கே வழிகாட்டுகின்ற வகையில் ஒரு பாதுகாப்பு அரணை இன்றைக்கு அமைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதுகூட வெளிநாடுகள் குறித்துக் கேட்டார்கள், உள்நாட்டிலும்கூட, ஒவ்வொரு நாளிலும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளில், எல்லைப்புற வட்டங்கள் வருவாய்த் துறையிலே 44 இருக்கின்றன. அவற்றில் 88 Checkposts அமைத்து, இன்றைக்கு பாதுகாப்பு அரணை, மன்னர் காலத்தில் எதிரிகள் படையெடுத்து வரும்போது, எப்படி பாதுகாப்பு அரண் அமைத்து, எதிரிகளை உள்ளேயே விடாமல் பாதுகாக்கிற மன்னன் சிறந்த மன்னன் என்று வரலாற்றில் இடம் பெற்றிருப்பதைப்போல், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த Corona virus குறித்து உலகமே இன்றைக்கு அச்சத்தில் மூழ்கியிருக்கின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவர்களுடைய அறிவுரையைப் பெற்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், அனைத்துத் துறைச் செயலாளர்களும் இரவு பகலாக பாடுபட்டு, இன்றைக்கு எவ்வளவு பெரிய அச்சுறுத்தலிலிருந்தும் தாய்த் தமிழகத்தைக் காக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2020 மார்ச் 19

ஒவ்வொரு நாளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலையிலும், மாலையிலும் அனைத்துத் துறை அமைச்சர்கள் மற்றும் செயலாளர்களை அழைத்து துறைவாரியாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்கிறார்கள். உதாரணமாக, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் இன்றைக்கு எத்தனை பேருந்துகளை தூய்மைப்படுத்தினீர்கள், அவற்றில் எத்தனை பயணிகள் வந்திருந்தார்கள் என்று கேட்கின்றார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், இரயிலில் சென்று notice கொடுக்கின்றார், அவரே அங்கேயே சுகாதாரப் பணியில் ஈடுபடுகிறார். எதற்காக இவற்றைச் சொல்கிறேன் என்றால், எவ்வளவு ஈடுபாட்டுடன் மக்களைக் காக்கின்ற அரசாக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு திகழ்கின்றது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுகின்றார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நீங்கள் எந்தவித அச்சமும் படத் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள், உணவு இல்லை, தண்ணீர் இல்லை, தவிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த நிலை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அவைக்கு நான் தெரிவித்து அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எந்த அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்தார்கள், உலகம் முழுவதும் சிக்கித் தவிக்கின்ற தமிழர்களை, தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறித்துச் சொன்னார்கள்.

ஈரானிற்கு நான் போவதற்கு எந்தவித objection–ம் கிடையாது. நான் நாளைக்கே போய்விடுவேன். ஆனால், அங்கு

போய்விட்டு, நேராக நான் சட்டசபைக்குத்தான் வருவேன். (சிரிப்பு) ஆனால், ஈரான் நாட்டிற்குப் போனால், 14 நாட்கள் quarantine–ல் வைத்து விடுவார்கள். அந்த நாட்டில் 14 நாட்கள். (குறுக்கீடுகள்) சென்னைக்கு வந்த பிறகு 14 நாட்கள் தனியாக வைப்பார்கள். பரவாயில்லையா! (குறுக்கீடுகள்) அதனால், அரசைப் பொறுத்தவரைக்கும் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. 600 மீனவர்கள் அங்கு பத்திரமாக இருக்கின்றார்கள் என்ற செய்தியை நம்முடைய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். டெல்லி சிறப்புப் பிரதிநிதி தலைமையில், சிறப்புக் குழுவானது மாண்புமிகு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை சந்திப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்த அடிப்படையில் இப்போது மூன்று நாட்களில் 10 ஆம் தேதி 58 பேர், 13 ஆம் தேதி 44 பேர், 15 ஆம் தேதி 236 பேர் என இந்தியாவிலிருந்து அங்கு சென்று தங்கியிருந்தவர்களை வெளியுறவுத் துறையினர் அழைத்து வந்திருக்கிறார்கள். அதில், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லை. கிட்டத்தட்ட 6,000 நபர்கள் ஈரான் நாட்டில் இருக்கின்றார்கள், படிப்படியாக நாங்கள் அவர்களைக் கொண்டு வருகிறோம் என்கிறார்கள். இதற்கு ஒரு procedure இருக்கிறது. அங்கு 14 days quarantine–ல் இருக்க வேண்டும், பின்னர் அவர்களை flight–ல் அழைத்து வந்து, இங்கு ஒரு 14 days Quarentine–ல் இருக்க வேண்டிய ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினால், கண்டிப்பாக நாங்கள் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கிறோம் என்ற உறுதியை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

3. தகவல் கோரல்–தொடர்ச்சி

(இ) சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, உணவகம் மூடப்பட்டிருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை: (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ன, நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கொஞ்சம் ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** நீங்கள் உட்காரச் சொன்னால், உட்கார்ந்து விடுகிறேன். (குறுக்கீடு) எல்லா இடங்களிலும்

கடையை மூடுவதில் பிரச்சினை இல்லை. ஆனால், Rajiv Gandhi Government General Hospital–ல் உணவு அருந்தும் ஒரு hotel இருக்கிறது. அதை மூடிவிட்டார்கள். மிகவும் வயதான நோயாளிகள் பால் வேண்டுமென்றால் அங்குதான் பால் வாங்குவார்கள். வெளியிலிருந்து வருபவர்கள் அங்குதான் வந்து உணவு அருந்துவார்கள். Assistants எல்லாம் அங்குதான் சாப்பிடுவார்கள். அதற்கு exemption கொடுக்க முடியுமா என்றுதான் கேட்கிறேன். ஏனென்றால், Rajiv Gandhi Government General Hospital–ல் உள்ள உணவகத்தை மூடிவிட்டால், நோயாளிகளுக்கு பால், பழம், ரொட்டி போன்றவற்றை வாங்கிக் கொடுக்க முடியாது. அந்த canteen–ஐ மூடிவிட்டார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Canteen–ஐ மூடவில்லை என்று சொல்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: அந்த canteen–ஐ மூடிவிட்டார்கள், மூடிவிட்டார்கள், மூடிவிட்டார்கள். (குறுக்கீடு) தொகுதி M.L.A. சொல்கிறார், கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் check செய்துவிட்டுச் சொல்கிறேன். நான் இன்றைக்கு காலையில் Stanley மருத்துவமனையில் ஆய்வு செய்தேன், canteen திறந்திருந்தது. இதையும் Check செய்து விடுகிறேன். Rajiv Gandhi Government General Hospital–ல் உள்ள canteen–ஐ மூட வேண்டிய நிலையில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். பார்க்கலாம்.

5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளித்தல்

(அ) வினைத்திறன் மிகு மின் அளவிகள் பொருத்துதல், துணை மின் நிலையங்கள் அமைத்தல் மற்றும் தரமுயர்த்துதல், கடலோர மாவட்டங்களிலுள்ள மின் பாதைகளை புதைவடங்களாக மாற்றுதல் உள்ளிட்ட எரிசக்தித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி உட்காருங்கள், பார்க்கலாம். பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தித் துறை. தடையற்ற மின்சாரம் என்பது நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது. நடப்பாண்டில், எரிசக்தித் துறையால் மேற்கொள்ளப்பட உள்ள புதிய மின் திட்டங்கள் பற்றி இந்த அவையில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1. வருவாயைப் பெருக்கவும், மின் நுகர்வோர்களுக்கு நிறைவான சேவையை வழங்கவும், தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளைக் குறைப்பதற்கும், வினைத்திறன் மிகு மின் அளவிகள் (smart meters) பொருத்தும் திட்டம் ஒன்று சென்னை மாநகரத்தில் உள்ள சுமார் 42 இலட்சம் மின் நுகர்வோருக்கு, 4 ஆயிரத்து 300 கோடி ரூபாய் செலவில் முதலில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் மாநிலத்தில் உள்ள பிற மாவட்டங்களில் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. பெருகிவரும் மின் சுமையை ஈடு செய்யும்பொருட்டு, மதுரை மாவட்டம், அழகர்கோவில் 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையம், 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாகவும், கோயம்புத்தூர் மாவட்டம், இருகூர் மற்றும் மதுரை மாவட்டம், திருப்பாலையில் உள்ள 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களாகவும் தரம் உயர்த்தப்படும். சிவகங்கை மாவட்டம், அரசனூரில் ஒரு புதிய 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவை தவிர, தடையில்லா மின்சாரத்தை மின் நுகர்வோருக்கு தொடர்ந்து வழங்கிடும் பொருட்டு, 22 எண்ணிக்கையிலான 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்படும். இப்பணிகள் 1,998 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. இயற்கைச் சீற்றங்களின்போது கடலோர மாவட்டங்களில் மின் கம்பங்கள் சாய்ந்து, அதனால் மின் விநியோகம் தடைபடும் சூழ்நிலை உருவாகிறது. இந்நிலையைக் களைந்து சீரான மின் விநியோகத்தை உறுதி செய்யும்வகையில், திருவள்ளூர், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி ஆகிய

மாவட்டங்களில், 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுக்கு மின்சாரம் கொண்டு செல்லும் மின் பாதைகளில், சுமார் 200 கிலோ மீட்டர் நீளப் பாதை, 300 கோடி ரூபாய் செலவில் புதைவடங்களாக மாற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–10

4. மின் பகிர்மானக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்த, 23 இடங்களில் புதிய 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும். மேலும், செயல்பாட்டில் இருக்கும் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களில் உள்ள 13 மின்மாற்றிகள் கூடுதலாகவோ/திறன்உயர்த்தியோ அமைக்கப்படும். இப்பணிகள் 187 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) 1200 குறு, சிறு பாலங்கள் கட்டுதல், ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகள், வாய்க்கால்கள், ஓடைகள் மற்றும் கால்வாய்களின் குறுக்கே சிமெண்ட் கான்கிரீட் தடுப்பணைகள் கட்டுதல், தனி நபர் கிணறுகள், சமுதாயக் கிணறுகள் அமைத்தல், ஊராட்சிக்கு ஒரு "முதியோர் சுய உதவிக் குழு" ஏற்படுத்துதல் உள்ளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:–

1. ஊரகப் பகுதிகளில் உள்ள குறுகலான தெருக்கள் மற்றும் பாதைகளைத் தரம் உயர்த்தும் பொருட்டு, 2020–21 ஆம் நிதியாண்டில் 350 கி.மீ. நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் சாலைகளும், 200 கி.மீ. நீளத்திற்கு பேவர் பிளாக் சாலைகளும், 213 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஊரகப் பகுதிகளில் போக்குவரத்தை மேம்படுத்தவும், நீர் நிலைகளைக் கடந்திடவும் ஏதுவாக 850 குறு பாலங்களும், 350 சிறு பாலங்களும் என மொத்தம் 1,200 சிறு, குறு பாலங்கள் 170 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் மேம்படுத்திட வேண்டும் என்ற உயரிய நோக்கில், பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து, உரிய நிதி ஒதுக்கீடு செய்து, அதனைச் செயல்படுத்தும்விதத்தில், 2020–21 ஆம் ஆண்டைய நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், மத்திய, மாநில நிதிக் குழுவின் நிதி மற்றும் அம்மா ஆதி திராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்ட நிதி ஆகியவற்றிலிருந்து 2,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியிலிருந்து, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர் வசதி, (மேசையைத் தட்டும் ஒலி) இணைப்புச் சாலை வசதி, சிமென்ட்/பேவர் பிளாக் சாலை வசதி, தெரு விளக்குகள், வடிகால் வசதி, மயான மேம்பாடு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. ஊரகப் பகுதிகளில் உள்ள குக்கிராமங்களிலிருந்து அருகில் உள்ள சந்தைகள், பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்றவற்றை பொதுமக்கள் எளிதாகச் சென்றடையும் வகையில், பிரதான மற்றும் இணைப்புச் சாலைகளை மேம்படுத்தும்பொருட்டு, 1,044 கி.மீ. நீளமுள்ள 299 ஊரகச் சாலைகள் 553.07 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. ஊரகப் பகுதிகளிலுள்ள குக்கிராமங்கள் மற்றும் இணைக்கப்படாத பகுதிகளுக்கு இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்திட, 2020–21 ஆம் நிதியாண்டில், 1,150 கி.மீ. நீளத்திற்கு ஓரடுக்கு கப்பிச் சாலைகள் 246 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. ஊரகப் பகுதிகளிலுள்ள வாய்க்கால்கள், ஓடைகள் மற்றும் கால்வாய்களின் குறுக்கே 2020–21 ஆம் ஆண்டில் 10 ஆயிரம் சிமென்ட் கான்கிரீட் தடுப்பணைகள் 460 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. ஊரகப் பகுதிகளில் உள்ள பள்ளிக் கட்டடங்களுக்கு 2020–21 ஆம் நிதியாண்டில் 650 கி.மீ. நீளத்திற்கு 440 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 19

7. ஊரகப் பகுதிகளில் கால்நடைகளைப் பாதுகாத்திட, 2020–21 ஆம் நிதியாண்டில், 9 ஆயிரம் மாட்டுக் கொட்டகைகளும், 6 ஆயிரம் ஆட்டுக் கொட்டகைகளும் என மொத்தம் 15 ஆயிரம் கொட்டகைகள் 258.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. விவசாய நிலங்களில் பாசன வசதிகளைப் பெருக்கி, விளைநிலங்களின் பரப்பினை அதிகரிக்க, 2020–21 ஆம் ஆண்டில் 500 தனி நபர் கிணறுகள் தலா 7 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், 500 சமுதாயக் கிணறுகள் தலா 12 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் ஆயிரம் கிணறுகள் 98 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. 30 ஆண்டுகள் கடந்த நிலையில், மிகவும் பழுதடைந்து, பயன்பாடின்றி உள்ள 500 ஊராட்சி மன்ற அலுவலகங்களுக்கு தலா 22 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. 2019–20 ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 12 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 13 ஆயிரத்து 301 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதைக் கருத்தில்கொண்டு, 2020–21 ஆம் ஆண்டு 14 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

11. 2020–21 ஆம் நிதியாண்டில், ஊரகப் பகுதிகளில் சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் முதியோர் பயன்பெறும் வகையில், 5 முதல் 10 உறுப்பினர்களைக் கொண்ட 12 ஆயிரத்து 525 "முதியோர் சுய உதவிக் குழுக்கள்" ஊராட்சிக்கு ஒன்று என்ற அளவில் ஏற்படுத்தப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) ஆதார நிதியாக குழு ஒன்றுக்கு 15,000 ரூபாய் வீதம் 18 கோடியே 79 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2020 மார்ச் 19]

பிற்பகல் 12–15

(இ) பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் மற்றும் இயற்கைச் சீற்றங்களால் பழுதடைந்த சாலைகள் சீரமைத்தல், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரத்தில் திறன்மிகு போக்குவரத்து முறை செயல்படுத்துதல், சென்னையில் "புதுமுறைக் காணல் மையம்" ஏற்படுத்துதல், 'மியாவாக்கி' முறையில் மரங்கள் நடுதல், அனைத்து துப்புரவுப் பணியாளர்களும் "தூய்மைப் பணியாளர்கள்" என்றழைக்கப்படுதல் உள்ளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்:

1. பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் மற்றும் இயற்கைச் சீற்றங்களால் பழுதடைந்துள்ள சாலைகள், நகர்ப்புற சாலை உட்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளான துடியலூர், வடவள்ளி, கவுண்டம்பாளையம் மற்றும் வீரகேரளம் பகுதிகளை உள்ளடக்கிய 14 வார்டுகளில், 610 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மதுரை மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கும், குடிநீர் இணைப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஏற்கெனவே இரண்டு கட்டங்களாக பணிகள் நடைபெற்று வருகின்றன. மூன்றாம் கட்டமாக, எஞ்சியுள்ள 57 வார்டுகளிலும், குடிநீர் விநியோகக் குழாய் பதித்து வீட்டு இணைப்புகள் வழங்க, 310 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரத்தில் போக்குவரத்து மேலாண்மை, போக்குவரத்து தகவல் மைய திட்டம் போன்றவற்றை கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்களுடன் ஒருங்கிணைத்து, போக்குவரத்து நெரிசல் குறைய வழிவகை செய்யும் வகையில், திறன்மிகு போக்குவரத்து முறையைச் செயல்படுத்திட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. சென்னையில் சிறுதொழில் முனைவோர் மற்றும் மாணவர்களின் கண்டுபிடிப்புகளை சமூகத்திற்கு அறிமுகப்படுத்தி விளக்கும் பாலமாக “புதுமுறைக் காணல் மையம்” ஏற்படுத்தப்படும். இம்மையம், சீர்மிகு நகர நிறுவனத்தின்கீழ் செயல்படும்.

6. மாநிலத்தில் பசுமைச் சூழலை அதிகரிக்கும் வகையில், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் பயன்பாடின்றி உள்ள திறந்தவெளி நிலங்களில், “மியாவாக்கி” முறையில் குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையிலான மரங்கள் நடப்படும்.

7. மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் போதிய இடவசதி உள்ள பூங்காக்களில் திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் மற்றும் யோகா மையம் அமைக்கப்படும்.

8. தேனி மாவட்டத்திலுள்ள போடிநாயக்கனூர் நகராட்சி 1916 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, 100 ஆண்டுகள் கடந்த ஒரு சிறப்பு மிக்க நகராட்சி ஆகும். மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள இந்நகராட்சி, 7.23 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 75 ஆயிரத்து 665 மக்கள்தொகையும் கொண்டு, ஏலக்காய் வணிகத்திற்குப் பெயர் பெற்றது. இந்த நகராட்சியின் பாரம்பரியத்தைக் கருத்தில் கொண்டு, இங்கே வாழ்கின்ற மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், இந்நகராட்சியிலுள்ள பேருந்து நிலையத்திற்கு ஒரு புதிய ஓடுதளமும், வாரச்சந்தை உள்பட பல உட்கட்டமைப்புகளும் அமைக்கப்படும். இதுதவிர, இந்நகரிலுள்ள பூங்காக்கள் மேம்படுத்தப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு சிறப்பு நிதியாக 50 கோடி ரூபாய் வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. 15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள் மற்றும் 12,525 கிராம ஊராட்சிகளில் மொத்தம் 64 ஆயிரத்து

2020 மார்ச் 19] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

583 துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இதுதவிர, பல்வேறு துறைகளிலும் துப்புரவுப் பணியாளர்கள் தூய்மைப் பணியைச் செய்து வருகிறார்கள். பொது இடங்களில் தூய்மையைப் பேணிக்காப்பது, புயல், மழை போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது தூய்மைப் பணிகளை மேற்கொள்வது, தெருக்களில் சேரும் குப்பைகளை அகற்றி சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் பேணுவது மற்றும் பேருந்து நிலையம், சந்தைகள், ஆலயங்கள் மற்றும் வணிக வளாகப் பகுதிகளில் உள்ள குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்றி இவர்கள் மேற்கொண்டு வரும் துப்புரவுப் பணி, மக்களின் நலனையும், பொதுச் சுகாதாரத்தையும் பேணுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இவர்களது நலனைப் பேணுவதில் அக்கறை கொண்டு, இப்பணியாளர்களுக்குக் குடியிருப்பு கட்டுதல், அவர்தம் குடும்பத்தினருக்கென குறிப்பிட்ட கால இடைவெளியில் மருத்துவப் பரிசோதனை முகாம்கள் நடத்துதல், அவர்களது குழந்தைகளின் எதிர்கால நன்மையைக் கருதி சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும் திறன் பயிற்சி அளித்தல் போன்ற நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, இப்பணியாளர்களின் செயல்பாடுகளைக் கௌரவிக்கும் வகையிலும், அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடவும், அனைத்துத் துப்புரவுப் பணியாளர்களும், இனி "தூய்மைப் பணியாளர்கள்" என்று அழைக்கப்படுவார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. எரிசக்தி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி மற்றும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தை மின் மிகை மாநிலமாக உருவாக்கித் தந்ததை தொடர்ந்து தக்க வைக்க வேண்டுமென்ற அடிப்படையில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், காவேரி காப்பாளர், குடிமராமத்து நாயகன், விவசாயிகளுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன்

[திரு. பி. தங்கமணி] [2020 மார்ச் 19

அவர்களை வணங்குகிறேன். இன்று தமிழகத்தில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தை, சீராக அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்க வேண்டும் என்பதற்காக 26 துணை மின் நிலையங்களையும், அதேபோல் ஸ்மார்ட் மீட்டர்களை சென்னை மாநகரத்தில் பொருத்துகின்ற திட்டத்தினையும், கடலோர மாவட்டங்களில் இயற்கைச் சீற்றங்களின் காரணமாக பல்வேறு பாதிப்புகள் வருகின்றபோது மின் தடை ஏற்படுகின்ற நிலையை மாற்றி, மின் தடை இல்லாமல் சென்னையைப் போல் இருக்க வேண்டும் என்பதற்காக கடலோர மாவட்டங்களில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் புதைவடத் தடங்களாக மாற்றுகின்ற திட்டத்தினையும், உற்பத்தியாகின்ற மின்சாரத்தை சீராகக் கொண்டு செல்ல வேண்டும், மின் மாற்றிகளை தரமானதாகப் பொருத்த வேண்டும் என்பதற்காக மின் பகிர்மானக் கழகத்திற்கு 187 கோடி ரூபாயும் அறிவித்திருக்கின்ற மரியாதைக்குரிய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மின்மிகை மாநிலம் மட்டுமல்ல, எதிர்காலத்திலும் பிரச்சினைகள் இருக்கக் கூடாது, குக்கிராமங்களிலும் சீரான மின்சாரம் வழங்க வேண்டும் என்பதற்காக விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கின்ற அத்தனைத் திட்டங்களுக்கும் தமிழ்நாடு மக்களின் சார்பாகவும், இந்தச் சட்டமன்றத்தில் உள்ள மாண்புமிகு அமைச்சர்கள் சார்பாகவும், சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், மரியாதைக்குரிய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்கு விதி 110–ன்கீழ் அற்புதத் திட்டங்களை வாரி வழங்கிய தர்ம தேவதை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை படியெடுத்து வைத்ததைப்போல் அடியெடுத்து வைத்து ஆட்சியை அழகுற நடத்திவரும் ஆற்றல்மிகு தலைவர், உழவர் மகன், காவேரி காப்பாளர், தமிழகத்தை Number One மாநிலமாக ஆக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் விதி 110–ன்கீழ் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும்

2020 மார்ச் 19] [திரு. எஸ்.பி. வேலுமணி]

ஊராட்சித் துறையின் சார்பில் சாலை மேம்பாடு, பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 10,000 தடுப்பணைகள், 12,525 முதியோர் சுய உதவிக் குழுக்கள் என மொத்தம் 6,992 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 19 முத்தான திட்டங்களை அறிவித்துள்ளார்கள். சுய உதவிக் குழுக்களுக்கு 16,000 கோடி ரூபாய் நேரடியாக வங்கிக் கடன் வழங்குதல், துப்புரவுப் பணியாளர்களைக் கௌரவப்படுத்தும் வகையில் இதுவரை யாரும் செய்யாத ஓர் அற்புதமாக, அவர்களை மிகப் பெரிய அளவில் கௌரவிக்கும் விதமாக 'தூய்மைப் பணியாளர்கள்' எனப் பெயர் மாற்றம் செய்து அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இச்சட்டமன்றக் கூட்டத் தொடரில் மட்டும் நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை தொடர்பாக மொத்தம் 86 அற்புதமான அறிவிப்புகளை வாரி வழங்கியமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது சார்பாகவும், நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையின் சார்பாகவும், கோவை மாவட்டத்தின் விரிவாக்கப் பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தினை அறிவித்துள்ளமைக்காக, கோவை மாவட்ட மக்களின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12—கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 13—உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(அ) கோரிக்கை எண் 12—கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020–2021 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). மாண்புமிகு கூட்டுறவுத் துறை

அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டுகோடி தமிழர்களுக்கு முகத்தையும், இரண்டு கோடி கழகத்தினருக்கு முகவரியும் தந்த, நான் நாளும் வணங்கும் மனித தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடி வணங்கி,

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,581,87,51,000/, மூலதனக் கணக்கில் ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,25,55,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 12, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 282, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 336, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 397, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்

வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 527, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1197, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1437, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1651, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1727, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2358, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2621, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3091, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3436, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3704, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3810, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3861, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4100, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4589, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க

வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4826, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5354, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5542, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6103, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி.

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்

வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6363, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6631, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7220, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7517, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா.

திரு. செ. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7525, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7840, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8275, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார்.

திரு. எஸ். அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8497, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8575, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார்.

திரு. க.சு. சரவணக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 719, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 773, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1143, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1354, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7718, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1008, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஜவ்வாதுமலை நடுகுப்பம், விளாங்குப்பம் ஆகிய பகுதிகளில் கூட்டுறவுத் துறை வாயிலாக நியாய விலைக் கடை கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1551, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் வட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3546, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி தொகுதியிலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3587, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3649, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3948, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, பூதலூர் ஒன்றியம், அய்யனாபுரம் மற்றும் வீரமரசன்பேட்டை நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3979, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமத்தி–வேலூர் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4059, மாண்புமிகு உறுப்பினர் திரு. L. இதயவர்மன்.

திரு. L. இதயவர்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் ஒன்றியம், பையனூர் ஊராட்சி, பண்டிதமேடு கிராமம், மேலையூர் ஊராட்சி, நந்தம்பாக்கம் கிராமம் ஆகிய இடங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4194, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் தற்காலிக நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை நிரந்தர நெல் கொள்முதல் நிலையமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4387, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் தொகுதியில் விவசாயிகள் விளைபொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக வாளாபுரம் பகண்டை கூட்டுச் சாலைப் பகுதியில் உடனடியாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4482, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி தொகுதி, தோவாளை ஒன்றியம், குருக்கள்மடம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4541, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4566, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், பொன்னம்பலபட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4985, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் வட்டியினை தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5067, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி தொகுதி, மானூர் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்

வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5085, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "150 குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை என்பதற்குப் பதிலாக, சுமார் 100 குடும்ப அட்டைகள் இருந்தால் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கலாம் என மாற்றிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5174, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், பிள்ளையார்நத்தம் ஊராட்சி, சரலப்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5202, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திட்டக்குடி தொகுதி, ஒரங்கூர் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5256, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “விவசாயிகள் திரும்பச் செலுத்த வேண்டிய கூட்டுறவுக் கடன்களை இரத்துச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5629, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றிருக்கும் விவசாயக் கடன், நகைக் கடன் போன்றவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5983, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் விவசாயிகளுக்கு வழங்கி வந்த குறுகிய கால வேளாண்மைப் பயிர்க் கடன் மற்றும் நகை அடமானத்தின் பெயரிலான வட்டியில்லாக் கடன்களை தற்போது K.C.C. ஆக 31–3–2020 வரை மாற்றியுள்ளதால் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6246, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், வியாசபுரம் ஊராட்சியில் கணேசபுரம், சிவாடா ஆகிய இடங்களில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6269, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகளில், உறுப்பினர்களின் வாரிசுகள் படிப்பிற்கு கல்விக் கடன் வழங்க

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6570, மாண்புமிகு உறுப்பினர் திரு. செள. தங்கப்பாண்டியன்.

திரு. செள. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராஜபாளையம் தொகுதியில் உள்ள அநன்புத்தூர், சுந்தரராஜபுரம், நக்கனேரி போன்ற ஊராட்சிகளில் பழுதடைந்த நியாய விலைக் கடைகளை இடித்து புதியதாக கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6704, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு தொகுதியில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளில் அனைத்துப் பொருட்களும் தடையின்றிக் கிடைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6749, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

***திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "லால்குடி தொகுதி, செவந்தநாதபுரம் கடையிலிருந்து பிரித்து மயில்லரங்கம் பகுதிக்கும், ஆமரசூர் பகுதிக்கும் பகுதிநேர நியாய விலைக் கடைகளை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் அனைத்தையும் சிறு, குறு, பெரிய விவசாயிகள் என்று பாகுபாடு பார்க்காமல் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6904, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு தொகுதி, குறுமத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க அலுவலகத்தை விரிவுபடுத்தி நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7277, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன்.

திரு. பூண்டி கி. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வடகோவனூர் ஊராட்சியில் பொது விநியோகக் கட்டடம் கட்ட

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7437, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன்.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேப்பனஹள்ளி தொகுதியில் உள்ள நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7518, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நியாய விலைக் கடைகளுக்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7523, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூரில் அமைந்துள்ள நவீன அரிசி ஆலைக்கு குடோன் வசதியை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8115, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் கட்டடம் இல்லாமல் இருக்கும் பகுதிநேரக் கடைகளை சிறப்பு அடிப்படையில் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8170, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியத்திலுள்ள ஏந்தூர் ஊராட்சி, மடவந்தாங்கல் கிராமத்தில் நியாய விலைக் கடை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8209, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், பந்தலூர் திருமுருகன் வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்குக் கடன் முறைப்படி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8342, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8541, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ்.

திரு. ஒய். பிரகாஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் உள்ள மலைக் கிராமங்களில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8673, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.A. சத்யா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8741, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8813, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி தொகுதியில் உள்ள பாமணி உரத் தொழிற்சாலையில் மண்புழு உர உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,25,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகின்ற தெய்வம், என்னை வாழ வைத்த தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய வணக்கத்தை, நன்றியை முதலில் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.361,40,05,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 13, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 283, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 337, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 398, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 528, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1198, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1439, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1652, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1728, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2359, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2484, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3100, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3435, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3713, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3811, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3862, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4101, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5349, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5545, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6102, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி.

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6635, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7219, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7527, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா.

திரு. செ. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7528, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7529, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7809, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8116, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8274, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார்.

திரு. எஸ். அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8574, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார்.

திரு. க.சு. சரவணக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 720, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 774, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1144, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1355, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7717, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3552, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து ரேஷன் அரிசி உள்ளிட்ட பொருட்கள் பிற மாநிலங்களுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3588, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3601, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, வரகூர் கிராமத்தில் அரசு

நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3650, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3983, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்மார்ட் கார்டு கிடைக்காதவர்களுக்கு விரைந்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4200, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதிக்குட்பட்ட வெடால், பாளையூர், நாங்களத்தூர், புழலூர், சிறுமையிலூர், இந்தூர் பெரியார் நகர், வெள்ள கொண்ட அகரம், வடபட்டினம், நீலமங்களம் ஆகிய பகுதிகளில் புதிய நியாய விலைக் கடை கட்டடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4483, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி தொகுதி, அருமநல்லூர் ஊராட்சி, வீரப்புலி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4831, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், காட்டுகுறிச்சியில் பகுதி, நேர நியாய விலை அங்காடி அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4983, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், வாணக்கன் காடு ஊராட்சி, பெரியவாடியில் நியாய விலை அங்காடி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5070, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருநெல்வேலி தொகுதி, நெல்லை டவுனில் குளிரூட்டும் பாதுகாப்பு கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5091, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் உணவுப் பொருட்கள் தரமானதாகவும், விலை மலிவானதாகவும் இருக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5203, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திட்டக்குடி தொகுதி, மங்களூர் ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையம் நிரந்தரமாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5259, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர் அனைவருக்கும் தடையின்றி மண்ணெண்ணெய் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5639, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரேசன் கடைகள்மூலம் வழங்கும் பொருட்கள் பயனாளிகளுக்கு தங்கு தடையின்றி கிடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5984, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் உள்ள நியாய விலைக் கடைகளில் அரிசி, பருப்பு, மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய் உள்ளிட்ட 100 சதவிகிதப் பொருட்களை விநியோகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6241, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், திருபாச்சூர் ஊராட்சி, கற்பக விநாயகர் நகரில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6272, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தாம்பரம் பகுதியில் நியாய விலை பொருள் சேமிப்புக் கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6372, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், தேவனாஞ்சேரி

அரசு நேரடி கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6589, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன்.

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராஜபாளையம் தொகுதியில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளில் பொதுமக்களுக்கு சரியான அளவில் தரமான குடிமைப் பொருட்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6748, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

***திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறுசோளம், கேழ்வரகு, வரகு, கம்பு போன்ற சிறு தானியங்கள் மற்றும் இயற்கை முறையில் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களை அரசு கொள்முதல் செய்து பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ரேசன் கடைகள்மூலம் விநியோகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6828, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "TNCSC ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.25,000/– வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7438, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன்.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7526, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் உள்ள நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு முழுமையாக ரேஷன் பொருட்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8208, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து நியாய விலைக் கடைகளிலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும், நியாய விலைக் கடைகளில் மாதத்தின் அனைத்து நாட்களிலும் பொருட்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8429, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன்.

திரு. பூண்டி கி. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் தொகுதி, கோட்டூர் ஒன்றியம், திருநெல்லிக்காவல் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8809, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், காளச்சேரி ஊராட்சி, சோத்தாரை கிராமத்தில் பகுதிநேர பொது விநியோகக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,40,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக்குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள்

@ *271 முதல் 324 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று 2 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் 2 மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடக்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

பிற்பகல் 12–30

***திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் தலைவராய் தந்தை பெரியாரின் மாணவராய், அறிஞர் அண்ணாவின் தம்பியாய், தமிழகத்தில் 5 முறை முதல்வராய், இந்தியாவிலேயே விவசாயிகளுக்கு முதன்முதலாக இலவச மின்சாரம் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே முதன்முதலாக கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்த முத்தமிழறிஞர் மூதறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் உற்ற தோழராய், தன்மானம், இனமானம், சுயமரியாதை இவற்றின் இலக்கணமாய் விளங்கிய திராவிட இயக்கத்தின் இனமான பேராசிரியர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவுத் துறை, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு வழங்கிய, தந்தை பெரியாராய், அறிஞர் அண்ணாவாய், தலைவர் கலைஞராய், ஓருருவில் வாழும் வெள்ளுடை வேந்தன், இந்திய

@ *325 முதல் 383 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

பாராளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தை மூன்றாவது பெரிய கட்சியாக உருவாக்கிய எங்கள் தலைவர் எங்கள் இயக்கத்தின் தலைவர். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான ஒரு கருத்தைப் பதிய வைக்க வேண்டாம். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொண்டு வந்ததே நம்முடைய பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அவர்களுடைய தலைவர் என்ன செய்தாரென்றால், அதைப் பெரிய விவசாயிகளுக்கும் விஸ்தரிப்புச் செய்தார். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) இது பலமுறை மன்றத்திலே விவாதிக்கப்பட்டு, அரசாணைகள் காண்பிக்கப்பட்டு, நான் EB Minister ஆக இருக்கும்போதுகூட விவாதம் வந்தது. ஆதாரத்தை நானும் காண்பித்தேன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அதற்கான ஆதாரத்தைக் காண்பித்தார்கள். எனவே, தவறான தகவலை தயவுசெய்து பதிவு செய்ய வேண்டாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தை மூன்றாவது பெரிய கட்சியாக உருவாக்கிய தலைவர் எங்கள் தலைவர், எங்கள் இயக்கத்தின் தலைவர், நாடே எதிர்பார்க்கும் நாளைய முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதன்மைச் செயலாளர் மாண்புமிகு அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாம் தலைமுறையின் அற்புதத் தலைவர், இளைஞர்களை திராவிட இயக்கத்தின்பால் ஈர்க்கும் இளைய தலைவர், இளைஞரணி செயலாளர் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் இந்த மாமன்றத்தில் படித்ததாகக் கருதி பதிவு செய்ய வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் சென்று கடன் கேட்கின்றபொழுது, ஏற்கெனவே கடன் கொடுத்தவர்களுக்கு மட்டுமே கடன் கொடுக்கப்படக்கூடிய நிலை உள்ளது. அதாவது, ஒரு பகுதியில் 5,000 ஏக்கர் நிலம் இருக்கிறதென்றால், 1,000 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு மட்டும்தான் கடன் கொடுக்கப்படுகிறது. மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு கொடுக்கப்படுகின்ற தொகையானது மிகவும் குறைவாக உள்ளதால்தான் அனைத்து விவசாயிகளுக்கும் கடன் கொடுக்க இயலவில்லை. இது அரசின் மூலமாக. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு) அவர் எடுத்தவுடனேயே குறுக்குசாலில் அல்லவா போகிறார். நேர்சாலில் போனால் பரவாயில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பயிர்க் கடன் கேட்பவர்களுக்குக் கடன் கொடுக்கப்படவில்லை, குறிப்பிட்டவர்களுக்குத்தான் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்; அது தவறு. (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். எந்த விவசாயிக்கு, எந்தச் சங்கம் கடன் கொடுக்கவில்லை என்று சொல்லுங்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், ஒரு விவசாயக் குடும்பத்திலிருந்து வந்திருப்பதால், கடந்த ஆண்டு விவசாயிகளுக்கு 10,000 கோடி ரூபாயை அறிவித்தார். இதுவரை வரலாற்றிலேயே இல்லை. இதுவரை சுமார் 8,500 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) யாருக்கும் இல்லையென்று சொல்லவில்லை. சிறு, குறு விவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளுக்கும் கொடுத்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இல்லாத ஒரு தகவலைச் சொல்கிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பதிலுரையில் விளக்கமாகச் சொல்கிறேன். படிக்க ஆரம்பித்தால் நீண்ட நேரமாகும், பார்த்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. என்னுடைய தொகுதியில் இருக்கின்ற கூட்டுறவு வங்கிகளில் ஒவ்வொரு வங்கியிலும் இந்த ஆண்டு எத்தனை புதிய நபர்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்கான பட்டியலை மட்டும் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பத்தாவது முறையாக இந்தத் துறை குறித்த மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்திற்குப் பதிலுரை வழங்கவுள்ளேன். அதனால் சரியான தகவலை வைத்துக்கொண்டு பேச வேண்டும். எந்தெந்த வங்கிகளில் யார் யாருக்குக் கொடுக்கவில்லை? ஒவ்வோராண்டும் புதிய உறுப்பினர்களுக்கு 30 சதவிகிதம் கொடுக்க வேண்டும் என சுற்றறிக்கை கொடுக்கப்படுகிறது. அதனடிப்படையில் எல்லோருக்கும் தங்குதடையின்றி பயிர்க் கடன் கொடுக்கப்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். . . (குறுக்கீடு) பொதுவாக கடன் கட்டாமல் யார் இருந்தாலும் அவர்களுக்குக் கடனே கொடுக்க மாட்டார்கள், அது வேறு. கடனை ஒழுங்காக, முறையாகக் கட்டியிருந்தால், கடந்த அம்மாவினுடைய அரசு தள்ளுபடி செய்த அந்தத் தொகையிலே தள்ளுபடி செய்திருந்தாலும் அனைவருக்கும் வழங்கப்படும். அதாவது, தகுதியானவர்கள் அனைவருக்குமே இப்போது கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இங்கே அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம் இருக்கிறீர்கள். எங்கேயும் அம்மாதிரி ஒரு பிரச்சினையே கிடையாது. அனைவருக்கும் தங்குதடையின்றி இப்போது கடன் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்னொன்றை விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மத்திய அரசு கடந்த 2019 ஆம் ஆண்டு 10–வது மாதமே கடன் கொடுப்பது சம்பந்தமாக என்ன சொன்னது என்றால், நகைக் கடன் கொடுக்கக்

கூடாது, KCC கடன்தான் கொடுக்க வேண்டுமென்று சொன்னது. ஒரு உழவர் பெருங்குடி மகனான மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னிடம், 'அப்படியெல்லாம் இருக்கக் கூடாது. நாம் எல்லோருக்கும் கடன் கொடுக்க வேண்டும், அதற்கான வழியைப் பாருங்கள், துறைரீதியாக ஆய்வு செய்யுங்கள்' என்று சொன்னார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அனைவருக்கும் நகைக் கடன் கொடுக்கிறோம், KCC கடன் உள்ளிட்ட அனைத்துக் கடனுமே கொடுத்துக் கொண்டிருக்கிறோம். விவரமாகச் சொல்ல வேண்டுமென்றால், பிறகு சொல்கிறேன். இப்போது சொன்னால் நேரமாகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனால் அரசின்மூலம் கிடைக்கக்கூடிய சலுகைகளான கடன் தள்ளுபடி, வட்டியில்லாக் கடன் போன்ற பயன்கள் புதிய நபர்களுக்குக் கிடைப்பதில்லை. அதேபோன்று, கூட்டுறவுச் சங்கங்களில் கடன் கொடுக்கப்படுகின்ற விவசாயிகளுக்கு மட்டுமே உரம் வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு உரம் சரியாகக் கிடைப்பதில்லை. இதற்குக் காரணம், பணியாளர்கள் கூடுதலான உரங்களைப் பெற்று விவசாயிகளுக்கு விநியோகம் செய்கிறபோது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு. (குறுக்கீடு) அவர் ஒவ்வொன்றையும் தவறாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவையில் அதைப் பதிவு செய்யக் கூடாது. (குறுக்கீடு) உறுப்பினர் தம்பி கார்த்திக் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான பதிவைப் பதிவு செய்யக் கூடாது. நன்றாகப் படித்துவிட்டு நீங்கள் சொல்லுங்கள். பயிர்க் கடன் வாங்குபவர்களுக்கு இவ்வளவு உரம் கொடுக்க வேண்டுமென்ற ratio இருக்கிறது. (குறுக்கீடு) அவர்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம். சிலபேர் உரமே வேண்டாமென்று சொல்கிறார்கள். அதைப்பற்றி பிரச்சினை இல்லை. பயிர்க் கடன் வாங்காதவர்களுக்கு, தனியாருக்கு யூரியா

பற்றாக்குறை இருந்தது. 1,69,000 மெட்ரிக் டன் இன்றைக்கு வழங்கி சாதனை படைத்திருக்கிறது நம்முடைய மாண்புமிகு அம்மாவின் அரசு. எங்கேயாவது உரத் தட்டுப்பாடு வந்ததா? இந்த வருடம் கிராமங்களிலெல்லாம் நன்றாக மழை பெய்தது. எத்தனை பேர் சும்மா இருக்கிறார்கள்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரிடம் சொல்லுங்கள். நன்றாகப் படித்துவிட்டு சொல்லச் சொல்லுங்கள். தம்பி சௌந்தரபாண்டியன் நல்லவர், senior Member, சரியாகச் சொல்ல வேண்டும். என்னுடைய துறையில் பேசும்போது நான் எல்லாவற்றையும் பேசினால் பிறகு late ஆகிவிடும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால் பேசியது தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைவருக்கும் உரம் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுக்கு சிட்டா, அடங்கல் வாங்கிக் கொண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு இலட்சம் ரூபாய் முதல் 3 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்பட்டது. நகைக் கடனும் வழங்கப்பட்டது. மத்திய அரசு கொண்டு வந்துள்ள சட்டத்தால் தற்சமயம் அக்கடனெல்லாம் 31–3–2020 வரை KCC ஆக மாற்றப்பட்டு வருகிறது. இதனால் கூட்டுறவு வங்கிகளில் எளிதாக விவசாயிகள் கடன் பெற முடியாத சூழ்நிலை உருவாகி வருகிறது. இனிமேல் விவசாயிகளுக்கு வங்கியில் வட்டியில்லாக் கடன், வட்டியில்லா நகைக் கடன் வழங்கப்பட மாட்டாது என்றும், மேலும், வட்டியில்லா நகைக் கடன் பெற வேண்டுமென்றால் பத்திரப் பதிவு அலுவலகத்தில் நிலத்தை அடமானம் செய்து கொடுத்தால் மட்டுமே கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் கடன் பெற முடியும் என்ற நிலையும் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கு 1–4–2020 முதல் வட்டியில்லா நகைக் கடன் வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள், டாக்டர் கலைஞர் ஆட்சியில் 1 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாய் வரைக்கும் பயிர்க் கடன் கொடுத்தோம் என்று சொன்னார். நான் கேட்கிறேன், நீங்கள் 5 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு எவ்வளவு கொடுத்தீர்கள்? 9 ஆயிரத்து 163 கோடி ரூபாய். நீங்கள் 9 ஆயிரத்து 163 கோடி ரூபாயைத்தான் மொத்தமாகக் கொடுத்தீர்கள். அப்போது விவசாயிகள் கேட்கவில்லையா? இப்போது உறுப்பினர் இன்னொன்றைச் சொன்னார். மற்றவற்றிற்கு நான் போகவில்லை. இந்த ஆண்டு மட்டும் அண்ணன் எடப்பாடியார் அவர்களால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் ரூபாய் 10,000 கோடி அறிவிக்கப்பட்டு, இதுவரையிலும் வழங்கியிருக்கிற தொகை ரூபாய் 7,548.53 கோடி. புதிய உறுப்பினர்களுக்குக் கொடுக்கவில்லையென்று சொன்னார். ஏறத்தாழ 15,93,148 புதிய உறுப்பினர்களுக்கு 2011–லிருந்து 7–3–2020 வரை கடன் வழங்கியிருக்கிறோம். உறுப்பினர் கொடுக்கவில்லையென்று சொன்னார். இன்றைக்கு 15,93,148 பேருக்குக் கடன் வழங்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1–4–2020 முதல் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் கொடுக்க முடியாமல் KCC–க்கு போய்விடும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். நமது மாநிலத்திற்கு மட்டுமல்ல, அனைத்து மாநிலங்களிலுள்ள எல்லா வங்கிகளுக்கும் சேர்த்து இந்த Bill–ஐ pass செய்திருக்கிறார்கள். தமிழகம் இந்தியாவுக்கே முன்னோடியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே பண மதிப்பிழப்பு நடவடிக்கை எடுக்கும்போது அனைத்து விவசாய உறுப்பினர்களையும் மத்திய கூட்டுறவு வங்கியில் உறுப்பினர்களாக மாற்றிவிட்டோம். நம்மிடம்கூட பணம் இல்லை. ஆனால், தமிழகத்தில் அனைத்து விவசாயிகளிடமும் பணப்புழக்கம் இருந்ததென்றால் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா புரட்சித் தலைவி அன்றைக்கு எடுத்த நடவடிக்கைதான் காரணம். இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யவில்லை எனினும், அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளிலும் தங்குதடையின்றி பயிர்க் கடன் கொடுக்க வைத்தது எவ்வாறெனில்,

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்த உறுப்பினர்களை, அந்த மாவட்ட வங்கிகளின் கிளைகளில் உறுப்பினர்களாக்கி அதன் மூலமாகக் கடன் கொடுத்தார்கள். அதேபோன்று இந்த முறையும் முன்மாதிரியாக இருக்கின்றோம். இப்பொழுது Insta Card என்று கொடுக்கிறோம்; KCC Card. இந்த Card–ஐ இன்றைக்கு எல்லா விவசாயிகளுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தவிதமான அச்சமும் கொள்ளத் தேவையில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன், எடப்பாடியார் அவர்கள் இந்த முறை 11,000 கோடி ரூபாய் அளவிற்குப் பயிர்க் கடனைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிதியாண்டில் நிச்சயமாக மாண்புமிகு அம்மாவின் அரசு அதை நிறைவேற்றிக் கொடுக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தவொரு விவசாயிக்கும் பயிர்க் கடன் இல்லை என்றற நிலை இருக்காது என்பதையும் ஆணித்தரமாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற சமயத்தில் 31–3–2020 வரை விவசாயிகள் சிட்டா, அடங்கல் கொடுத்தால் வட்டியில்லா நகைக் கடன் 1 இலட்சம் ரூபாய் முதல் 3 இலட்சம் ரூபாய் வரை கொடுக்கலாம் என்று இருந்தது. அந்த நடைமுறையை எங்கள் ஆட்சியில் கொண்டு வந்தோம், இதுவரை அந்த நடைமுறை இருந்தது என்றார். உறுப்பினர் கேட்பது 1–4–2020–லிருந்து அந்த வட்டியில்லா நகைக் கடன் வழங்கப்படுமா என்றுதான் கேட்கிறார். (குறுக்கீடு) ஒரு நிமிடம். இப்பொழுது அவை அனைத்தையும் KCC ஆக மாற்றிவிட்டார்கள். சிட்டா, அடங்கல் கொடுத்தால் கடன் கிடையாது. இனிமேல், அதாவது 1–4–2020–லிருந்து பத்திரப் பதிவு அலுவலகத்தில் அதனைப் பதிவு செய்தால்தான் அந்தக் கடன் வழங்கப்படும் என்கிற அச்சத்தைச் சொல்கிறார். மாண்புமிகு அமைச்சர், அதற்குப் பதில் சொல்லுங்கள். 1–4–2020–லிருந்து AJL–Agricultural Jewel Loan சிட்டா நகல் கொடுத்தால் வட்டியில்லாமல் விவசாயிகளுக்கு 1 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாய் வரை கொடுக்கப்படுமா என்பதை

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: எல்லோரும் கை தட்டாதீர்கள். இனிமேல்தான் இருக்கின்றது. Climax–ஐ பாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்டா, அடங்கல் இருப்பவர்களிடம் சிட்டா, அடங்கல் ஆகியவற்றை Jewel loan கேட்பவர்களிடம் வாங்கிக்கொள்கிறோம். சிட்டா, அடங்கல் ஆகியவற்றை வாங்காமல் கொடுக்கவில்லை. நாம் முன்மாதிரியாகவே இருக்கிறோம். நமக்கு ஒன்றும் அது புதிதல்ல. மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா மிகவும் அச்சப்படுகிறார். எவரும் பயப்பட வேண்டியதோ, அச்சப்பட வேண்டியதோ இல்லை. நாம் எந்த முறையில் கடன் கொடுத்தோமோ அந்த முறையில்தான் card கொடுக்கப் போகிறோம். அந்த card மூலமாக எல்லோரும் வாங்கிக்கொள்ளலாம். Jewel loan–ம் வாங்கிக் கொள்ளலாம். ஒரு நபர் ஜாமின் கொடுத்தும் வாங்கிக்கொள்ளலாம். அதற்கான திட்டங்களை. . . (குறுக்கீடு) நீங்கள் இல்லை என்று ஏன் சொல்கிறீர்கள்? நாங்கள் செய்யப் போகிறோம், அதை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். நான் அமைச்சர் என்ற முறையில் சொல்கிறேன், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 3,70,000 KC Card–ஐ (Kisan Credit Card) கொடுத்திருக்கிறோம், ஏனையவர்களுக்கும் card கொடுத்து தங்குதடையின்றி தகுதிவாய்ந்த அனைவருக்கும் விவசாயக் கடன், வட்டியில்லா பயிர்க் கடன் கொடுக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் 11,000 கோடி ரூபாய்க்கு பயிர்க் கடனை அனுமதித்திருக்கிறார், அது முழுமையாகக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் எந்தவித அச்சமும் தேவையில்லை. 1–4–2020–லிருந்து என்னவாகும் என்று நீங்கள் கேட்கிறீர்கள். அதைத்தான் நானும் சொல்கிறேன். இந்தியா முழுவதும் அந்தச் சட்டம் வந்திருக்கிறது, நமக்கு மட்டுமல்ல. (குறுக்கீடுகள்) இப்பொழுதுகூட மாண்புமிகு உறுப்பினர் சௌந்தரபாண்டியன் சொன்னார், மூன்றாவது பெரும் இயக்கமாக மாற்றிக் காட்டிய எங்களுடைய வாரிசு, எங்களுடைய வாரிசு என்று சொன்னார். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித்

தலைவர் குறித்துச் சொன்னார். நான் சொல்கிறேன், 37 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறீர்களல்லவா, அங்கே நாடாளுமன்றத்தில் பேசி இதற்குத் தீர்வு காணுங்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம், நாடாளுமன்றத்தில் உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதைப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

பிற்பகல் 12–45

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு செய்ய வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் என்னுடைய கேள்வி, அதற்குப் பதில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்திடம் பத்திரப் பதிவு குறித்த விளக்கங்களைக் கேட்டிருக்கிறோம். பதிவு செய்தாலும், செய்யாவிட்டாலும், card கொடுத்தால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதைப்பற்றி அவர்கள் instruction கொடுக்கவில்லை. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அச்சத்திற்காக நான் சொல்வது என்னவென்றால், உங்களுடைய 37 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் அல்லவா! (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நாங்கள் இல்லை. (குறுக்கீடு) இல்லை, எல்லோருக்கும் கொடுக்கப்படும் என்று சொன்னேன். (குறுக்கீடு) சரி, 38 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறீர்கள். (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடம் பொறுங்கள். (குறுக்கீடு) எந்தவித அச்சமும் தேவையில்லை. சும்மா தேவையில்லாமல் எதையாவது கிளப்பிவிடக் கூடாது. எந்தவிதமான அச்சமும் தேவையில்லை. விவசாயிகள் அனைவருக்கும் கடன் கொடுக்கப்படும். அதாவது, Jewel loan, KCC ஆகத்தான் கொடுக்கப்படும். (குறுக்கீடு) AJL எல்லாம் ஒன்றுதான். (குறுக்கீடு) தமிழகத்தைப் பொறுத்தவரையில். . . (குறுக்கீடு) தவறான கருத்தை நீங்கள் மீண்டும் மீண்டும் சொல்கிறீர்கள். (குறுக்கீடு) அதாவது, Jewel loan–ஐ KCC ஆகத்தான் கொடுக்கிறோம். (குறுக்கீடு) தமிழகத்தைப் பொறுத்தவரையில்,

கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். நீங்கள், இல்லை, இல்லை என்று சொன்னால், என்ன செய்வது? நீங்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சென்று கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கேட்டால், அதுபோன்று கொடுப்பார்கள். (குறுக்கீடு) Jewel loan கொடுத்தாலும், அது KCC ஆகத்தான் கணக்கில் எடுக்கப்படும். (குறுக்கீடு) இதுகுறித்து சில சந்தேகங்களை நாங்கள் கேட்டிருக்கிறோம். இருந்தபோதிலும், தமிழகத்திலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும், குறு, சிறு விவசாயிகளுக்கும் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இதோ பாருங்கள். (குறுக்கீடு) நான் சொன்னால் நம்ப மாட்டேன் என்கிறீர்களே! (குறுக்கீடு) பயிர்க் கடன் 3 இலட்சம் ரூபாய் வரை பெறுவதற்கு சிட்டா, அடங்கல் போதும். அதில் 1.60 இலட்சம் ரூபாய் வரை நபர் ஜாமின் அடிப்படையில் நில அடமானம் செய்யாமல் வழங்கப்படும். அதுமட்டுமல்ல, பத்திரப் பதிவு தேவையில்லை. (குறுக்கீடு) நான் சொன்னால் நம்ப மாட்டேன் என்கிறீர்களே! (குறுக்கீடு) இதோ, பாருங்கள்; இதோ பாருங்கள். (குறுக்கீடு)

(மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குறிப்பு ஒன்றை அவையில் காண்பித்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள். (குறுக்கீடு)

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கியின் பொது மேலாளர் அவர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் கேள்வி கேட்கிறார், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) நீங்கள் எல்லோரும் பேசினால், எப்படி அவையை நடத்துவது? (குறுக்கீடு) இல்லை, இல்லை, இதெல்லாம் சரியில்லை, திரு. அனிதா ராதாகிருஷ்ணன்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒன்றை தெளிவாகச் சொல்கிறேன். இன்றைக்கு

6 உறுப்பினர்கள் பேச வேண்டும், 2 அமைச்சர்கள் பதிலுரை அளிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களில், முதலில் பேசுபவருக்கு அரை மணி நேரமும், அடுத்ததாகப் பேசும் உறுப்பினருக்கு அரை மணி நேரமும் ஒதுக்கப்படும். அதற்குமேல் என்னால் நேரம் ஒதுக்க முடியாது. நீங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் கூடுதல் நேரம் கேட்கக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், நீங்கள் 12–30 மணிக்கு பேச ஆரம்பித்திருக்கிறீர்கள். நீங்கள், 1–00 மணிக்கு உரையை முடித்துவிட வேண்டும். குறுக்கீடு வந்துவிட்டது, நேரம் கொடுங்கள் என்றெல்லாம் கேட்கக் கூடாது. குறுக்கீடு என்றெல்லாம் சொல்லக் கூடாது. அது உங்களுடைய பொறுப்பு. குறுக்கீடு வராமல் பேசுவது உங்களுடைய திறமை, அவ்வளவுதான் சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், உரையை முடியுங்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மத்திய கூட்டுறவு வங்கியின் பொது மேலாளர் அவர்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பி வைத்துள்ளார். மத்திய கூட்டுறவு வங்கியில் 1 கோடி ரூபாய் பணம் எடுக்கும்போது 2% TDS கட்ட வேண்டும் என்று மத்திய கூட்டுறவு வங்கி சொல்கிறது. அப்படியென்றால், விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற பணத்திலிருந்து 1 கோடி ரூபாய்க்கு 2 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டியுள்ளது. அப்படியானால், அந்தப் பணத்தை அரசு கட்டுமா அல்லது சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டுமா அல்லது விவசாயிகள் பணத்தில் பிடித்தம் செய்யப்படுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. அந்தப் பணம் விவசாயிகளின் பணத்திலிருந்து பிடிக்கப்படுமேயானால், அந்த இழப்பு விவசாயிகளுக்குத்தான் வரும். அவற்றைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள், உண்மையிலேயே நல்ல சந்தேகத்தை எழுப்பியிருக்கிறார். இதில் நான் கூற

வருவது என்னவென்றால், இதுகுறித்து, நமக்கு மட்டுமல்ல, எல்லா வங்கிகளுக்கும் மத்திய கூட்டுறவு வங்கி சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. இதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், தலைமைச் செயலாளர் அவர்களிடமும், மூத்த அமைச்சர்களிடமும், உயர் அலுவலர்களிடமும் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும். ஏனெனில், ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் பயிர்க் கடனை மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து cash வாங்கித்தான் கொடுக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள்கூட பொங்கல் பரிசு கொடுத்தார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள் அல்லவா! (குறுக்கீடு) சொல்லுங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். (குறுக்கீடு) 1,000 ரூபாய் கொடுத்தார்களே! எப்படிக் கொடுத்தார்கள்? இரண்டு 500 ரூபாய் நோட்டுகளைக் கொடுத்தார்கள், எப்படிக் கொடுத்தார்கள், இரண்டு 500 ரூபாய் நோட்டுகளை பொங்கல் பரிசாகக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) இல்லை, இரண்டு 500 ரூபாய் நோட்டுகளைக் கொடுத்தார்கள். (குறுக்கீடு) நான் உங்களைப் பார்த்துதான் சொல்கிறேன், இரண்டு 500 ரூபாய் நோட்டுகளைக் கொடுத்தார்கள். (குறுக்கீடு) இதற்கெல்லாம் பணம் வாங்க வேண்டும். (குறுக்கீடு) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் ரேசன் கடைகளை நடத்துகிறது. சங்கம், 10 நியாய விலைக் கடைகளை நடத்தினால் அதன் நிலைமை என்னவாகும்? தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 2% TDS கட்ட வேண்டியிருக்கிறது. அதனால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களினுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படும். அதற்கு, 1.80 சதவிகிதம்தான் interest கிடைக்கிறது. எனவே, இதுகுறித்து உடனடியாக தகவல் சொல்லியிருக்கிறோம். நபார்டு மூலமாக நாம். . . (குறுக்கீடுகள்) இல்லை, இதை மொத்தமாக, முழுவதுமாகப் படித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) வேண்டாமா? நீங்கள்தானே இப்போது கேட்டீர்கள்!

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், பேசி முடியுங்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: உரையை முடித்துவிடவா? (குறுக்கீடுகள்) இந்திய அரசின் நிதித் துறை, வருமான வரிச் சட்டம், 1961–ல் மேற்கொண்ட திருத்தங்கள் காரணமாக, கூட்டுறவு நிறுவனங்கள் 2% TDS செலுத்துவது தொடர்பான குறிப்பு. இந்திய அரசின் நிதித் துறை, நிதிச் சட்டம் 2019–ன்படி வருமான வரிச் சட்டம், 1961–ன் பிரிவு 194N–ன்படி செய்துள்ள திருத்தத்தின் காரணமாக, 2019–2020 ஆம் ஆண்டு முதல் மத்திய வங்கியில் கணக்கு வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களும் அவர்கள் வைத்துள்ள அனைத்து கணக்குகளின்மூலம் சேமிப்பு, நடப்பு மற்றும் காசுக் கடன் உட்பட ஒரு நிதியாண்டில் பெறப்படும் ரொக்கம் withdraw செய்வது, cash செலுத்துவது, என ஒரு கோடிக்குமேல் பெறப்பட்ட ரொக்கத் தொகையில் TDS 2% மத்திய கூட்டுறவு வங்கியில் பிடித்தம் செய்து வருமான வரித் துறைக்குச் செலுத்த வேண்டும். இந்தச் சட்டம் வந்திருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தத்திலே, வங்கியிலிருந்து ஒரு கோடி ரூபாய்க்குமேல் ரொக்கம் பெறும் வங்கிகள், அஞ்சலகங்கள், மத்திய மற்றும் மாநில அரசுகள், வங்கியியல் வணிகத்தில் ஈடுபடும் கூட்டுறவுச் சங்கங்கள், வங்கியியல் முகவர், மாநில விவசாய விளைபொருள் சந்தைக் குழு சட்டத்தின்கீழ் செயல்படும் விவசாய விளைபொருள் சந்தைக் குழு முகவர்களுக்கு 2% TDS பிடித்தம் செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேற்படி வருமான வரி சட்டத் திருத்தம் காரணமாக ஒரு நிதியாண்டில் ஒரு கோடிக்குமேல் மத்திய வங்கியிலிருந்து ரொக்கமாகப் பணம் பெறும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கைத்தறி மற்றும் இதர கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திடமிருந்து மத்திய கூட்டுறவு வங்கி 2 சதவிகிதம் வரி பிடித்தம் செய்து, வருமான வரித் துறைக்குச் செலுத்த வேண்டியுள்ளது. உதாரணமாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்க ரூபாய் ஒரு கோடிக்குமேல் ரொக்கமாக KCC கணக்கிலிருந்து, மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து பணம் எடுக்கும்போது மத்திய கூட்டுறவு வங்கி 2 சதவிகித பணத்தை TDS ஆகப் பிடித்தம் செய்து, மீதித் தொகையை மட்டும் KCC கடன் வழங்கக் கொடுக்கும். விவசாய விளைபொருள் சந்தைக் குழு சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற முகவர்களுக்கு மற்றும் வியாபாரிகளுக்கு வருமான வரிச் சட்டம், 1961 பிரிவு, 194–N-லிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து

1 கோடி ரூபாய்க்குமேல் ரொக்கமாகப் பெறும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இதர கூட்டுறவுச் சங்கங்கள்மீது. . . (குறுக்கீடுகள்) இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. இதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு எவ்வளவு நிதியாதாரம் இருக்கிறது, எத்தனை சங்கங்கள் இருக்கின்றன... (குறுக்கீடு) நிருவாகக் குழு ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டு, நிருவாகக் குழு அதன்கீழ் இயங்குகிறது; மக்கள் பிரதிநிதிகள் இயங்குகிறார்கள். எனவே, இதற்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லி நாங்கள் விளக்கம் கேட்டிருக்கிறோம். இறுதியாக, வெற்றி மேல் வெற்றியை சாதிக்கின்ற நம்முடைய முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் நிச்சயமாக இதிலும் சாதித்துக் காட்டுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாக கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விழாவிற்குச் சென்றுவிட்டு மதுரையில் Smart City திட்டத்தின்கீழ் நடக்கின்ற பணிகளை ஆய்வு செய்வதற்காகச் செல்கிறார். அப்படிச் செல்கின்றபோது ** அப்படியென்றால், இந்த smart city திட்டத்தின்கீழ் தமிழகம் முழுவதும் நடைபெறுகின்ற பணிகளினுடைய தரம் என்ன என்பதை இந்த அரசு விளக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 12–55

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: உறுப்பினர், கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சம்பந்தப்பட்டவன் என்ற முறையிலே. . . (குறுக்கீடுகள்) அதைத்தான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொல்கிறேன். நான் சம்பந்தப்பட்டவன் என்ற முறையிலே பதில் சொல்கிறேன். நானும், மதுரை மாநகராட்சி ஆணையர், முதன்மைப் பொறியாளர் உட்பட எல்லோரும் போனோம். அந்தப் பணிகள் இன்னும் முடிக்கப்படவில்லை. அந்தப் பணி இன்னும் நிறைவு பெறவில்லை. கபடி வீரர்களைப் பெருமைப்படுத்துகின்ற வகையில், அந்த stage–ல் அவர்களுடைய உருவம் பொறித்த 7 பேர் கொண்ட சிலை வைப்பதற்கான இடத்தை அங்கு தேர்வு செய்தோம். அங்கு ஒரு manhole இருந்தது. அந்த manhole பக்கத்தில் கீழே பாதாள சாக்கடை இருக்கிறது. அங்கிருந்து தென் பகுதியில் இருக்கிற, புட்டுத்தோப்பு பகுதியில்தான் அந்தச் சாக்கடைக் கழிவு நீர் போய் pump செய்யப்படுகிறது. Pump செய்யும்போது, கடந்த 2, 3 மாதங்களுக்கு முன்பு பெய்த மழையினால், வாய்க்காலில் தண்ணீர் செல்கின்றபோது, அந்த வாய்க்காலினை அரித்துவிடுகிறது. இருக்கின்ற மண்ணையெல்லாம் இழுத்துக் கொண்டு போய்விடுகிறது. அதனால் அந்த manhole–ஐ ஒட்டியிருப்பது கீழே இறங்கிவிட்டது. வேறு ஒன்றும் இல்லை.

(மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இருக்கையில் இருந்தபடியே ஏதோ சைகை செய்தார்.)

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நம் மேலே இருக்கின்ற அபிமானத்தில் டப், டப் என்று செய்வார். இப்படி, இப்படியென்று செய்வார். எப்படி? இப்படி, இப்படி என்று செய்வார். கீழே விழுந்தது. அதனால் தம்பி, அச்சப்பட வேண்டாம். Super ஆக வேலை நடைபெறுகிறது. மிகவும் தரமாக இருக்கிறது. உலகத் தரம் வாய்ந்ததாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) திரு. சௌந்தர், நீங்கள் அங்கு வந்து பாருங்கள். வந்து பார்த்தால்தான் தெரியும். சும்மா, இங்கேயிருந்துகொண்டு ஏதாவது சொல்லக் கூடாது. சட்டமன்றம், இது மாபெரும் சபை. இந்த மாபெரும் சபையிலே நாம் உள்ளதைப் பேச வேண்டும். ஏதாவது குறையிருந்தால் சொல்லுங்கள். குறையைச் சுட்டிக்காட்டுங்கள். நீங்கள் சுட்டிக்காட்டுங்கள், நாங்கள் அதனை சரி செய்யத் தயாராக இருக்கின்றோம். திரு. சுந்தர் அண்ணன் அவர்களுக்குத்தான் தெரியும். நீங்கள் சுட்டிக்காட்டுங்கள், நாங்கள் அதனை நிவர்த்தி செய்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Smart City திட்டத்தைப் பற்றி தமிழ்நாடு முழுவதும் இப்படித்தான் பணிகள் நடைபெறுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். Smart City திட்டத்தைப் பற்றி, எங்களுடைய துறை மானியக் கோரிக்கையில் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். Smart City திட்டம், மத்திய மாநில அரசுகள் சேர்ந்து செய்யக்கூடிய திட்டம். மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின்படி செய்யக்கூடிய திட்டம். மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தபோது, அதாவது 2014–2015–ல் ஆரம்பித்து இதுவரையில் 100 நகரங்களை Smart City திட்டத்தில் தேர்ந்தெடுத்தார்கள். இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 11 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை அனைத்திலும் உலகத் தரத்தில் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனை மத்திய குழுவே வந்து பாராட்டியிருக்கின்றார்கள். Smart City–AMRUT பணிகளில் incentive, ஊக்கத்தொகையை மத்திய அரசிடம் வாங்கியது நம்முடைய மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அனைத்துப் பகுதிகளிலும் வரையறுக்கப்பட்டபடி, மத்திய அரசின் வழிகாட்டுதலின்பெயரில், அனைத்துப் பகுதிகளிலும் தரமான முறையிலே இன்றைக்கு பணிகள் நடைபெறுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதோ பாருங்கள், இதற்குமேல் நீங்கள் நேரம் கேட்டால் நான் தரமாட்டேன். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோய் இல்லாதவன் இளைஞன், கடன் இல்லாதவன் பணக்காரன். இதுபோன்ற வாழ்க்கை முறைகள் எல்லாம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு. சோளச் சோறு, வரகுச் சோறு, கம்மஞ்சோறு, களி-களி என்றால் கேழ்வரகு-இதுபோன்ற இன்னும் பல வகையான உணவுகளை உண்டு வாழ்ந்தார்கள். சொல்லப் போனால், அமாவாசை விரதத்தன்று காலையில் செய்வது சோள இட்லி. இதை ஏன் சொல்கிறேன் என்றால், ஐம்பது வருடங்களுக்கு முன்பெல்லாம் சோள இட்லிதான் இருக்கும். அமாவாசை அன்று மட்டும்தான் இட்லி சாப்பிடுவார்கள். மதியத்தின்போது

வரகுச் சோறு படைத்து உண்டு, நோய் நொடியில்லாமல் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து வந்த காலம், அக்காலம்.

சிறு தானியத்தின் நன்மைகளை நம்முடைய அரசு எப்படிச் சொல்கிறது என்றால், உணவு முறைகளால் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் நுண்கிருமிகளின் வளர்ச்சி தடுக்கப்படுகிறது. பெருங்குடல் செயல்பாட்டை சீராக்குகின்றது. உடல் சுறுசுறுப்பிற்குக் காரணமான creatine உற்பத்திக்கு உதவின. பெண்களின் பித்தப் பையில் கற்கள் வராமலும், மெக்னீசியம் அதிகமான அளவில் காணப்படுகின்றன. ஆஸ்துமா குறைபாடு, ஒற்றைத் தலைவலி இல்லாமலும், இரத்த அழுத்தத்தைச் சீராக்கி இதய நோயிலிருந்து பாதுகாத்தன என்றும், Niacin (Vitamin B3) அதிக அளவு கொழுப்பு சேர்வதைக் குறைத்தும், அன்றாடம் சிறு தானியத்தைப் பயன்படுத்தினால் இரண்டாம் வகை–Type II insulin சர்க்கரை நோய் வருவதில்லை, ஊட்டச்சத்து குறைபாடு தவிர்க்கப்படுகிறது, புற்றுநோய் வருவதைத் தடுக்கின்றது. பருமனான உடல் எடை சீராகும், எலும்பு வளர்ச்சிக்கு உதவும் என்றும், இன்னும் பல வகைகளில் நன்மை தருகின்றன என்றும் கடந்தாண்டு வேளாண்மைத் துறை கொள்கை விளக்கக் குறிப்புகளில் கூறப்பட்டிருக்கின்றது. இதை அரசு சொல்லிவிட்டு, சிறு தானிய உற்பத்தியைப் பெருக்கிட எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

பெரம்பலூர் மாவட்டம், குன்னம், வேப்பூரில் ‘விவசாயிகள் ஆட்சியர் கூடம்’ என்ற அமைப்பை உருவாக்கி, அதன்மூலம் சிறு தானிய உற்பத்தி பகுதியாக இருந்ததை, தனியார் கம்பெனிகளின் தூண்டுதலில், நப்பாசையின் காரணமாக B.T. பருத்தி, மக்காச்சோளம் விவசாயமாக மாற்றி, விவசாயிகளின் உணவுப் பொருட்கள் உற்பத்தியை சின்னாபின்னம் செய்ததை மீட்டெடுக்கும் முயற்சியில், 2015–லிருந்து இதுவரை 50–க்கும் மேற்பட்ட விவசாயிகளை இணைத்து வரகு, குதிரைவாலி, சாமை, இருங்கு சோளம் போன்ற தானியங்களைப் பயிர் செய்து, 40 டன் அளவிற்கு உற்பத்தி செய்துள்ளனர். இங்கு சந்தையில் குறைவான விலையாக 20 ரூபாய்க்குக் கேட்டதை, ஆந்திர மாநிலம், அனந்தப்பூர் மாவட்டத்தில் Earth 360 ECO Ventures Private Limited என்ற அமைப்பிற்கு கிலோ 29 ரூபாய் என்று வரகை விற்பனை செய்துள்ளனர். அந்த ஆந்திர அமைப்பு இந்தியா முழுவதும் விற்பனை செய்கின்ற அமைப்பு. தமிழகச் சந்தை விலையைவிட ஒரு கிலோவுக்கு 9 ரூபாய் கூடுதலாகக் கொடுத்து வாங்கியுள்ளது.

திருச்சி மாவட்டம், லால்குடி தொகுதி, புள்ளம்பாடி பகுதியில் பல ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த ஆண்டு பயிர் செய்யப்பட்ட வரகை, அதே அமைப்பு 22 ரூபாய், 23 ரூபாய்க்குக் கேட்கின்றது. காரணம் என்னவென்று வினவியபோது, பாமரர் அமைப்பு இயற்கை விவசாயச் சான்று பெற்றுள்ளது, அதனால் கூடுதலாக விலை கொடுக்கப்படுவதாகப் பதில் கிடைத்தது. சிறு தானியங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5,000 ரூபாய் மானியமாக வழங்க வேண்டும். சிறு தானிய விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க வழிமுறைகளை உருவாக்க வேண்டும். சிறு தானியங்கள் உற்பத்தி செய்கின்றபோது சேதத்தை உண்டு பண்ணும் பறவைகள், விலங்குகளின் தாக்குதலைத் தடுத்திட புதிய வழிமுறைகளைக் கண்டறிந்து. . .

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், உரையை முடியுங்கள். நான் ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடு) நான் ஒன்றும் செய்வதற்கு இல்லை. (குறுக்கீடு)

திரு. அ. சௌந்தரபாண்டியன்: அதன் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். சிறு தானியங்களுக்கு அரசே கொள்முதல் நிலையங்களை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இன்னும் ஐந்து உறுப்பினர்கள் பேச வேண்டும். இரண்டு அமைச்சர்கள் பதிலளிக்க வேண்டும். (குறுக்கீடு) நேரத்தைப் பாருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒத்துழைக்கவில்லையென்றால், நான் எப்படி சபையை முடிப்பது? (குறுக்கீடு)

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சிறுதானியத்தை விட்டுவிட்டேன். இன்றைக்கு, உணவு தானியத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. உங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். சபையில் பேசுவது உங்களுடைய விருப்பம். அதை நான் சொல்ல முடியாது. இந்த சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள், அந்த சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள் என்று நான் சொல்ல முடியாது. (குறுக்கீடு) இன்றைய மானியக் கோரிக்கைகள் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைகளாகும்.

ஆகவே, அந்த மானியக் கோரிக்கைகள்மீது நீங்கள் பேசினால், அரை மணி நேரத்தில் பேசி முடிக்கலாம். ஆனால், நீங்கள் சிறுதானியம், விவசாயம் பற்றியெல்லாம் பேசுகிறீர்கள். (குறுக்கீடு)

திரு. அ. சௌந்தரபாண்டியன்: சிறுதானியம் சோறு இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் பேசுவது உங்களுடைய உரிமை. நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் அரை மணி நேரத்தில் தங்கள் உரையை முடிக்க வேண்டும். ஆகவே, அரை மணி நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) இன்னும் ஒரு நிமிடத்தில் தங்களுடைய உரையை முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: உணவுத் தானியங்களில் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தாக்கம் எப்படியுள்ளது என்பதை மத்திய வேளாண்மை அமைச்சகம் சார்பில், தேசிய அளவிலான ஆய்வில், அனைத்து வகையான உணவுத் தானியங்களில் 23,600 மாதிரிகள் சோதனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதில், 4,510 மாதிரிகளில் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தாக்கம் 19.10 சதவிகிதம் இருந்ததும், அதிலே 523 மாதிரிகளில் 2.20 சதவிகிதம் அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அரிசி அரவை ஆலை, அரிசி மொத்தம் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களில் ஆய்வு நடத்தியதில், 1,177 அரிசி மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டதில், 256 மாதிரிகளில் அனுமதிக்கப்பட்ட 2.20 சதவிகிதம் அளவைவிட 21.7 சதவிகிதம் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தாக்கம் அதிகமாகவும், 85 மாதிரிகளில் அதனுடைய தாக்கம் இதைவிட அதிகமாகவும் இருந்தது கண்டறியப்பட்டுள்ளது என்பதை மத்திய அரசின் உணவு பாதுகாப்புத் தர கட்டுப்பாட்டு அலுவலகம் (FSSA) தெரிவித்துள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல், அரிசி வணிகர்கள் சங்கத்திற்கும் தெரிவித்துள்ளது.

இந்திய உணவுப் பொருட்களில் நடத்தப்பட்ட சோதனையில் மூன்றில் ஒரு பங்கு உணவுப் பொருட்கள் கலப்படம் செய்யப்பட்டவை எனத் தெரிய வந்துள்ளது. நம் நாடு முழுவதும் சோதனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 65 ஆயிரம் உணவு மாதிரிகளில், 20 ஆயிரம் உணவு மாதிரிகளில் கலப்படம் இருப்பது உறுதியாகியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், உரையை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) உரையை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) எனக்குத் தெரியும், திரு. அனிதா ராதாகிருஷ்ணன், நான் பார்த்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. அ. சௌந்தரபாண்டியன்: தமிழகத்தில் உணவுப் பொருட்களில் நடத்தப்பட்ட ஆய்வில் 5,730 மாதிரிகளில், 2,601 உணவு மாதிரிகளில் கலப்படம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உத்தரப்பிரதேசத்தில் 19,170 பொருட்களில் நடத்தப்பட்ட சோதனையில் 9,403 பொருட்களில் கலப்படம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொன்னால் அவர் பேசுவதை விட்டுவிடுவாரா? சொல்லுங்கள். (குறுக்கீடு) அவரை முடிக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. அ. சௌந்தரபாண்டியன்: இதேபோன்று, தமிழகத்தில் உணவுப் பொருட்களில் நடத்தப்பட்ட 5,730 மாதிரிகளை சோதனை செய்ததில், 2,601 உணவு மாதிரிகளில் கலப்படம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மக்களவையில் பதிலளித்த மத்திய உணவுத் துறை அமைச்சர் திரு. ராம்விலாஸ் பாஸ்வான் அவர்கள், உணவுக் கலப்படத்தில் தமிழகம்தான் முதலிடத்தில் உள்ளது என்றும், உத்தரப்பிரதேசம் இரண்டாவது இடத்தில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். ஆனால், தமிழகத்தில் உணவுக் கலப்படம் தொடர்பாகப் பதிவாகும் வழக்குகளில் 13 சதவிகிதம் பேர் மட்டுமே தண்டனைக்கு உள்ளாகின்றனர் என்றும், 2018–2019–ல் பதிவு செய்யப்பட்டுள்ள 2,324 வழக்குகளில் வெறும் 300 வழக்குகள் மட்டுமே தண்டனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன என்றும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்திய உணவுப் பாதுகாப்பு அமைச்சக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், உங்களுடைய உரை நிறைவு பெறுகின்றது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ** என்ற வார்த்தைகளைச் சொன்னார்கள். அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேண்டாம். அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களும் இங்கே ஒரு ஐயத்தை எழுப்பினார்கள். இதனை 1–10–2019 அன்றே நடைமுறைப்படுத்திவிட்டார்கள். (குறுக்கீடு) இருங்கள். தயவுசெய்து நான் சொல்லிவிடுகிறேன். இது மிகவும் முக்கியமானது. இது 1–10–2019 அன்றிலிருந்தே நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொல்லி, மத்திய அரசு தாக்கீது அனுப்பியது. அங்கே Bill pass ஆகிவிட்டது; Bill pass செய்துவிட்டார்கள். அப்படியென்றால் புரிந்துகொள்ளுங்கள். Bil pass செய்துவிட்டார்கள். இருந்தபோதிலும், நாம் என்ன செய்திருக்கிறோம் என்று பாருங்கள். 1–10–2019 அன்றிலிருந்து 25–2–2020 வரை 1 இலட்சத்து 44 ஆயிரத்து 174 விவசாயிகளுக்கு 1,360.57 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். Jewel loan வாங்கியவர்களையும் KCC ஆக மாற்றிவிட்டோம். இப்போது மாற்றப்பட்டு, அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு மட்டும் எவ்வளவு என்றால், அதாவது, 1 இலட்சத்து 44 ஆயிரத்து 174 பேருக்கு சுமார் 1,361 கோடி ரூபாய் அளவிற்கு இருந்ததை மாற்றி அவர்களுக்குக் கொடுத்துவிட்டோம். அதை KCC ஆக மாற்றிவிட்டோம். 1–4–2020-லிருந்து அந்த மாதிரியான நடைமுறையைச் செய்யப் போகிறோம். எந்தவித அச்சமும் தேவையில்லை, கடன் வாங்கிய விவசாயிகளுக்கு இல்லையென்பது இருக்காது. அனைத்து விவசாயிகளுக்கும், கூடுதலாக 30 சதவிகிதம் புதிய உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகாறும் இந்தியாவினுடைய ஒட்டுமொத்த கலப்பட நிகழ்வுகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை, இன்றைக்கு உணவுப் பாதுகாப்பு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், உணவு பழக்கவழக்கத்தில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் மக்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை அவ்வப்பொழுது சோதனையின்மூலம் நாங்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நாம் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் வழங்குகிற உணவுப் பொருட்களை இந்திய உணவுக் கழகத்திலிருந்து பெறுகின்றபோதே 100 சதவிகிதம் தரப் பரிசோதனை செய்த பிறகே, நகர்வு செய்யப்படுகிறது. அந்த வகையில், இந்திய அரசின் தரக்கட்டுப்பாட்டு நிர்ணய விதிகள் மற்றும் திரிபுகளுக்குட்பட்டே பெறப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், கிடங்குகளில் சேமிக்கும்போது அவற்றைப் பாதுகாக்க 15 நாட்களுக்கு ஒரு முறை Malathion மருந்து, மூட்டைகளின்மேல் தெளிக்கப்படுகிறது. வாரம் ஒரு முறை DDVP மருந்து காற்றில் தெளிக்கப்படுகிறது. தேவைக்கேற்ப, Aluminium phosphideமூலம் புகை மூட்டம் செய்யப்பட்டு பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கப்படுகிறது. நம்முடைய பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய பொருட்களைப் பாதுகாப்பதற்கு அரசால் இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, சிறுதானிய வகைகளினுடைய முக்கியத்துவத்தையும், சிறுதானிய உணவுகளினுடைய அவசியம் மற்றும் தேவை, மருத்துவ ரீதியாக முக்கியம் வாய்ந்தது போன்ற பல்வேறு கருத்துகளைப் பதிய வைத்திருக்கிறார். இறுதியாகத்தான் கலப்படம் என்ற வார்த்தையைச் சொன்னார். உங்களுக்குத் தெரியும், சிறுதானியங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து, சிறுதானியங்களை நாம் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, தனிப்பட்ட முறையிலே அதை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் 'Back to the Roots' அதாவது, மீண்டும் நம்முடைய பாரம்பரியத்திற்கு என்ற வகையில், மதராசபட்டினம் என்ற சிறுதானிய பாரம்பரிய உணவுத் திருவிழாவை 3 நாட்கள் சென்னையிலே உள்ளாட்சித் துறை மற்றும் மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்போல் மிகச் சிறப்பாக நடத்தி, அதில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு, அதற்கான சிறப்பு விருதும் பெறப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் நேரடியாக அதைத் தொடங்கி வைத்து, மிகப் பெரிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். பல்லாயிரக்கணக்கான மக்கள் அதைக் கண்டுகளித்தனர். Lifestyle modification காரணமாக ஏற்படும் நோய்களைத் தவிர்ப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறுதானியத்திற்கு மிக அதிக முக்கியத்துவத்தைத் தொடர்ந்து கொடுத்து வருகிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், உரையை முடியுங்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டில் விநியோகிக்கப்படும் பாலில் 6,432 மாதிரிகள் எடுக்கப்பட்டதில், 338 மாதிரிகளில் Aflatoxin M1 level Urea–ல் அனுமதிக்கப்பட்ட அளவைவிட நச்சுத் தன்மை அதிகமாக இருக்கிறது என்றும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், புது சப்ஜெக்ட்டுக்குப் போகாதீர்கள். திரு. சௌந்தரபாண்டியன் நன்றி சொல்லி உரையை முடிப்பதற்காகத்தான் நான் வாய்ப்பு தந்திருக்கிறேன்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: தமிழகத்தில் உணவுக் கட்டுப்பாடு மற்றும் தர நிர்ணய ஆணையம்மூலம் எடுக்கப்பட்ட 551 மாதிரிகளில் 88 மாதிரிகளில் நச்சுத்தன்மை அதிகமிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல் டெல்லியில் 252 மாதிரிகளில் 32–லும், கேரளாவில் எடுக்கப்பட்ட 187 மாதிரிகளில் 37–லும் நச்சுத்தன்மை இருந்தன. நம் தமிழகத்தில்தான் பாலில் அதிக நச்சுத்தன்மை இருந்துள்ளது. பாலில் நச்சுத்தன்மை இருக்கக் காரணம், தானியப் பயிர்களில் பூச்சிக்கொல்லி மருந்துகள் அதிக அளவு தெளிக்கப்படுகின்றது என்பது ஒருபுறம் இருந்தாலும், பாலை பதப்படுத்தவும், கெட்டுப் போகாமல் இருக்கவும், கெட்டித் தன்மை மற்றும் வெண்மை நிறத்திற்காகவும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சௌந்தரபாண்டியன், உரையை முடியுங்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: பயிர்களின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படும் யூரியாவை கலப்பதுதான் காரணம் என்கின்றனர். உணவுப் பொருட்களை விளைவிக்கும். . .

தொகுதிக் கோரிக்கைகள்:

லால்குடி தாலுகா மருத்துவமனையில் புதிய நவீன வசதிகளுடன்கூடிய கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும். லால்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தர வேண்டும். லால்குடி நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்டித் தர வேண்டும். லால்குடி தாலுகாவை இரண்டாகப் பிரித்துப் புள்ளம்பாடியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தாலுகாவை உருவாக்க வேண்டும்.

லால்குடி தொகுதி, இடையாற்றுமங்கலத்திற்கும், ஸ்ரீரங்கம் தொகுதி, கிளிகூட்டுக்கும் இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணையுடன்கூடிய பாலம் கட்டித் தர வேண்டும். லால்குடி–பரமசிவபுரம் இரயில்வே மேம்பாலத்தில் பேருந்துகளை இயக்கிட வேண்டும். புள்ளம்பாடி–திருமழப்பாடி சாலையில் புள்ளம்பாடியில் உள்ள இரயில்வே கேட்டில் மேம்பாலம் கட்டித் தர வேண்டும்.

லால்குடி–செங்கரையூர் சாலையில், மணக்காலில் உள்ள இரயில்வே கேட்டில் மேம்பாலம் கட்டித் தர வேண்டும்.

கல்லக்குடி, கோவண்டாக்குறிச்சி, வடுகர்பேட்டை வருவாய்க் கிராமங்களில் உள்ள சுண்ணாம்புச் சுரங்கங்களில் முறைகேடு செய்யும் டால்மியா சிமெண்ட் நிறுவனத்தின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேட்டூர் அணையிலிருந்து வரும் நீரை பெருவளை வாய்க்கால், புள்ளம்பாடி வாய்க்கால்மூலம் 20 ஊராட்சிகளில் உள்ள ஏரி, குளங்களில் நிரப்பி, மக்களுக்கு உயிர் நீராகவும், கால்நடைகளுக்கும், மானாவாரி விவசாயிகள் விதை தெளிப்பான்களுக்கும் தேவையான தண்ணீர் கிடைக்க தீர்வு காணப்பட வேண்டும்.

லால்குடி தொகுதி, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், கீழரசூர்–ஆங்கினூர் சாலையில் இரயில்வே கேட்டில் கட்டப்பட்டுள்ள சுரங்கப் பாதையில் மழைக்காலங்களில் தேங்கும் மழைநீரை அகற்ற ஆவன செய்ய வேண்டும்.

லால்குடி தொகுதி, புள்ளம்பாடி–ஆனந்தபுரம் நெடுஞ்சாலைத் துறை சாலையில் உள்ள இரயில்வே கேட்டில் கட்டப்பட உள்ள சுரங்கப்பாதை பாலம் உயரமாகக் கட்டப்பட வேண்டும்.

லால்குடி தொகுதி, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் நந்தியாறு துவங்கும் இடம் முதல் கொள்ளிடத்தில் கலக்கும் வரை வெள்ளம் ஏற்பட்டு பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் தூர் வாரி கரையை பலப்படுத்தித் தர வேண்டும்.

லால்குடி தொகுதி, இ.வெள்ளனூர்–கோமாகுடி சாலையில் கட்டப்பட்டுள்ள இரயில்வே சுரங்கப் பாதையில் விவசாய காலங்களில் ஊற்றெடுக்கும் தண்ணீரை வெளியேற்றி போக்குவரத்து பாதிப்பை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

லால்குடி தொகுதி, மேலவாளாடியில் இரயில்வே சுரங்கப்பாதை உயரமாகக் கட்டப்பட வேண்டும். மேலும், இணைப்புச் சாலையையும் அமைத்துத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறுதானியத்தைப் பற்றியும் மற்ற பயிர் வகைகளைப் பற்றியும் இங்கே பேசினார்கள். இன்றைக்கு இந்தியாவிலேயே தொடர்ந்து 5 முறை உணவு தானிய உற்பத்தியில் Krishi Karman விருதைப் பெற்று வருவது தமிழக அரசின் சார்பாக நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2014–2015 ஆம் ஆண்டு சிறுதானிய உற்பத்திக்காக--40.79 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்ததற்காக மத்திய அரசினுடைய Krishi Karman விருதைப் பெற்றது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழி நடைபெறும் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–10

அதேபோன்று, தமிழகத்தில் வேளாண் விவசாயிகளுக்காக தக்கைப் பூண்டு, கொழுஞ்சி போன்ற இயற்கை உரங்களை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்துவதோடு, அரசு அலுவலர்கள்மூலம் அவர்களை அறிவுறுத்தும் பணி இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை மக்களின் இல்லங்களிலும் அவர்தம் உள்ளங்களிலும் நிரந்தரமாகக் குடிகொண்டுள்ள மக்கள் திலகம், பொன்மனச் செம்மல், கழகத்தை நிறுவி நமக்கெல்லாம் வெற்றிச் சின்னமாம் இரட்டை இலையைத் தந்திட்ட அண்ணா அவர்களின் இதயக்கனி, கழகத்தையும், கழகத் தொண்டர்களையும் காத்து இரட்சிக்க தன் அரசியல் வாரிசாக இதய தெய்வம் அம்மா அவர்களை நமக்கு அடையாளம் காட்டிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) காலம் நமக்கு அளித்த கருணைப் புதையல், பிரம்மன் படைத்த பொன்னோவியம், பகுத்தறிவில் தந்தை பெரியாராய், அறிவில் அறிஞர் அண்ணாவாய், ஆளுமையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகத் திகழ்ந்து இந்த மண்ணும் மக்களும்

மேன்மையுற நல்லாட்சி நடத்திய புரட்சித் தாய், நாம் நித்தம் வணங்கும் இதய தெய்வம் அம்மா அவர்கள் துயில்கொள்ளும் இடம் நோக்கி என் கண்ணீர் மலர்களைத் தூவி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வாழும்போதே வரலாறு படைத்த அம்மாவின் வாரிசு, இதய தெய்வம் அம்மா அவர்களின் கனிவு, தெளிவு, துணிவு எனும் குணநலன்களை சுவீகரித்து அம்மாவின் அரசை வழிநடத்திவரும் கொங்குச் சீமையின் தங்கமகன், அறிஞர் அண்ணாவின் இதயக்கனி, பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களை நேசிக்கும், இதய தெய்வம் அம்மாவை நித்தம் பூஜிக்கும் சேலத்து தங்க மாங்கனி, கருத்து கதாயுதத்தால் எதிரிகளைத் தாக்கித் தகர்த்திடும், அவர்கள் வீசும் சொல் அம்புகளின் முனை முறித்திடும் அளப்பரிய ஆற்றலைப் பெற்றுள்ள ஆளுமைமிக்க முதல்வர், வேளாண் மண்டலம் காக்க தனிச் சட்டம் கொண்டு வந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மீட்டெடுத்த வரலாற்றுச் சாதனையாளர், காவேரியின் காவலர், குடிமராமத்து நாயகன், நாளும் பொழுதும் இந்த மண்ணும் மக்களும் மேன்மையடைவதற்காகப் பாடுபட்டுவரும் மக்களின் முதல்வர், உலக நாடுகளுக்குச் சென்று ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்றுவந்த சாதனையாளர், ருவாகத் திறனில் தமிழகத்தை முதலிடத்திற்குக் கொண்டுவந்த தனிப்பெரும் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என் பணிவான வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவை முன்னவரும், துணை முதல்வருமான அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், விதிப்படியும், மரபுப்படியும் அனைவரையும் அரவணைத்து இந்த அவையை நடத்திச் செல்லும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் பேரவையின் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையில் இன்று மாண்புமிகு அமைச்சர்கள் அண்ணன் திரு. செல்லூர் ராஜு, அண்ணன் திரு. காமராஜ் ஆகியோர் தாக்கல்

செய்துள்ள கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கைகள்மீது உரையைத் தொடங்குமுன் என்னுடைய விருத்தாசலம் தொகுதியில் மாண்புமிகு அம்மாவின் அரசு நிறைவேற்றியுள்ள திட்டங்களைச் சுட்டிக்காட்டி நன்றி தெரிவிப்பதுடன் தொகுதியின் ஒருசில முக்கிய கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

விவசாயப் பெருமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று காவேரி டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து அதற்கென தனிச் சட்டமும் கொண்டுவந்த விவசாயிகளின் விடிவெள்ளி, பாராள வந்தபின்னும், பச்சைத் துண்டுகட்டி, விளைநிலம் வந்த உண்மையான விவசாயி மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு கடலூர் மாவட்ட மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சிதம்பரம் அண்ணாமலை மருத்துவக் கல்லூரியை கடலூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியாக அறிவித்ததற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

விருத்தாசலம் நகரில் பூதாமூரில் மணிமுத்தாற்றின் குறுக்கே 16 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தடுப்பணை கட்ட ஆணையிட்ட மக்களின் முதல்வர் மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்லூர் ஒன்றியம், சேப்பாக்கம்–கொளப்பாக்கம் இடையில் மணிமுத்தாற்றின் குறுக்கே 6 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் தடுப்பணை கட்ட உத்தரவிட்டதற்கும், தொகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

விருத்தாசலம் நகரிலிருந்து சென்னை செல்வதற்குரிய புறவழிச் சாலை அமைப்பதற்குரிய முதல்கட்ட திட்டப் பணிகளைத் தொடங்க ஆணையிட்டதற்கும், நல்லூர் ஒன்றியம், காட்டுமைலூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் தொடங்க உத்தரவு பிறப்பித்தமைக்கும் அம்மாவின் அரசுக்கும், அதைச் செம்மையாக வழிநடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பில் என் மனமார்ந்த நன்றியினைப் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

பிற்பகல் 1–15

நேற்றையதினம்கூட மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்கள், விருத்தாசலம் ஒன்றியம், க. இளமங்களம் கிராமத்தில் பெரிய ஓடையின் குறுக்கே ரூ.7 கோடி செலவில் தடுப்பணை கட்டவும், நல்லூர் ஒன்றியம், இளங்கியனூர் கிராமத்தில் மணிமுத்தாற்றில் தடுப்புச் சுவர் கட்டுவதற்கும் ரூ.7 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். பணிகளைத் துவக்க ஆணையிட்ட அண்ணன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இனி தொகுதியின் முக்கிய கோரிக்கைகளுக்கு வருகிறேன். மக்களின் வசதிக்காகவும், நிருவாக வசதிக்காகவும் ஏற்கெனவே 5 மாவட்டங்களைப் பிரித்து வழங்கிய ஆற்றலும் ஆளுமையும் மிக்க மாண்புமிகு முதலமைச்சர் மேன்மைக்குரிய அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 9 தொகுதிகள் அடங்கிய கடலூர் மாவட்டத்தைப் பிரித்து, விருத்தாசலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் ஒன்றை உருவாக்கித் தர வேண்டுகிறேன். அப்படி உருவாகும் அந்த மாவட்டத்தில் விருத்தாசலம் தொகுதி, திட்டக்குடி தொகுதி, காட்டுமன்னார்கோவில் தொகுதி, புவனகிரி தொகுதி, நெய்வேலி தொகுதி ஆகிய ஐந்து தொகுதிகளும் இடம்பெற வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் விருப்பமாகும்.

கண்டராதித்த சோழன் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் விருத்தாசலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த வரலாறும் உண்டு. அதன் பின்னர்தான், ராபர்ட் கிளைவ் கடலூரில் துறைமுகம் இருந்த காரணத்தினால், அதைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்தார் என்ற வரலாறும் உண்டு. விருத்தாசலத்திற்கு அருகில் அரியலூர் மாவட்டம் இரண்டு தொகுதிகளையும், பெரம்பலூர் மாவட்டம் இரண்டு தொகுதிகளையும் மட்டும் கொண்டு இயங்கி வருகின்றன. காசியைவிட வீசம் பெரிசு என்று அழைக்கப்படும் மணிமுத்தாறு இங்குதான் உள்ளது.

திருவாரூரில் பிறந்தால் முக்தி, காஞ்சிபுரத்தில் வாழ்ந்தால் முக்தி, திருவண்ணாமலையை நினைத்தால் முக்தி, தில்லையை தரிசித்தால் முக்தி, திருகாசியில் இறந்தால் முக்தி. ஆனால் பிறந்தால், வாழ்ந்தால், நினைத்தால், தரிசித்தால், இறந்தால் முக்தி என்று சொல்லப்படும் முக்தித் தலங்களை ஒருசேர கூட்டுவிக்கும் திருத்தலமாக திருமுதுகுன்றம் என்ற விருத்தாசலம் விளங்குகிறது. இப்படி அனைத்துத் தகுதிகளையும் கொண்ட விருத்தாசலத்தைத்

தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்க வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து வெளிவரும் நீர் விவசாயப் பயன்பாட்டிற்கும், சென்னைக்கும் அனுப்பியதுபோக உபரியாக உள்ள நீரை, கம்மாபுரம் ஒன்றியம், விருத்தாசலம் ஒன்றியம், நல்லூர் ஒன்றியம், மங்களூர் ஒன்றியத்தில் உள்ள கிராமங்கள் பயன்பெறும் வகையில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இந்த நிதி ஆண்டிலேயே தொடங்கிட வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நல்லூர் ஒன்றியத்தில் இலங்கியனூர், நல்லூர் இடையே மணிமுத்தாற்றின் குறுக்கே விவசாயிகளின் நலன் கருதி ரூ.18.50 இலட்சம் செலவில் தடுப்பணை கட்டித் தர மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலம் நகரில் ஜங்ஷன் ரோட்டில் பேருந்து நிலையத்திற்கு அருகில் நகராட்சிக்குச் சொந்தமான 15 சென்ட் நிலம் உள்ளது. இந்த இடத்தில் நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் புதிய அடுக்குமாடி வளாகம் கட்டித்தர வேண்டுமென மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடலூரில் உள்ள நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தைப் பிரித்து, விருத்தாசலம் தொகுதி, திட்டக்குடி தொகுதி, புவனகிரி தொகுதி மற்றும் காட்டுமன்னார்கோவில் தொகுதிகளை உள்ளடக்கி விருத்தாசலத்தைத் தலைமையிடமாகக் கொண்ட கோட்டப் பொறியாளர் அலுவலகம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கடந்த ஆண்டே இக்கோரிக்கையை வைத்துள்ளேன்.

எனது தொகுதியில் நல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட பா.கொத்தனார் காலனி, பூலாம்பாடி காலனி, கண்டப்பங்குறிச்சி காலனி, மேமாத்தூர் புதுகாலனி, நல்லூர் காலனி, கம்மாபுரம் ஒன்றியத்தில் வெளிகானங்குறிச்சி, விருத்தாசலம் ஒன்றியத்தில் முகாசாபரூர் காலனி, தெற்கு புத்தூர், கருவேப்பிலங்குறிச்சி, கே.கே.நகர், பரவளூர் காலனி, பட்டி காலனி, எம். அகரம் காலனி, கோ.பூவனர் காலனி, விளங்காட்டூர் பஜனை மடம் ஆகிய இடங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகளை புதிதாகத் தொடங்கிட வேண்டுகிறேன்.

விருத்தாசலம் அரசு பொது மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதுடன் நோயாளிகளின் வசதிக்காக புதிய கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலம் நகரில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் இடம் 9.08 சென்ட்டில் கட்டடமாகவும், காலி இடமாகவும் உள்ளது. அந்த இடத்தில் தொழில் துறையின்மூலம் Fire Brick என்று சொல்லக்கூடிய சுடு கல் சூளை தொழிற்சாலையை ரூ.5 கோடி செலவில் புதியதாகத் தொடங்க வேண்டும். அப்படி தொடங்குவதன்மூலம் வருடத்திற்கு 3000 டன் உற்பத்தி செய்து தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனத்தில் இயங்கி வரும் அரியலூர், ஆலங்குளத்தில் உள்ள சூளைகளுக்கு (kiln) அனுப்பிவைத்தாலே இந்தத் தொழிற்சாலை மிகுந்த இலாபத்தில் இயங்கும். இதன்மூலம், நேரடியாக 100 இளைஞர்களுக்கும், மறைமுகமாக 100 இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த ஆண்டே தொழிற்சாலையைத் தொடங்கிட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கோரிக்கை வைக்கிறேன்.

பிற்பகல் 1–20

வேப்பூர் தாலுகா, கீழக்குறிச்சி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தை புதிதாகத் தொடங்கிட வேண்டுகிறேன். தற்போது, நல்லூரில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுகிறேன். கடந்த ஆண்டே இக்கோரிக்கை குறித்து வலியுறுத்தியிருக்கிறேன்.

விருத்தாசலம் நகரத்தில் முந்திரி ஆராய்ச்சி நிலையம், 250 ஏக்கரில் அமைந்துள்ளது. இதில் தற்போது அனைத்து விதைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே, அந்த இடத்தில், அரசு புதியதாக வேளாண்மைப் பொறியியல் கல்லூரி தொடங்கிட வேண்டுகிறேன்.

விருத்தாசலம் நகரம், 16–வது வார்டு, பெரியார் நகரில் சுமார் 7,000 மக்கள்தொகை இருப்பதால், மக்கள் நல்வாழ்வு மையம் ஒன்று துவங்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். விருத்தாசலம் நகரிலுள்ள நகரக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தமான இடம் உள்ளது. அந்த இடத்தில், வங்கிக்குப் புதிய கட்டடம் ஒன்று கட்டித் தர வேண்டுகிறேன்.

நல்லூர் ஊராட்சி ஒன்றியமானது, 64 ஊராட்சிகளைக் கொண்ட பெரிய பகுதியாக உள்ளது. இதில் இரண்டு சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியுள்ளன. இதில் விருத்தாசலம் தொகுதியில் உள்ள 29 ஊராட்சிகளை நல்லூர் ஊராட்சி ஒன்றியமாகவே தொடர்ந்து செயல்படவும், திட்டக்குடி தொகுதிக்குட்பட்ட 35 ஊராட்சிகளைப் புதியதாக பெண்ணாடம் ஊராட்சி ஒன்றியம் எனத் தொடங்கி பெண்ணாடத்தில் அமைக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

நல்லூர் ஒன்றியம், நல்லூரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு வில்வனேஸ்வரர் திருக்கோயிலின் கும்பாபிஷேகத் திருப்பணியை இந்த ஆண்டே அறிவித்து, நடத்திட வேண்டுகிறேன்.

விருத்தாசலம் ஒன்றிய அலுவலகம், 33 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழமையான நிலையில் உள்ள அலுவலகமாகும். விருத்தாசலம் ஒன்றிய அலுவலகக் கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டடம் ஒன்றைக் கட்டித் தர வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் விருத்தாசலம் நகரில் மட்டும்தான், அரசு பீங்கான் தொழிற்சாலைக் கல்லூரி உள்ளது. இந்தக் கல்லூரியில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து படிக்கின்றனர். இதில் இயங்கிவந்த மாணவர் விடுதி, சிதிலமடைந்ததால் இடிக்கப்பட்டு, சுமார் 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. எனவே, மாணவர் விடுதிக் கட்டடத்தை உடனடியாக கட்டித் தர வேண்டுகிறேன்.

விருத்தாசலம் நகரில் 230KV துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுகிறேன். விருத்தாசலம் நகரில் பெருகிவரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டு, நகரக் காவல் நிலையத்தைத் தாலுகா காவல் நிலையமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்றும், மிக முக்கிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள வேப்பூரில் நான்குவழிச் சாலைப் பகுதியில், போக்குவரத்துக் காவல் நிலையம் ஒன்றை, இந்த நிதி ஆண்டிலேயே அமைத்துத் தர வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களைப் பணிந்து வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலம் நகரில் சேலம் பைபாஸ் சாலையில் உள்ள முந்திரி ஆராய்ச்சி நிலையம் அருகே, புறநகர்ப் பேருந்து நிலையம் ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர்

அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலம் நகரில் அமைந்துள்ள திரு. கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் மாணவர்கள் 2,500 பேரும், மாணவிகள் 3,700 பேரும் பயின்று வருகின்றனர். இருபாலர் படிக்கும் இந்தக் கல்லூரியை தனியாகப் பிரித்து, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பெயரில் புதிய பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்குப் போதுமான அளவிற்கு அந்தக் கல்லூரி வளாகப் பகுதியிலேயே சுமார் 50 ஏக்கர் நிலம் உள்ளது, கட்டடம் மட்டும்தான் கட்டப்பட வேண்டும். எனவே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், இந்த ஆண்டே மகளிர் கல்லூரியைத் தொடங்குவதற்கு அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட அம்மேரி ஊராட்சியில். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 13 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 2 நிமிடங்களில் தொகுதிக் கோரிக்கைகளைப் படித்து முடித்துவிடுங்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நேற்று 20 நிமிடங்கள் ஒதுக்குமாறு கேட்டிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இல்லை, 15 நிமிடங்கள்தான்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நேற்று 20 நிமிடங்கள் ஒதுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கேட்டிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இல்லை, 13 நிமிடங்கள் முடிந்துவிட்டன. 14–வது நிமிடம் போய்க் கொண்டிருக்கிறது.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2 நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 2 நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 2 நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே மகளிர் கல்லூரியைத் தொடங்குவதற்கு அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–25

என்னுடைய விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட அம்மேரி ஊராட்சியில் 1,470 மெகாவாட் திறன்கொண்ட நெய்வேலி நிறுவனத்தில் TS II மின் உற்பத்தி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. அதேபோல் 1,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட விரிவாக்கப் பணிகளும் என் தொகுதிக்குட்பட்ட கொள்ளிருப்பு ஊராட்சியில் இன்னும் ஒரு சில நாட்களில் தொடங்கவுள்ளது. இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் மிகவும் பாதிப்பிற்கு ஆளாகின்றன. ஆனால், N.L.C. நிறுவனம் CSR நிதியை பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு முழுமையாகச் செலவிடாமல், இரயில்வே நிலையத்தில் கழிவறை கட்டுவது, வட மாநிலங்களுக்குச் செலவிடுவது போன்ற பணிகளைச் செய்து வருகிறது. இதைத் தடுத்து நிறுத்தி, CSR முழு தொகையையும் N.L.C.–யால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு வழங்கிட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் N.L.C. Chairman–ஐ வலியுறுத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் என் தொகுதி மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேட்டதெல்லாம் கொடுக்கும் கர்ணனைப் போல, எட்டாவது வள்ளல் எனப் போற்றப்படும் புரட்சித் தலைவர்

எம்.ஜி.ஆர். வழியில், இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசியல் பாதையில் பயணிக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அருமை அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் என்னுடைய விருத்தாசலம் தொகுதிக்கு மட்டும் மூன்று தடுப்பணைகள் கட்ட உத்தரவிட்டுள்ளார். எங்களின் கடலூர் மாவட்டத்திற்கு மட்டுமே 11 தடுப்பணைகளையும், மாநிலம் முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட தடுப்பணைகளையும் கட்ட உத்தரவிட்டு, நீர் நிலைகளைக் காப்பாற்ற, விவசாயத்தைப் பெருக்க நடவடிக்கை எடுத்துவரும் நம் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை காவேரியின் குறுக்கே கல்லணை கட்டிய கரிகால் சோழனின் வாரிசாகவே விவசாயப் பெருங்குடி மக்கள் கருதி போற்றிப் புகழ்வார்கள் என்பது உறுதி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ‘கூட்டுறவே நாட்டுயர்வு, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’ என்று நாம் படித்திருக்கிறோம். நான்கு எருதுகள் ஒன்றாக மேய்ந்து கொண்டிருந்தபோது வந்த சிங்கத்தை நான்கு எருதுகளும் சேர்ந்து விரட்டியடித்த கதையையும், அந்த எருதுகள் தனித்தனியாகப் பிரிந்திருந்தபோது, மீண்டும் அந்த சிங்கம் வந்து ஒவ்வொரு எருதாக அடித்துத் தின்றதையும் நாம் கதைகளில் படித்திருக்கிறோம். அதேபோல, ஒற்றுமையை வலியுறுத்துவதற்காக, ஒரு வயது முதிர்ந்த தந்தை, தன் மகன்களிடம் 20, 30 குத்தூசிகள் அடங்கிய கட்டைக் கொடுத்து, அதை உடைக்கச் சொன்னபோது, அவர்களால் அதை உடைக்க முடியவில்லை. ஆனால், தனித்தனியாக ஒவ்வொரு குத்தூசிகளாகக் கொடுத்தபோது அதை உடைத்துவிட்டார்கள் என்கிற பழங்கதையையும் நாம் அறிந்திருக்கிறோம். அத்தகைய மிக முக்கியத்துவம் வாய்ந்த கூட்டுறவுத் துறையின்மீதும், உணவு, உடை, இருப்பிடம் என்ற மனிதனின் அத்தியாவசியத் தேவையின் முதலிடத்தில் உள்ள உணவுத் துறையின்மீதும் ஒருசில கருத்துகளைத் தெரிவிக்க விழைகிறேன்.

ஆற்றல்மிகு அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்கள் இந்த மாநிலத்தின் முதல்வர் பொறுப்பையேற்ற கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், கூட்டுறவுத் துறையின்மூலம் 34 இலட்சத்து 7 ஆயிரத்து 954 விவசாயிகளுக்கு 22 ஆயிரத்து 31 கோடி ரூபாய் பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, பயிர்க் கடனை உரிய காலத்தில் செலுத்திய விவசாயிகளுக்கு 303 கோடியே 71 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் தலைமையிலான நம் அம்மாவின் அரசு

வழங்கியிருக்கிறது. இந்த ஆண்டும் கடன் தவணைகளை முன்கூட்டியே செலுத்துபவர்களுக்கு கடன் அளவில் வட்டியை தள்ளுபடி செய்வதற்காக இந்த பட்ஜெட்டில் 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, வரவேற்கத்தக்கது.

வரும் நிதியாண்டில் பயிர்க் கடனாக 11 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக விவசாயிகளுக்கு வழங்க நம் அம்மாவின் அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது; விவசாயப் பெருமக்களிடையே இது நல்ல வரவேற்பைப் பெறும். கடந்த ஆண்டு பயிர்க் கடன்களை வழங்கிட, 10 ஆயிரம் கோடி ரூபாய் இலக்கு நிர்ணயித்ததில் இதுவரை 10 இலட்சத்து 60 ஆயிரம் விவசாயிகளுக்கு 7 ஆயிரத்து 595 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றி, எந்தவிதத் தட்டுப்பாடுமின்றி வழங்கப்பட்டு வருவது பாராட்டத்தக்கது.

மிகச் சிறிய குக்கிராமங்கள், சாலை வசதியற்ற மலைப் பிரதேச பகுதிகளுக்குக்கூட நடமாடும் அங்காடிகள்மூலம் ரேசன் பொருட்கள் வழங்கப்படுவது, ஏழையெளிய மக்களின்மீது அம்மாவின் அரசுக்கு உள்ள அக்கறையை எடுத்துக்காட்டுகிறது. அதுமட்டுமல்ல, அத்தியாவசியப் பொருட்களின் விலை எப்போதெல்லாம் உயருகிறதோ, அப்போதெல்லாம் அரசே அந்தப் பொருட்களைக் கொள்முதல் செய்து, வெளி மார்க்கெட்டைவிட மிகக் குறைந்த விலையில் கூட்டுறவுத் துறைமூலம் வழங்கி வரவேற்பைப் பெற்று வருகிறது. குறிப்பாக, பண்ணை பசுமைக் காய்கறிக் கடைகள்மூலம் மிகக் குறைந்த விலையில் மக்களுக்கு காய்கறிகளை விநியோகித்து வருவதை பெண்கள் பெருமளவில் வரவேற்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்பது பழமொழி. அந்த பத்து என்ன தெரியுமா? மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளான்மை, தேனின் கசி வந்த செவ்வியர்மேல் காமுறுதல். இந்தப் பத்தும்தான் பசி வந்தால் பறந்துபோகுமாம். இந்தத் தமிழ் மண்ணிலே எவரும் பசியோடு இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், விலையில்லா அரிசியை ஒரு குடும்பத்திற்கு 25 கிலோ, வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு 35 கிலோ என்று வழங்கி, இந்த மாநிலத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார். பசியின் கொடுமையை உணர்ந்ததால்தான் மகத்தான திட்டமான சத்துணவுத் திட்டத்தை நம் பொன்மனச்

செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்து செயல்படுத்தினார்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உரையை ஆரம்பித்து 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) நீங்கள் கேட்ட 20 நிமிடங்கள் முடிந்துவிட்டன. (குறுக்கீடு) நீங்கள் கேட்ட 20 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களில் என் உரையை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) இன்னும் நான்கு பக்கங்கள்தான் இருக்கின்றன. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: அத்தியாவசியப் பொருட்கள் மக்கள் அனைவருக்கும் ரேசன் கடைகள்மூலம் தங்குதடையின்றி கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் உணவு மானியத்திற்காக மட்டுமே நம் அம்மாவின் அரசு 6,500 கோடி ரூபாயை வாரி வழங்கியுள்ளது.

அதுமட்டுமல்ல, பொது விநியோகத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திட, கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியமாக 400 கோடி ரூபாயை அருமை அண்ணன், மக்கள் போற்றும் மகத்தான மாண்புமிகு முதல்வர், மேன்மைக்குரிய எடப்பாடியார் அவர்கள் ஒதுக்கியுள்ளார்.

நம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மாவின் அரசு இந்தியாவிற்கே முன்மாதிரியாக பொது விநியோகத் திட்டத்தை தமிழ்நாட்டில் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருவதை நாம் அனைவரும் அறிவோம். நவீன, விஞ்ஞான வளர்ச்சியை இந்தத் துறையும் பயன்படுத்தும் வகையில் 38 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில், பொது விநியோகத் துறை மேம்படுத்தப்பட்டு வருவது பாராட்டத்தக்கது.

Smart card வைத்திருப்பவர்கள் நம் தமிழகத்தில் உள்ள எந்தவொரு நியாய விலைக் கடையிலும் தங்களுக்குரிய பொருட்களை வாங்கிக்கொள்ளும் திட்டம் செயல்படுத்தப்பட இருப்பது மக்களிடம்

பெரிதும் வரவேற்பைப் பெறும். தமிழ்நாட்டில் 585 நியாய விலைக் கடைகள், அம்மா மினி கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளாக மேம்படுத்தப்பட்டு, 300–க்கும் மேற்பட்ட பொருட்கள். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) 22 நிமிடங்கள் ஆகிவிட்டன, இதற்குமேல் எவ்வளவு நேரம் வேண்டும்? (குறுக்கீடு)

திரு. V.T. கலைச்செல்வன்: அண்ணா, இரண்டு நிமிடங்களில் எனது உரையை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) இன்னும் 3 பக்கங்கள்தான் இருக்கின்றன. உரையை முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மற்றொரு வாய்ப்பில் அதுபற்றித் தெரிவிக்கலாம்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த திட்டத்தைப் பற்றித்தான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடு) தொகுதிக் கோரிக்கைகளைச் சொல்லி முடித்துவிட்டேன். (குறுக்கீடு) இரண்டு நிமிடங்கள் கொடுங்கள், என் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடு) மற்றொரு வாய்ப்பில் அதுகுறித்துப் பேசலாம். (குறுக்கீடு) இன்னும் 4 உறுப்பினர்கள் பேசி, இரண்டு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) வாய்ப்பில்லை. (குறுக்கீடு)

திரு. V.T. கலைச்செல்வன்: 300–க்கும் மேற்பட்ட பொருட்கள் பொது மக்களின் நலனுக்காக 5 சதவிகித தள்ளுபடியுடன் விற்பனை செய்யப்படுவதும் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

திரு. V.T. கலைச்செல்வன்: ஏன் இப்படி செய்கிறீர்கள்? (குறுக்கீடு) படித்து எனக்கு வியர்த்துப் போய்விட்டது பாருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. V.T. கலைச்செல்வன்: தமிழர்கள் ஆண்டுதோறும் கொண்டாடி மகிழும் பொங்கல் பண்டிகையை இந்த ஆண்டும் அவர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்காக. . . (குறுக்கீடு) ஒவ்வொரு முறையும், அவர்கள் ஒரு மணி நேரம் எடுத்துக்கொள்கிறார்கள். நீங்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கொடுக்கிறீர்கள். (குறுக்கீடு) அவர்கள் எல்லாம் கேள்வி கேட்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: அவர்கள் எல்லாம் கேள்வி கேட்கக் கூடாது. (குறுக்கீடு) ஒவ்வொரு நாளும், ஒரு மணி நேரம் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குக் கொடுத்துவிட்டு, அண்ணா தி.மு.க.–விற்கு 20 நிமிடங்கள் என்றால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நன்றி சொல்லி உரையை முடிக்கிறீர்களா அல்லது அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கட்டுமா?

திரு. V.T. கலைச்செல்வன்: அம்மாவினுடைய திட்டத்தைப் பற்றி சபையில் சொல்ல வேண்டுமென்றால் 4 நாட்கள் வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் திட்டத்தைச் சொல்ல வேண்டுமென்றால் 2 நாட்கள் வேண்டும். அவ்வளவு சாதனைகளை இந்த 4 வருடங்களில் செய்திருக்கிறோம்.

தமிழர்கள் ஆண்டுதோறும் கொண்டாடி மகிழும் பொங்கல் பண்டிகையை இந்த ஆண்டும் மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்காக நம் மாண்புமிகு முதலமைச்சர், அன்பும், அறிவும், ஆற்றலும், கருணையும் மிக்க அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கியதுடன், ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் தலா ஆயிரம் ரூபாய் பொங்கல் சிறப்புப் பரிசை வழங்கி, தமிழக மக்களின் மனதில் மகிழ்ச்சி பொங்கச் செய்தார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'தமிழகமே எனது குடும்பம், தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், தமிழக மக்களின் நலனே என் நலன்' என்று வாழ்ந்திட்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துகின்ற எங்கள் மக்கள் இருக்கிறார்கள், மக்களின் பக்கம் நாங்கள் இருக்கிறோம்' என்று குறிப்பிட்டிருந்தார்கள். அந்த வகையில், மக்களின் நலனுக்காக மகத்தான வரலாற்றுச் சாதனைகளைப படைத்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான அம்மாவின் அரசுக்கு மக்களின் ஆதரவு பெருகி வருகிறது.

நம் மாண்புமிகு முதலமைச்சரை மிகச் சாதாரணமாக எடை போட்டவர்கள், இவர் இப்படிப்பட்ட அரசியல் சாணக்கியராக இருக்கிறாரே என்று நினைத்து, அதிசயித்து, ஆச்சரியப்பட்டு நிற்கிறார்கள். இவரை எப்படி வீழ்த்துவது என்று சதி ஆலோசனைகளிலே ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களின் சதி வலைகளைச் சுக்குநூறாகக் கிழித்தெறிந்து, அரசியலில் அவர்களுக்கு நிரந்தரத் தோல்வியைத் தரும் ஆற்றல் பெற்றவர்தான் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களிடம் அரசியல் பாடம் பயின்று, இதய தெய்வம் அம்மாவிடம் பயிற்சி பெற்று, இன்று தமிழக அரசியல் களத்தில் தலைசிறந்த விற்பன்னராக, ஆட்சியை அருமையாக நடத்திச் செல்லும் சிறந்த, ஆளுமை மிக்க நிருவாகியாக உள்ள எங்களின் சேலத்துச் சீலர், எடப்பாடி தந்த ஏந்தல், அருமை அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களை இனி எந்தச் சக்தியாலும் வீழ்த்த முடியாது. அடுத்தடுத்து அமைகின்ற கழக ஆட்சியும், அருமை அண்ணன் எடப்பாடியார் தலைமையில்தான் தொடரும். இது காலம் எழுதி வைத்துள்ள தீர்ப்பு.

எதிர்க்கட்சிகள் என்ன வியூகங்கள் வகுத்தாலும், எந்த மாநிலத்திலிருந்து எத்தனை பேரை துணைக்கு அழைத்து வந்து தேர்தலைச் சந்தித்தாலும், அவை அத்தனையையும் தட்டித் தகர்த்து, தூக்கி எறிந்து, வெற்றிப் பாதையில் வீர நடைபோடும் கழகப் பட்டாளம் அருமை அண்ணன் எடப்பாடியார் பின்னால் அணிவகுத்து நிற்கிறது. கழகம் எனும் ஆல மரத்தை மரங்கொத்திப் பறவைகளால் சேதப்படுத்த முடியாது.

பிற்பகல் 1–35

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 7,500 சுமை தூக்கும் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

இமயம்போல இறுமாந்து நிற்கும் கழகத்தையும், கழக ஆட்சியையும் எவராலும் தொட்டுப் பார்க்க முடியாது. இனி எங்களின் பயணம் நிரந்தர வெற்றிப் பயணம்தான் எனக்கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கருணைக் கடலாய்; கற்பக விருட்சமாய்; அள்ளித்தந்த அமுத சுரபியாய்; அட்சயப் பாத்திரமாய்; திராவிடத்தின் திருவிளக்காய்; தமிழர்களின் ஒளி விளக்காய்; கழகத்தின் காவல் தெய்வமாய்; காவேரியை மீட்டெடுத்த காவியத் தலைவியாய்; தரணி போற்றும் தங்கத் தாரகையாய்; தந்தை பெரியார் வழியில், சமூகநீதி காத்த வீராங்கனையாய்; பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் தமிழகத்தின் உரிமைகளை மீட்டெடுத்த போராளியாய்; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் வாரி வழங்கிய கொடை வள்ளலாய்; தமிழினம் காத்து நின்ற தமிழர் குல தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரி மேலாண்மை வாரியம் பெற்றுத்தந்த காவேரி மீட்பாளர்; கடைமடை டெல்டாவைப் பாதுகாத்த காவேரி காப்பாளர்; பிளாஸ்டிக்கை அறவே ஒழித்த சுற்றுச்சூழல் நாயகர்; தரணியில் தமிழகத்திற்கு முதலிடம் பெற்றுத்தந்த சாதனையாளர்; சோதனைகளை சாதனைகளாக மாற்றிக் காட்டிய சரித்திர நாயகர்; எதிரிகளுக்கும் அரசியல் பாடம் கற்றுத்தந்த சாணக்கியர்; சாமானியர்களின் முதல்வர்; ஏழைகளின் தோழர்; புன்னகையால் பகை வென்றவர்; புவி ஆளும் திறத்தால் வியக்க வைத்தவர்; மண் ஆளும் வித்தைகளைக் கற்றுத் தெளிந்தவர்; குடிமராமத்துத் திட்டம் தந்து, மண்வளம் காத்திட்ட மக்களின் முதல்வர்; (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களால்

எடப்பாடியார் என அடைமொழியோடு அழைக்கப்பட்ட பெருமைக்குரியவர்; கொங்கு நாட்டுத் தங்கம், சேலத்துச் சிங்கம் கழக இணை ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் தசாவதாரம் எடுத்தவர்; தெய்வீக திருமகன் வழிவந்த தேனியின் மைந்தன்; ஜல்லிக்கட்டை மீட்டெடுத்த புரட்சியாளர்; வர்தா புயலை விரட்டியடித்த வரலாற்று நாயகர்; அமைதியின் உருவாய்; ஆற்றலின் வடிவாய்; கழக ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கஜா புயலின்போது, இரவு பகல் பாராமல், ஓய்வின்றி பணியாற்றி, திறம்படச் செயலாற்றி, நாகப்பட்டினம் மாவட்ட மக்களின் நன்மதிப்பைப் பெற்ற, எங்கள் மாவட்ட கழகச் செயலாளர், எங்கள் அன்பு அண்ணன் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னையின் மைந்தன்; மனுநீதிச் சோழன்; நானிலம் போற்றும் நன்னிலத்து நாயகன்; மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், பசிப்பிணி போக்கும் பணியினைத் திறம்பட செய்துவரும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. இரா. காமராஜ் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பிரித்து மயிலாடுதுறையை தலைநகரமாகக் கொண்டு புதிய மாவட்டத்தைத் தோற்றுவிக்க அரசின் பரிசீலனையில் உள்ளது என அறிவித்து, ஒரு மாவட்டத்தின் தலைநகருக்குச் செல்ல ஒரு மாநிலத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும் என்ற நிலையினை மாற்றி, எங்கள் மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்து, எங்கள் மக்களின் துயர்துடைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும்,

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் மீண்டும் ஒருமுறை எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவேரி டெல்டா பாசனப் பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என அறிவித்து, அதனைச் சட்டமாக்கி, அரசிதழில் வெளியிட்டு, நடைமுறைப்படுத்தி, இனிவரும் காலங்களில் வேளாண்மை வளர்ச்சிக்கான திட்டங்களைத்தவிர, வேறு எந்தத் திட்டத்தையும் எங்கள் டெல்டா மண்ணில் தொடங்க முடியாது என்ற வரலாற்றுச் சாதனையை, பொன்னெழுத்துகளால் பதிக்கப்பட வேண்டிய சாதனையைப் படைத்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எங்கள் டெல்டா பாசன விவசாயிகளின் சார்பிலும், எனது சார்பிலும், நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–40

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் பொது விநியோகத் திட்டத்திற்கு ரூ.330 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கணினிமயமாக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ரூ.100 கோடி நிதி ஒதுக்கி, விலை கட்டுப்பாட்டு நிதியத்தை ஒதுக்கி, எங்கெல்லாம் எப்பொழுதெல்லாம் பொருட்களின் விலை ஏறுகிறதோ, அப்போதெல்லாம் பொருட்களை உற்பத்தி செய்கிற இடத்திலேயே அவற்றை கொள்முதல் செய்து கூட்டுறவு கடைகளில் விற்பதற்கு ஆணையிட்டு விலைவாசி உயர்வைக் கட்டுக்குள் வைத்திருந்தவர் காவியத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

ஏழையெளிய மக்கள் வீடு கட்ட இயலாமல் தவித்து வந்த நிலையைக் கருத்தில்கொண்டு அம்மா சிமென்ட்டினை குறைந்த விலையில் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி, கட்டடத் தொழிலாளர்களின் நலன் காத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் எல்லாம் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதற்காக அனைத்தையும் கணினிமயமாக்க வேண்டும் என்பதற்காக, 2005 ஆம் ஆண்டு சட்டம் போட்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இன்று அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில், அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் கணினிமயமாக்கப்பட்டு சிறப்பான முறையிலே செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியது. கூட்டுறவு வங்கிகளில் யார் தவறு செய்தாலும் மீண்டும் அவர்கள் கூட்டுறவுத் தேர்தலில் போட்டியிடாதவாறு சட்டத்தை உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் சாதாரண விவசாயிகள் பயனடைய முடியாமல் ஆளுங்கட்சி அரசியல்வாதிகள், மிட்டா மிராசுகள் மட்டுமே பயன்படுத்தி வந்த கூட்டுறவு வங்கிகளில் நடைபெற்ற முறைகேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, நடவடிக்கை எடுத்து கூட்டுறவு வங்கிகள் சிறப்பாக, முறையாகச் செயல்படுவதை உறுதி செய்த அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு.

கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன் தொகையில் ரூ.3,072 கோடியை மட்டுமே தள்ளுபடி செய்தார்கள். இதில், அன்றைக்கு கூட்டுறவு வங்கிகளில் பொறுப்புகளில் இருந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகம் பயனடைந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் தி.மு.க. ஆட்சியைவிட கூடுதலாக, அதாவது ரூ.5,300 கோடியைத் தள்ளுபடி செய்து விவசாயிகளின் நலன் காத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தி.மு.க. அங்கம் வகித்த அப்போதைய காங்கிரஸ் மத்திய அரசு, சிறப்புப் பொது விநியோகத் திட்டத்திற்கு வந்த மானியத்தை 30–6–2012 அன்று முதல் நிறுத்தி, தமிழகத்தை வஞ்சித்தபோதிலும், தொடர்ந்து பொது விநியோகத் திட்டத்தை தமிழகத்தில் அமல்படுத்துகின்ற அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு.

தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு ரூ.1,000/– மட்டும்தான் வழங்கப்பட்டு வந்தது. இன்றைக்கு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.1,905/– வழங்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது அம்மாவின் ஆட்சி, விவசாயிகளின் ஆட்சி. முதல்வர் அவர்களும் விவசாயி. நானும் விவசாயி. நெல்லுக்கான விலையை இன்னும் கொஞ்சம் கூடுதலாகக் கொடுத்தால் தமிழகத்திலுள்ள

விவசாயிகள் அனைவரும் சிறப்பாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தக் கருத்தினை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அப்போதைய தி.மு.க. அங்கம் வகித்த காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உர மானியத்தை இரத்துச் செய்தாலும், தொடர்ந்து மானிய விலையில் உரம் வழங்கி, விவசாயிகளின் நலன் காத்த அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. தமிழகத்தின் முழு மண்ணெண்ணெய் தேவை 65,140 கிலோ லிட்டர். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நெல்லுக்கு விலையினை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்தார்கள். அதற்குமுன் இருந்த விலையையும் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். 1,905 ரூபாய் குவிண்டாலுக்கு வழங்கப்படுகிறது என்ற கருத்தினைச் சொல்லி, விலையினை இன்னும் கூடுதலாகத் தர வேண்டும் என்ற கோரிக்கையினையும் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நெல்லுக்கு ஊக்கத் தொகையாக சன்ன இரகத்திற்கு ரூ.70/–ம், சாதா இரகத்திற்கு ரூ.50/–ம் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கும் அம்மா அவர்களின் வழியில் நமது தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், அதனைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் ரூ.1,905/– ஆக இன்றைக்கு நெல் விலை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலங்களில் 2011–ல் ஆட்சிக்கு வந்தபோது ரூ.1,100/– ஆக இருந்த நெல் விலை இன்றைக்கு ரூ.1,905/– ஆக இருக்கின்றது என்கின்ற தகவலையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டெல்டா பகுதிகளில் மிகப் பெரிய அளவில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளின் நெல்லையெல்லாம் நாம் இன்றைக்குக் கொள்முதல் செய்திருக்கிறோம். தமிழகத்தில்

இதுவரை இல்லாத அளவில் மொத்தம் 2,029 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை 1,800 தான் அதிகபட்சமாக திறந்திருக்கின்றோம். நமது காலம், இதற்கு முன்பு இருந்த காலம் என எல்லா காலங்களிலும் 1,800 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்தான் தமிழ்நாடு முழுவதும் திறக்கப்பட்டிருந்தன. ஆனால், 2,029 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்த அரசு நம்முடைய அம்மா அவர்களின் அரசு, நம்முடைய எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதுநாள் வரை 18 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லை நாம் கொள்முதல் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிட்டத்தட்ட நான்கு இலட்சம் விவசாயிகள் இதனால் பயன்பெற்றிருக்கிறார்கள். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இது விவசாயிகளின் நலன் காக்கின்ற அரசு, அதனைத் தொடர்ந்து செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

பிற்பகல் 1–45

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அம்மா அவர்களின் அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் முழு மண்ணெண்ணெய் தேவை 65,140 கிலோ லிட்டர்; தமிழகத்திற்கு வழங்கப்பட்டு வந்த மண்ணெண்ணெய் ஒதுக்கீடு அளவை 10 முறை குறைத்து தமிழக மக்களுக்கு துரோகம் இழைத்த அரசு தி.மு.க. அங்கம் வகித்த அப்போதைய காங்கிரஸ் அரசு. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைதி, அமைதி. அவர் காங்கிரஸ் அரசைப் பற்றித்தான் சொல்கிறார்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: தி.மு.க. அங்கம் வகித்த மத்திய காங்கிரஸ் ஆட்சியில்தான் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தை நிறுத்தினார்கள். (குறுக்கீடுகள்) நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையைத் தர மறுத்தார்கள். காவேரி பிரச்சினை, முல்லைப் பெரியாறு, கச்சத் தீவு, ஈழத் தமிழர் படுகொலை, Sterlite ஆலைக்கு அனுமதி, மீத்தேன் திட்டத்திற்கு அனுமதி என. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரை முடியட்டும். (குறுக்கீடுகள்) உரை முடிந்ததும் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: தமிழ்நாட்டிற்கும் தமிழக மக்களுக்கும் துரோகம் இழைத்தவர்கள் தி.மு.க.வும், காங்கிரசும்தான். கூட்டுறவுத் துறையை சொந்தத் துறையாக்கி, கூட்டுறவு வங்கிகளை திவாலாகும் நிலைக்கு ஆளாக்கி முதிர்வடைந்த வைப்புகளைக்கூட திருப்பிக் கொடுப்பதற்கு இயலாத அலங்கோலத்தை உருவாக்கி, கூட்டுறவு வங்கிகளை திவாலாக்கிய ஆட்சி கடந்த minority தி.மு.க. ஆட்சி. (குறுக்கீடுகள்) கூட்டுறவுத் துறையைப் புனரமைத்து. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள், நீங்கள் மட்டும் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள்கூட 4 பேர் எழுந்தால் நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) அமைதி, அமைதி.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது நெல்லுக்குக் கூடுதலாக விலையை இப்பொழுது கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. அந்த விலையை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். ஏனென்றால் நீங்கள் சொல்கின்ற, காங்கிரஸ் காலத்தில் ஒரு D.A.P. மூட்டையின் விலை 600 ரூபாய். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று எண்ணுகின்றேன், இன்றைக்கு ஒரு D.A.P. மூட்டையின் விலை இரண்டாயிரத்து சொச்சம் ரூபாய்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: போதும், உரையை முடியுங்கள்.

திரு. கரி. இராமசாமி: உரையை முடித்துவிட்டேன், அவ்வளவுதான். இதுதான் காங்கிரஸ் ஆட்சியும், தி.மு.க. ஆட்சியும் இருக்கும்போது இருந்த நிலை. இன்றைக்கு விலை கூடுகிறது. அதற்குத் தகுந்தபடி நெல்லின் விலையை உயர்த்த வேண்டுமே தவிர, நெல்லின் விலையை உயர்த்தியிருக்கக்கூடிய சதவிகிதம் மிகக் குறைவு. அதை உயர்த்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் தலைவர் அண்ணன் அவர்கள் காங்கிரஸ் காலத்தில் இருந்ததற்கும், இன்றைக்கும் உரத்தின் விலை உயர்ந்திருக்கிறது, அதனால் நெல்லின் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதில் எங்களுக்கு இரண்டாவது கருத்து கிடையாது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அப்பொழுதே 2,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று. . . (குறுக்கீடு) கொடுக்க வேண்டியது, மத்திய அரசுதான். அதாவது நெல்லின் குறைந்தபட்ச ஆதார விலையை யார் நிர்ணயிக்க வேண்டுமென்றால், மத்திய அரசுதான் நிர்ணயிக்க வேண்டும். நாங்கள் எங்களுடைய கடமையைச் சரியாகச் செய்து கொண்டிருக்கின்றோம். 70 ரூபாய் சன்ன இரகத்திற்கும், 50 ரூபாய் சாதாரண இரகத்திற்கும் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். இந்த ஆண்டு மட்டும் 118 கோடி ரூபாயை தமிழக அரசே விவசாயிகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசுதான் வழங்க வேண்டும். மத்திய அரசிடம் அம்மாவும் கேட்டார்கள். இப்பொழுது நாங்களும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதாவது நெல்லின் விலை உயரும்போது அரிசியின் விலையும் உயர்ந்துவிடும். இதைப் பொறுத்தவரைக்கும், இந்த இரண்டையும் நாம் பார்க்க வேண்டும். இந்தியா முழுவதும் நெல்லின் விலை பெரிய உயர்ந்த நிலைக்குச் செல்கின்றபோது அரிசியின் விலை, ஒரு பெரிய விலையை எட்டிவிடுமென்பதால்தான், இதை அப்படியே balanced ஆக வைத்துக் கொண்டிருப்பார்கள். எனவே, இப்பொழுது இருக்கின்ற இந்த விலைக்கு ஆதாரமாக கூடுதலாக தமிழக அரசு இன்றைக்கு ஊக்கத் தொகை வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதைத்தான் நான் சொல்ல வந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடுகள்) உங்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. காங்கிரஸைத்தான் சொன்னார்கள். காங்கிரஸைப் பற்றித்தான் சொன்னார்கள். அவர்கள் பேசி முடித்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) உங்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அவர் பேசி முடித்ததும், வாய்ப்புத் தருகிறேன். உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 என்கின்ற மசோதாவை தி.மு.க. அங்கம் வகித்த காங்கிரஸ் அரசு கொண்டு வந்தபோது அதனைக் கடுமையாக எதிர்த்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், 26–2–2013 அன்று பாராளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட்டபோது எவ்விதத் திருத்தமும் இல்லாமல். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள். (குறுக்கீடுகள்) அவர், உங்களை ஒன்றும் சொல்லவில்லை. உங்களைப் பற்றி எதையுமே அவர் குறிப்பிடாதபோது நீங்கள் ஏன் எழுந்து பதில் சொல்லப் போகிறீர்கள்?

திரு. வி. ராதாகிருஷ்ணன்: சட்டமாவதற்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் தி.மு.க.–வின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதையும், மசோதாவையும். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தி.மு.க. இடம்பெற்றிருந்த காங்கிரஸ் அரசு என்றுதான் சொன்னார்.

***திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆட்சி சாதனையைச் சொல்லவில்லை. எங்களுடைய ஆட்சியின்மீது தொடர்ந்து குற்றச்சாட்டுகளாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்; ஆதாரம் இல்லாமல் அப்படிச் சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள்மேல் எந்தக் குற்றச்சாட்டும் சொல்லவில்லை. நீங்கள் அப்பொழுது கவனிக்கவில்லை.

திரு. கு. பிச்சாண்டி: இரண்டாவதாக, நான் சொல்கிறேன். நெல்லுக்கு அதிக விலை கொடுத்தது, இலவச மின்சாரம் கொடுத்தது எங்கள் ஆட்சியில். ஏற்றிய கரும்பு விலையைக் குறைத்தது உங்கள் ஆட்சியில். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு சென்ற ஆண்டில் கொடுத்த விலையை நீங்கள் குறைத்திருக்கிறீர்கள். ஆனால், எங்கள் ஆட்சியில்தான் எப்பொழுதும் விவசாயிகளுக்கான பொருட்களின் விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். நீங்கள் இன்றைக்கு முதல்

பரிசை பெற்றிருக்கிறீர்கள் என்றால், அது கலைஞர் கொடுத்த இலவச மின்சாரத்தால்தான் இன்றைக்கு அதிக நெல் விளைச்சல் நடைபெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–50

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். இலவச மின்சாரத்தை முதன்முதலில் தமிழகத்தில் கொடுத்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் M.G.R. அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நீங்கள் விரிவுபடுத்தினீர்கள். அந்தந்தக் காலங்கள் வரும்பொழுது விரிவுபடுத்தினீர்கள், அவ்வளவுதான். ஆனால், எல்லாக் காலங்களிலும் விவசாயிகளுக்கு நன்மை செய்கின்ற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதைத் தெரிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன், நீங்கள் மானியத்தின்மீது பேசுங்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்தியில் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பில் இருந்த அந்த நேரத்தில்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்களின் வீட்டு பெரிய பிள்ளை மத்திய அரசில் இரசாயனத் துறை அமைச்சராக இருந்தபோதுதான் உர விலையை 100 சதவிகிதம் உயர்த்தி, விலை உயர்வுக்கான அந்தக் கோப்பிலே கையொப்பமிட்டு அமல்படுத்தினார்; (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மத்திய

அமைச்சராக இருந்த தி.மு.க. தலைவரின் மூத்த பிள்ளை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன், பேசி முடியுங்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழகத்திலுள்ள 2 கோடியே 14 ஆயிரத்து 798 குடும்ப அட்டைகளுக்கு 20 கிலோ அரிசியை விலையில்லாமல் அளித்து, பசிப்பிணி இல்லாத தமிழகத்தை உருவாக்கியுள்ள அரசு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலுள்ள 29 மாநிலங்களில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், மாண்புமிகு அம்மா அவர்களின் விலையில்லா அரிசி திட்டம் இரண்டையும் செயல்படுத்தும் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் 14 ஆண்டுகளுக்குப் பிறகு 2013 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்தி வெற்றி கண்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவரது வழியில் தற்போது கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்திக் காட்டி, சாதனை படைத்திருப்பவர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் 2019–2020 ஆம் நிதியாண்டிற்கு உணவு மானியமாக ரூ.6,000/– கோடியை ஒதுக்கீடு செய்துள்ளவர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். மத்தியத் தொகுப்பிலிருந்து விலை கொடுத்து அரிசியை வாங்கி, விலையில்லாமல் கொடுக்கின்ற ஒரே மாநிலம் தமிழகம் என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் Kisan Credit Card கொடுத்து சாதனை படைத்துள்ள அரசு, அம்மாவின் அரசு. அந்த கிரெடிட் கார்டுமூலம் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும், எந்த வங்கிக்கும் சென்று, ஏ.டி.எம்.–ஐப் பயன்படுத்தி பணம் எடுத்துக்கொள்ள முடியும்.

விவசாயத்திற்குத் தேவையான விதை, உரம், பூச்சிமருந்து உள்ளிட்ட இடுபொருட்களை விவசாயிகளின் தேவையறிந்து வழங்கி வருவதோடு, விவசாயம் செய்வதற்குத் தேவையான கருவிகளையும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் குறைந்த வாடகையில் வழங்கிவரும் அரசு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு. 2014 ஆம் ஆண்டு ஒகி புயல் நிவாரணம், 2018 ஆம் ஆண்டு குறுவை மற்றும் சம்பா தொகுப்புத் திட்டம், 2018 ஆம் ஆண்டு கஜா புயல் நிவாரணம் என அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் 1 கோடியே 8 இலட்சத்து 28 ஆயிரத்து 148 விவசாயிகளுக்கு ரூ.16,143.46 கோடி அளவிற்கு நிவாரணங்கள் வழங்கி, விவசாயிகளின் இன்னல்களைப் போக்கிய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு.

2011 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பான செயல்பாடுகளுக்காக தேசிய அளவில் 27 விருதுகளைப் பெற்று, இந்தியத் திருநாட்டிற்கே முன்னோடியாகவும், முன்னுதாரணமாகவும் திகழ்ந்துவரும் அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு. தி.மு.க. ஆட்சி செய்த 5 ஆண்டு காலத்தில் வெறும் 2 விருதுகளை மட்டுமே பெற்றுள்ளது.

மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தினை சிறப்பாகச் செயல்படுத்திட 2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ரூ.6,500 கோடியை உணவு மானியமாகவும், பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்த கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியமாக ரூ.400 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மனதார வரவேற்கிறேன். 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கி, 31–1–2020 வரை மூன்றாண்டு காலத்திற்குள் தமிழகத்திலுள்ள 2 கோடியே 2 இலட்சத்து 31 ஆயிரத்து 394 குடும்பங்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கி சாதனை படைத்துள்ள அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு.

தமிழகத்தில் 8,025 நரிக்குறவர்கள், 451 மலைக்குறவர்கள், 2,293 திருநங்கைகள் என 10,769 பேருக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கியுள்ளதோடு, 6 கோடியே 68 இலட்சத்து 981 நபர்களின் ஆதார் எண்களை மின்னணு குடும்ப அட்டையுடன் இணைத்து சரித்திரம் படைத்துள்ள அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எங்கு வேண்டுமானாலும் ரேஷன் பொருட்களை

வாங்கிக்கொள்ள அரசு வழிவகை செய்யுமா என்பதை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். கூட்டுறவுத் தேர்தலை முறையாக. . .

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மயிலாடுதுறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு வினாவினை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். தமிழகத்தில் எந்த ரேஷன் கடையில் வேண்டுமானாலும் ரேஷன் பொருட்களைப் பெற்றுக்கொள்கிற திட்டத்தை அரசு அமல்படுத்துமா என்ற வினாவை எழுப்பியிருக்கிறார்கள். இதற்கு முன்னரே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், தமிழகத்தில் ரேஷன் கார்டுகளை வைத்திருப்பவர்கள், எந்த இடத்தில் வேண்டுமானாலும் எந்த ரேஷன் கடையில் வேண்டுமானாலும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தினை அறிவித்தார்கள். அதனடிப்படையில், பரீட்சார்த்தமாக தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களில் 1–2–2020 முதல் 29–2–2020 வரையில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டது. அவ்வாறு அமல்படுத்தப்பட்டபோது-இந்த இரண்டு மாவட்டங்களிலும் சேர்த்து மொத்தம் சுமார் 9 இலட்சம் ரேஷன் அட்டைகள் இருக்கின்றன. இந்த இரண்டு மாவட்டங்களில் இருப்பவர்கள், அந்தந்தப் பகுதிகளுக்கு உட்பட்ட எந்தக் கடையில் வேண்டுமானாலும் ரேஷன் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பரீட்சார்த்த முறையில் அதைச் சோதனை செய்தபோது. . . (குறுக்கீடு) தமிழ்நாடு முழுவதும். அந்தப் பகுதிகளில் உள்ள 9 இலட்சம் கார்டுகளில், 9 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்து வாங்கியிருக்கிறார்கள். இந்த ஒரு மாத பரீட்சார்த்த நடைமுறையில் பெரிய நடைமுறைச் சிக்கல்கள் வரவில்லை.

எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விரைவில் ஒரு தேதியை அறிவிப்பார்கள் என நான் ஏற்கெனவே அவையில் சொன்னேன். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு உணவு மற்றும் நுகர்வோர்

பாதுகாப்புத் துறையின் மானியக் கோரிக்கை என்பதால், என்னையே சொல்லச் சொல்லிவிட்டார்கள். எனவே, வருகிற 1–4–2020 முதல் ரேஷன் கார்டு வைத்திருப்பவர்கள் தமிழ்நாட்டில் எந்த ரேஷன் கடையில் வேண்டுமானாலும் அவர்களுக்குரிய பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு பொது விநியோகத் திட்டத்தின் வரலாற்றில் இது ஒரு மிகப் பெரிய மைல் கல்லாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றிற்கெல்லாம் ஊக்கமாகவும், ஆக்கமாகவும் இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி மட்டும்தான் சொல்ல வேண்டும்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அரசுக்கும், அம்மாவின் அரசை வழிநடத்துகின்ற மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து உரையை முடியுங்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கடைசிப் பக்கத்திற்கு வாருங்கள். இதற்குமேல் நேரமில்லை. ஏற்கெனவே 22 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: நன்றி மட்டும்தான். இரண்டே இரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி மட்டும் சொல்லுங்கள். கோரிக்கைகள் எல்லாம் வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் அங்கே சென்று உட்கார்ந்துவிட்டீர்களா? உங்கள் இடத்திற்கு வாருங்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், ஒரத்தூரில் கடந்த 7–3–2020 அன்று நடைபெற்ற. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லிவிடுகிறேன். மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி, மணல்மேடு அரசு கலைக் கல்லூரிக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரைச் சூட்டிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி கேட்டுக்கொள்கிறேன். மயிலாடுதுறை நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க புறவழிச் சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை விரைந்து முடிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் கொடுத்துவிடுங்கள், பதிவு செய்துகொள்ளலாம்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் படித்துவிடுகிறேன். மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்படும் நிலையில், மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, மயிலாடுதுறை வட்டத்திலிருந்து மணல்மேடு பகுதியைப் பிரித்து, மணல்மேட்டை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய வருவாய் வட்டம் உருவாக்கித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மயிலாடுதுறை அரசு பெரியார் பொது மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் இயந்திரம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதியில், மாப்படுகை இரயில்வே கடவு எண் 228 என்னும் இடத்திலும் மற்றும் நீடுர் இரயில்வே கடவு எண் 229 எனும் இடத்திலும் இரண்டு இரயில்வே உயர்மட்டப் பாலங்கள் அமைக்கும் பணியினை விரைந்து முடித்துத் தரவும், மயிலாடுதுறை வட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நெல் சேமிப்புக் கிடங்கு அமைத்துத் தரவும் வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

திருமணஞ்சேரி அருள்மிகு உத்வாகநாத சுவாமி திருக்கோயில், திருமண தோஷம் நிவர்த்தி செய்யும் தலமாக விளங்குவதால், இங்கு வெளிமாநிலம் மற்றும் வெளிநாட்டிலிருந்து தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர். இப்பகுதியினை சுற்றுலாத்தலமாக அறிவித்து, கோயிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏதுவாக, தங்கும் விடுதி அமைத்துத் தர வேண்டும். நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களை இணைக்கும் மயிலாடுதுறை–முட்டம் பாலம் இணைப்புச் சாலையை நெடுஞ்சாலைத் துறையின்மூலம் அமைத்துத் தர மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாநிதி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் நியாய விலைக் கடை ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைப் பிறகு தனியே கேட்டுக்கொள்ளுங்கள். அவர் பேசி முடித்துவிடட்டும்.

திரு. இ. கருணாநிதி: ஒரே ஒரு செய்திதான். சொல்லிவிடுகிறேன். 2016 ஆம் ஆண்டு குழு அமைத்ததாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தற்போது 2020 ஆம் ஆண்டு நடைபெறுகிறது. நியாய விலைக் கடை ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு உண்டா இல்லையா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது பதிலுரையில் இதற்குப் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது 2016 ஆம் ஆண்டு பற்றி. 2010–ல், அதாவது, 29–10–2010 அன்று. . . (குறுக்கீடுகள்) சரி, நான் இங்கே பார்த்துச் சொல்கிறேன். 29–10–2010 அன்று அவர்கள் order போட்டு, ரேஷன் கடை பணியாளர்களான விற்பனையாளர்கள், கட்டுநர்களுக்கு இவ்வளவு சம்பளம் கொடுக்கப்படும் என்று ஏட்டிலே எழுதி வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். நடைமுறைப்படுத்த வேண்டுமல்லவா! அவர்களுடைய ஆட்சி முடிந்து போய்விட்டது. அதற்குப் பிறகு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான் 2012–ல் அதை நடைமுறைப்படுத்தினோம். அதுமட்டுமல்லாமல், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஒப்பந்தம் போடப்பட வேண்டுமென்று அவர்கள் சொன்னதால், 2015–ல் மீண்டும் அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது. காலமுறை ஊதிய உயர்வும் கொடுத்திருக்கிறோம்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த ஒப்பந்தம் 2015 ஆம் ஆண்டின் 11–வது மாதம் முடிந்தது, அதாவது, 9–11–2015–ல் முடிந்தது. அதற்கு முன்பே ஒரு குழு அமைக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டிலிருந்து சம்பள உயர்வு பெற்றுக்கொண்டு வருகிறார்கள். இப்போது அந்தச் சம்பள உயர்வு 2020 ஆம் ஆண்டு 11–வது மாதத்தில் முடிகிறது. அதற்கு முன்னதாக இப்போது குழு அமைக்கப் போகிறோம், அது சம்பந்தமாக என்னுடைய பதிலுரையில் வரும், கேட்டுக்கொள்ளுங்கள். இதுவரையிலும் வரலாறு காணாத அளவுக்கு சம்பள உயர்வு கொடுத்தது நாங்கள்தான், நீங்கள் இல்லை; நீங்கள் கொடுக்கவே இல்லை. 5 ஆண்டுகளுக்கான ஒப்பந்தம் இது. முன்பு 5,000 வாங்கினால் 5,000 ரூபாயாகத்தான் இருக்கும். 4,000 வாங்கினால் 4,000 ரூபாயாகத்தான் இருக்கும்; நாங்கள்தான் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு அம்மாவின் அரசுதான் உயர்த்திக் கொடுத்திருக்கிறது என்பதை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி அவர்கள்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2010–ல் இவர்கள் போகும்போது, உத்தரவு போட்டுவிட்டுப் போகிறார்கள். 29–10–2010–ல் நீங்கள் உத்தரவு போடுகிறீர்கள். ஆனால், அதை நிறைவேற்றவில்லை. 2011–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் நாங்கள் கொடுக்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: 3, 4 மாதங்கள் இருந்தன இல்லையா? (குறுக்கீடு) 5 மாதங்கள் இருந்தன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி அவர்கள்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு மன்றத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி, இராமநாதபுரம் மாவட்டத்திலே முதுகுளத்தூர் தொகுதி. அந்தத் தொகுதி சிறப்பு வாய்ந்த தொகுதி. கிட்டத்தட்ட 4 இலட்சம் மக்கள் முதுகுளத்தூர் தொகுதியிலே வாழ்கின்றனர். தேவர் திருமகனார் 5 முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் வெற்றி பெற்ற தொகுதி. பலதரப்பட்ட சமுதாய மக்கள் வாழ்கின்ற அந்தத் தொகுதியிலே தொகுதியின் நலன் கருதி, சட்டமன்ற உறுப்பினர் பதவியை மக்கள் நலப் பணியாக எடுத்துக் கொண்டு வாழ்கின்ற என்னைப் போன்றவர்கள் கேட்கின்ற திட்டங்களைச் செய்து கொடுத்தால் மிகச் சிறப்பாக இருக்கும்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டப் பகுதியில் விளைநிலங்கள் மற்றும் அரசுப் புறம்போக்கு மற்றும் கண்மாய் புறம்போக்கிலுள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும். நீர்நிலையை நிரப்புவதற்கு அது வாய்ப்பாக இருக்கும். முதுகுளத்தூர் குண்டாறு, அதற்கு ரெகுநாத காவேரி என்று பெயர். சுமார் 60 கிலோ மீட்டர் தூரத்தில் இந்தக் காவேரி அமைந்துள்ளது. இது கமுதியிலிருந்து முதுகுளத்தூர் வழியாக திருப்புல்லானி வரை அமைந்துள்ளது. இது பல ஆண்டுகளாக மராமத்து செய்யப்படாமல், தூர் வாரப்படாமல் இருப்பதால் காட்டுக் கருவேல மரங்கள் அடர்ந்துள்ளன. இதனை மராமத்து செய்து, 4 கிலோ மீட்டருக்கு ஒன்று வீதம் தடுப்பணைகள் அமைத்து, விவசாயிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். பாக்குவெட்டி முதல் கடலாடி வரை உள்ள மலட்டாறு சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அங்கேயும் காட்டுக் கருவேல மரங்கள் அடர்த்தியாக உள்ளன. அதனை மராமத்து செய்து தடுப்பணைகளை அமைத்தால் அது விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும். பார்த்திபனூர் முதல் வள நாடு கூத்தங்கால் வரை மராமத்து செய்து, 4 கிலோ மீட்டருக்கு ஒரு தடுப்பணை அமைத்து விவசாயிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும். முதுகுளத்தூர் பெரிய கண்மாயை மராமத்து செய்திட வேண்டும்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் சட்டமன்ற விதி 110–ன்கீழ் கடலாடி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து சிக்கல், சாயல்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. கடலாடி ஊராட்சி ஒன்றியம், ஏர்வாடி ஊராட்சி 12,000 மக்கள்தொகையைக் கொண்டதாகும். அதனைப் பேரூராட்சியாக மாற்ற முன்வர வேண்டும்.

பிற்பகல் 2–05

முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் மிகப் பெரிய ஊராட்சியாக விளங்கும் தேரிருவேலி, விலாங்குளத்தூர் ஆகிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்க வேண்டும். பொன்னக்கனேரி ஊராட்சி ஐந்து கிராமங்களைக் கொண்டது. இதில் மூன்று உட்கிடை கிராமங்கள் தனியாக அமைந்துள்ளன. எனவே, மேற்கண்ட மூன்று ஊராட்சிகளில், ஒவ்வொரு ஊராட்சியையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும். தேரிருவேலி ஊராட்சியின் மக்கள்தொகை 6,000 ஆகும். விலாங்குளத்தூர் ஊராட்சியின் மக்கள்தொகை

4,500; பொன்னக்கனேரி ஊராட்சியின் மக்கள்தொகை 3,200. அங்கே ஏறக்குறைய 10,000 பேர் வசிக்கின்றனர். கமுதி ஊராட்சி ஒன்றியத்தோடு நாராயணபுரம் ஊராட்சியைச் சேர்த்து நகராட்சியாக மாற்ற வேண்டும். முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள செல்வநாயகபுரம் ஊராட்சியை முதுகுளத்தூர் பேரூராட்சியுடன் இணைத்து நகராட்சியாக மாற்ற வேண்டும். முதுகுளத்தூர், கமுதி, கடலாடி கிராம ஊராட்சிகளுக்கு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தண்ணீர் வழங்குவதை, அனைத்துக் கிராமங்களுக்கும் கிடைக்குமாறு செய்ய வேண்டும்; சில கிராமங்களுக்கு அந்தத் தண்ணீர் கிடைக்கவில்லை.

முதுகுளத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு செயல்பாட்டில் கொண்டு வரப்படாமல் உள்ளது. இதனை விவசாய தானியங்களை விற்பனை செய்வதற்கும், மக்கள் பயன்பாட்டிற்கும் கொண்டு வர வேண்டும்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் சட்டமன்ற விதி 110–ன்கீழ் முதுகுளத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வெந்நீர் வாய்க்கால் முதல் மானாங்கரை வழியாக கீழச்சாக்குளம் வரை புறவழிச் சாலை அமைத்திட அவர்கள் விருப்பம் தெரிவித்தார்கள். அது இன்னும் செயல்படுத்தப்படாமல் கிடப்பிலே இருக்கின்றது. அந்தச் சாலையை அமைக்காத காரணத்தினால், முதுகுளத்தூர் டவுனிலிருந்து கடலாடிக்கு 10 அடியுள்ள குறுக்குச் சாலை வழியாக எல்லா வண்டிகளும் நின்று, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, அதைக் கடந்து செல்வதால் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் மிகவும் கடுமையான கஷ்டத்திலே முதுகுளத்தூர் மற்றும் கடலாடி மக்கள் வாழ்கின்றனர்.

காரைக்குடி–இராமநாதபுரம்–முதுகுளத்தூர்–கடலாடி–சாயல்குடி–தூத்துக்குடி வழியாக திருச்செந்தூர், கன்னியாகுமரி வரை இரயில்வே பாதை அமைத்திட முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதுகுளத்தூர், கமுதி, கடலாடி அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவர் மற்றும் செவிலியர் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக அரசு நெடுஞ்சாலையில், அபிராமம் முதல் கே.பி. மடம் வரையிலான சாலையில் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் அரசு சார்ந்த குரு பூஜை நடைபெறும்போது சட்டம்–ஒழுங்கு பாதுகாப்பிற்காக அபிராமம், நத்தம், நெடியமாணிக்கம் சாலை, இராமநாதபுரம் இராணிமங்கம்மாள் சாலை வரையுள்ள சாலையைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. அங்கு பல பிரச்சினைகள் வரும் என்பதனால் அந்தச் சாலையை மாற்றியமைத்திருக்கின்றார்கள். அந்தச் சாலை பழுதடைந்திருக்கின்ற காரணத்தினால், அதை அகலப்படுத்தி முடிந்தவரை, அதை மிகச் சிறந்த சாலையாக அமைக்க வேண்டும். குரு பூஜை நேரத்தில் ஏறக்குறைய 10 இலட்சம் மக்களுக்குமேல் அந்தச் சாலையைப் பயன்படுத்துவதாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

அடுத்து, அனைத்துப் பள்ளிகளிலும் உட்கட்டமைப்பு வசதி செய்து தரப்பட வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முதுகுளத்தூரிலிருந்து வெந்நீர் வாய்க்கால், நெடியமாணிக்கம் வழியாக சத்திரக்குடி–இராமநாதபுரம் வரை பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடி, மஞ்சூர் வழியாகவும், முதுகுளத்தூர், தேரிருவேலி, சிக்கல், ஏர்வாடி தர்கா வழியாக, ஏர்வாடி செல்வதற்கு பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–10

முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முதுகுளத்தூர், கமுதி, கடலாடி மாணவர்கள் பயன்பெறும் வகையில் பொறியியல் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி அமைத்திட வேண்டும். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் வட்டம், காரைக்குடி மண்டலம், முதுகுளத்தூர் கிளையிலிருந்து சென்னை, பழனி மற்றும் சேலம் பெருநகரங்களுக்குப் பேருந்து வசதி செய்திட வேண்டும். தேரிருவேலி கிராம ஊராட்சியைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பயன்பெறும் வகையில் துணை மின் நிலையம் அமைத்திட வேண்டும். தேரிருவேலி கிராம ஊராட்சியைச் சுற்றியுள்ள கிராம ஊராட்சிகள் பயன்பெறும் வகையில் துணை மின் நிலையம் அமைத்திட வேண்டும். காஞ்சிரங்குளம், சித்திரங்குடி கண்மாய்களை பறவைகள் தங்குவதற்கு தண்ணீர் தேக்கிட மராமத்து செய்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Smart Ration Card தொலைந்து போனவர்கள் தமிழகம் முழுவதும் tnpds.gov.in இணையதளத்தில் 20 ரூபாய் செலுத்தி இ–சேவை மையம் வழியாக apply செய்கிறார்கள். நகல் Smart Card–ஐ உடனடியாக வழங்க அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் Smart Ration Card தொலைந்து போனவர்கள் அதைத் திரும்பப் பெறுவதற்கு மனு செய்கிறார்கள், அவர்களுக்கு உடனடியாக card வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதாவது யாரெல்லாம் manual ஆக application கொடுத்தார்களோ அவர்களுக்கெல்லாம் print ஆகி 8,000–க்கும் மேற்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. மற்றவர்களுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இனி online மூலம் பதிவு செய்யப்பட்ட அனைவருக்குமே அவ்வப்பொழுது பரிசீலித்து 1 ஆம் தேதியிலிருந்து கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி அவர்கள்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும். நவீன அரிசி ஆலைகளில் பணிபுரியும் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை W.P.No. 20660/2015 வழக்கினை விரைந்து முடிக்க நிருவாகம் முன்வருவதோடு, ஊதிய முரண்பாட்டினைக் களைந்திட வேண்டும். உதவி மேலாளர், உதவியாளர் நேரடி நியமனம் கைவிடப்பட வேண்டும். கொள்முதல் பணியாளர்களை ஒப்பந்தப்படி நிரந்தரப்படுத்த வேண்டும். சுமைதூக்கும் பணியாளர்களுக்கு 12–7–2019 முதல் நிலுவைத் தொகையுடன் 29 விழுக்காடு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர்
(திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் தொடர்பான வேண்டுகோள். தமிழகம் முழுவதும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களின் வீட்டுவசதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக 197 வட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள், 619 நகர கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் என மொத்தம் 816 கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை இலாப நோக்கமின்றி, சேவை நோக்குடன் ஏழை, நடுத்தர மக்களுக்காகச் செயல்பட அரசால் தோற்றுவிக்கப்பட்டவையாகும். இவற்றில் சுமார் 3,600 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்தக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கு கடந்த 11 ஆண்டுகளாக முறையாகக் கடன் வழங்காததாலும், 1996 ஆம் ஆண்டு முதல் அரசினுடைய தொடர் தள்ளுபடி அறிவிப்புகளாலும், வீட்டுவசதிச் சங்கங்கள் செயலிழந்து, இவற்றில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 30 முதல் 50 மாதங்களுக்கு மேலாக சம்பளம் வழங்க இயலாத சூழ்நிலை உள்ளது. இதுகுறித்து பணியாளர்கள் தொடர்ந்து பல போராட்டங்கள் நடத்தி சம்பளம் வழங்கக் கோரியும், பணியாளர்களுக்கு இதர கூட்டுறவு வங்கிகள், அரசு நிறுவனங்களில் காலிப் பணியிடத்தில் மாற்றுப் பணி வழங்க வேண்டியும் அரசுக்குக் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

பிற்பகல் 2–15

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில், பல சொசைட்டிகளில் வேலை செய்பவர்களுக்கு இதுவரையில் சம்பளம் வழங்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று, 30 மாதங்கள், 40 மாதங்கள் சம்பளம் வழங்கவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், அந்த சொசைட்டிகள் சரிவர இயங்கவில்லை, அவை நலிவடைந்துவிட்டன. சொசைட்டிகள் இயங்காததற்கான காரணத்தைக் கண்டுபிடித்து, அந்த சொசைட்டிகள் சரியாக இயங்குவதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி அவர்கள்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தொகுதி விவசாயம் நிறைந்த பூமியாகும். தாமிரபரணி–கல்லாறு–வெள்ளநீர் கால்வாய் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 16 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 2 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): உரையை முடியுங்கள்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கும்போது நான் இதைப் பேச வேண்டுமென்று ஆவலோடு காத்திருந்தேன். அவர்கள் உணவுக்குச் சென்றுவிட்டாலும், நான் பேசுவது பதிவாகி இருக்கும். இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களுக்கும் தெரியும். மதுரையிலே மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது. நாராயணபுரம் பகுதியில் யாதவர் கல்லூரி வரை அந்த மேம்பாலம் செல்கிறது. கிட்டத்தட்ட 10 கி.மீ. வரைக்கும் அந்த மேம்பாலம் அமைக்கப்படுகிறது. மிகச் சிறப்பாக அங்கு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், அங்கு வாழ்கின்ற மக்கள் அனைவரும் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். எனக்கு Pacemaker கருவி பொருத்தப்பட்டு 8 மாதங்கள் ஆகிவிட்டன. எனக்கு 15 வருடங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், 5 வருடமோ, 2 வருடமோ சொல்ல முடியாது, அந்த அளவிற்கு தாவுமேடை போன்று விழுந்து விழுந்து செல்ல வேண்டியுள்ளது. என்னுடைய வண்டி Benz car தான். அதிலேயே போக முடியவில்லை என்றால், ஏழையெளிய மக்கள், மூன்று சக்கர வாகனங்களில் செல்பவர்கள், மோட்டார் பைக்கில் செல்பவர்கள், சாமான்களை ஏற்றிக்கொண்டு செல்பவர்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள்? நான் என்ன

சொல்கிறேன் என்றால், அந்தச் சாலை கிட்டத்தட்ட 120 அடி அகலம் கொண்டது. அதிலே 40, 50 அடி அகலத்தில்தான் பாலம் அமைக்கிறார்கள். மீதமுள்ள இடங்கள் காலியாக இருக்கின்றன. அதிலே, தற்காலிகமாக 10 அடிக்கு 10 அடி, இந்தப் பக்கம் ஒரு 10 அடி, அந்தப் பக்கம் ஒரு 10 அடி என சாலை அமைத்துக் கொடுத்தால், மக்களெல்லாம் உங்களைப் பாராட்டுவார்கள். நானும் என்னுடைய பாராட்டைச் சொல்வேன். அதைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். இல்லையென்றால், என்னைப் போன்றவர்களுக்கு அது மிகப் பெரிய வருத்தத்தை அளிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, இதை எனக்காகச் செய்து கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அவர்கள் வயதிலே மூத்தவர். நீங்கள் மீனாட்சியின் அருளாசியோடு பன்னெடுங்காலமாக நோய் நொடியில்லாமல் நீடூழி வாழ்வீர்கள். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை. உங்கள் பேரப் பிள்ளைகள், உங்கள் மகன்கள் என உங்கள் குடும்பத்தார் அனைவரும் உங்களைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்கிறார்கள். நீங்கள் அங்கே அனைத்து பொதுச் சேவைகளிலும் ஈடுபட்டு வருகிறீர்கள், பொது வாழ்க்கையிலும் ஈடுபட்டு வருகிறீர்கள். அதுபற்றி, எனக்கும், அண்ணன் செல்லூர் கா. ராஜு அவர்களுக்கும், திரு. இராஜன் செல்லப்பா அவர்களுக்கும் நன்றாகத் தெரியும்.

இந்தப் பாலம் மதுரைக்கு ஒரு வரப்பிரசாதம். உங்களுக்கே தெரியும், மதுரையின் வளர்ச்சிக்காக நீங்கள் பல்வேறு முயற்சிகளை எடுக்கிறீர்கள். 1,000 கோடி ரூபாயில் 600 கோடி ரூபாயில் பறக்கும் பாலமாகவும், பறக்கும் சாலையாகவும் அமையவுள்ளது. இன்றைக்கு மதுரையில் எவ்வளவு போக்குவரத்து நெரிசல் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, கூட்டுறவுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. இராஜன் செல்லப்பா அவர்களும், திரு. நீதிபதி அவர்களும், திரு. சரவணன் அவர்களும், திரு. மாணிக்கம் அவர்களும்,

திரு. பெரியபுள்ளான் அவர்களும், மதுரை மாவட்டத்திற்காக அதிகமான பாலங்களைக் கேட்டுப் பெற்றிருக்கிறோம்; அதற்கான கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நில எடுப்பு இல்லாமல் நத்தம் சாலையில் பாலம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் சொல்வதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். நீங்கள்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணவிற்குச் சென்றுள்ளார்கள் என்று கூறினீர்கள். அவர் உணவிற்குச் செல்லவில்லை. அவர் கோப்புகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார், நீங்கள் சொல்வதையும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார். மதுரை சம்பந்தப்பட்டது என்பதால், நாங்களும் சேர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்கின்றோம். மீண்டும் சொல்கிறேன். நீங்கள் Pacemaker கருவி பொருத்தப்பட்டுள்ளது என்று கூறினீர்கள். நீங்கள் 5 வருடங்கள் அல்ல, இன்னும் 50 வருடங்கள் மீனாட்சியின் அருளாசியோடு நோய் நொடியில்லாமல் வாழ வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–20

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதுகுளத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அருமை அண்ணன் திரு. பாண்டி அவர்கள், கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே 23 மாவட்ட வங்கிகளில் கூட்டுறவுத் துறையின் மூலமாக ஓய்வூதியம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே, சென்ற ஆட்சியிலே ஓய்வூதியம் 3,500 ரூபாய் என்று இருந்தது. சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு, அவர்கள் ஓய்வு பெற்றபின் அந்த ஓய்வூதியம் அவர்களுக்குக் கடைசியில் வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, அப்படி வேண்டாம், வங்கி மூலமாகவே கொடுத்துவிடலாம் என்று சொல்லி, 4,500 ரூபாய் ஓய்வூதியம் வழங்கி வருகிறோம். (குறுக்கீடு) எல்லா மாவட்டங்களிலுமுள்ள அனைத்து கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றியவர்களுக்கும் வழங்கி வருகிறோம். அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு 2,250 ரூபாய் கருணை ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களைப்

பொறுத்தவரையில், அங்கு பணிபுரியும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் கேட்டு பல கோரிக்கைகள் வந்திருக்கின்றன. ஊரகப் பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்குச் சேவை செய்து வருகின்றன. இச்சங்கங்கள் அவ்விவகார எல்லையிலுள்ள உறுப்பினர்களுக்கு, பொது மக்களிடமிருந்து பெறப்படும் வைப்புத்தொகை மூலமும், மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து நிதியுதவி பெற்றும் கடன் வழங்கி வருகின்றன. இதன் மூலமாக குறைந்தபட்ச இலாபத்தை ஈட்டி வருகின்றன. பெரும்பாலான சங்கங்கள் குறைந்த இலாபத்தில் செயல்படுவதால் சங்கப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் நிலை தற்போது இல்லை. இருப்பினும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை பெறப்பட்டதன் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறதென்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. ச. பாண்டி: கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்த ஓய்வூதியம் வழங்கப்படாமல் இருக்கின்றது. அதையும் கொஞ்சம் கருத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும். (குறுக்கீடு) கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு வழங்கப்படாமல் உள்ளது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் பேசுகின்றபோது, MRM ஊழியர்கள் குறித்துச் சொன்னார்கள். அதை ஊதிய முரண்பாடாகக் கருத முடியாது. வெவ்வேறு கல்வித் தகுதிகள் உள்ளதால், அதனை ஊதிய முரண்பாடாகக் கருத முடியாது என்கிற ஒரு நிலைப்பாட்டை எடுத்தாலும், மேலாண்மை இயக்குநர் அவர்கள் மறுபடியும் அழைத்து அதிலே ஓர் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நடவடிக்கையிலே இருந்தபொழுது, அங்கே இருக்கிற ஊழியர் சங்கங்கள்தான் மறுபடியும் வழக்குத்

தொடுத்து நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றிருக்கின்றன. அந்த வழக்குதான் நிலுவையில் இருக்கிறதே தவிர, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்தவரையில் நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை. அந்த ஊழியர் சங்கங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றன. அந்த வழக்கு நிலுவையில் இருக்கிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை முடியுங்கள். நன்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. ச. பாண்டி: ஒரே ஒரு கருத்து மட்டும் சொல்கிறேன். அதாவது, என்னைப் பொறுத்தமட்டில், இரண்டு வருடங்களுக்கு முன்பாகக்கூட நான் பேசியிருக்கின்றேன். மதுரையிலே அமைந்திருக்கின்ற யாதவர் கல்லூரியை, அதனுடைய நிருவாகச் சீர்கேட்டை மாற்றியமைப்பதற்கு, கொஞ்சம் கவனத்திலே எடுத்து, அந்தக் கல்லூரியை நிச்சயமாக சமுதாயத்திடம் ஒப்படைக்க வேண்டும். அதற்கு என்ன உதவி செய்ய வேண்டுமென்று நீங்கள் கேட்டாலும் அதைச் செய்து கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன். நீங்கள் யாரை நியமித்தாலும் சரி, அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கிறோம். ஏனென்றால், அந்தச் சமுதாயக் கல்லூரி நீண்ட நெடுங்காலமாக உள்ளது. அதை இந்த ஆட்சியில், அந்தச் சமுதாயத்திற்கு ஒப்படைத்தது நீங்கள்தான் என்ற பெயரை எடுக்க வேண்டுமென்றால், தயவுசெய்து, அருள்கூர்ந்து நீங்கள் அந்த வாய்ப்பினை எங்களுக்குத் தரவேண்டுமென்றும், அந்தக் கல்லூரியை சமுதாயத்திடம் நீங்கள் உடனடியாக ஒப்படைக்க வேண்டுமென்றும் மிகப் பணிவன்போடு, அன்போடு கேட்டுக்கொண்டு, உங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மதுரை யாதவர் கல்லூரியைப் பொறுத்தவரையில், அவர்களுடைய சமுதாயத்திலே செயலாளர் பதவிக்காகப் போட்டி போட்டுக்கொண்டு, நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் இருக்கிறது. அந்தக் கல்லூரியில் படிக்கின்ற

மாணாக்கர் யாரும் பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தினால்தான், மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்கள் யாதவர் கல்லூரியினுடைய தனி அலுவலராக நியமிக்கப்பட்டு, அதிலே பணியாற்றுகின்ற ஆசிரியர் பெருமக்களுக்கெல்லாம் நல்லமுறையிலே ஊதியம் வழங்கப்பட்டு, அந்தக் கல்லூரி இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அந்த நீதிமன்ற வழக்கெல்லாம், அவர்களுடைய தலைமையிலே இருந்து, இரு தரப்பிலும் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, அந்த நீதிமன்ற வழக்கை முடிவுக்குக் கொண்டு வந்த பிறகு, Form–VII–ஐ ஒரே ஒரு நபர் மட்டும் கொண்டு வந்து வழங்கினார்களென்றால், அதில் ஆய்வு மேற்கொண்டு, அந்தச் சமுதாயத்து மக்களிடம் ஒப்படைப்பதற்கு அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறதென்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–25

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், வேளாண்மை விற்பனைக்கூடம் திறக்கப்படவில்லை என்று சொன்னார்கள். வேளாண்மை விற்பனைக்கூடம் திறக்கப்பட்டு, அங்கே வணிக வளாகம், குளிர்பதனக் கிடங்கு, மற்ற கடைகளெல்லாம் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.

***திரு. கே. பழனி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கழக நிறுவனத் தலைவர், மக்கள் தலைவர், எங்கள் மாணிக்கத் தலைவர், நூற்றாண்டு நாயகர், பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்கி, புரட்சித் தலைவர் விட்டுச் சென்ற பணிகளை, தொடர்ந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களை தலைமையேற்று நடத்தி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தர

பொதுச் செயலாளராக, ஒன்றரைக் கோடி தொண்டர்களின் ஒப்பற்றத் தலைவர், நான் நித்தம், நித்தம் வணங்கும் எங்கள் ஆராதனைக்குரிய இதய தெய்வம், வங்கக் கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை, தலைமையேற்று திட்டங்களை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் அருளாசியுடன், விளைநிலங்களைப் பாதிக்கும் எந்தத் திட்டத்தையும் அனுமதிக்க முடியாது என்ற அம்மாவின் தீர்க்கத்தை, இன்று அரசின் கொள்கை என்று முடிவாக்கி, யாராலும் செய்ய முடியாத ஹைட்ரோ கார்பன் திட்டத்தையும் முறியடித்து, தஞ்சாவூர், திருச்சி, திருவாரூர் மாவட்டங்களை விவசாய டெல்டா மாவட்டங்களாக உருவாக்கி, பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண்மை மண்டலமாக அறிவித்த உழவு காத்த உழவனே, உலகத் தமிழர்கள் போற்றும் மாண்புமிகு தமிழக முதல்வரே! நல்லாட்சி இலக்கணத்தை நாட்டுக்கு எடுத்துரைத்து, நாளையும் நமதே என்பதனை, மூன்றாண்டு ஆட்சி இதற்கு முதலிடமே சாட்சி என வாகை சூடி வழிநடத்தும் வரலாற்று நாயகர், கழக இணை ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சங்கத் தமிழ் பூமி தந்த தங்கத் தமிழ் மகன், ஜல்லிக்கட்டு நாயகர், கழக ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். இப்பேரவையை வழிநடத்தும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், இங்கே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். எங்கள் மாவட்ட அமைச்சரான, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அண்ணன் திரு. பென்ஜமின் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அருளாசியுடன், முத்தான மூன்றாண்டுகளில் மகத்தான நன்மைகள் பலவற்றை மக்களுக்குச் செய்து, அம்மாவின் உண்மையான வாரிசு என பறைசாற்றி பிப்ரவரி 24 ஆம் தேதி 'மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாள்' ஆக கடைப்பிடிக்கப்படும் என்று சட்டமன்றப்

பேரவையில், விதி 110–ன்கீழ் அறிவித்து, இதன்மூலம் அம்மா அவர்களுக்கு புகழைப் பெற்றுத் தந்த குடிமராமத்து நாயகர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

'பயிற்றிப் பல கல்வி தந்து
இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்'

என்பதற்கிணங்க பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி, மிதிவண்டி, கணித உபகரணங்கள், படிக்க பாடப் புத்தகங்கள் தந்து மாணவர்களின் கல்விக் கடவுளாக இருந்தவர் எங்கள் அம்மா அவர்கள். அம்மா அவர்களின் வழியில் வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்களான திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம், விலையில்லா அரிசி வழங்கும் திட்டம், முதியோர் உதவித் தொகை உயர்வு, ஏழைகள் பசியாற அம்மா உணவகம், ஏழைப் பெண்களுக்கு திருமண உதவியாக ரூ.25,000/– மற்றும் ரூ.50,000/–, நான்கு கிராம் தங்கத்திலிருந்து 8 கிராம் தங்கமாக உயர்த்திக் கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

கிராமப்புறங்களில் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம், ஏழை விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு விலையில்லா கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள் தந்து ஏழைகளின் வாழ்க்கையில் ஒளியேற்றிய திட்டம்தான் அம்மா அவர்களின் திட்டம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.

திரு. கே. பழனி: அம்மா உப்பு, அம்மா குடிநீர், அம்மா சிமென்ட், அம்மா மருந்தகம் இவற்றுக்கெல்லாம் மேலாக பிறந்த குழந்தைகளுக்கு 16 வகையான அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம், அதுமட்டுமின்றி கர்ப்பிணி தாய்மார்களுக்கு பேறுகால நிதி உதவியை 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்து அனைத்துத் திட்டங்களையும் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அம்மாவின் சாதனைகளை எடுத்துக் கூறினால் நாள் கணக்கில் பேசலாம். தமிழக மக்களுக்காகப் பாடுபட்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள். இஸ்லாமியர்களுக்கு நோன்பு காலத்தில், நோன்புக் கஞ்சிக்கு அரிசி கொடுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழகத்தில் உள்ள இஸ்லாமிய மற்றும் சிறுபான்மையின மக்களுக்கு ஏதாவது பாதகம் ஏற்பட்டால் முதலில் அவர்களுக்கு அரணாக நிற்பவர்கள் எங்களது அம்மா அவர்களின் வழியில் வந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–30

குன்றத்தூர் ஒன்றியத்தில் அடங்கிய குன்றத்தூர் பேரூராட்சி, சிறுகளத்தூர் ஊராட்சி, ஊராட்சி சாலையின் குறுக்கே, செம்பரம்பாக்கம் ஏரியின் மதகுமூலம் வெளியேற்றப்பட்ட உபரிநீர், மழைக் காலங்களில் சாலையின் குறுக்கே பெருக்கெடுத்து ஓடியதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டு, பேருந்துகள், வாகனங்கள் செல்வது தடைபட்டு, பொதுமக்கள் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள். அங்கு மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருந்தேன். அதைக் கனிவுடன் பரிசீலித்து, மேற்படி இடத்தில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, மேம்பாலம் அமைத்திட ஆணையிட்டு, இன்று பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குன்றத்தூர் ஒன்றியத்தில் அடங்கிய எனது ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒரு பகுதியும், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒரு பகுதியும் 42 ஊராட்சிகள், குன்றத்தூர் பேரூராட்சி மற்றும் மாங்காடு பேரூராட்சியை ஒன்றிணைத்து, குன்றத்தூரை தலைமையிடமாகக் கொண்டு, தாலுகா அலுவலகத்தையும், ஸ்ரீபெரும்புதூரில் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தையும் அமைத்துத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவே நாட்டுயர்வு என்ற அடிப்படையில், விலையில்லா 20 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை கூட்டுறவு மற்றும் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்மூலம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி, விலையில்லா வேட்டி, சேலை மற்றும் பொங்கல் பரிசாக ஒரு குடும்ப அட்டைதாரருக்கு 1,000 ரூபாய் வழங்கி, தமிழ்நாடு மக்களுக்குப் பெருமை சேர்த்தவர் எங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் சார்பாக நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொளப்பாக்கம் கிராமத்தில் நகர கூட்டுறவு வங்கி செயல்பட்டு வருகின்றது. அந்த நகர கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, அங்கு அம்மா மருந்தகம் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஸ்ரீபெரும்புதூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் பெரிய சங்கமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தருமாறு மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையை ஏற்று, அந்த ஊராட்சிகளில் உள்ள சாலைகளுக்கு தார்ச் சாலைகள், சிமென்ட் சாலைகள், paver block சாலைகள் மற்றும் குடிநீர் வடிகால்கள், LED தெரு விளக்குகள், உயர் கோபுர மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,

ஊராட்சி ஒன்றியச் சாலைகள் அனைத்தும் மண் சாலைகளாக இல்லாதவாறு தார்ச் சாலைகளாக அமைத்துக் கொடுத்த, நல்லாட்சி நடத்திவரும், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த எங்களது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, மின்சாரத் துறை, வருவாய்த் துறை மற்றும் அனைத்துத் துறைகளிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணியபடி, இந்தியாவில் உள்ள 29 மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிருவாகத் திறமையால், இந்திய அரசாங்கத்தால் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக இந்தியத் திருநாட்டின் பாரதப் பிரதமர் அவர்களால் பாராட்டப்பட்டுள்ளதன்மூலம் தமிழ்நாட்டு மக்களுக்குப் பெருமை சேர்த்தவர் எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குன்றத்தூர் நான்கு ரோடு, சேக்கிழார் மேல்நிலைப் பள்ளியிலிருந்து கொள்ளச்சேரி, தெற்கு மலையம்பாக்கம், வடக்கு மலையம்பாக்கம், பூந்தமல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, மேப்பூர், நசரத்பேட்டை உள்ளடங்கிய சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் இணைப்புச் சாலையாக 7 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்றது. அந்தச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்தித் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கோடம்பாக்கம்–ஸ்ரீபெரும்புதூர், குன்றத்தூர் சாலையிலிருந்து கெருகம்பாக்கம், கொளப்பாக்கம், மணப்பாக்கம், மவுண்ட் பூந்தமல்லி செல்லும் இணைப்புச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்தித் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாங்காடு, பட்டூர், முகலிவாக்கம் சாலையோடு பரணிபுத்தூர், ஐயப்பன்தாங்கல், கொளப்பாஞ்சேரி, சீனிவாசபுரம் மற்றும் மவுண்ட் பூந்தமல்லி நெடுஞ்சாலையை இணைத்து இருவழிச் சாலையாக அகலப்படுத்தித் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–35

காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி, உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி என 3 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இதில் காஞ்சிபுரம் மற்றும் உத்திரமேரூர் தொகுதிகளில் வசித்துவரும் ஏழையெளிய மக்களுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டு வருகிறது. எனது ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மனைப்பட்டா வழங்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளைச் சந்திக்கின்றபொழுது, அது belt area என்று சொல்கிறார்கள். காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் அடங்கிய ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் 10 ஊராட்சிகள் உள்ளன. மேலும், சென்னை மாநகராட்சியைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு belt area என்ற நிலையை நீக்கி மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக வருவாய்த் துறை அதிகாரிகளை அறிவுறுத்தி அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், 1990 ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்ட 12,500 மக்கள் நலப் பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதால், அவர்களுடைய குடும்பம் மிகவும் வறுமையில் உள்ளது. அவர்களின் வறுமையைப் போக்கிட, மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் பணி வழங்கிட வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

புது வாழ்வுத் திட்டத்தின்கீழ், 1,500 பேர் பணி செய்து வருகிறார்கள். அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக பணி நியமனம் செய்ய வேண்டுமாய் அம்மா அவர்களின் அரசை வழி நடத்திவரும் குடிமராமத்து நாயகர், மக்கள் முதல்வர், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் முதல் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். காஞ்சி மண்ணில் பிறந்த திராவிட இயக்கத்தின் முதல் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காஞ்சிபுரம் நகராட்சியைத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அண்மையில் ஆவடி நகராட்சியை, மாநகராட்சியாகத் தரமுயர்த்தித் தந்தார்கள். திராவிட இயக்கத்தைச் சார்ந்த முதல் முதலமைச்சர் ஆன தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரம் நகராட்சியாக இருக்கிறது. எனவே, காஞ்சிபுரத்தை

மாநகராட்சியாகத் தரமுயர்த்தித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், திராவிட இயக்கத்தினுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே வந்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள். மக்களுக்குப் பல திட்டங்களைக் கொடுத்து பல்வேறு சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அண்ணன் அவர்கள் எங்களுடைய கோரிக்கையை ஏற்று காஞ்சிபுரம் நகராட்சியை மாநகராட்சியாகத் தரமுயர்த்தித் தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எல்லாம் துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, நகர கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குப் புதிய கட்டடமும், அம்மா மருந்தகம் அமைப்பது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பழனி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்கள் துயில் கொண்டிருக்கின்ற நினைவகத்தின் அருகில், ‘ஓய்வில்லாமல் உழைத்தவர் இங்கே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார் என்று என் கல்லறையில் எழுதுங்கள்’ என்று நெஞ்சுக்கு நீதியிலே எழுதிய தலைவர், மறைந்தாலும் மக்களால் மறக்கப்படாத தலைவர். என்னைப் போன்ற சாமானியனை 1989 ஆம் ஆண்டே இந்த அவையில் அமர வைத்து அழகு பார்த்த தலைவர், முன்னாள் முதல்வர், முத்தமிழறிஞர், ஆணாய்ப் பிறந்த தமிழன்னை அவர்கள் உறங்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர் தடம் பார்த்து நடக்கின்ற, பெற்ற தாய் மகனை மறந்தாலும், மகன் தாயை மறந்தாலும், உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும், உயிர் மேவிய உடலை மறந்தாலும், கற்ற நெஞ்சம் கலையை மறந்தாலும், கண்கள் நின்று இமைப்பதை மறந்தாலும், இமைப்பொழுதும் மறவாமல் திராவிட இயக்கத்தைக் கட்டிக் காப்பாற்றி வருகிற (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தினுடைய தலைவர் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், நாளைய தமிழகம், தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை உரித்தாக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்திருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நான் என்னுடைய நன்றியை முதற்கண் உரித்தாக்குகிறேன். மானியக் கோரிக்கைக்குச் செல்வதற்கு முன்னால் இரண்டு நிமிடத்தில் என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளை வேகமாகப் படித்துவிட்டு பின் மானியத்தின்மீது உரையாற்ற விழைகிறேன்.

பிற்பகல் 2–40

என்னுடைய சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியம், வடமானூர் கிராமத்தில் 3–9–2010 அன்று ஒரு வெடி விபத்து நடைபெற்றது. அந்த விபத்தில் 3 பேர் அந்த இடத்திலேயே உடல் கருகி இறந்துபோனார்கள். 25–க்கும் அதிகமானோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார்கள். 68 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன. அந்த இடத்தை அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்டக் கண்காணிப்பாளர் அவர்களும், வருவாய்த் துறையினரும் வந்து பார்வையிட்டு, அது தொடர்பான அறிக்கை மாவட்ட ஆட்சியரின் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. நான் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றேன். அதில் இறந்தவர்களுக்கோ அல்லது காயமடைந்தவர்களுக்கோ அல்லது சேதமடைந்த வீடுகளுக்கோ இதுவரை இழப்பீடு வழங்கப்படவில்லை. எனவே, இந்த அரசு கனிவோடு பரிசீலித்து அவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கின்றேன்.

என்னுடைய மயிலம் ஒன்றியம், கூட்டேரிப்பட்டில் மேம்பாலம் அமைக்கும் பணியை தொடர்ந்து நான்காவது ஆண்டாக வலியுறுத்திக் கொண்டிருக்கின்றேன்.

மயிலம் ஒன்றியம் அரசு மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட தாலுகா மருத்துவமனையாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடூரில் ஆரம்ப சுகாதார நிலையமும், கால்நடை கிளை மருந்தகமும் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மயிலம் ஒன்றியம், பெரியதச்சூரில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும். பாதிராபுலியூரில் 100 வருடம் பழமை வாய்ந்த சிவன் கோயிலான, கைலாசநாதர் கோயிலைப் புனரமைத்துத் தர வேண்டும், வல்லம் ஒன்றியம், திருவம்பட்டில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்கப்பட வேண்டும். மயிலம் ஒன்றியம், சின்னநெற்குணம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், வல்லம் ஒன்றியம், பள்ளிக்குளம் கிராமத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், ஒலக்கூர் ஒன்றியம், வைரபுரம் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தர வேண்டும். மயிலம் ஒன்றியம், சங்கராபுரம் ஆற்றில் கட்டப்பட்டிருக்கின்ற தடுப்பணையைச் சீரமைக்க வேண்டும். வல்லம் ஒன்றியம், நாட்டார்மங்கலத்தில் ஒரு புறக்காவல் நிலையத்தை அமைக்க வேண்டும். வெள்ளிமேடுபட்டில் ஒரு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.

திண்டிவனம் அரசு கோவிந்தசாமி கலைக் கல்லூரி, 50 ஆண்டுகளை நிறைவு செய்திருக்கின்ற கல்லூரி. மறைந்த A.G. கோவிந்தசாமி நினைவால் கட்டப்பட்டிருக்கின்றது, அந்த கலைக் கல்லூரி. எனவே, இந்தப் பொன்விழா ஆண்டில் அவரின் நினைவைப் போற்றுகின்ற வகையில் ஒரு கலையரங்கம் அமைத்துத் தர வேண்டும். அந்த மாணவர்களுக்கு இருக்கைகள் அமைத்துத் தர வேண்டும்.

மயிலம் ஒன்றியம், வீடூர் அணையைத் தூர் வாரி சுற்றுலாத் தலமாக அமைக்க வேண்டும்.

அதேபோன்று மயிலம் சட்டமன்றத் தொகுதியில் ஏறத்தாழ 22 கிராமங்களில் நியாய விலைக் கடைகள் இல்லாமல் இருக்கின்றன, ஒரு சில கடைகள் பழுதடைந்திருக்கின்றன. ஏற்கெனவே ஒரு முறை கேள்வி நேரத்தில் கேட்டபோது, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டிக்கொள்ளுங்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி

மேம்பாட்டு நிதியிலிருந்து ஓர் ஆண்டுக்கு 2 அல்லது 3 கட்டடங்களை மட்டும்தான் கட்டித்தர முடியும். எனவே நாங்கள் அமைச்சர் அவர்களைக் கேட்பது, ஒருவேளை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டுவதாக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் பாதி பணமும் துறையின் மூலமாக 50 சதவிகிதமும் கொடுத்து அதனைக் கட்டுவதற்கு அனுமதி அளித்தால் கூடுதலாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை', 'கூட்டுறவே நாட்டுயர்வு'

என்ற அரிய தத்துவத்தின் வெளிப்பாடாய்,

"மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்றார் சீத்தலை சாத்தனார்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

என்றார் வள்ளுவர். எனவே, பசிப் பிணி இல்லாத ஒரு நாட்டை உருவாக்குகின்ற ஒரு துறைதான் இந்தக் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையாகும். பொது விநியோகத் துறையைப் பொறுத்தமட்டில், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் போட்டு வைத்த இராஜபாட்டையில்தான் இந்தத் துறை இன்றைக்கு நடைபோட்டுக் கொண்டிருக்கின்றது என்று சொன்னால், அது மிகையாகாது. 1972 ஆம் ஆண்டு அன்றைக்கு மத்தியில் ஜெகஜீவன்ராம் அவர்கள் உணவு அமைச்சராக இருந்தபோது, உணவுப் பஞ்சம் ஏற்பட்டபோதெல்லாம் கலைஞர் அவர்கள் நேரடியாக அவரிடம் சென்று மத்தியத் தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டிற்கு வேண்டிய அரிசியைத் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தபோதெல்லாம் தேவையான அரிசி வழங்கப்படவில்லை. அன்றைக்கு அவருடைய மூளையில் உதித்ததுதான் நுகர்பொருள் வாணிபக் கழகம் என்பது. எனவே, நமக்கென்று ஒரு வாணிபக் கழகத்தை உருவாக்க வேண்டும். தமிழ்நாட்டிலேயே நெல் கொள்முதல் செய்ய வேண்டும், அதனை நவீன அரிசி ஆலைகள் மூலமாக அரைத்து, அந்த அரிசியை

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக பொது விநியோகத் திட்டத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி அன்றைக்கு கலைஞர் அவர்கள் ஆரம்பிக்கின்றபோது தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தில் இருந்த கடைகள் வெறும் 39 கடைகள்தான். இன்றைக்கு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–45

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. மாசிலாமணி அண்ணே, கொஞ்சம் rest எடுங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அண்ணனை நாங்கள் மதிக்கின்றோம். அவர் நன்றாகப் பேசுவார். ஆனால், தவறான கருத்தைச் சொல்லிவிட்டார். ஏழையெளிய மக்களின் சமூகப் பொருளாதாரத்திற்காக 1964–ல் அன்றைக்கு இருந்த அரசு, பொது விநியோகத் திட்டத்தை கூட்டுறவுத் துறையின் மூலமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்தது; 4,444 கடைகள் இருந்தன. இந்தக் கடைகள் அப்போது கூட்டுறவுத் துறையால் மட்டுமே நிருவகிக்கப்பட்டன. அப்படி நிருவகிக்கப்பட்ட இந்தக் கடைகள்--மாண்புமிகு அண்ணன் மூத்த உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்கின்றார், வாணிபக் கழகம். . . (குறுக்கீடு) அமுதம் அங்காடியை வேண்டுமானால் கலைஞர் உருவாக்கினார் என்று இங்கே சொல்லலாம். ஆனால் 4,444 கடைகளைத் திறந்தது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர், ஏழைப் பங்காளன், ஏழைகளின் இதயங்களில் இன்றைக்கும் வீற்றிருக்கின்ற மனிதப் புனிதன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். 1977–ல் ஆட்சிக்கு வருகிறார். 1978–ல் கள ஆய்வு செய்து, கிராமப்புறங்களில்தான் உண்மையாகப் பாடுபடுகிற ஏழையெளிய மக்கள் இருக்கிறார்கள்; விவசாயிகள் இருக்கிறார்கள்; அவர்களுக்கும் பொருட்கள் கிடைக்க வேண்டும் என்று ஒரு கிராமத்திற்கு ஒரு கடையைத் திறந்தார்கள். Card எண்ணிக்கை தேவையில்லை, எத்தனை கிராமங்கள் இருக்கின்றனவோ, அத்தனை கிராமங்களுக்கும் கடையைக் கொடுத்து, 15,501 கடைகளாகக் கொடுத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்பதை இங்கே ஆணித்தரமாகச் சொல்கிறேன். எனவே, அவர்களுடைய முதலமைச்சர், அவருடைய தலைவர் 1977 வரை ஆட்சியில் இருந்தார்கள். இந்தக் கூட்டுறவுக் கடைகளையெல்லாம் விரிவாக்கம் செய்யவில்லை. எங்கள் தலைவர்தான் விரிவாக்கம் செய்தார்கள்.

படிப்படியாக இன்றைக்கு 32,965 கடைகளாக உயர்ந்திருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, 46 நகரும் நியாய விலைக் கடைகளும் நடத்தப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதிவு செய்ய வந்த கருத்து, நாம் மத்திய அரசால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு மூத்த உறுப்பினர். 1989 ஆம் ஆண்டு இந்த அவைக்கு வந்தவர். எல்லா விஷயங்களையும் உள்வாங்கிக்கொண்டு பேசக்கூடியவர். அதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பது ஒன்று. நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் நெல்லைக் கொள்முதல் செய்து, அதனை நாம் பயன்படுத்திக்கொள்வதிலே ஒரு தவறான புரிதல் அவருக்கு இருக்கிறது. அதனை நான் சொல்லாமல் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதில் controversy ஆன கருத்து ஒன்றும் கிடையாது. அது ஒரு தவறான புரிதல். என்னவென்று சொன்னால், மத்திய அரசுடன் 2002 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு MoU போடுகிறார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகும் அந்த நடைமுறையைத்தான் கடைப்பிடித்தீர்கள்; அதுதான் இன்றைக்கும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டம்–அதாவது Decentralised Procurement System–ஐ நாம் தொடர்ந்து கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறோம். அதைத்தான் நீங்களும் கடைப்பிடித்தீர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2002 ஆம் ஆண்டு போட்ட அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் அது தொடர்ந்து இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. அதைப் பொறுத்தவரை, நாம் மத்திய அரசுக்கு ஒரு agent தான். மாண்புமிகு உணவுத்

துறை அமைச்சர்களாக இருந்த அருமைக்குரிய அண்ணன்கள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள். எல்லோருக்கும் தெரியும், நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும்கூட, உணவுத் துறையினுடைய அமைச்சராக இருந்தவர். அதேபோல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும்கூட, உணவுத் துறையினுடைய அமைச்சராக இருந்தவர். இங்கே எதிர் வரிசையில் மூன்று பேர் உணவுத் துறை அமைச்சர்களாக இருந்தவர்கள் இருக்கிறார்கள். எனவே, மத்திய அரசாங்கத்தினுடைய agent ஆகத்தான் நாம் இதனைச் செயல்படுத்துகிறோம். மத்திய அரசிடமிருந்து கடன் வாங்குவது, அதற்கு அரிசியாக deposit செய்வது, அதாவது, நெல்லைக் கொள்முதல் செய்வது மட்டும்தான் நம்முடைய வேலை. நம்முடைய பகுதியில் விவசாயிகள் விளைவிக்கிற நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்கிற நல்ல நோக்கத்திற்காக இந்தத் திட்டத்தினை, decentralised procurement system–ஐ மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்ததற்குப் பின்னால் வெகு சிறப்பாக இந்த system செயல்படுகிறது. அதில்தான் இன்றைக்கு விவசாயிகள் முழு பயனை அடைகிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அரசின்மீது எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. நான் மாநில சுயாட்சிக் கோரிக்கையை. . . (குறுக்கீடு) அப்புறம் பேசுங்கள் Sir, please. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்தக் குற்றச்சாட்டையும் தெரிவிக்கவில்லை. நான் உங்கள் ஆட்சி செய்யவில்லை என்று சொல்லவில்லை. கலைஞர் அவர்கள், நுகர்பொருள் வாணிபக் கழகத்தை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக்

கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் மாசிலாமணி அவர்களும், நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், பொது விநியோகத் திட்டத்தைக் கொண்டு வந்தது குறித்து இங்கே பேசினார்கள். அவையில் ஓர் உண்மையான வரலாறு தெரியப்பட வேண்டும் என்பதற்காக ஒரு நிகழ்வை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். மக்களுக்கான பொது விநியோகத் திட்டத்தை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சராக இருந்த ஓமந்தூரார் அவர்கள்தான், தமிழக வரலாற்றில் முதன்முதலாக ரேஷன் கடை என்கிற பெயரில் சென்னை மாநகரத்தில் அறிமுகப்படுத்தியவர். Ration கடையை அறிமுகப்படுத்தியவர், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூரார் அவர்கள்தான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொது விநியோகத் திட்டத்தை யார் ஆரம்பித்தார்கள், யார் விரிவுபடுத்தினார்கள் என்கிற செய்திக்குள்ளேயே போகவில்லை. முதன்முதலில் நமக்கென்று ஒரு நுகர்பொருள் வாணிபக் கழகம் வேண்டும், மத்திய அரசாங்கத்திடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்படக் கூடாதென்பதற்காக, சிந்தித்து ஒரு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை உருவாக்கினார் கலைஞர் என்கிற செய்தியைத்தான் பதிவு செய்ய வந்தேன்; வேறொன்றும் இல்லை.

முதன்முதலில் கூட்டுறவுச் சங்கம் திருவள்ளூர் மாவட்டத்தில்தான் 1904 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. நான் அந்தச் செய்திக்குள்ளேயே போக விரும்பவில்லை. 3–6–2006–ல் கிலோ அரிசி ரூ.2/– என்று அறிவித்து, பிறகு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான 2008 ஆம் ஆண்டு, செப்டம்பர் 15 அன்று ஒரு கிலோ அரிசி ரூ.1.00 என்று அறிவித்தார்கள். அதையும் இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்று சொன்னபோதும்கூட, உழைப்பின் பயனை மக்கள் உணர வேண்டும், விவசாயிகளின் உழைப்பிற்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்பதற்காக

1 கிலோ அரிசி 1 ரூபாய் என்று அறிவித்தார்கள். அதற்குப் பிறகு விலையில்லா அரிசி என்று நீங்கள் சொன்னீர்கள், இன்றைக்கு தமிழ்நாட்டில் பட்டினிச் சாவு இல்லாத ஒரு நிலை பொது விநியோகத் திட்டத்தில் இருக்கிறதென்றால், அதற்கு அடித்தளம் அமைத்தவர் டாக்டர் கலைஞர் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) சுருக்கமாகச் சொல்கிறேன், ஒன்றும் இல்லை. முதலில் ரூ.3.50; 2006 ஆம் ஆண்டில் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகு, ஒரு கிலோ அரிசி ரூ.3–50–க்கு விற்பனை செய்யப்பட்டது. அதன் பிறகு இரண்டு வருடங்கள் கழித்து, நாடாளுமன்றத் தேர்தலின்போது, இரண்டு ரூபாய் ஆக்கினார். அதன் பிறகு ஒரு ரூபாய் ஆக்கினார். ஆட்சி முடிய ஒரு வருடம் இருந்தபோது ஒரு ரூபாய் ஆக்கினார். அப்படித்தான் கொடுத்தாரே ஒழிய விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்பதனால் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் உணவுத் துறை அமைச்சராக இருந்திருக்கிறார் அப்போது. அவருக்கே தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்காகச் சொல்கிறேன், இதற்காக ஒன்றும் குறுக்கிட்டுப் பேச வேண்டும் என்று அவசியமில்லை. 2006 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனேயே, அப்போதே ஆணை பிறப்பிக்கப்பட்டு, 1 கிலோ அரிசி ரூ.2/– என்பது அப்போதே வந்துவிட்டது. Record–ஐ எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடு) Record–ஐ எடுத்துப் பாருங்கள். அதற்குப் பின்னால் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என்ற நிலை அப்போது ஆக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத் தேர்தலின்போது இல்லை. ஆனால், 2006 ஆம் ஆண்டிலேயே, 1 கிலோ அரிசி ரூ.2/– என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு அனைத்து ரேஷன் கடைகளிலும் அப்போதே கொடுக்கப்பட்டுவிட்டது. நாடாளுமன்றத் தேர்தலுக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. எனவே, அதைக்

கொச்சைப்படுத்த வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழக விவசாயிகளுக்கு எண்ணற்ற சலுகைகளைச் செய்தார். 2005–2006 ஆம் ஆண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், பயிர்க் கடனுக்கான வட்டி 9 சதவிகிதமாக இருந்தது. 2006–2007 ஆம் ஆண்டான தி.மு.க. ஆட்சியில், அது 5 சதவிகிதமாகவும், 2008–2009 ஆம் ஆண்டில் 4 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டு, 2009–2010 ஆம் ஆண்டில் பயிர்க் கடன்களை முழுமையாக, முறையாக திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு, வட்டியை முற்றிலுமாக இரத்துச் செய்தவர் டாக்டர் கலைஞர் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தால் அனைத்து விவசாயக் கடன்களையும் தள்ளுபடி செய்வேன் என்று சொன்னார். எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் என்ற விவரத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள் என்பது எனக்குத் தெரியும். 7,000 கோடி ரூபாய் அல்ல, ரூ.5,000 கோடி என்று சொல்லப்போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் சொல்ல வருவது, 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தால் அனைத்து விவசாயக் கடன்களையும் தள்ளுபடி செய்வேன் என்று சொல்லி, அது சிறு விவசாயியோ, குறு விவசாயியோ அல்லது பெரு விவசாயியோ அனைத்து விவசாயிகளின் கடனையும் அன்றைக்கு கையெழுத்திட்ட நாளில் எத்தனை விவசாயிகள் இருந்தார்களோ, அனைத்து விவசாயிகளின் கடனையும் தள்ளுபடி செய்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் என்ற விவகாரத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, இந்த அரசினுடைய அனைத்து சமூக நலத் திட்டங்களையும் மக்களிடையே கொண்டு செல்கிற மிகப் பெரிய பணியினை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செய்து வருகிறது. ஆனால், அத்துறையில் பணியாற்றுகிற அந்த ஊழியர்களுடைய நலன் காக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டால், அவர்களுடைய வாழ்க்கை இன்றைக்கும்

கண்ணீரிலேதான் மிதந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பணியாளர்கள் போதிய ஊதியம் இல்லாமல் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஊதிய உயர்வைப் பற்றி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பேசுங்கள். ஆனால், எந்தப் பணியாளர் யார் என்ற விவரத்தைச் சொல்ல வேண்டும். எந்தப் பணியாளர்?

பிற்பகல் 2–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடையில் பணியாற்றுகின்ற விற்பனையாளர்கள், கட்டுநர்கள் ஊதிய உயர்விற்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள், இந்த ஊதிய உயர்வு சம்பந்தமாகக் கேட்கிறபோதுகூட 'நீங்கள் 2010 ஆம் ஆண்டில் உங்கள் ஆட்சியில் அறிவித்துவிட்டு போய்விட்டீர்கள், நாங்கள்தான் நடைமுறைப்படுத்தினோம், அதற்குப் பிறகு 2015 ஆம் ஆண்டில் அம்மையார் அவர்கள் ஆட்சியில் மறுபடியும் நாங்கள் ஊதிய உயர்வு கொடுத்தோம். நீங்கள் ஊதிய உயர்விற்கு ஒப்பந்தம் போட்டீர்கள். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை என ஒப்பந்தம் போட்டீர்கள். அதனால் இனிமேல் 2020 ஆம் ஆண்டில்தான் ஊதிய உயர்வு கொடுக்க முடியும்' என்று தெரிவித்துள்ளீர்கள். எந்த ஒப்பந்தமும் போடப்படவில்லை, கலைஞர் அவர்களுடைய ஆட்சியில். (குறுக்கீடு) அரசாணை இருக்கிறது. எப்பொழுதெல்லாம் நீங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு) அரசாணைதான். நியாய விலைக் கடைப் பணியாளர்களுக்கு 2000 ஆம் ஆண்டில் நீங்கள் ஊதிய உயர்வு கொடுத்தீர்கள். 5 ஆண்டுகள் தொகுப்பூதியம். ஒரு ரேசன் கடை பணியாளருக்கு வழங்கப்பட்ட ஊதியம்

1,300 ரூபாய்தான். 5 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும். 5 ஆண்டுகள் பணியாற்றிய பின்னர்தான் காலமுறை ஊதியம் வழங்கப்படும். (குறுக்கீடு) பேசவிடுங்கள். என்ன தலைவரே, இப்படிச் செய்கிறார்கள்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சியில் கட்டுநர்களுக்கு 1,150 ரூபாய் வழங்கப்பட்டது. அப்போது அவர்கள் கஷ்டப்படவில்லையா? அதேபோல் 28–9–2007–ல் உங்கள் ஆட்சிக்காலத்தில் 5 ஆண்டுகளுக்கு ரூ.3,000/– தொகுப்பூதியம் வழங்கப்பட்டது. விற்பனையாளர், 5 ஆண்டுகள் பணியாற்றினால்தான் ரூ.3,130/–ஐ உங்கள் ஆட்சியில் பெற முடியும். கட்டுநராகப் பணியாற்றுகிறார் என்றால், உங்கள் ஆட்சிக் காலத்தில் 28–9–2007 ஆம் ஆண்டில் 5 ஆண்டுகளுக்கு ரூ.2,500/–தான் பெற முடியும். 5 ஆண்டுகள் முடித்த பிறகு, ரூ.2,525/–தான் கிடைக்கும். கடைசியில், 2010 ஆம் ஆண்டில் ஆட்சி முடியும்போது, அரசாணை எண் 185, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 29–12–2010–ல் தொகுப்பூதியத்தை 4,000 ஆயிரம் ரூபாயாக வழங்குகிறீர்கள். முதல் ஆண்டில், கட்டுநருக்கு 3,500 ரூபாய் ஊதியம் வழங்கினீர்கள். ஓராண்டு கழித்து, என்ன செய்தீர்களென்றால், 3,500 ரூபாயிலிருந்து 8,000 ரூபாயாகக் கொடுக்கப்படும் என்று சட்டம் வகுத்தீர்கள். வகுத்துவிட்டு நடைமுறைப்படுத்தவில்லை. விற்பனையாளருக்கு தொகுப்பூதியம், ரூ.3,000/–லிருந்து ரூ.4,000/– என இவ்வளவுதான் உயர்த்தப்பட்டது. ஊதிய உயர்வைப் பொறுத்தவரையில், 5 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு ஆண்டு என திருத்தி, அதற்கடுத்து, 5 ஆண்டுகள் என்று சொல்லியிருக்கிறீர்கள். 5 ஆண்டுகள் என்று நீங்கள்தான் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அப்படி குறிப்பிட்டுவிட்டு, நடைமுறைப்படுத்தவில்லை. மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அமைந்த பிறகுதான், எங்களுடைய அரசு அமைந்த பிறகுதான் மார்ச் 2012 ஆம் ஆண்டில் ஒவ்வோர் சங்கத்திற்கும் தாக்கீது கொடுத்து, அம்மாவினுடைய அரசு அன்றைக்கு அகவிலைப்படியில் 35% அரசு ஊழியர்களுக்கு இணையாக வழங்கப்படுவதில் உயர்வு, வீட்டு வாடகைப்படி 10 சதவிகிதம், நகர ஈட்டுப்படி 4 சதவிகிதம், மாநகராட்சியில் பணியாற்றுகிறார்கள் என்றால், 1,000/–ரூபாய், இதர இடங்களில் பணியாற்றுகிறார்களென்றால் 750/– ரூபாய். கட்டுநருக்கும் அதேபோன்றுதான். கடைப்படி மட்டும் மாநகராட்சி என்றால் 500 ரூபாய். இதர இடங்களில் ரூ. 250/- விற்பனையாளருக்கு, மற்றவையெல்லாம் அதே போன்ற சலுகைகள்தான். ஆக, இதுபோன்று செய்திருக்கிறோம். அதற்கடுத்து 9–11–2015 அன்று அரசாணை எண் 137, கூட்டுறவு,

உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்படி ஓராண்டு ஆன உடன் 5,000 ரூபாய் அவர்களுக்குக் காலமுறை ஊதியம். ஆக, 12,000 ரூபாய் மாதத்திற்கு வழங்குகிறோம். கட்டுநருக்கு 4,250 ரூபாய் வழங்கப்படுகிறது. என்ன கூடியிருக்கிறதா, இல்லையா? (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். அண்ணன் இல்லையென்று சொன்னார். ஓராண்டிற்குப் பிறகு 4,300 ரூபாயிலிருந்து 12,000 ரூபாய் வரை பெறுகிறார்கள். இதுமட்டுமல்ல, 10 ஆண்டுகள் முடித்திருந்தால் ஒரு அகவிலைப்படி அவர்களுக்குக் கூடுதலாக வழங்கப்படும். 20 ஆண்டுகள் பணி முடித்திருந்தால் சிறப்பு ஊதியம் வழங்கப்படும். நீங்கள் பாருங்கள், (குறுக்கீடு) இருங்கள். இப்போது ஓராண்டிற்கு 3,900 ரூபாய். அதை 11,000 ரூபாய் வரை கட்டுநர் பெறலாம்.

பிற்பகல் 3–00

நான் சொல்வதைக் கேளுங்கள். அகவிலைப்படி அரசு ஊழியர்களுக்கு 63% கொடுக்கிறோம். வீட்டு வாடகைப்படி 10%, நகர ஈட்டுப்படி 5%. மாநகராட்சியில் பணியாற்றுபவர்களுக்கு, 1,000 ரூபாய், இதர இடங்களில் 750 ரூபாய், மருத்துவப் படி 100 ரூபாய், மலைவாழ் படி 900 ரூபாய், குளிர்காலப் படி 5 ரூபாய் அதுமட்டுமல்ல 250 ரூபாய். . . (குறுக்கீடுகள்) நீங்கள் சட்ட விதிமுறைகளைப் பற்றி சொன்னதனால் சொன்னேன். இல்லையென்றால், இதில் விரிவாகப் பேசமாட்டேன். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) நான் ஒன்றும் செய்யவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் படி, மலைவாழ் படி, குளிர்காலப் படி, மாற்றுத் திறனாளிகள் படி என படிப்படியாகக் கொடுத்து வருகிறோம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அம்மாவின் அரசு, குழு ஒன்றை அமைத்திருக்கிறது. அவ்வாறு குழு அமைக்கப்பட்டதில், 11 பரிந்துரைகள். . . (குறுக்கீடு) 5–10–2018–ல் அமைக்கப்பட்டு, சட்ட விதிகளின் பிரகாரம். . . (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இக்குழு அறிக்கையை பதிவாளருக்கு அனுப்பியிருக்கிறது. (குறுக்கீடுகள்)

28–1–2019–ல் ரேஷன் கடைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ‘சம ஊதியம், சம வாய்ப்பு’ எனக் குறிப்பிட்டு, 11 பரிந்துரைகளைச் செய்திருக்கிறார்கள். அரசாணை எண் 26, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை 5–7–2019 அன்றைக்கு வெளியிடப்பட்டதில், 9 இனங்களில். . .

(குறுக்கீடுகள்) கொஞ்ச நேரம் நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) 9 இனங்களில், பணியிலிருந்து மரணமடைந்தால், 2 இலட்சம் ரூபாய் அல்ல, 3 இலட்சம் ரூபாய். . . (குறுக்கீடுகள்) சட்டத்தைப் பற்றி தானே நீங்கள் சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கூச்சலிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியின்போது பணியாளர்கள் மரணமடைந்தால், 2 இலட்சம் ரூபாய் அல்ல, 3 இலட்சம் ரூபாய் தொகை வழங்கப்படுகிறது. குடும்ப நல நிதித் திட்டத்தில் முன்பணம் 5,000 ரூபாய் என முன்பு இருந்தது. (குறுக்கீடுகள்) இப்போது 25,000 ரூபாய் வழங்கப்படுகிறது. விற்பனையாளர் மற்றும் கட்டுநர்கள் மாதச் சம்பளத்தை ECS மூலமாகவே எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) அதேபோன்று நியாய விலைக் கடை பணியாளர்கள் திருமணம். (குறுக்கீடுகள்) திருமண உதவித் தொகை, கல்விக் கடன், வாகனக் கடன், வீட்டுக் கடன், நுகர்வோர் கடன், இத்தனை கடன்களையும் கொடுப்பதாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) இதற்குமேல் என்ன செய்ய வேண்டும்?

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று தொடர்ந்து கூச்சலிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சம்பளப் பட்டியலைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிப்பதற்குள், உங்களுக்கு என்ன அவசரம்? ஏன் இப்படி குறுக்கிடுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) முதலமைச்சர் பேசும்போது, என்ன

பேசுகிறார் என்பதைக் கேட்டுவிட்டு, பிறகு பேசுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊழியர்களின் சம்பள விவரத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார். ஊழியர்களின் சம்பளத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, வெளியில் வேறு மாதிரி கருத்து வரும். அதனால்தான் தெளிவான விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார். இதில் என்ன இருக்கிறது? அவர் விளக்கம்தானே சொல்கிறார். ஏன் கேட்க மறுக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சட்ட விதிகளைப் பற்றிச் சொன்னார். அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றார். நாங்கள் அதனை உணராமல் இல்லை. இந்த வருடம், 11–வது மாதம், அதாவது நவம்பர் மாதம் முடிகிறது. அதற்குள்ளாக குழு அமைக்கப்போகிறோம். இடைக்கால நிவாரணமாக, அவர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்திருக்கிறோம் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அவர்களை இணைத்திருக்கிறோம். அதில் உள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி, உங்களுக்கு என்ன problem? (குறுக்கீடு) நீங்கள் செய்வது முறையல்ல. (குறுக்கீடு) இது முறையல்ல. (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் கேள்வியைக் கேட்பீர்கள், அமைச்சர் அவர்களைப் பதில் சொல்ல அனுமதிக்கவில்லை என்றால் எப்படி? அவர் கேட்க மாட்டாரா! (குறுக்கீடு) அதெல்லாம் முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வதை நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். பின்னர் உங்கள் உறுப்பினர் பேசுகிறபோது, இதுகுறித்துப் பேசலாம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அவர்களை அம்மா அவர்கள் இணைத்திருக்கிறார்கள். இதில் இருக்கிற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக குழு அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல், பொது விநியோக விற்பனையாளர், கட்டுநர்களுக்கு இணையாக

வழங்கப்பட்டு வரும் 1,000 ரூபாயானது மாற்றுத் திறனாளிகளுக்கு 2,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது. அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் அடிப்படை வசதிகளான நாற்காலி, மேசை, மின்விசிறி, மின் விளக்கு, கழிவறை வசதிகள் ஆகியவற்றிற்காக 5,79,16,218 ரூபாய் இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, சிறப்புத் திட்டங்களை அரசு சொல்கிறபோது, 50 காசு கூடுதலாக ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் இனிமேல் வழங்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. 3 கோடியே 78 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் 6,315 நியாய விலைக் கடைகளுக்கு எடைத் தராசுகள் வழங்கப்படவுள்ளன. நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு இரண்டு சீருடைகளை வழங்கவிருக்கிறோம். பணியாளர்கள் வருடத்திற்கு ஒரு முறை உடல் பரிசோதனையும் செய்துகொள்ளலாம். (குறுக்கீடுகள்) நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் மகளிர் பணியாளர்களுக்கு, மகப்பேறு காலத்தில் 270 நாட்கள் விடுமுறை. . . (குறுக்கீடுகள்) அரசு ஊழியர்களுக்கு இணையாக வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். அது துறை ரீதியாக ஆய்வு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்துநின்று கூச்சலிட்டனர்.)

ஆகவே, இந்தளவுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பணியாளர்களுக்கு சிறப்பான முறையில் ஊதிய உயர்வை வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதியிருக்கிற அவர்களுடைய குறைகளைக் கேட்பதற்கு, அரசு குழுவை அமைக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 3–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்)

(அவையிலிருந்து வெளியேறிய உறுப்பினர்கள் லாபியில் கோஷமிட்டுச் சென்றனர்.)

மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாகச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) பதிலுரை, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாமானிய மக்களின் சாம்ராஜ்யத்திலும் சந்தோஷம் குடியேற, சந்தனமாய் கரைந்த சாதனைப் பொக்கிஷம்; தாயின் முகம் பார்த்து தன் குறை சொல்லி அழும், காய்ந்த பூமிக்குப் பூரண ஒளியேற்றிய புண்ணியம்; புரட்சித் தலைவரின் பொன்மனத்து இயக்கத்தை, சாதனைச் சரித்திரத்தால் மண்மணக்கும் இமயமாக்கிய மகா சக்தி அம்மா! அம்மா! அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவின் திருவாய்; ஆற்றலின் பொருளாய்; வீரத்தின் உருவாய்; வெற்றியின் வடிவாய்; வாடிநிற்கும் ஏழைக்கும், வருங்காலத் தலைமுறைக்கும், பூரணமாய் ஒளிகொடுத்து, அலைவீசும் கடலோரம் துயில்கொண்டு, இலைகொண்ட இயக்கத்தை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கும் தெய்வத் திருமகளாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கமலப் பாதங்களில் என் விழிநீர் கசியும் வணக்கங்களைச் சமர்ப்பித்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேரோடும் திருவாரூரில், எருதுகள் பூட்டிய வண்டியில் நின்று நஞ்சை, புஞ்சையை நம்பி வாழும் மக்களுக்கு நம்பிக்கையூட்டிய எடப்பாடி மண் தந்த எளிமைச் சாமானியர்; (மேசையைத் தட்டும் ஒலி) கஜா புயலையும் கையில் பிடித்து, புழுக்கம் போக்கும் விசிறியாக்கும் வித்தகம் கற்ற எங்கள் புன்னகைப் போராளி; (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியைக் கரம் பிடித்து இழுத்து வந்து, கல்லணைக்குச் சேர்த்திட்ட கழகத்தின் கரிகாலன்; (மேசையைத் தட்டும் ஒலி) உழவன் வீட்டில் உதித்த முதல்வன்; உலகத் தமிழினம் வியக்கும் புதல்வன்; ஈரிலை அரசை இமையாகக் காத்து 2021–லும் கழகத்தின் ஆட்சியே என்பதனை உலகம் வியக்க உணர்த்துகிற (மேசையைத் தட்டும் ஒலி) மாங்கனி மண் தந்த மைந்தன்; கழகத்தின் இணை ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக அரசின் தேருக்கு அச்சாணியாக வந்த பரதன், பாண்டவருக்கு வாய்த்திட்ட தருமன் போல பாசமுடைய இயக்கத்திற்கு காலம் தந்த மாசில்லா மனிதன், பாண்டிய நாடு பெற்றுத் தந்த பண்பு நிறை புனிதன் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டாம் ஜல்லிக்கட்டை மீட்டுத் தந்த நாயகன் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புனித ஜார்ஜ் கோட்டையின் பொன்னேட்டு சரித்திரத்தில் புது வரலாறு எழுதிக்கொண்டிருக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். துணை நின்று வழிநடத்தும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அகம் நிறைந்த அன்போடு முகம் மலர அமர்ந்திருக்கும் அமைச்சர் பெருமக்களுக்கும், அரசுத் தலைமை ஏவுனர் அவர்களுக்கும், தங்களை அனுப்பி வைத்த தொகுதிக்கு ஆக்கங்கள் சேர்ப்பதற்கு ஆர்வம் கொண்டு பணியாற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னை அடையாளம் காட்டி, தொடர்ந்து அன்பு செலுத்திக்கொண்டிருக்கும் நன்னிலம் தொகுதி வாக்காளர்களுக்கும், திருவாரூர் மாவட்ட மக்களுக்கும், எனது நன்றிகலந்த வணக்கங்களை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டத்தில், ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, இளம் வயதிலேயே நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக்கி, அதன்பின் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, இரண்டு முறையும் உணவுத் துறைக்கு அமைச்சராக்கி, இரண்டாண்டுகள் இந்து சமய அறநிலையத் துறையையும் கூடுதலாக வழங்கி, மக்கள் பணியாற்ற வாய்ப்பளித்தவர், எங்கள் குல தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பிறகு, அதே கருணை உள்ளத்தோடும், தாயுள்ளத்தோடும், என்மீது தனி அன்பு செலுத்தி அரவணைத்து, வழிகாட்டி அழைத்துச் செல்பவர் மாண்புமிகு முதலமைச்சர், அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களது அருளாலும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களது அன்பாலும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களது பாசத்தாலும், மாட்சிமைதங்கிய இப்பேரவையில், தொடர்ந்து 9–வது முறையாக உணவுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலளிக்கும் பெரும் பாக்கியத்தைப் பெற்றிருப்பதை நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசித்தவனுக்கு உணவு அளிப்பது புண்ணியம் என்று உலகின் எல்லா புனித நூல்களும் எடுத்துச் சொல்கின்றன.

"மண் திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தார் உயிர் கொடுத் தோரே"

என்கிறது மணிமேகலைக் காப்பியம். "உணவு கிடைக்காத ஒருவனுக்கு உணவு கொடுத்தால் அந்த உணவு கொடுத்தவருக்கு அல்லா புகழைக் கொடுப்பார்" என்கிறது திருக்குர் ஆன். திபேரியா கடல் என்னும் கலிலியோ கடலின் அக்கரைக்குப் போன இயேசுபிரான், தன்னைப் பின்தொடர்ந்து வந்த ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு, 5 ரொட்டித் துண்டுகளையும், 2 மீன் துண்டுகளையும் கொண்டு பசியாற்றிய அற்புதமே இயேசுபிரான் நடத்திய அற்புதங்களில் தலைசிறந்ததாகப் போற்றப்படுகிறது. இதே கருணை உள்ளத்தோடுதான், இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், விலையில்லாத அரிசி தந்து, பசியில்லாத தமிழகத்தை உருவாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி 1 கோடியே 96 இலட்சத்து 7 ஆயிரத்து 971 குடும்ப அட்டைதாரர்களுக்கு, மாதந்தோறும் சராசரியாக 33 கோடி கிலோ அரிசி விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது என்பதனை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நீண்ட நெடிய வருடங்களாக சர்க்கரை குடும்ப அட்டைகள் வைத்திருக்கும் பலபேர் தங்கள் குடும்ப அட்டைகளை அரிசி குடும்ப அட்டைகளாக மாற்றித் தரவேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ந்து வைத்துக் கொண்டிருந்தார்கள். அது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கவனத்திற்கு வந்தவுடன், சர்க்கரை குடும்ப அட்டை வைத்திருப்பவர்கள் தங்கள் விருப்பத்தின் பேரில் அரிசி குடும்ப அட்டைகளாக மாற்றிக் கொள்ளலாம் என்ற அரிய வாய்ப்பினை உத்தரவாக வழங்கியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இதன்படி 4 இலட்சத்து 51 ஆயிரத்து 614 குடும்ப அட்டைதாரர்கள், தங்களது குடும்ப அட்டைகளை அரிசி குடும்ப அட்டைகளாக மாற்றிக் கொண்டு விலையில்லா அரிசி பெற்று மன நிறைவுடன் இருக்கிறார்கள். இதனால் தமிழக அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் கூடுதல் செலவு 304 கோடியே 56 இலட்சம் ரூபாய் ஆகும். தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் தமிழகத்தில் அமல்படுத்தப்பட்டாலும், மாண்புமிகு அம்மா அவர்களின் விலையில்லா அரிசி வழங்கும்

திட்டத்தையும் தொடர்ந்து செயல்படுத்தி வரும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். விலையில்லாத அரிசி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியில் தமிழகத்திற்குரிய உரிமையை சட்டப் போராட்டம்மூலம் மீட்டெடுத்து அதை அரசிதழில் வெளியிடச் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதற்காக அம்மா அவர்களுக்கு அனைத்து விவசாய சங்கப் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து திரு. காவேரி ரெங்கநாதன் அவர்களின் தலைமையில் தஞ்சாவூரில் 9–3–2013 அன்று நன்றி/பாராட்டு விழா நடத்தினார்கள். அந்த விழாவில்தான் அம்மா அவர்களுக்கு "பொன்னியின் செல்வி" என்ற பட்டம் வழங்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில், ஹைட்ரோ கார்பன் மற்றும் மீத்தேன் போன்ற திட்டங்களால் அன்றாடம் அச்சப்பட்டுக் கொண்டிருந்த மக்களைப் பார்த்து இனி அச்சப்படத் தேவையில்லை என்று உறுதி கூறி, காவேரி டெல்டாவை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி பாசனப் பகுதி மக்களின் வயிற்றில் பால் வார்த்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். தங்கள் வாழ்வாதாரத்தைக் காத்தவருக்கு அம்மா அவர்களுக்கு எடுத்ததுபோல ஒரு நன்றி/பாராட்டு விழா எடுத்திட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில், விவசாய சங்கப் பிரதிநிதிகள் ஒன்று திரண்டு 7–3–2020 அன்று, திருவாரூரில் திரு. காவேரி ரெங்கநாதன் அவர்களின் தலைமையில் எழுச்சிமிகு விழா நடத்தினார்கள்.

பிற்பகல் 3–15

அந்த விழாவில் திரு. காவேரி ரெங்கநாதன் அவர்கள் பேசிய உரை இது; "நம்முடைய முதலமைச்சர் ஒரு செயல் வீரர் மாண்புமிகு அம்மா அவர்கள் காவேரிக்கு சட்டப் பாதுகாப்பு கொடுத்தார்; இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களோ நமக்கு ஒரு சட்டத்தையே கொடுத்திருக்கிறார்" என்று புகழாரம் சூட்டினார். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் பேசிய அவர், "நானும் மற்ற விவசாய சங்கத் தலைவர்களும் ஒன்றுகூடி ஆலோசித்து, மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டி பட்டம் கொடுத்ததுபோல, பத்தாயிரம் ஆண்டுகளானாலும்

டெல்டா பகுதியில் விவசாயம் பொய்த்துப் போகாமல் எங்களைப் பாதுகாத்த இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு நன்றி பாராட்டும் வகையில் அவருக்கு "காவேரிக் காப்பாளர்" என்ற (மேசையைத் தட்டும் ஒலி) பட்டம் கொடுப்பது பொருத்தமாக இருக்கும்" என்று முடிவெடுத்ததாகக் கூறி, பெரியவர் காவேரி ரெங்கநாதன் அவர்களும் மற்ற விவசாய சங்கப் பிரதிநிதிகளின் தலைவர்களும் ஒன்றாக இணைந்து நின்று "காவேரிக் காப்பாளர்" என்ற பட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அன்றைய தினத்தில் வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். இந்தப் பட்டத்தைக் கொடுத்த காவேரிப் பகுதியில் இருக்கின்ற விவசாயச் சங்கங்கள் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். என்னவென்று சொன்னால், இந்தச் சாதனையை நினைவு கூர்ந்திடும் வகையில் கல்லணையில் வளைவு ஒன்றை அமைக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையைத் தமிழக அரசுக்கு வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்னுதாரணமெல்லாம் இருக்கின்றது. ஆகவே, அதனைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு, "காவேரிக் காப்பாளர்" என்ற பட்டத்தை வழங்கிய நேரத்தில், அன்று காலையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் எண்ணிப் பார்த்தேன். திருச்சியிலிருந்து திருவாரூருக்கு வருகின்ற வழி நெடுகிலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் விவசாயப் பணிகளைப் பற்றியே பேசிக்கொண்டு வந்தார். சாலையின் இருமருங்கும் நாற்று நடவுப் பணிகள் தொடர்ச்சியாக நடப்பதைப் பார்த்துக்கொண்டே வந்த மாண்புமிகு முதலமைச்சர், அம்மாப்பேட்டைக்கும் நீடாமங்கலத்திற்கும் இடையே வரும்போது ஓர் இடத்தில் திடீரென காரை நிறுத்தச் சொன்னார். கார் நின்றதும் கீழே இறங்கிய மாண்புமிகு முதலமைச்சர் எங்களுக்கெல்லாம் முன்னதாக சேறு பூத்திருந்த அந்த வரப்புகளில் நடந்து வயல்வெளியில் நடவுப் பணி நடக்கும் இடத்திற்குச் சென்றார். அங்கு வேலை செய்து கொண்டிருந்த ஆண்களும், பெண்களும் வந்திருப்பவர் யார் என்பதை உணர்ந்து ஒரு கணம் திகைத்து, பின் ஓடோடி வந்து அவரைச் சூழ்ந்து

கொண்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அன்பு பொங்க நலம் விசாரித்து, அவர்களிடம் விவசாயப் பணிகள் குறித்து ஒவ்வொன்றாகக் கேட்டார். அப்போது அங்கிருந்த அந்த நிலத்தின் உரிமையாளர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வந்து, “ஐயா தங்கள் கரங்களால் முதல் நாற்றை நட்டு நடவுப் பணியைத் தொடங்கி வைக்க வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகள் சாகுபடிக் காலத்தின் தொடக்கத்தில் தங்களது வயலில் நாற்று நடும்போது விளைச்சல் நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காக, தங்களது குடும்பத்திலுள்ள ராசியான ஒருவரையோ அல்லது அந்த ஊரிலுள்ள ராசியான ஒருவரையோ முதலில் நடவு செய்யச் சொல்வது வழக்கம். எங்கள் பக்கத்திலும், எல்லோர் பக்கத்திலும் இம்முறை இருக்கின்றது. இதை கிராமப்புறங்களில் விவசாயிகள், “பொன் நடவு” என்று கூறுவார்கள். முதன்முதலில் ஏறு கட்டுவதை “பொன் ஏறு” என்று சொல்வார்கள். முதன்முதலில் நடவு நடுவதை “பொன் நடவு” என்று சொல்வார்கள். அந்த பொன் நடவை நடுவதற்குத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விவசாயி கேட்டுக்கொண்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஆர்வத்தோடு வயலில் இறங்கி நாற்று நடும் பெண்களோடு சேர்ந்து, தானும் நாற்று நட ஆரம்பித்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டிரண்டு நாற்றுக்களாகப் பிரித்து, கிள்ளி எடுத்து, அழகாய் சேற்றில் நடுவதைப் பார்த்த அங்கிருந்த நாற்று நடும் பெண்களே வியந்து போனார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது அந்த நிலத்தின் உரிமையாளர் மனம் நெகிழ்ந்துபோய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கும்பிட்ட கரங்களோடு பார்த்துக் கொண்டே இருந்தார். அவரது கரங்கள் லேசாக நடுங்கின, அப்படியே பார்த்துக்கொண்டு கும்பிட்டுக் கொண்டிருந்தார். ஒரு பக்திமானைப்போல அப்படியே கும்பிட்டுக் கொண்டிருந்தார். கும்பிட்ட கரங்களோடு பார்த்துக்கொண்டிருந்த அவருடைய கரங்கள் லேசாக நடுங்கின, கண்கள் கலங்கின. அவர் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு நின்று கொண்டிருந்தார். அந்த உணர்ச்சி வேகத்தில் அவர் சொன்னார், “ஐயா நீங்கள் ராசியானவர், இனி என் நிலம் மட்டுமல்ல, இந்த நாடே விவசாயத்தில் செழிக்கும்” என்று குரலை உயர்த்திச் சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் ‘காவேரிக் காப்பாளர்’ என்ற அந்தப் பட்டத்தைக் கொடுத்தபோது, நான் அந்த மேடையிலே எண்ணிப் பார்த்தேன்.

பிற்பகல் 3–20

நேற்றையதினம், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் தனது மானியக் கோரிக்கைக்குப் பதிலளித்துப் பேசும்போது, “முதலமைச்சராக காரில் செல்வதைவிட, விவசாயியாக மாட்டு வண்டியில் சென்றதுதான் எனக்கு மகிழ்ச்சி” என்றும், (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சராக இருந்து காவேரி டெல்டாவை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண்மை மண்டலமாக ஆக்கும் சட்டமுன்வடிவை இந்த அவையில் தாக்கல் செய்ததுதான் என் பாக்கியம் என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லி அகமகிழ்ந்தார்களே! மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களே, ஒரு விவசாயியை முதல்வராகப் பெற்றதுதான் காவேரி டெல்டாவில் பிறந்த எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் பெரும்பாக்கியம் என்பதனைப் பெருமையோடு இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை பொன்மனச் செம்மல் என்று போற்றினார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களை தங்கத் தாரகை என்று புகழ்ந்தார்கள். இன்று, அண்ணன் மாண்புமிகு முதல்வர் எடப்பாடியார் அவர்களை, “காவேரிக் காப்பாளர்” என்று கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் ஆட்சி நடத்தும் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய வழிகாட்டுதலில், உணவுத் துறை தமிழகம் முழுவதும் விவசாயிகள் விளைவிக்கின்ற நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் கொள்முதல் செய்து வருகிறது. 1–10–2002 முதல் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள்தான் மத்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு செயல்படுத்தினார்கள். அதன்படி, இந்தத் திட்டத்தில் காவேரி டெல்டா பகுதி மிகப் பெரிய பங்கு வகிக்கிறது. இந்த ஆண்டு 2,029 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இதுவரை 18 இலட்சத்து 38 ஆயிரத்து 262 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. முதன்முதலில் இந்த ஆண்டில்தான் மார்ச் மாதத்தில் இவ்வளவு அதிகமான அளவிற்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 2,029 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்து, இந்த ஆண்டில்தான் அந்த வரலாறு படைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதில், காவேரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர்,

நாகப்பட்டினம் மாவட்டங்களில் மட்டும் 15 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அம்மா அவர்கள்தான் e–procurement system–ஐ அறிமுகம் செய்தார்கள். தற்பொழுது e–procurement system மூலம் 24 மணி நேரத்தில் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பணம் சென்று சேர்ந்து விடுகிறது. விவசாயிகளின் வங்கிக் கணக்கில் இதுவரை 3,476 கோடி ரூபாய் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது. இதில், தமிழக அரசு வழங்கிய ஊக்கத் தொகை 116 கோடி ரூபாய் ஆகும். இதன்மூலம், 3 இலட்சத்து 20 ஆயிரத்து 133 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள் என்பதை இப்பேரவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“குடிசெய்வார்க்கு இல்லை பருவம்; மடிசெய்து
மானம் கருதக் கெடும்”

என்கிறார் திருவள்ளுவர். அதாவது, மக்கள் உயர்வதற்கான செயலை உரிய காலத்தில் செய்யவில்லை எனில் குடிமக்களின் நலன் சீர்குலைந்துவிடும் என்பதுதான் அதன் பொருள். தமிழ்நாட்டில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் ஏனைய நுகர்வோர் விழிப்புணர்வு பெறவும், தரமற்ற பொருட்கள் மற்றும் நேர்மையற்ற வணிகத்தின் மூலமாக பாதிப்பு நேராமல் உரிய பாதுகாப்பு வழங்கிடவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும், ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமைகளில் நுகர்வோர் குறை தீர்க்கும் முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தொடங்கி வைத்தார்கள். 2011 முதல் பிப்ரவரி 2020 வரை 8 இலட்சத்து 31 ஆயிரத்து 598 மனுக்கள் பெறப்பட்டு, அதில் 8 இலட்சத்து 5 ஆயிரத்து 288 மனுக்கள்மீது அன்றையதினமே தீர்வு காணப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 1–00 மணி வரை வாங்கப்படுகின்ற மனுக்களுக்கு 5–00 மணிக்குள்ளாகவே தீர்வு என்கிற திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டம் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களது தலைமையிலே மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 வரை 12.41 இலட்சம் மெட்ரிக் டன் ஆக இருந்த கிடங்குகளின் கொள்ளளவை, கடந்த 9 ஆண்டுகளில் 22.25 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்தியது மாண்புமிகு அம்மாவின் அரசு. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 1,139 கோடி ரூபாய். இதேபோல், சைலோ சேமிப்புக் கலன்கள், நியாய விலை அங்காடிகள், நெல் கொள்முதல் கட்டடங்கள், உலர்களங்கள், அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றிற்காக 400.26 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முடிவுற்றும், நடைபெற்றும் வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனக் காட்டைக் கடந்து, மலர்ச்சியும், குளிர்ச்சியும் கலந்து, மக்களை மகிழ்விக்க வருகிறதே மாலைத் தென்றல், அதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான அம்மாவின் அரசு, மக்கள் நலம் சார்ந்த திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது. ஏழைகளின் எண்ணம் ஈடேற வேண்டும், ஏழைகள் யாவரும் தன்னுரிமை பெற வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணாவின் கனவை, சாதிமத பேதம் ஒழிய வேண்டும், ஒற்றுமை மலர வேண்டும் என்ற புரட்சித் தலைவரின் கொள்கையை,

> “எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு
> இல்லாமை இல்லாத நிலை வேண்டும்”

என்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு, மக்கள் நலத் திட்டங்களின் பயன்களை, மக்களிடம் தொடர்ந்து கொண்டு சேர்த்து வருகிறது.

பிற்பகல் 3–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 முதல் 2019 வரை 2,150 பருவ கால பட்டியல் எழுத்தர்களும், 1,171 எடையாளர்களும், பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், பணியின்போது மரணமடைந்த தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பட்டியல் எழுத்தர், அலுவலக உதவியாளர், காவலர், எடையாளர் பணி நிலையில் 330 நபர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த பணி நியமனங்களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் பெருமையோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், மாட்டு வண்டி ஏறி லாவகமாக கயிறு பிடித்த விதமும், வேட்டியை மடித்துச் கட்டி சேற்றில் நடந்த அழகும், வயலில் இறங்கி, விவசாயப் பெருமக்களோடு நாற்று நட்ட பாங்கும், அப்பப்பா! (மேசையைத் தட்டும் ஒலி) என்றைக்குமே நம்மை விமர்சிக்கும் கொள்கை கொண்ட எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும், உங்கள் முதல்வர் எங்களையும் ஒரு உலுக்கு உலுக்கிவிட்டார் என்று மனதாரப் பேசியதைக் காதாரக் கேட்க முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையான ஆர்வமும், அயராத உழைப்பும், உண்ணும் பொழுதும், உறங்கும்பொழுதும் வெற்றியே சிந்தனையாய், தாம் கொண்ட செயலை வெற்றியுடன் முடிக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில் மாண்புமிகு அம்மாவின் அரசு இலட்சியப் பாதையில் வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கிறது.

பொங்குகிற கடலாக, பொழியக் கூடுகிற மேகமாக, புரட்சித் தலைவர் என்கிற பொன்னொளியின் வார்ப்பில் புறப்பட்ட இந்த இயக்கம், தன் முதல் வெற்றியை, திண்டுக்கல் இடைத்தேர்தல் மூலமாகத்தான் வரலாற்றுப் பக்கங்களில் வரவு வைத்தது. அந்த மன்னாதி மன்னனின் பாதத் தடத்தில் பயணித்த எங்களின் மகராசி அம்மாவும், மதுரை கிழக்கு, மருங்காபுரி என்னும் இரு தொகுதிகளின் இடைத்தேர்தல் வெற்றியின் மூலமாகத்தான், தனது புரட்சிகர ஆட்சி அமைய புறப்பாடு நடத்தினார். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று திராவிட அரசியலின் திருப்புமுனைக் காலமாக, அம்மாவின் அரசையும், ஆளுமைமிக்க நம் இயக்கத்தையும் வழிநடத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், நாங்குநேரி, விக்கிரவாண்டி என்னும் இடைத்தேர்தல்களின் வெற்றிகள் மூலமாகத்தான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் அப்பழுக்கற்ற திராவிட இயக்கத்தின் நான்காம் அத்தியாயத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் உறுதியோடு கூறுகிறேன், எத்தனை தேர்தல் வந்தாலும், அது எப்போது வந்தாலும், அம்மாவின் ஆட்சியே தொடரும். (மேசையைத் தட்டும் ஒலி) 2021–ல் சட்டமன்ற பொதுத் தேர்தலில் இரட்டை இலைதான் வெல்லும், இரட்டை இலையே வெல்லும் என்று கூறி,

(மேசையைத் தட்டும் ஒலி) “கரிகாலன் பேர் வாழும் கல்லணையில் கொள்ளிடத்தில் காணும் இடமெல்லாம் தாவிப் பெருகி வந்து தஞ்சை வளநாட்டைத் தாயாகிக் காப்பவளாம் தனிக்கருணை காவேரி போல்”, ‘நீங்க நல்லா இருக்கோணும் இந்த நாடு முன்னேற’ எனச் சொல்லி, எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு, துறை சார்ந்த புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன். காலத்தின் அருமை கருதி அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் தற்போது படிக்கிறேன். அறிவிப்புகள் முழுவதையும் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று அன்போடு வேண்டுகிறேன்.

அறிவிப்புகள்

1. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை (நகரம்) தெற்கு சரகத்தில் புதியதாக மதுரவாயல் மண்டலம் ஒன்றினை உருவாக்கி உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை உதவி ஆணையாளர் அலுவலகம் 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உணவுப் பொருள் வழங்கல் துறையினால் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் சேவைகளை அவர்களின் வசிப்பிடங்களுக்கு அருகிலேயே நேரடியாகப் பெறும் வகையில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை (நகரம்) வடக்கு/தெற்கு சரகங்களில் அம்பத்தூர் மண்டலம், வில்லிவாக்கம் மண்டலம் மற்றும் தி.நகர் மண்டலம் ஆகிய மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. பெருகி வரும் மக்கள் தொகையினால் சென்னை புறநகர்ப் பகுதிகள் அதிவேகமாக விரிவடைந்து வருகின்றன. எனவே, இச்சேவைகள் தொடர்ந்து வழங்கிட மேற்காணும் மண்டலங்களிலிருந்து சில பகுதிகளைப் பிரித்து மொத்தம் 1,31,466 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்ட 93 நியாய விலைக் கடைகளுடன் புதியதாக “மதுரவாயல் மண்டலம்” ஒன்றினை சென்னை (நகரம்) தெற்கு சரகத்தில் உருவாக்கி உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை உதவி ஆணையாளர் அலுவலகம் 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

2. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள்மூலம் மாவட்ட அளவில் நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அளிக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அனைத்து மாவட்டங்களிலும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் வாயிலாக மாவட்ட அளவிலான நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்படும். இதற்காக, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சுமார் 500 அலுவலர்களுக்கு மொத்தம் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அண்ணா மேலாண்மை நிலையம்மூலம் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும்.

3. சேமிப்புக் கிடங்குகளுக்கு ஏற்படும் வாடகைச் செலவினத்தை தவிர்க்கும்பொருட்டு 18 இடங்களில் 41,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சொந்த சேமிப்புக் கிடங்குகள் 62.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான மொத்தம் 246 கிடங்குகள் 11.36 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் பயன்பாட்டில் உள்ளன. இவற்றின் கொள்ளளவு, தேவைக்கு போதுமானதாக இல்லை என்பதால் 1.51 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளை பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து வாடகைக்கு எடுத்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் ஒரு கணிசமான அரசுத் தொகை வாடகைக்கென செலவழிக்கப்படுகிறது. மேலும், எதிர்காலத்திற்கு இருப்பு வைப்பதற்கு தேவைப்படும் கொள்ளளவினைக் கருத்தில்கொண்டும், மண்டலங்களின் அத்தியாவசியக் கிடங்குத் தேவையின் அடிப்படையில் கூடுதலாக 41,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் 18 இடங்களில் தேவைப்படுகின்றன. எனவே, அரசு வாடகை செலவினத்தைக் குறைக்கும்பொருட்டு தனியார் கிடங்குகளுக்கு மாற்றாக 41,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் கிடங்குகளை 18 இடங்களில் 62.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் அரிசியில் உள்ள கருப்பு அரிசியை நீக்கும் அதிநவீன இயந்திரம் (5MT/Hr Capacity Colour Sortex Machine) 18.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்போது 15 நவீன புழுங்கல் அரிசி அரவை ஆலைகளும், 6 நவீன பச்சரிசி அரவை ஆலைகளும், ஆக மொத்தம் 21 நவீன அரிசி ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரிசியின் தரத்தினை மேலும் உயர்த்துவது அவசியமாகிறது. எனவே, அம்மன்பேட்டை, திருநாகேஸ்வரம், பட்டுக்கோட்டை, திருவாரூர், சுந்தரக்கோட்டை, எருக்கூர் பகுதி–1, எருக்கூர் பகுதி–2, சித்தர்காடு, ஆக்கூர், நெய்வேலி, சிதம்பரம், போளூர், செய்யார், மானாமதுரை, கடச்சனேந்தல், தாழையூத்து, பொள்ளாச்சி, திம்மாவரம், அதவத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் திருக்கோவிலூர் ஆகிய 21 நவீன அரிசி ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் அரிசியில் உள்ள கருப்பு அரிசியை நீக்கி மேலும் தரம் உயர்ந்த அரிசியை பொதுமக்களுக்கு வழங்கிடும்வண்ணம் அரிசியில் உள்ள கருப்பு அரிசியை நீக்கும் அதிநவீன இயந்திரங்கள் (5MT/Hr Capacity Colour Sortex Machine) 21 எண்ணிக்கையில் 18.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் நிறுவப்படும்.

5. திறந்தவெளி சேமிப்பு மையங்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், கிடங்குகள் ஆகியவற்றில் சேமிக்கப்படும் உணவு தானியங்களின் ஈரப்பதத்தினை ஆய்வு செய்வதற்கு 200 எண்ணிக்கையிலான ஈரப்பதமானிகள் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திறந்தவெளி சேமிப்பு மையங்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், கிடங்குகள் ஆகியவற்றில் சேமிக்கப்படும் உணவு தானியங்களின் ஈரப்பதத்தினை ஆய்வு செய்வதற்கு 200 எண்ணிக்கையிலான ஈரப்பதமானிகள் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

6. கிடங்குகளில் உணவு தானியப் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அட்டிகளில் மாலை நேரப் பூச்சிகள் தாக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு 1,000 எண்ணிக்கையிலான புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் உணவு தானிய பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அட்டிகளில் உள்ள உணவு தானியங்களைச் சேதப்படுத்தும் பூச்சிகள் அட்டிகளில் இருந்து மாலை நேரத்தில் வெளி வருவதனை புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் ஈர்ப்பதால் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இயலும். மேலும், பூச்சிக்கொல்லி மருந்துகள் கொள்முதல் செய்வதனைக் குறைத்து புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள்மூலம் பூச்சிகளை கட்டுக்குள் கொண்டு வருவது அவசியமாகிறது. எனவே, 1,000 எண்ணிக்கையிலான புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

7. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லைத் தூற்றி சுத்தம் செய்ய 500 எண்ணிக்கையிலான நெல் தூற்றும் இயந்திரங்கள் 1.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், அரியலூர், திருச்சி, பெரம்பலூர் மண்டலங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் விவசாயிகளிடம் இருந்து வரும் நெல்லைத் தூற்றி சுத்தம் செய்து தரமாகக் கொள்முதல் செய்வதற்கு நெல் தூற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு 500 எண்ணிக்கையிலான நெல் தூற்றும் இயந்திரங்கள் 1.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

பிற்பகல் 3–30

8. கிடங்குகள், திறந்தவெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உணவு தானியங்களை பாதுகாப்பாக சேமிப்பதற்கும் மற்றும் காற்றோட்டமான வசதி அமைந்திட 50,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச்செருகுக் கட்டைகள் (Poly Pallets) 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சொந்தக் கிடங்குகள் மற்றும் வாடகைக் கிடங்குகள், திறந்த வெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் சேமிக்கப்படும் உணவு தானியங்களை தரைக்கும், உணவு தானிய அட்டிகளுக்கும் இடையே மூட்டை இடைச் செருகுக் கட்டைகள் (Poly Pallets) ஈரக்காப்பு மரக்கூளங்களாக (Dunnage) பயன்படுத்தும்போது சிறந்த காற்றோட்ட வசதிக்கும், உணவு தானியப் பொருட்களை தரம் குறையாமல் சேமிப்பதற்கும் வழிவகை செய்கிறது. எனவே, 50,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச்செருகுக் கட்டைகள் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

9. சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமாக உயர் தொழில்நுட்பத்துடன் தினசரி 100 மெட்ரிக் டன் அரவைத் திறனுடன்கூடிய புதிய நவீன அரிசி ஆலை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 15 நவீன புழுங்கல் அரிசி அரவை ஆலைகளும், 6 நவீன பச்சரிசி அரவை ஆலைகளும், ஆக மொத்தம் 21 நவீன அரிசி ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்திலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக பெறப்பட்ட நெல்லினை பொது விநியோகத் திட்டத்திற்காக அரவை

செய்யப்படுகிறது. விவசாயிகளின் நலன் கருதி கொள்முதல் செய்யப்படும் நெல்லினை உடனடியாக அரவை செய்திட ஏதுவாக கூடுதலாக ஒரு நவீன அரிசி ஆலை நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய நவீன இயந்திரங்களைக் கொண்டு தினசரி 100 மெட்ரிக் டன் அரவைத் திறனுடன்கூடிய புதிய நவீன அரிசி ஆலை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் நிறுவப்படும்.

10. தேனி மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் விளைபொருட்களான காய்கறிகள், புளி, பழங்கள், தானியங்கள் மற்றும் பூக்கள் ஆகியவற்றை சூரிய ஒளி பயன்பாட்டுடன் குளிர்சாதன முறையில் சேமித்திட 500 மெட்ரிக் டன் கொள்ளளவில் தலா ரூபாய் 2.5 கோடி வீதம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குளிர்பதனக் கிடங்குகள் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் தேனி மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய இரண்டு இடங்களில் விளையும் பொருட்களான காய்கறிகள், புளி, பழங்கள், தானியங்கள் மற்றும் பூக்கள் ஆகியவற்றை சூரிய ஒளி பயன்பாட்டுடன் குளிர்சாதன முறையில் சேமித்திட 500 மெட்ரிக் டன் கொள்ளளவு திறன் கொண்ட குளிர்பதனக் கிடங்குகளை ஒவ்வொன்றும் தலா ரூபாய் 2.50 கோடி வீதம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிதியினைக் கொண்டு நிறுவப்படும்.

11. அம்பாசமுத்திரம் மற்றும் வத்தலகுண்டு ஆகிய சேமிப்புக் கிடங்குகளில் 60 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு எடைமேடைகள் 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் அம்பாசமுத்திரம் மற்றும் வத்தலகுண்டு ஆகிய சேமிப்புக் கிடங்குகளில் 60 மெட்ரிக் டன் திறன் கொண்ட முற்றிலும்

மின்னணுமயமாக்கப்பட்ட இரண்டு எடைமேடைகள் 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நிதியிலிருந்து அமைக்கப்படும்.

12. இந்திய உணவுக் கழகத்தின் உணவு தானியங்களை சிறந்த முறையில் பராமரித்திடும் பொருட்டு தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது 15,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச்செருகுக் கட்டைகள் (Poly Pallets) 4.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பல்வேறு சேமிப்புக் கிடங்குகளில் உபயோகிக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள இந்திய உணவுக் கழக உணவு தானியங்களை விஞ்ஞான முறைப்படி பராமரிக்க அனைத்து சேமிப்புக் கிடங்குகளிலும் 15,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச்செருகுக் கட்டைகள் (Poly Pallets) தலா ரூபாய் 3,000 வீதம் 4.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்படும்.

13. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, சென்னை அலகினை 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை வடக்கு மற்றும் சென்னை தெற்கு என இரண்டு அலகுகளாகப் பிரிக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, சென்னை அலகு குறைந்த எண்ணிக்கையிலான 13 காவல் ஆளினர்களைக் (Police Personnel) கொண்டு இயங்கி வருகிறது. தற்போது தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளிலிருந்து காவல் ஆளினர்கள் அயல் பணியில் பெறப்பட்டு இரயில்மூலம் கடத்தப்படும் பொது விநியோகத் திட்ட அரிசியைக் கைப்பற்றி கடத்தல் நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, துணை ஆணையாளர் (நகரம்), வடக்கு மற்றும் தெற்கு

அவர்களால் வரையறுக்கப்பட்ட எல்லையைக் கொண்டு பரந்து விரிந்த சென்னை அலகின் எல்லையைக் கண்காணிக்கும்பொருட்டு தற்போது இயங்கி வரும் சென்னை அலகினை 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வடசென்னை மற்றும் தென்சென்னை என இரண்டு அலகுகளாகப் பிரிக்கப்படும்.

14. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் 6 அலகுகளுக்கு 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வேலூர், திருவாரூர், பொள்ளாச்சி, உத்தமபாளையம், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய 6 குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் அலகுகளுக்குச் சொந்தமாக புதிய கட்டடம் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

15. குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை மதுரை மண்டலம், காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் மதுரை மண்டலம் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்த அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுத் துறையில் எனக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றி வருகின்ற உணவு மற்றும் கூட்டுறவுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிருவாக இயக்குநர் அவர்களுக்கும், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளர் அவர்களுக்கும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிருவாக இயக்குநர் அவர்களுக்கும்,

உணவுப்பொருள் குற்றப் புலனாய்வு காவல் துறை இயக்குநர் அவர்களுக்கும், என்னுடைய உதவியாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின்மீதான என்னுடைய பதிலுரை மாமன்ற உறுப்பினர்களுக்கு நிறைவாக இருந்திருக்கும் எனக் கருதுகிறேன். மாமன்ற உறுப்பினர்கள் 159 வெட்டுத் தீர்மானங்களை அளித்துள்ளார்கள். அவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு மயிலம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள், இந்த அரசில் பொது விநியோகத் திட்டத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் நொந்து நூலாகி இருக்கிறார்கள், இந்த அரசு எதுவுமே செய்யவில்லை, இந்த அரசினுடைய திட்டங்களை அவர்கள்தான் கொண்டு செல்கிறார்கள் என்கிற அடிப்படையில் இங்கே பேசினார். மாண்புமிகு அம்மாவின் அரசு என்னென்ன செய்துள்ளது என்பதையும், இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் எந்தளவுக்கு விற்பனையாளர்களுக்கும், எடையாளர்களுக்கும் செய்திருக்கிறார்கள் என்பதையும் சட்டவிதிகளின்படி இப்போது அமைத்திருக்கிற குழு செய்திருக்கின்ற பரிந்துரைகளின் அடிப்படையில், படிப்படியாக என்னென்ன சலுகைகள் தந்திருக்கிறோம் என்பதையும்தான் நான் இங்கே விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருந்தேனேயொழிய, யாரையும் நான் குற்றமோ, குறையோ, தவறாகவோ சொல்லவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்றார் பேரறிஞர் அண்ணா. அவர் காட்டிய வழியில் அணுவளவும் பிசகாது அயராது உழைக்கும் இயக்கம், ஒரு குடும்பம் மட்டுமே வாழ உழைக்கின்ற இயக்கமல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழினம் வாழ உருகும் மெழுகாக உழைக்கின்ற இயக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்ந்த வயிறுகளும், கூரை வேய்ந்த குடிசைகளும் நம் புரட்சித் தலைவரின் குழந்தைச் சிரிப்புக்கும், குல்லாவுக்கும், கண்ணாடிக்கும் இன்றும், என்றும் நிரந்தர அன்பின் அடிமைகள். (மேசையைத் தட்டும் ஒலி) ஓலைக் குடிசைக்கும் ஒரு விளக்கு ஏற்றி வைத்த தமிழகத்தின் தாமஸ் ஆல்வா எடிசன்.

"மாபெரும் சபைதனில் நீ நடந்தால்
உனக்கு மாலைகள் விழ வேண்டும்
ஒரு மாற்றுக் குறையாத மன்னவன்
இவனென்று போற்றிப் புகழ வேண்டும்"

என்று பொது வாழ்வின் இலக்கணத்தைப் போதித்த எங்கள் போதி தர்மர்.

பிற்பகல் 3–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட கழகத்தை முக்கடல் சூழ்ந்த பாரதத்தின் மூன்றாம் பெரும் இயக்கமாக மாற்றிக் காட்டியவர்; தமிழ் மொழி காத்திட்ட தன்னிகரில்லாப் பொக்கிஷம்; கன்னித் தமிழ்நாடு காக்க கடவுள் தந்த அன்னைத் திருமகள்; தாய் மண்ணுக்கு வாய்த்திட்ட நம் தமிழர் குலசாமி; தனக்குப் பின்னாலும் கழகம்தான் தமிழகத்தை நூறு ஆண்டுகள் ஆள வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை நமக்குக் கட்டளையாய் இட்டுவிட்டு கடலோரம் துயில்கொள்ளும் நம் காவல் தெய்வம்; யாரென்று தெரியாதவர்களையும், ஊரே நின்று பார்க்கும் வண்ணம், எளியோரது கரத்திற்கு வரமாகத் தந்திட்ட எங்களது 8–வது அதிசயம்; தெய்வத்தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கமலப் பாதங்களில் என் கண்ணீர் கசியும் வணக்கங்களை சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு, அடக்கம், அறிவுக்கூர்மை, நேர்மை, நிதானம், நேர்கொண்ட பார்வை, சொல்லில் உறுதி, செயலில் வலிமை, இலக்கை நோக்கிய பயணம், எடுத்த காரியம் யாவிலும் வெற்றி, வெற்றி, வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) சாமானியரின் முதல்வர், சரித்திரம் வியக்கும் சாகசங்களின் முதல்வர். 'இதுதாண்டா ஆட்சி, இப்படித்தாண்டா இருக்கணும் ஆட்சி' என்று பாமரராலும் பாராட்டப்படும் ஆட்சி. இந்தியாவிற்கே வழிகாட்டும் சாதனைகளை புயல் வேகமாக்கி, புதுமைகளால், புரட்சிகளால் 2021 ஆம் ஆண்டிலும் கழகத்தின் ஆட்சிதான் (மேசையைத் தட்டும் ஒலி) இனி தமிழகத்தில் என்பதனை இவ்வுலகிற்கு உரைக்கும் புன்னகைப் போராளி; உழவன் வீட்டில் உதித்த முதல்வன்; உலகத் தமிழினம் வாழ்த்தும் ஒப்பில்லா தமிழர்; கழகத்திற்குப் பூபாளம் இசைக்க வந்த காவேரிக் காப்பாளன் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பிட்ட இயக்கத்தை உயிராக, உதிரமாகக் காத்து நிற்கும் உன்னதமான மாமனிதனாக, கழகத்திற்கு இவ்வுலகம் தந்த பரதனாக, எளிமைக்கே இலக்கணம் வகுத்த இணையில்லாத் தலைவனாக, நிறைய யோசித்து, நிதானமாகச் செயல்பட்டு, பூக்களுக்கும் புன்னகையைக் கற்றுத்தரும் எங்கள் தென்பாண்டி மண்டலம் தந்த கொடை, காலம் நமக்குத் தந்த விடை, (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை உயரத்திற்குச் சென்றாலும் அடக்கம் ஒன்றையே கேடயமாகக் கொண்டு கழகத்தையும், தொண்டர்களையும் ஒருங்கிணைத்து, கண்ணை இமை காப்பதுபோல் இந்த அரசுக்குத் துணை நின்று, எங்களைப் பாசத்தோடும், நேசத்தோடும் வழிநடத்துபவர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி)

நீதி நெறி காத்து, நேர்மைவழி பூத்து, மக்களுக்கான சட்டமும், நீதியும் நிலைநாட்டப்படும் இப்பேரவையை சத்தியத்தின் வழி நின்று சாண் அளவுகூட விலகாது, இப்புனிதமிக்க பேரவையைப் புகழ்செழிக்க வழி நடத்தும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி)

விழிக்கு இமையாக, விரலுக்கு நகமாக இருந்து, இந்த நல்லாட்சி திருச்சபையைத் தொன்மை குன்றாது துணையிருந்து வழிநடத்தும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! வண்ணங்களால் ஒளிவீசும் வானவில்போல, நல்லெண்ணங்களால்

மொழி பேசும் அமைச்சர் பெருமக்களே! சட்டமன்ற உறுப்பினர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில் தொடர்ந்து 10–வது முறையாக கூட்டுறவுத் துறையின் மானியக் கோரிக்கையினை சிறப்புமிக்க இப்பேரவையில் சமர்ப்பித்து பதிலுரையாற்றுகின்ற பாக்கியத்தை எனக்களித்த இதய தெய்வம் அம்மா அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் மீண்டும் ஒருமுறை வணங்கி என் பதிலுரையைத் துவங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’, ‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு’, ‘கூட்டுறவே நாட்டுயர்வு’. கூட்டுறவு என்பது கூடி வாழ்வது, சேர்ந்து சிந்திப்பது, இணைந்து செயல்படுவது; ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் பாடுபடுவதுதான் கூட்டுறவின் தத்துவம்.

பிற்பகல் 3–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கூட்டுறவு வரலாற்றில் தமிழ்நாட்டில்தான் முதன்முதலில் 1904 ஆம் ஆண்டில் அதாவது 116 ஆண்டுகளுக்கு முன்பாகவே விவசாயிகளுக்காக திருவள்ளூர் மாவட்டம், திரூர் என்ற கிராமத்தில் விவசாய கூட்டுறவுச் சங்கமும், நுகர்வோருக்காக சென்னை திருவல்லிக்கேணியில் நகர கூட்டுறவுச் சங்கமும் 1905 ஆம் ஆண்டில் நகர்ப்புற மக்களுக்காக பெரியகாஞ்சிபுரத்தில் நகர கூட்டுறவு வங்கியும் துவக்கப்பட்டு, இன்று கூட்டுறவுத் துறையின்கீழ் மட்டும் 7,524 சங்கங்களுடன் இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்பதில் நாமெல்லாம் பெருமைகொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

‘காடு வெளஞ்சென்ன மச்சான்,
நமக்கு கையுங்காலுந்தானே மிச்சம்’

என கண்கலங்கிய விவசாயிகளை எண்ணி,

‘நானே போடப்போறேன் சட்டம் பொதுவில்
நன்மை புரிந்திடும் திட்டம்’

என்றார் புரட்சித் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் கூறிய அந்த வரிகளுக்கேற்ப வேளாண்மைப் பொருளாதாரத்தை மேம்படுத்த கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வட்டியில்லா பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2011–2012 ஆம் ஆண்டு முதல் 7–3–2020 வரையில் மாநிலத்திலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 93,46,917 விவசாயிகளுக்கு 50,255 கோடியே 70 இலட்சம் ரூபாய் அளவுக்கு பயிர்க் கடன் வழங்கி சாதனை படைத்துள்ளோம் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா வழியில் ஆட்சி நடத்தும் அண்ணன் எடப்பாடியார் அவர்களது அரசால், கடந்த 16–2–2017 முதல் 7–3–2020 வரையில் 36,21,144 விவசாயிகளுக்கு 23,562 கோடி ரூபாய் அளவுக்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுகளில் வழங்கிய பயிர்க் கடன் தொகை 9,163 கோடி ரூபாய் மட்டுமே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 1–4–2020 முதல் பயிர்க் கடன் மற்றும் நகை அடமானத்தின் பேரிலான பயிர்க் கடன் ஆகியவை விவசாயக் கடன் அட்டைத் திட்டத்தில் வழங்கினால் மட்டுமே வட்டி மானியம் வழங்கப்படும் என தெரிவித்துள்ள நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும், விவசாயக் கடன் அட்டைகள்மூலம் தங்குதடையின்றி பயிர்க் கடன் வழங்கப்படும் என்பதை இந்தப் பேரவையில் உறுதி செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் உறுப்பினர்கள் கேட்டார்கள், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடாகூட கேட்டார்; அவர்களுக்கெல்லாம் இந்தப் பதில் தெளிவாக இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு) தலைமை]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

“வானம் பொழியுது! பூமி விளையுது!
தம்பிப் பயலே–நாம்
வாடி வதங்கி வளப்படுத்துறோம் வயலே–ஆனா
தானியமெல்லாம் வலுத்தவனுடைய கையிலே”

என்று ஏங்கித் தவித்த சிறு, குறு விவசாயிகளின் துயர் துடைக்க அவர்கள் விளைவித்த பொருட்களை இருப்பு வைத்து, விலை ஏற்ற காலங்களில் அதிக விலைக்கு விற்றுப் பயனடையும் வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 29–2–2020 வரை 2,01,805 விவசாயிகளுக்கு 2,555 கோடியே 45 இலட்சம் ரூபாய் தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ஏதுவாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு 533.78 கோடி ரூபாய் செலவில் 5,47,100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4,044 கிடங்குகள் மாண்புமிகு அம்மாவின் அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏற்பட்ட வறட்சி, புயல், பெரும் மழை, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் இடர்பாடுகளிலிருந்து விவசாயிகளுக்கு ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கும்பொருட்டு பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 29–2–2020 வரையில், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அதிக அளவாக 36,44,000 விவசாயிகளுக்கு 7,618 கோடி ரூபாய் பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. பயிர்க் கடன் தள்ளுபடி, குறுவை சம்பா தொகுப்பு என பல்வேறு வகைகளில், 1,58,62,332 விவசாயிகளுக்கு 21,061.29 கோடி அளவுக்கு பல்வேறு நிவாரணங்கள்மூலம் சலுகைகள் வழங்கியுள்ளோம் என்பதை இம்மாமன்றத்தில் பெருமையோடு பதிவுசெய்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘காலந்தோறும் பாடம் கூறும், மாறுதல் இங்கே தேவை’ என்ற புரட்சித் தலைவரின் பாடலுக்கேற்ப தேசிய மற்றும் தனியார் வங்கிகளுக்கு இணையாக தொடக்க வகை சங்கங்கள் முதல் மாநில அளவிலான சங்கங்கள் வரை மொத்தம் 7,701 சங்கங்களில் நவீனமயம், பாதுகாப்பு வசதிகள், உட்சுற்று கேமராக்கள், புதிய கட்டடங்கள் என மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவையாற்றி, அபரிமிதமான வளர்ச்சி பெற்றுள்ளன என்பதை இங்கே பெருமையோடு பதிவு செய்கிறேன்.

பிற்பகல் 3–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசின்மீதும், கூட்டுறவு அமைப்புகள்மீதும், பொது மக்களிடம் ஏற்பட்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையால், கூட்டுறவு வங்கிகளில் 31–3–2011 அன்று 26 ஆயிரத்து 245 கோடியே 17 இலட்சம் ரூபாயாக இருந்த வைப்புத் தொகை தற்போது 56 ஆயிரத்து 85 கோடியே 57 இலட்சம் ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. அதாவது, கடந்த தி.மு.க. ஆட்சியில் இருந்ததைவிட இரண்டு மடங்கு வைப்புத் தொகை உயர்ந்துள்ளது என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வைப்புத் தொகையைக் கொண்டு விவசாயிகள் மட்டுமல்லாமல், “எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்” என்ற மக்களாட்சித் தத்துவத்தின்படி, அம்மா அவர்களின் அரசால் அனைத்துத் தரப்பினருக்கும் பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 3,54,961 நபர்களுக்கு ரூ.2,712 கோடி பண்ணைசாராக் கடனும், 6 கோடியே 10 இலட்சம் நபர்களுக்கு ரூ.2,35,221 கோடி நகைக் கடனும், ஒரு இலட்சத்து 36 ஆயிரம் நபர்களுக்கு ரூ.4,504 கோடி வீட்டு வசதிக் கடனும் இதுவரை வழங்கப்பட்டுள்ளன என்பதை இங்கே பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

‘பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்.’

என்றார் பாரதியார்.

‘மங்கையராய் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா!’

என்றார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. அவ்வகையில், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் ஆகியோரின் கனவை நனவாக்கும் வகையில், ஆணுக்குப் பெண் நிகராக வேண்டும் என்ற எண்ணத்தில், பெண்களின் நலனுக்காக ஏராளமான நலத் திட்டங்களைத் தீட்டியவர் என் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலுள்ள 6.96 இலட்சம் சுய உதவிக் குழுக்களில், கூட்டுறவுத் துறையின்

மூலமாக மட்டும் 3,77,681 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.6,403 கோடி சுய உதவிக் குழுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1,31,101 மகளிருக்கு ரூ.558 கோடி மகளிர் தொழில்முனைவோர் கடனும், 85,103 மகளிருக்கு ரூ.614 கோடி பணிபுரியும் மகளிர் கடனும் வழங்கப்பட்டுள்ளன என்பதை இங்கே பெருமையோடு பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வலியோர் ஏழையை வாட்டிடும் கொடுமை இனியொரு நாளும் நடக்காது" என்ற புரட்சித் தலைவர் பாடலுக்கேற்ப, ஏழை எளிய சிறு வணிகர்களான டீக்கடை, பெட்டிக்கடை, காய்கறி விற்போர், பூ விற்போர், நடைபாதை வியாபாரிகள் போன்றவர்களை கந்து வட்டிக்காரர்களின் கொடுமையிலிருந்து மீட்டெடுக்கும் வகையில், 15 இலட்சத்து 63 ஆயிரத்து 296 சாலையோர வியாபாரிகள் மற்றும் சிறு வணிகர்களுக்கு ரூபாய் ஆயிரத்து 921 கோடியே 85 இலட்சம் சிறு வணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல, மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரம் உயர, இந்தியாவிலேயே முதன்முதலில் 2002 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்குக் கடன் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள்தான் கொண்டு வந்தார்கள். மேலும், 2011 முதல் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கும் கடன்களுக்கு வட்டியே வேண்டாம் எனவும் அறிவித்தார்கள். அந்த வகையில், கடந்த 9 ஆண்டுகளில், 29–2–2020 வரை 62,047 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.254 கோடி வட்டியில்லாக் கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற பாடலுக்கேற்ப, மாநிலத்தில் உள்ள 34 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் 370 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் மூலமாக விலையேற்ற காலத்தில் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.100 கோடியில் விலை நிலைநிறுத்தும் நிதியத்தை ஏற்படுத்தினார்கள். இந்நிதியின்மூலம், அரிசி, துவரம் பருப்பு, புளி, மிளகாய்வற்றல், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தின்போது, அவை உற்பத்தியாகும் இடங்களிலேயே கொள்முதல் செய்து பொது மக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கி, விலைவாசியைக்

கட்டுப்படுத்துவதில் கூட்டுறவு அமைப்புகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. சில மாதங்களுக்கு முன், ஒரு கிலோ வெங்காயம் ரூ.160/– வரை வெளி மார்க்கெட்டுகளில் விற்கப்பட்டது. அப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணைக்கிணங்க, நமது கூட்டுறவு நிறுவனங்களில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.40/– முதல் ரூ.50/– வரை குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டது என்பதையும், இதனை அனைத்துத் தரப்பினரும் பாராட்டினார்கள் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நலமான மாநிலம், வளமான மாநிலம். ஆரோக்கியமான மக்களால்தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உண்மையாகப் பங்காற்ற இயலும்' என்ற அம்மாவின் அமுதமொழிக்கேற்ப, பொது மக்களுக்கு 116 அம்மா மருந்தகங்கள், 173 கூட்டுறவு மருந்தகங்களின் வாயிலாக 20 சதவிகிதம் வரை தள்ளுபடி விலையில் தரமான மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம் 946 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டன. குறிப்பாக, திருநெல்வேலியில் செயல்படும் அம்மா மருந்தகத்தில் மட்டும் நாளொன்றுக்கு 5 இலட்சம் ரூபாய்க்கு மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால், தனியார் மருந்துக் கடைகளில் தற்போது தள்ளுபடி விலையில் மருந்துகளை விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதைப் பெருமையோடு பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிச்சந்தையில் காய்கறி விலை உயர்வைக் கட்டுப்படுத்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், விவசாயிகளையும், நுகர்வோரையும் இடைத்தரகரின்றி இணைக்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட திட்டம்தான் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள். மாநிலத்தில் 3 நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் உட்பட 79 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்மூலம், தரமான காய்கறிகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. குறிப்பாக, தூத்துக்குடியில் உள்ள ஒரு கடையில் மட்டும் நாளொன்றுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறதென்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் 17–3–2020 வரை

53,370 மெட்ரிக் டன் காய்கறிகள் 157 கோடியே 85 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதோடு, காய்கறிகள் தங்குதடையின்றி மக்களுக்கு தொடர்ச்சியாகக் கிடைக்கும் வகையில் கூட்டுறவு வங்கிகளின் மூலமாக 3,565 கோடியே 21 இலட்சம் ரூபாய் அளவுக்கு வட்டியில்லா காய்கறி சாகுபடிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் கூட்டுறவுத் துறையின்மூலம் புதிதாக 33 பெட்ரோல்–டீசல் சில்லரை விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. மேலும், 9 நிலையங்கள் புதிதாகத் துவக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையங்கள் பொது மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதற்குச் சான்றாக, கடந்த 1–4–2019 முதல் 29–2–2020 வரையில் ரூ.340 கோடி அளவிற்கு பெட்ரோல், டீசல் விற்பனையாகியுள்ளது. இதன் பலனாக கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கூடுதல் ஆதாரங்கள் அதிகரித்து, இலாபத்துடன் செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை இங்கே பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தனியொருவனுக் குணவிலை யெனில்,
ஜகத்தினையழித்திடு வோம்'

என்றார் பாரதியார். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார் பேரறிஞர் அண்ணா, சத்துணவு தந்த சரித்திர நாயகன் நம் புரட்சித் தலைவர், விலையில்லா அரிசி தந்து, பசியில்லா மாநிலமாக தமிழகத்தை மாற்றினார் நம் இதய தெய்வம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வகையில் இந்திய வரலாற்றில் எந்த மாநிலத்திலும் செயல்படுத்திடாத விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தினை கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்படும் 32,965 நியாய விலைக் கடைகள்மூலம், மாதந்தோறும் அதிகபட்சம் ஒரு குடும்பத்திற்கு விலையில்லாமல் 45 கிலோ வரை அரிசி வழங்கப்படுகிறது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டப்படி முன்னுரிமை குடும்பங்களுக்கு மட்டுமே அரிசி வழங்க வேண்டுமென வலியுறுத்தியபோதும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, தகுதியுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் விலையில்லா அரிசி வழங்கி வருகிறது என்பதையும், பொது மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு 2011 முதல் நாளது தேதிவரையில் 2,428 நியாய விலைக் கடைகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன என்பதையும் 1,963 நியாய விலைக்

கடைகளுக்குப் புதிதாகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘உலகம் சமநிலை பெற வேண்டும், இங்கு உயர்வு தாழ்விலா நிலை வேண்டும்’ என்ற நிலையை உருவாக்க, மலைப் பகுதி மற்றும் எளிதில் அணுக இயலாத ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கே கொண்டு சென்று வழங்க 46 நகரும் நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன. இதனால் 351 குக்கிராமங்களில் உள்ள 28,674 குடும்பங்கள் பயனடைகின்றன. இதில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், 19 குடும்பங்களே உள்ள பெரியபழமலை, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையிலிருந்து 85 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மாவடைப்பு மற்றும் குழிப்பட்டி ஆகிய மலைக் கிராமங்களிலுள்ள மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கே சென்று அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு முழுவதும் இடவசதி உள்ள நியாய விலைக் கடைகளின் ஒரு பகுதியில் 703 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடி திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதுவரை 653 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் திறக்கப்பட்டு, 5 சதவிகித தள்ளுபடி விலையில், 300 வகையான பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. ஏழையெளிய, நடுத்தர மக்கள், தரமான பொருட்களை குறைவான விலையில் ரேஷன் கடைகளுக்கு வருகின்றபோது அந்தந்தப் பகுதிகளில் பெற்றுச் செல்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்ணனைப்போல கொடை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், மாநிலத்தில் தகுதியுள்ள 2 கோடியே 30 ஆயிரத்து 431 குடும்ப அட்டைகளில், 1 கோடியே 98 இலட்சத்து 20 ஆயிரத்து 999 குடும்ப அட்டைதாரர்களுக்கு, பொங்கல் தொகுப்புடன் ரூ.1,000/– அதாவது இரண்டு 500 ரூபாய் நோட்டுகளாக வழங்கினார்கள் என்பதை மகிழ்ச்சியோடும், பெருமிதத்துடனும் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு மட்டுமல்ல, கடந்த ஆண்டும் இரண்டு 500 ரூபாய் நோட்டுகளை வழங்கினார்கள் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கச் சங்கங்கள் முதல் தலைமைச் சங்கங்கள் வரையுள்ள அனைத்து கூட்டுறவு நிறுவனங்களிலும் பணிபுரியும் 22,048 பணியாளர்களுக்கு, வரலாறு காணாத அளவிற்கு, 21 சதவிகிதம் வரை சம்பள உயர்வு வழங்கியது அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு முறையல்ல, 2 முறை அளித்தது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமின்றி, அரசு ஊழியர்களுக்கு இணையாக, கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 41,061 பணியாளர்கள் மற்றும் அவர்களின் 1,14,986 குடும்ப உறுப்பினர்கள் என மொத்தம் 1,56,047 நபர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது என்பதையும் இங்கே பெருமையோடு பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த குடும்ப நல நிதியை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தியும், ஈமச்சடங்கு நிதியை ரூ.5,000/–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தியும், அரசு ஊழியர்களுக்கு இணையாக மாற்றுத் திறனாளிப் படி வழங்கியும், சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றும்போது குடும்ப அட்டைக்கு 50 காசு மற்றும் 2 சீருடைகள் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு உரிய காலத்திலே ஊதிய உயர்வு வழங்க குழு அமைக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள் சிறப்பான வளர்ச்சி பெற்றுள்ள நிலையில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் பொது நல நிதியிலிருந்து பாதுகாப்பு நடவடிக்கைக்காக காவல் துறையின்மூலம் சென்னை மாநகரில் சி.சி.டி.வி. அமைக்க ரூ.75 இலட்சமும், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நினைவிடத்திலே ரூ.25 இலட்சம் மதிப்பில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நிலையம், வருகை தருகின்ற பார்வையாளர்களுக்காக வழங்க கூட்டுறவுத் துறையால் மன நிறைவோடு அமைக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் ஆற்றி வரும் அளப்பரிய சாதனைகளால், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும், தமிழ்நாடுதான் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்பதற்குச் சான்றாக, தமிழ்நாட்டின் கூட்டுறவு அமைப்புகள், கடந்த 9 ஆண்டு காலத்தில் தேசிய அளவில் 28 விருதுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளன. குறிப்பாக, மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக அளவில் கடன் வழங்கியதற்காக 2 முறை மேதகு குடியரசுத் தலைவரிடம் தேசிய அளவிலான விருதுகள் பெறப்பட்டுள்ளன என்பதையும் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதல் முறையாக, கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் அமைத்து, 14 ஆண்டுகளுக்குப் பின்னர், இரண்டு முறை கூட்டுறவுத் தேர்தலை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுக்கள்மூலம் சங்கங்கள் ஜனநாயக முறைப்படி நிருவகிக்கப்பட்டு வருகின்றன என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவாக ஒரு கதை. குறை சொல்கிறார்கள் அல்லவா! அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்கூட, 'என்னப்பா, எப்போது பார்த்தாலும் புத்தகத்தையே வைத்துக் கொண்டிருக்கிறாய்' என்று என்னிடம் கேட்பார்கள். அதுமாதிரி படித்த ஒரு கதையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் சொல்கிறேன்.

'முல்லா' என்பவரின் கதைதான் அது. அந்தக் கதைதான் எனக்கு ஞாபகம் வருகிறது. முல்லா என்று ஒருவர் இருந்தார். அந்த முல்லாவிற்கு நண்பர்களும், தோழர்களும் இருந்தனர். அவர்களோடு சேர்ந்து, அவர் பாட்டுப் பாடிக்கொண்டு, ஊர் ஊராகப் போய் பேசிக் கொண்டிருந்தார். ஆனால், முல்லாவின் சொந்தக்காரர்கள் சும்மா இல்லாமல், முல்லாவிற்கு ஓர் ஆலோசனை சொன்னார்கள். 'முல்லா, கழுதையை பக்கத்தில் வாங்கி வைத்துக்கொண்டால், அதிர்ஷ்டம் வரும்' என்று சொல்லி முல்லாவை உசுப்பேற்றினார்கள். முல்லாவும் யோசித்தார். சரி, நம்முடைய உறவினர்கள் சொல்கிறார்களே, நன்றாகத்தானேபடுகிறது, செய்து பார்ப்போம் என்று, ஒரு நல்ல கழுதையை வாங்கி வைத்துக்கொள்வோம் என்று முடிவு செய்தார்.

பிற்பகல் 4–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லாவும் ஒரு கழுதையை வாங்கிவிட்டார். கழுதையை வாங்கியவுடன் முல்லாவை கையிலேயே பிடிக்க முடியவில்லை. கழுதை மேல ஏறி தினமும் நாலா பக்கமும் சென்றார். தன்னைச் சுற்றியுள்ளவர்கள் யார் கூப்பிட்டாலும், அவர் காதுக்குக் கேட்கவில்லை; கேட்கவே இல்லை. ஒரு நாள் எப்போதும் முல்லா கூடவே இருந்த ஒருவர் ரொம்ப கடுப்பாயிட்டார். ரொம்ப ரொம்ப கடுப்பாயிட்டார். முல்லாவைப் பார்த்து, 'முல்லா, நீங்கள் செய்வது சரியல்ல. இப்போது நீங்கள் எங்களையும் கண்டுகொள்வது இல்லை, யாரையும் கண்டுகொள்வது இல்லை. பார்ப்பதும் இல்லை; பேசுவதும் இல்லை; நாங்கள் கூப்பிட்டால்கூட நிற்பதில்லை. ஏன் என்றுகூட எங்களைக் கேட்பதே இல்லை. இது சரியில்லை முல்லா' என்று சொன்னார். உடனே முல்லா சொன்னார். 'நீங்கள் எப்போது என்னைக் கூப்பிட்டீர்கள், நீங்கள் எப்போது செய்தி சொல்ல வந்தீர்கள்' என்றார். உடனிருந்தவர், 'என்ன முல்லா இப்படி சொல்கிறீர்கள்! நீங்கள் தினமும் காலையில் கழுதைமீது போகும்போது கூப்பிடுவோம்; கண்டுகொள்ளவே மாட்டீர்கள்' என்றார். 'ஓ அப்படியா! கூப்பிட்டீங்களா! எப்போது?' என்றார் முல்லா. 'நீங்கள் கழுதை மேல போனீர்களே அப்போது' என்றார். அதற்கு முல்லா, 'கழுதை நான் சொல்வதையே கேட்க மாட்டேன் என்கிறது. Office–க்குப் போ என்று சொன்னால் வீட்டுக்குப் போகிறது, வீட்டுக்குப் போ என்று சொன்னால் office–க்குப் போகிறது; Airport–க்குப் போ என்று சொன்னால் Railway station–க்குப் போகிறது; Railway station–க்குப் போ என்று சொன்னால் Airport–க்குப் போகிறது. என் பேச்சை கழுதை கேட்பதே இல்லை. அதனால் கழுதை போகின்ற போக்கிலே நான் போகின்றேன்' என்றார் முல்லா. 'என் போக்குக்கு கழுதை போகவில்லை; அதனால கழுதை போக்கிலேயே நான் போகின்றேன். அது உங்களுக்கு தெரிகிறது அல்லவா! அதனால், உங்களுடைய பேச்சைக் கேட்கவில்லை, அவருடைய பேச்சை கேட்கவில்லை என்று யாரும் என்னிடத்தில் சொல்லாதீர்கள். என்னுடைய நிலைமை கழுதைப் போக்கிலேயே போவதாக ஆகிவிட்டது' என்றார் முல்லா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லா நிலைமை எப்படி பாவமோ அதுபோலத்தான் சிலருடைய நிலைமையும் ரொம்ப, ரொம்ப பாவம். அடுத்தவர் பேச்சைக் கேட்கிறவர்கள் சொல்கின்ற குறையை எல்லாம் நாம் யாரும் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மக்கள் பக்கம் நாம் இருக்கிறோம்; மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள்.” (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, பேரவைத் தலைவர் அவர்களே, “நாளை நமதே; நாடும் நமதே (மேசையைத் தட்டும் ஒலி) 2021–ம் நமதே; 234–ம் நமதே” என்று கூறி, என் துறை சார்ந்த அறிவிப்புகளை நான் வெளியிடுகிறேன். அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் நான் தற்போது படிக்கின்றேன். அறிவிப்புகளை நான் முழுமையாகப் படித்ததாகக் கருதி, அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

கூட்டுறவுத் துறை

1. 15 கூட்டுறவு நிறுவனங்களின் கட்டடங்களை ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் விரிவாக்குதல்

கூட்டுறவு நிறுவனங்களில் போதிய இட வசதி மற்றும் பாதுகாப்பு வசதிகளுடன் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவையினை வழங்கும்பொருட்டு, 10 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், 2 மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள், 1 நகரக் கூட்டுறவு வங்கி மற்றும் 2 நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆக மொத்தம் 15 கூட்டுறவு நிறுவனங்களின் தற்போதைய கட்டடங்கள் ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கப்படும்.

2. 10 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் ரூ.3.26 கோடி மதிப்பீட்டில் 19 புதிய கிளைகள் துவக்குதல்

மத்தியக் கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, அவர்களின் வசிப்பிடத்திற்கு அருகிலேயே வங்கிச் சேவையினை அளிக்க ஏதுவாகவும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் சேவையினை விரிவுபடுத்திடும்பொருட்டும், 2020–2021 ஆம் ஆண்டில் 10 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில், 19 புதிய கிளைகள் ரூ.3.26 கோடி மதிப்பீட்டில் துவக்கப்படும்.

3. 24 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.1.06 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்துதல்

கூட்டுறவு நிறுவனங்களில் வாடிக்கையாளர்களின் நகைகள், முக்கிய ஆவணங்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களைப்

பாதுகாத்திடவும், வாடிக்கையாளர்களின் மத்தியில் நன்மதிப்பினைப் பெற்றிடும் வகையிலும், 2 கூட்டுறவு நிறுவனங்களில் நவீன உயர்தர பாதுகாப்புப் பெட்டகங்கள் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 8 கூட்டுறவு நிறுவனங்களில் வாடிக்கையாளர் பாதுகாப்புப் பெட்டகங்கள் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 8 கூட்டுறவு நிறுவனங்களில் இரும்புப் பெட்டகங்கள் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 4 கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்புக் கதவுகள் ரூ.19.52 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 2 கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பு அறை ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 24 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.1.06 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

4. 9 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ரூ.3.69 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகங்களும், 3 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபங்களும் கட்டுதல்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வியாபார நடவடிக்கையை அதிகரித்திடவும், அதிக வருமானம் ஈட்டும்பொருட்டும், பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும் 9 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ரூ.3.69 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகங்களும், 3 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபங்களும் கட்டப்படும்.

5. 4 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.3.28 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல்

ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 1,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட புதிய கிடங்கு ரூ.101.92 இலட்சம் செலவில் கட்டப்படுவதுடன், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் 10,760 சதுர அடி உள்ள ஏலகளத்தில் ரூ.149.00 இலட்சம் செலவில் மேற்கூரையும், அரியலூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 10,000 சதுர அடியில் ரூ.27.00 இலட்சம் செலவில் ஏலகளமும் அமைக்கப்படும். மேலும், ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள்

கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய உலர்களம் ஒன்று அமைக்கப்படும்.

6. கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 10,100 சதுர அடியில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் கல்யாண மண்டபம் கட்டுதல்

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், சங்கத்திற்குச் சொந்தமான இடத்தில் 10,100 சதுர அடியில் கல்யாண மண்டபம் ஒன்று ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

7. சென்னை நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் இரண்டு படுக்கைகள் மற்றும் குளியல் அறையுடன்கூடிய 30 அறைகள் கொண்ட மகளிர் விடுதி ரூ.1.83 கோடி மதிப்பீட்டில் கட்டுதல்

சென்னை நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில், பெண்கள் பயனடையும் வகையில் தரமான பயிற்சி அளிக்கும்பொருட்டு, ரூ.183.28 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு படுக்கைகள் மற்றும் குளியல் அறையுடன்கூடிய 30 அறைகள் கொண்ட மகளிர் விடுதி கட்டப்படும்.

8. 8 மாவட்டங்களில் புதிதாக மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் துவக்குதல்

அரியலூர், கிருஷ்ணகிரி, திருப்பூர், தென்காசி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் செங்கல்பட்டு ஆகிய 8 மாவட்டங்களில் புதிதாக மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் தலா ரூ.15.00 இலட்சம் செலவில் ஆக மொத்தம் ரூ.120.00 இலட்சம் செலவில் துவக்கப்படும்.

9. காஞ்சிபுரம், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி ஆகிய மூன்று மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களை ரூ.73.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்குதல்

காஞ்சிபுரம், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி ஆகிய மூன்று மாவட்டக் கூட்டுறவு அச்சகங்கள் முறையே ரூ.10.00 இலட்சம்,

ரூ.33.00 இலட்சம் மற்றும் ரூ.30.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.73.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

10. 6 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் பதனிடும் அலகுகள் மற்றும் உலர்களம் ரூ.96.27 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்தல்

கடலூர் மாவட்டத்தில், கடலூர், பண்ருட்டி மற்றும் சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் முறையே ரூ.17.21, ரூ.16.41 மற்றும் ரூ.23.65 ஆக மொத்தம் ரூ.57.27 இலட்சம் செலவில் கடலெண்ணெய், நல்லெண்ணெய் பிழியும் அலகு, எண்ணெய் குப்பியிடும் அலகு ஆகியவை நிறுவப்படும். அத்துடன் சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கூடுதலாக உலர்களம் ரூ.1.00 இலட்சத்தில் அமைக்கப்படும். நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.6.00 இலட்சம் செலவில் மஞ்சள் தூள் பேக்கிங் அலகு ஒன்றும், ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் தேங்காய் எண்ணெய் பிழியும் அலகு ஒன்றும், சங்கரன்கோவில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.15.00 இலட்சம் செலவில் உளுந்து பதனிடும் அலகு ஒன்றும் நிறுவப்படும். மதுராந்தகம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் மிளகாய்த் தூள் அரவை இயந்திரம் ஒன்று ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

11. 4 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பதனிடும் அலகுகள் அமைத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.67.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்துதல்

கொல்லிமலை பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.18.00 இலட்சம் செலவில் காபி ரோஸ்டிங் அலகு ஒன்றும், சத்தியமங்கலம் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சிறுதானியங்கள் பதனிடும் அலகு ஒன்று ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டிலும் நிறுவப்படும். புதூர்நாடு பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும். சேலம் மாவட்டம், அருநூத்துமலை

பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

பிற்பகல் 4–05

12. கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தில் கலப்பு உரம் மற்றும் நவீன வேப்பம் பிண்ணாக்கு தயாரிக்கும் அலகுகள் ரூ.30.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்தல்

கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தில் ரூ.22.50 இலட்சம் செலவில் கூடாரத்துடன்கூடிய கலப்பு உரம் தயாரிக்கும் இயந்திரமும், ரூ.8.00 இலட்சம் செலவில் நவீன வேப்பம் பிண்ணாக்கு தயாரிக்கும் அலகும் ஆக மொத்தம் ரூ.30.50 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

13. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்மூலம் 4 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள் அமைத்தல்

அரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தால் அரூர் மற்றும் பொம்மிடி ஆகிய இரண்டு இடங்களிலும், தூத்துக்குடி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தால் தூத்துக்குடியிலும், பெரம்பலூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தால் பெரம்பலூரிலும் என மொத்தம் நான்கு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள் இந்தியன் ஆயில் நிறுவனத்துடன் இணைந்து அமைக்கப்படும்.

14. சிவகங்கை மற்றும் பெரம்பலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளில் 2 சுயசேவைப் பிரிவுகள் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் துவக்குதல்

வாடிக்கையாளர்களின் சேவையை மேம்படுத்தும் விதமாக, சிவகங்கை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் ரூ.130.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பெரம்பலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக

சாலையில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிலும் சுயசேவைப் பிரிவுகள் தொடங்கப்படும்.

15. இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் வாகன நிறுத்துமிடம் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்தல்

இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் வியாபாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, அருப்புக்கோட்டையில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கப்படும்.

16. தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு ரூ.12.04 இலட்சம் மதிப்பீட்டில் வாகனம் வாங்குதல்

தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின்மூலம் தொடக்கக் கூட்டுறவு பண்டக சாலைகளுக்கு விநியோகம் செய்திடும் கட்டுப்பாடற்ற பொருட்களை துரிதமாகக் கொண்டு செல்ல ஏதுவாக, ரூ.12.04 இலட்சம் மதிப்பீட்டில் வாகனம் (Lorry) வாங்கப்படும்.

17. ஈரோடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் ரூ.8.97 இலட்சம் மதிப்பீட்டில் பேக்கிங் இயந்திரம் நிறுவுதல்

துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, கடலைப் பருப்பு, பாசிப் பருப்பு, புளி, பூண்டு, மிளகாய் உள்ளிட்ட மளிகைப் பொருட்களை துரிதமாக சிப்பமிட்டு விற்பனை செய்திட ஏதுவாக, ஈரோடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் ரூ.8.97 இலட்சம் மதிப்பீட்டில் பேக்கிங் இயந்திரம் நிறுவப்படும்.

18. திருவள்ளூர், சிவகங்கை, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கடலூர், புதுக்கோட்டை மற்றும் விழுப்புரம் ஆகிய 7 மண்டலங்களில் ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் புதியதாக 21 அம்மா மருந்தகங்கள் தொடங்குதல்

நுகர்வோர்களுக்குத் தரமான மருந்துகளை நியாயமான விலையில் வழங்குவதற்கு ஏதுவாக, ஏற்கெனவே செயல்பட்டு

வரும் 116 அம்மா மருந்தகங்களுடன் திருவள்ளூர் மற்றும் சிவகங்கை மண்டலங்களில் தலா 4 அம்மா மருந்தகங்கள், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கடலூர் மற்றும் புதுக்கோட்டை மண்டலங்களில் தலா 3 அம்மா மருந்தகங்கள், விழுப்புரம் மண்டலத்தில் ஒரு அம்மா மருந்தகம் என 21 அம்மா மருந்தகங்கள் ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் கூடுதலாகத் திறக்கப்படும்.

19. காஞ்சிபுரம் மாவட்டம், நங்கநல்லூர் தொடக்கக் கூட்டுறவு பண்டக சாலையில் பெட்ரோல்/டீசல் வழங்கு நிலையம் அமைத்தல்

பண்டக சாலையின் வியாபாரத்தை அதிகரித்திடவும், பொது மக்களுக்குப் பயனளிக்கும் வகையிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள நங்கநல்லூர் தொடக்கக் கூட்டுறவு பண்டக சாலையில் பெட்ரோல்/டீசல் வழங்கும் நிலையம் அமைக்கப்படும்.

20. கொடைக்கானல் நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலையின் காலியிடத்தில் ரூ.1.06 கோடி மதிப்பீட்டில் விருந்தினர் இல்லம் கட்டுதல்

நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலையின் வியாபாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, திண்டுக்கல் மாவட்டத்தில் செயல்படும் கொடைக்கானல் கூட்டுறவு பண்டக சாலையில் ரூ.1.06 கோடி மதிப்பீட்டில் விருந்தினர் இல்லம் கட்டப்படும்.

21. புதியதாக உருவாக்கப்பட்ட இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு ஆகிய 5 மாவட்டங்களில் புதிய மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொடங்குதல்

தரமான நுகர்பொருட்களை நியாயமான விலையில் வழங்கிடவும், பண்டக சாலைகளின் இதர சேவைகளை பொதுமக்கள் மற்றும் நுகர்வோருக்கு அளித்திடவும், புதியதாகத் தொடங்கப்பட்டுள்ள இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் 5 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் புதியதாகத் தொடங்கப்படும்.

22. நீலகிரி, உடுமலைப்பேட்டை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மூன்று நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலைகளில் 4 வணிக வளாகங்கள் ரூ.6.49 கோடி மதிப்பீட்டில் கட்டுதல்

கூட்டுறவு பண்டக சாலைகளின் வியாபாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, நீலகிரி கூட்டுறவு நிறுவனத்திற்கு ரூ.114.00 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகமும், ரூ.103.00 இலட்சம் மதிப்பீட்டில் வாகனம் நிறுத்துமிடம் மற்றும் தங்கும் வசதியுடன்கூடிய வணிக வளாகமும், உடுமலைப்பேட்டை நகர கூட்டுறவு பண்டக சாலைக்கு ரூ.381.90 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகமும், புதுக்கோட்டை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகமும் ஆக மொத்தம் ரூ.6.49 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

23. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கு ரூ.7.12 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகம் கட்டுதல்

உறுப்பினர்களின் சேவையை மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கு ரூ.7.12 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அர. சக்கரபாணி, திரு. எஸ்.ஆர். இராஜா, திரு. கு. பிச்சாண்டி, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. செ. ராஜேஷ் குமார் உள்ளிட்ட பலர் 245 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். துறை சார்ந்த நல்ல பல ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவைமுன் எடுத்து வைத்துள்ளார்கள். இந்த வெட்டுத் தீர்மானங்களுக்கெல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பிலும், எனது பதிலுரையிலும் பல விரிவான விளக்கங்களை அளித்துள்ளேன். இந்தப் பதிலுரையை ஏற்று மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 12—கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,581,87,51,000/–, மூலதனக் கணக்கில் ரூ.27,64,54,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,25,55,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 13—உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன்

திரும்பப் பெறப்படுகின்றன.

“உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.361,40,05,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20–3–2020), வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–10 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

151. மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

152. மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர்

பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

153. “நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் சாதனைகள்” என்கிற சிறுநூல். (தமிழ்)

154. “பொதுப் பணித் (கட்டடங்கள்) துறையின் சாதனைகள்” என்கிற சிறுநூல். (தமிழ்)

155. “நீர்வள ஆதாரத் துறையின் மூன்றாண்டு சாதனைகள்” என்கிற சிறுநூல். (தமிழ்)

156. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

157. கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) மற்றும் பாசனம் (பொதுப் பணித் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(135 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு
(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முகவுரை

1. கூட்டுறவின் ஜனநாயகக் கோட்பாடு என்பது தமிழ்நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்னரே அறியப்பட்டு, ஏழை எளிய மக்களின் வாழ்வு மேம்பட "கூட்டுறவு இயக்கத்தை" நாட்டிற்கு அறிமுகப்படுத்தியதில், தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. 1904 ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்தில் திரூரில் முதல் வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டது. ஏழை மற்றும் அடித்தட்டு மக்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு கூட்டுறவுத் துறை முக்கிய பங்காற்றி வருகிறது.

2. கடன் மற்றும் பிற இடுபொருட்களை வழங்கி மாநிலத்தின் வேளாண் வளர்ச்சியில் மிகப்பெரிய தாக்கத்தை கூட்டுறவுச் சங்கங்கள் கொண்டு வந்துள்ளன. இடைத்தரகர்களின் குறுக்கீடின்றி வேளாண் விளைபொருட்களுக்கான உரிய விலை விவசாயிகளுக்குக் கிடைத்திட, கூட்டுறவுத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. கூட்டுறவுகள், உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்தல் மற்றும் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்தல் உட்பட நுகர்வோர் தேவைகளையும் நிறைவு செய்து, பெரும் பணியாற்றி வருகின்றன.

3. மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களால் விவசாயிகளுக்கு 7 சதவிகித வட்டியில் பயிர்க்கடன்கள் வழங்கப்படுகின்றன. உரிய காலத்தில் பயிர்க்கடனைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கான வட்டித் தொகையை முழுமையாக அரசே ஏற்றுக்கொள்கிறது. பயிர்க்காப்பீடு வழங்குவதுடன், கறவைமாட்டுக் கடன், டிராக்டர் கடன், சொட்டுநீர்ப் பாசனக் கடன் போன்ற வேளாண் முதலீட்டுக் கடன்களும் கூட்டுறவுகளால் வழங்கப்பட்டு வருகின்றன.

4. மலைவாழ் மக்களால் உற்பத்தி செய்யப்படும் சாமை, வரகு, புளி மற்றும் தேன் ஆகிய பொருட்களை விற்பனை செய்வதற்கு

உதவி அளித்தும், பதனிடும் அலகுகள் அமைத்தும் உரிய விலையினை இடைத்தரகர்கள் இன்றி முழுமையாகப் பெற்றிட கூட்டுறவு நிறுவனங்கள் துணை நின்று வருகின்றன.

5. நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் மற்றும் தொடக்க கூட்டுறவு பண்டக சாலைகள் பொதுமக்களுக்கு அத்தியாவசிய நுகர்பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு, வெளிச்சந்தையில் விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்காக தனியாக விலை நிலைப்படுத்தும் நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றின்மூலம் மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புற பகுதிகளில், பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் கூட்டுறவுகள்மூலம் திறக்கப்பட்டு, தரமான காய்கறிகள், நியாயமான விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

6. தமிழ்நாட்டில், 116 அம்மா மருந்தகங்களும் 173 கூட்டுறவு மருந்தகங்களும் தரமான மருந்துகளை, குறைவான விலையில் பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்கள், இம்மருந்தகங்களில் 20 விழுக்காடு வரை தள்ளுபடி அளித்து மருந்துகளை விற்பனை செய்வதன்மூலம் ஏழை, எளிய, அடித்தட்டு மக்கள் சேமிப்பதற்கு உதவுகின்றன.

7. தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் பெரும்பாலான நியாய விலைக் கடைகளை நடத்துவதுடன் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் முக்கிய பங்கு ஆற்றுகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

இயல்—I

கூட்டுறவுக் கடன் அமைப்பு

1.1 கடன் கூட்டுறவு நிறுவனங்கள் தனது உறுப்பினர்களையே உரிமையாளராகக் கொண்டு நிருவகிக்கப்பட்டு வரும் நிதி நிறுவனங்களாகும். இந்நிறுவனங்கள் நியாயமான வட்டி விகிதத்தில் மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு கடன்கள் வழங்கி வருவதால், பொதுமக்கள் முறைசாரா மற்றும் சுரண்டலுக்கு வழிவகுக்கும் கடன் ஆதாரங்களைச் சார்ந்து இருப்பது தவிர்க்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனங்கள் மக்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், கிராமப்புறங்களில் வேளாண் இடுபொருட்களையும் வழங்கி வருகின்றன. மேலும், மக்களின் சமூக, பொருளாதார

நிலையினை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றன.


1.2 தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நகரக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் என நான்காக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1.3 குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களையும், மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும் உள்ளடக்கி உள்ளது. நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு வட்ட/வட்டார அளவில் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும், மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியையும் உள்ளடக்கியுள்ளது. குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு மற்றும் நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு கிராமப்புறங்களிலுள்ள விவசாயிகள் மற்றும் பிறரின் குறுகிய மற்றும் நீண்ட கால கடன் தேவைகளை நிறைவு செய்வதை முதன்மைப் பணியாக மேற்கொண்டு வருகின்றன. நகரக் கூட்டுறவு கடன் அமைப்பு மாநில அளவில் தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையத்தையும், நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் செயல்படும் நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு கடன் சங்கங்களையும் உள்ளடக்கியுள்ளது. இந்நிறுவனங்கள் நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்களின் வங்கித் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள், மத்திய, மாநில அரசு பணியாளர்கள், அரசு சார்ந்த பொது நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள் ஆகியோரின் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.

2. குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு

குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு, கிராம அளவில் 4,449 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், மாவட்ட அளவில் 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும்,

மாநில அளவில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும் கொண்ட கூட்டாட்சி அமைப்பாகும்.



2.1 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் கிராமப்புற மக்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முக்கிய பங்காற்றி வருகின்றன. மாநிலத்தில் 4,449 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் வேளாண் மற்றும் வேளாண் சாரா கடன்களை வழங்குவதே இச்சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். பயிர்க்கடன்கள் மற்றும் பண்ணை இயந்திரங்கள் வாங்குதல், நுண் நீர்ப்பாசனம், கறவை மாடுகள் வாங்குதல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளுக்காக வழங்கப்படும் கடன்கள் வேளாண் கடன்களாகும். வீட்டுக் கடன், சுய உதவிக் குழுக்களின் வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் கடன்கள் மற்றும் இதர பண்ணை சாராக் கடன்கள் போன்றவை வேளாண்சாரா கடன்களாகும். இச்சங்கங்கள் விவசாய இடுபொருட்களான உரம், விதைகள் மற்றும் சிறு வேளாண் கருவிகள் விற்பனையையும் மேற்கொண்டு வருகின்றன. இவை தவிர, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 16,274 முழு நேர நியாய விலைக் கடைகளையும் 8,083 பகுதி நேர நியாய விலைக் கடைகளையும், 16 நகரும் நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகின்றன.

2020 மார்ச் 19]

கடந்த ஐந்தாண்டுகளில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின் செயல்பாடுகள் பின்வருமாறு:

தொகை (ரூ.கோடியில்)

விவரம்	2015-16	2016-17	2017-18	2018-19	2019-20 * (29-02-2020 வரை)
வைப்புத் தொகை	6,874.66	7,352.64	6,606.17	6,371.79	6,625.89
கடன் வழங்கியது	19,409.52	15,403.51	17,784.88	19,723.89	19,984.94

* உத்தேசமாக

2.2 மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

மாநிலத்தில் 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலைகள் போன்ற அனைத்து இணைப்புச் சங்கங்களுக்கும் கடன் மற்றும் வங்கியியல் தொடர்பான சேவைகளை வழங்கி வருகின்றன. இவ்வங்கிகள் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகை, நபார்டு மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் மற்றும் மறுநிதி மூலம் நிதியாதாரங்களைப் பெறுகின்றன. இவ்வங்கிகள் வட்ட மற்றும் வட்டார அளவில் செயல்படும் 884 கிளைகளைக் கொண்டுள்ளதுடன் அவற்றின் மூலமாக பொதுமக்களுக்கு நேரிடையாக வங்கியியல் சேவைகளை வழங்கி வருகின்றன.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் நடப்பாண்டு இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன. மேலும், 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியியல் உரிமம் பெற்றுள்ளன.

[2020 மார்ச் 19

மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள் பின்வருமாறு:

தொகை (ரூ.கோடியில்)

வ. எண்	விவரம்	2015-2016	2016-2017	2017-2018	2018-2019	2019-2020 * (29-02-2020 வரை)
1	உறுப்பினர்களின் பங்கு மூலதனம்	1,248.49	1,252.23	1,308.93	1,434.38	1,491.89
2	மாநில அரசின் பங்கு	63.70	67.94	68.32	65.20	63.91
3	ஒதுக்கீடு மற்றும் உபரி	3,537.67	3,460.53	3,480.12	3,591.96	3,953.87
4	வைப்புகள்	25,667.74	28,343.91	27,693.41	28,792.35	29,623.87
5	பெறப்பட்ட கடன்கள்	5,043.30	4,340.41	4,885.59	6,324.87	7,464.66

* உத்தேசமாக

மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கியியல் சேவையை அளிப்பதற்காக மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (CORE Banking Solutions) நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக, இவ்வங்கிகள், நிகழ்நேர மொத்தத் தீர்வு (Real Time Gross Settlement), தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (National Electronic Fund Transfer) மற்றும் குறுஞ்செய்தி வசதி (SMS Alert facility) போன்ற நவீன வங்கியியல் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றன. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு ரூபே பற்று அட்டைகளை (Rupay debit Cards) வழங்கி வருகின்றன. மேலும், மாநிலத்தில் 57 இடங்களில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் (Automatic Teller Machines) மத்தியக் கூட்டுறவு வங்கிகளால் நிறுவப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கடன் பெறும் விவசாயிகள், பயிர்க்கடன் தொகையை தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்மூலம் பெறுவதற்கு வசதியாக ரூபே வேளாண் கடன் அட்டைகள் (Rupay Kisan Credit Cards) வழங்கப்பட்டுள்ளன. 2018-20 ஆம் ஆண்டு முதல் மத்திய கூட்டுறவு வங்கிகள், வாடிக்கையாளர்களுக்கு அலைபேசி வங்கியியல்

2020 மார்ச் 19]

சேவையையும் (Mobile Banking Services) வழங்கி வருகின்றன. மேலும், வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வசிப்பிடத்திலேயே வங்கியியல் சேவைகளை வழங்குவதற்கு மத்திய கூட்டுறவு வங்கிகளில் மைக்ரோ ஏடிஎம் (Micro - ATMs) இயந்திரங்கள் நிறுவும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. தேசிய மற்றும் வணிக வங்கிகளுக்கு இணையாக மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வழங்கி வரும் நவீன வங்கியியல் சேவைகளால் வாடிக்கையாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

2.3 தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியானது, 1905 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் இணையமாகச் செயல்படுகிறது. இவ்வங்கி பொது மக்களிடமிருந்து பெறும் வைப்பு நிதி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடம் பெறும் மறுநிதி உதவி மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் போன்ற உயர் நிதி நிறுவனங்களிடம் பெறும் கடன் ஆகியவற்றின்மூலம் நிதியாதாரங்களைத் திரட்டி வருகிறது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி குறுகிய காலக் கடன் அமைப்பின் மையமாக உள்ளது. மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கடன் தேவைகளுக்கு நிதியுதவி அளிக்கிறது. இவ்வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள கூட்டுறவு வங்கிகளின் மிகை நிதியை கையாள்வதுடன் நிதி மேலாண்மை குறித்த வழிகாட்டுதலையும் அளிக்கிறது. மேலும், சென்னையிலுள்ள 47 கிளைகள்மூலம் பொதுமக்களுக்கு நேரடி வங்கி சேவையாற்றி வருகிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் விவசாய கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையத்தின்மூலம் மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை, கடன் மதிப்பீடு, நிதி மேலாண்மை, வணிக வளர்ச்சி மற்றும் செயலற்ற சொத்து மேலாண்மை போன்ற பொருட்களில் 3,346 பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி தொடர்ந்து நிதிநிலையில் வலுவான நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு

வங்கியின் செயல்பாடுகளின் ஒப்பீடு விவரம் பின்வருமாறு:

தொகை (ரூ.கோடியில்)

வ. எண்	விவரம்	2015-2016	2016-2017	2017-2018	2018-2019	2019-2020* (29-02-2020 வரை)
1	உறுப்பினர்களின் பங்கு மூலதனம்	287.30	291.77	291.77	308.23	299.33
2	மாநில அரசின் பங்கு	20.26	20.26	20.26	20.26	20.26
3	ஒதுக்கீடு மற்றும் உபரி	855.63	778.66	598.01	608.11	883.63
4	வைப்புகள்	8,927.93	11,240.46	8,305.54	8,384.60	10,384.81
5	பெறப்பட்ட கடன்கள்	3,037.81	2,455.26	2,844.19	3,222.90	2,920.82
6.	நிகர இலாபம்	43.31	43.70	81.83	81.87	89.19

* உத்தேசமாக

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (CORE Banking Solutions) நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. இதனால், தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் (National Electronic Fund Transfer), நிகழ் நேர மொத்தத் தீர்வு (Real Time Gross Settlement), இணையதள வங்கி சேவைகள் (Internet Banking services), குறுஞ்செய்தி வசதி (SMS Alert facility), உடனடி கட்டண சேவை வசதி (Immediate Payment Service) மற்றும் அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking Service) போன்ற நவீன வங்கிச் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு இவ்வங்கி வழங்கி வருகிறது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு ரூபே பற்று அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த அட்டைகளை இந்தியாவிலுள்ள எந்த ஒரு தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்திலும் பயன்படுத்தலாம். இவ்வங்கி, சென்னையில் 11 இடங்களில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் மூலமாக சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது. மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் நவீன வங்கியியல் தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி முக்கிய பங்காற்றி வருகிறது.

2020 மார்ச் 19]

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியினையும் (Primary Cooperative Development Fund), வைப்புத்தொகை உத்தரவாத நிதியினையும் (Deposit Guarantee Fund) பராமரித்து வருகிறது. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் நிதிப்பங்களிப்பிலிருந்து உருவாக்கப்பட்ட தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியானது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை வலுப்படுத்தவும், இச்சங்கங்களில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படுகிறது. 29-02-2020 தேதியில், தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியில் ரூ.42.87 கோடி இருப்பு உள்ளது. வைப்புத் தொகை உத்தரவாத நிதிக்கு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பங்களித்து வருகின்றன. இந்நிதியானது, பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகையினைத் திரும்ப வழங்க இயலாத தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், பொதுமக்களுக்கு வைப்புத் தொகைகளை திரும்ப வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. 28-2-2020 தேதியில் வைப்புத்தொகை உத்தரவாத நிதியில் ரூ.267.44 கோடி இருப்பு உள்ளது.

2.4 கூட்டுறவுக் கடன் சங்கங்களால் வழங்கப்படும் சேவைகள்

(i) பயிர்க் கடன்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகள் பயிர் சாகுபடி மேற்கொள்ள மாநில அளவிலான தொழில்நுட்பக் குழு (State Level Technical Committee) பரிந்துரைக்கும் கடன் அளவின்படி குறுகிய கால பயிர்க் கடன்களை வழங்கி வருகின்றன. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை எய்தும் வகையில், சிறு, குறு விவசாயிகள், பட்டியலின வகுப்பு/பட்டியலின பழங்குடியின விவசாயிகள் உட்பட புதிய உறுப்பினர்களுக்கு பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பயிர்க்கடன் வழங்குவதற்கு இந்திய அரசிடமிருந்து பெறும் வட்டி மானியம் அல்லாமல் தமிழ்நாடு அரசு, கூட்டுறவு நிறுவனங்களுக்கு 2% வட்டி மானியத்தை வழங்கி வருகிறது. இதனால், மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் விவசாயிகளுக்கு 7% வட்டி விகிதத்தில் பயிர்க்கடன் வழங்கி வருகின்றன. மேலும் உரிய காலத்திற்குள் பயிர்க் கடனைத் திருப்பிச்

செலுத்தும் விவசாயிகளுக்கு, இந்திய அரசு வழங்கும் 3% வட்டி ஊக்கத் தொகையுடன் கூடுதலாக தமிழக அரசு, 4% வட்டி ஊக்கத் தொகை வழங்குகிறது. இதன் காரணமாக, உரிய காலத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளிடமிருந்து வட்டி ஏதும் வசூலிக்கப்படுவதில்லை.

2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 81,58,622 விவசாயிகளுக்கு ரூ.41,790.17 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 11,58,233 பட்டியலின வகுப்பு/ பட்டியலின பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.4,957.86 கோடி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு, கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.10,000/- கோடி பயிர்க்கடன் வழங்க குறியீடு நிர்ணயித்துள்ளது. விவசாயிகளுக்கு வட்டி மானியம் மற்றும் வட்டி ஊக்கத் தொகையாக ரூ.200 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 11,75,629 விவசாயிகளுக்கு ரூ.8,406.39 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில், 1,13,658 பட்டியலின வகுப்பு/ பட்டியலின பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.701.94 கோடி வழங்கப்பட்டுள்ளது.

(ii) கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கான கடன்கள்

இதுவரை எந்த நிறுவனங்கள் மூலமும் கடன் பெற இயலாதிருந்த சிறு மற்றும் குறு விவசாயிகள், வாரத்துக்கு பயிர்செய்வோர், குத்தகைக்குப் பயிரிடுவோர், வாய்மொழி குத்தகைதாரர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் துவக்கப்பட்டு, இக்குழு உறுப்பினர்களுக்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது. அனைவரையும் வங்கி பரிமாற்றத்திற்குள் கொண்டு வரும் நோக்கத்தினை எய்தும் வகையில், கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்குப் பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 1,42,022 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.3,399.20 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 19,807 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.440.71 கோடி பயிர்க் கடனும், 1,708 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.42.81 கோடி மத்தியக் கால முதலீட்டுக் கடனும் வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 19]

(iii) வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன்

நிலையான வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் உயர்வை உறுதி செய்யும் வகையில், கூட்டுறவு நிறுவனங்கள் சொட்டு நீர் பாசனம், நில மேம்பாடு, வேளாண் இயந்திரமயமாக்குதல் போன்ற முதலீட்டு நோக்கங்களுக்கு கடன் வழங்க தொடர்ந்து ஊக்குவிக்கப்படுகின்றன. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 4,47,471 விவசாயிகளுக்கு ரூ.2,383.80 கோடி மத்தியக் கால முதலீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 54,775 விவசாயிகளுக்கு ரூ.402.47 கோடி மத்திய கால முதலீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(iv) தானிய ஈட்டுக் கடன்

விவசாயிகளின் விளைபொருட்களை கிடங்குகளில் இருப்பு வைத்து அதற்கு ஈடாக தானிய ஈட்டுக் கடன் வழங்குவதனால், விவசாயிகள் அறுவடைக்காலங்களில் விளைபொருட்களின் விலை குறைவாக உள்ளபோது தானியங்களை சேமித்து வைத்து இலாபகரமான விலை கிடைக்கின்றபோது விற்றுப் பயனடைய வாய்ப்பளிக்கிறது. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 1,88,772 நபர்களுக்கு ரூ.2,252.12 கோடி தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 13,033 நபர்களுக்கு ரூ.333.33 கோடி தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(v) சுய உதவிக் குழுக்களுக்கு நிதி உதவி

கூட்டுறவு கடன் நிறுவனங்கள் சுய உதவிக் குழுக்களுக்கு தொடர்ந்து கடன் வழங்கி அவர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 3,46,115 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.5,131.79 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 31,566 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.1,271.45 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

(vi) மாற்றுத் திறனாளிகளுக்கான கடன்

கூட்டுறவு நிறுவனங்கள், மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட அவர்களின் வருமானத்தை

உயர்த்திடும் செயல்களுக்கு கடன்கள் வழங்கி வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தும் கடன்தாரரிடமிருந்து வட்டி வசூலிக்கப்படுவதில்லை. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 54,744 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.218.57 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 7,303 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.35.46 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 2019 ஆம் ஆண்டில், தேசிய மாற்றுத் திறனாளிகளின் மேம்பாட்டிற்கான சிறந்த மாநில முகமை அமைப்பு (Best State Channelising Agency) விருதினை தேசிய மாற்றுத் திறனாளிகளுக்கான நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து பெற்றுள்ளது.

(vii) சிறு வணிகர்களுக்கான சிறுவணிகக் கடன்

சிறு வணிகர்கள், தனியாரிடம் அதிக வட்டியில் கடன் பெறுவதைத் தவிர்க்கும் வகையில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், பூ, காய்கறிகள் மற்றும் பழங்கள் வியாபாரம் செய்தல், பெட்டிக் கடை நடத்துதல் போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கி வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், குழு அமைத்து கடன்கள் வழங்குவது ஊக்குவிக்கப்படுகிறது. இதன்படி கடன் பெறும் சிறு வணிகர்கள் ஒருவருக்கொருவர் பிணையதாரராகவும், பெற்ற கடனை திருப்பிச் செலுத்தும் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்கின்றனர். 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 14,15,061 நபர்களுக்கு ரூ.1,586.90 கோடி சிறுவணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 1,48,235 நபர்களுக்கு ரூ.334.95 கோடி சிறுவணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(viii) மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், மகளிர் தொழில் முனைவோருக்கு சிறு தொழில் தொடங்கவும் மற்றும் சேவை மையங்கள் அமைப்பதற்கும் ரூ.10 இலட்சம் வரை கடன் வழங்கி வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 1,10,239 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.449.44 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 19]

2019-2020ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 20,862 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.108.10 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ix) பணிபுரியும் மகளிர் கடன் திட்டம்

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் மாத சம்பளம் பெறும் மகளிருக்கு இத்திட்டத்தின்கீழ் கடன் உதவி வழங்கி வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 76,702 பணிபுரியும் மகளிருக்கு ரூ.453.18 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 8,401 பணிபுரியும் மகளிருக்கு ரூ.160.78 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

(x) பயிர்க் காப்பீடு

விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்களுக்கு எதிர்பாராத நிகழ்வுகளால் சேதம் ஏற்படும்போது இழப்பீட்டுத் தொகை வழங்கி, விவசாயிகளின் நிலையான வருமானத்திற்கு வழிவகை செய்யும் வகையில் மாநிலத்தில் பிரதம மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) 2016 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 7,21,348 விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக சேர்க்கப்பட்டு, ரூ.87.55 கோடி காப்பீட்டுத் தொகை வசூலிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டு முதல் பயிர்க்காப்பீடு செய்த 19,77,444 விவசாயிகளுக்கு ரூ.4,912.94 கோடி மகசூல் இழப்புக்கான இழப்பீட்டுத் தொகையாக 29-2-2020 வரை கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

(xi) பொதுச் சேவை மையங்கள்

கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு பல்வகை அரசு சேவைகளை துரிதமாகவும் மற்றும் வெளிப்படையாகவும் மின்னணு சேவைகளாக வழங்கிடும் வகையிலும், மேலும் கூட்டுறவுச் சங்கங்களில் கூடுதல் வருவாய் ஈட்டும் நோக்குடனும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்களில் பொதுச் சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 19

தற்போது, மாநிலத்தில் 4,422 பொதுச் சேவை மையங்கள் கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இச்சேவை மையங்கள் இ-சேவை மற்றும் டிஜிட்டல் சேவா (Digital Seva Portal) போன்ற தளங்களின்மூலம் பலதரப்பட்ட சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றன. இம்மையங்களின்மூலம் வருவாய்த் துறையின் சேவைகளான வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ், நிலவுடமை ஆவணம் மற்றும் சமூகநலத் துறையின் சேவைகள், மேலும் பதிவுத் துறையின் சேவைகளான வில்லங்கச் சான்றிதழ் மற்றும் சான்றளிக்கப்பட்ட நகல் முதலான சேவைகளும் வழங்கப்படுகின்றன. இம்மையங்கள்மூலம் அரசு சேவைகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட விதத்தில் ஒரே இடத்தில் பொதுமக்களுக்கு எவ்வித சிரமமுமின்றி வழங்கப்படுகின்றன. இதன்மூலம் பொதுமக்கள் இச்சேவைகளைப் பெற பல அரசு அலுவலகங்களை நாடி மீண்டும், மீண்டும் செல்லும் நிலை முற்றிலும் தவிர்க்கப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டில், 29-2-2020 வரை பொதுச் சேவை மையங்களில் 60,80,592 சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு, இதன்மூலம் கூட்டுறவுச் சங்கங்களில் ரூ.21.57 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

3. நீண்டகால கூட்டுறவுக் கடன் அமைப்பு

நீண்டகால கூட்டுறவுக் கடன் அமைப்பு, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியும், வட்ட/வட்டார அளவில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் உள்ளடக்கியதாகும்.

3.1 தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மறுநிதியாக்கம் தொடர்பான திருத்தப்பட்ட கொள்கை வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மறுநிதியுதவி பெற இயலாத நிலையால், அதன் வழக்கமான கடன் வழங்கும் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை. எனினும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தனது சொந்த

2020 மார்ச் 19]

நிதியைக் கொண்டு தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் தொடர்ந்து கடன் வழங்க ஏதுவாக நிதி உதவி அளித்து வருகிறது.

வங்கியின் பங்கு மூலதனம் 31-3-2019 அன்றுள்ளபடி ரூ.43.24 கோடியாகவும், 29-2-2020 தேதி வரை வைப்புகள் ரூ.163.61 கோடியாகவும் உள்ளது. 2011-2012ஆம் ஆண்டு முதல் 2018-2019ஆம் ஆண்டு வரை, வங்கியினால் ரூ.2,093.86 கோடி நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை, இவ்வங்கி ரூ.329.19 கோடி நகைக் கடன்களை வழங்கியுள்ளது.

3.2. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்

மாநிலத்தில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள், விவசாயிகளுக்கு சிறு பாசனம், நில மேம்பாடு, பண்ணை இயந்திரமயமாக்கல், தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு மற்றும் இதர பணிகளுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கி வந்தன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி கிடைக்கப்பெறாத நிலையில், இவ்வங்கிகள் தங்களிடம் உள்ள சொந்த நிதியிலிருந்து நகைக் கடன்களை வழங்கி வருகின்றன.

இவ்வங்கிகளால் 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை ரூ.7,497.51 கோடி நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை ரூ.1,229.65 கோடி நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது. 154 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் பொதுச் சேவை மையங்கள் துவக்கப்பட்டு, பொதுமக்களுக்கு பல்வேறு மின்னணு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

3.3 ஒரு முறை கடன் தீர்வுத் திட்டம் 2014

தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் உறுப்பினர்கள் தவணை தவறிய பண்ணை சாராக் கடன்களை திருப்பி செலுத்தும் வகையிலும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் நிதியாதாரத்தை வலுப்படுத்தும் வகையிலும், ஒருமுறை

கடன் தீர்வு திட்டம் 2014 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, இத்திட்டம் 31-12-2019 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 3,314 கடன்தாரர்கள், நிலுவையில் உள்ள கடன் தொகையில் ரூ.72.94 கோடி திரும்பச் செலுத்தி, ரூ.71.66 கோடி அளவிற்கு அபராத வட்டி, கூடுதல் வட்டி மற்றும் இதர இனங்கள் தள்ளுபடி செய்யப்பட்டு பயனடைந்துள்ளனர்.

4. நகரக் கூட்டுறவுக் கடன் அமைப்பு

மாநிலத்தில் நகரக் கூட்டுறவு கடன் அமைப்பு, மாநில அளவில் தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையத்தையும், நகர மற்றும் புறநகரக்ப் பகுதிகளில் செயல்படும் 128 கூட்டுறவு நகர வங்கிகள் மற்றும் 116 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் உள்ளடக்கியதாகும்.

4.1. தமிழ்நாடு நகரக்க் கூட்டுறவு வங்கிகளின் இணையம்

மாநிலத்தில் நகரக் கூட்டுறவுக் கடன் இயக்கத்தின் வளர்ச்சியினை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம் செயல்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிர்வாகம், பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் வங்கிகள் நவீன வங்கியியல் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றில் உதவி புரிந்து வருகிறது.

4.2. நகரக்க் கூட்டுறவு வங்கிகள்

நகரக்க் கூட்டுறவு வங்கிகள், நகரக் மற்றும் புறநகரக்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கிச் சேவைகள் மற்றும் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. மாநிலத்தில் தற்போது 128 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள், பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று வீடு கட்டுதல், வணிகம் மற்றும் உறுப்பினர்களின் அவசர மற்றும் சொந்தத் தேவைகளுக்காக நகைக் கடன் உள்ளிட்ட இதர பண்ணை சாரா காரியங்களுக்காக கடன் வசதிகளை அளித்து வருகின்றன. வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கியியல் சேவையினை அளிப்பதற்காக நகரக் கூட்டுறவு வங்கிகளில் மைய வங்கியியல் சேவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2020 மார்ச் 19]

29-2-2020 அன்றுள்ளபடி நகரக் கூட்டுறவு வங்கிகளின் வைப்புத் தொகை ரூ.7,832.75 கோடியாக உள்ளது. இவ்வங்கிகளால் 2011-12 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 1,04,25,553 உறுப்பினர்களுக்கு ரூ.47,298.79 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 29.2.2020 வரை ரூ.5,299.33 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2019-2020ஆம் ஆண்டில் 29.2.2020 வரை நகரக் கூட்டுறவு வங்கிகளால், நகர் புறத்திலுள்ள 648 சிறு வணிகர்களைக் கொண்ட கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.57.91 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், அதிக வட்டியில் கடன் வழங்கும் தனியாரிடமிருந்து பல சிறுவணிகர்கள் கடன் பெறுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

4.3. நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

தமிழ்நாட்டில் இயங்கிவரும் 116 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு கடன் வழங்கும் பணியினைச் செய்து வருகின்றன. இச்சங்கங்கள், பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, சிறு வணிகர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு, வீட்டுவசதிக் கடன், வணிகக் கடன் மற்றும் இதர பண்ணை சாராக் கடன்களை வழங்கி வருகின்றன.

29-2-2020 அன்றுள்ளபடி நகரக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் வைப்புத் தொகை ரூ.1,405.57 கோடியாக உள்ளது. இச்சங்கங்களால் 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 10,04,656 உறுப்பினர்களுக்கு ரூ.4,960.92 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை ரூ.1,359.68 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களால் நகர் புறத்திலுள்ள சிறு வணிகர்களைக் கொண்ட கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.6.58 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

5. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் 1,723 பணியாளர் கூட்டுறவுச் சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் மாநில மற்றும் மத்திய அரசுப் பணியாளர்கள், அரசு சார்ந்த மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றன. அவற்றின்

[2020 மார்ச் 19

முதன்மை நோக்கங்கள் பணியாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குவதும் நியாயமான வட்டி விகிதத்தில் அவர்களுக்குக் கடன்கள் வழங்குவதும் ஆகும். இச்சங்கங்கள் 29-2-2020 அன்றுள்ளபடி ரூ.3,057.23 கோடி பங்கு மூலதனத்துடனும் ரூ.18,341.95 கோடி நடைமுறை மூலதனத்துடனும் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களால் 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 வரை ரூ.50,797.52 கோடி அளவிற்கு உறுப்பினர்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை ரூ.6,016.15 கோடி அளவிற்கு இச்சங்கங்களால் 1,91,577 உறுப்பினர்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

6. தேசிய அளவில் வழங்கப்பட்ட விருதுகள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 2019 ஆம் ஆண்டில், தேசிய மாற்றுத் திறனாளிகளின் மேம்பாட்டிற்கான சிறந்த மாநில முகமை அமைப்பு (Best State Channelising Agency) விருதினை தேசிய மாற்றுத் திறனாளிகளுக்கான நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து பெற்றுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டிலிருந்து, 28 கூட்டுறவு நிறுவனங்கள் சிறந்த செயல்பாட்டிற்காக அகில இந்திய அளவில் விருதுகள் பெற்றுள்ளன.

இயல்—II

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

1. முன்னுரை

தமிழ்நாட்டில் தற்போது 112 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வட்டம் மற்றும் வட்டார அளவில் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உதவிபுரிகின்றன. சங்க உறுப்பினர்கள் மற்றும் நுகர்வோர்/ வணிகர்கள் ஆகியோரை நேரடியாக இணைப்பதற்கான விற்பனைத் தளத்தை ஏற்படுத்தி அதன்மூலம் இடைத்தரகர்கள்/ முகவர்களின் தலையீட்டினை நீக்கி, உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை சரியான விலைக்கு சந்தைப்படுத்துவதற்கான சாதகமான சூழலை இச்சங்கங்கள் ஏற்படுத்தித் தருகின்றன.

2020 மார்ச் 19]

மேலும், விவசாய இடுபொருட்களான விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், வேளாண் கருவிகள் ஆகியவற்றை விநியோகித்தும், விளைபொருட்களின்மீது தானிய ஈட்டுக்கடன் வழங்கியும், வேளாண் விளைபொருட்களைப் பதனிடும் பணியினையும் மேற்கொண்டு வருகின்றன. நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்யும் முதன்மைச் சங்கங்களாகச் செயல்படுவதுடன் நியாய விலைக் கடைகளை நடத்தி அத்தியாவசியப் பொருட்களை பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்தும் வருகின்றன. சில சங்கங்கள் பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி பொதுமக்களுக்கு தரமான பெட்ரோல் மற்றும் டீசலை விற்பனை செய்து சேவை புரிந்து வருகின்றன.

1.2 தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED), தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக, மாநிலத்தில் உள்ள இதர மாவட்டங்களில் செயல்படும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் தலைமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்டங்களில் செயல்படும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மண்டல அளவிலான இணையமாக செயல்பட்டு வருகிறது. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது.

2. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED)

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், 20-2-1959 அன்று செயல்படத் தொடங்கியது. இவ்விணையம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான வேளாண் இடுபொருட்களான உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், விதைகள் மற்றும் வேளாண் உபகரணங்கள் ஆகியவற்றை நியாயமான விலையில் விநியோகித்து வருகிறது.

[2020 மார்ச் 19

2.1. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், 2019-2020 ஆம் ஆண்டில் (29-02-2020 வரை) ரூ.531.06 கோடி மதிப்பிலான 3,45,151 மெட்ரிக் டன் உரங்கள் மற்றும் ரூ.7.31 கோடி மதிப்பிலான பூச்சிக்கொல்லி மருந்துகளை விநியோகம் செய்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், திருவாரூர் மாவட்டம், பாமணி கிராமத்தில் உரக்கலவை ஆலை ஒன்றினை நடத்தி வருகிறது. இதில் உற்பத்தி செய்யப்படும் பாமணி 17:17:17 என்ற உரக்கலவைக்கு பல மாவட்டங்களில் விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு உள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) ரூ.21.15 கோடி மதிப்பிலான 16,324மெட்ரிக் டன் உரக் கலவை விநியோகிக்கப்பட்டுள்ளது. பாமணி உர ஆலையின் செயல்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.

2.2. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமாக 34,140 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 43 கிடங்குகளும், சென்னை கோயம்பேடு வணிக வளாகத்தில், 2,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ஒன்றும், பேசின் பிரிட்ஜ் பகுதியில் 625 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ஒன்றும் என இரு குளிர்பதனக் கிடங்குகள் உள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடன் இணைந்து விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்திட வழிகாட்டுதலையும் வணிகரீதியிலான ஆதரவையும் அளித்து வருகிறது.

2.3. விவசாயிகளின் நலனுக்காக, தமிழ்நாட்டில் ஆதரவு விலைத் திட்டத்தினைச் செயல்படுத்திட தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையத்தின் (NAFED) முகவராக, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் செயல்பட்டு வருகிறது.

2.4. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகம் செய்வதற்காக கால்நடை தீவனத்தை ஆவின் நிறுவனத்திற்கு விநியோகம் செய்து வருகிறது. 2019-20 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) ரூ.73.63 கோடி மதிப்பிலான 38,821 மெட்ரிக் டன் கால்நடைத் தீவனம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 19]

2.5. ஒரு பன்முக நடவடிக்கையாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், இந்திய எண்ணெய் கழகத்துடன் இணைந்து 5 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை அலகுகளை தலா ஒன்று வீதம் சென்னை (கோயம்பேடு), கடலூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களிலும், கோடம்பாக்கத்தில் 1 பெட்ரோல் விற்பனை அலகினையும் நடத்தி வருகிறது. நடப்பாண்டில் (29-02-2020 வரை) ரூ.37.22 கோடி மதிப்பிலான பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

2.6 தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 2017-2018 ஆம் ஆண்டில், ரூ.8.01 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

3. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் (TCMF)

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மண்டலங்களில் உள்ள 12 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மண்டல அளவிலான இணையமாக செயல்பட்டு வருகிறது. இவ்விணையம், உரங்கள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகள் ஆகியவற்றை விநியோகித்து வருகிறது. மேலும், உறுப்பினர்களுக்கு நகைக்கடன் வழங்கி வருவதுடன் அச்சகம் ஒன்றையும் இணையம் நடத்தி வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) ரூ.42.39கோடி மதிப்பிலான 47,224 மெட்ரிக் டன் உரங்களை விற்பனை செய்துள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) இணையத்தின் மொத்த புரள் வணிகம் ரூ.89.18 கோடி ஆகும்.

4. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் (NCMS)

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியினையும் செயல் எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கம், விவசாயிகள் விளைவிக்கும் உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், காரட், பீட்ரூட் மற்றும் பீன்ஸ் ஆகியவற்றை ஆதாய விலைக்கு விற்பனை செய்வதோடு, விவசாயிகளுக்குத் தேவையான வேளாண் இடுபொருட்களையும் வழங்கி வருகிறது. இச்சங்கத்திற்கு சொந்தமாக, மேட்டுப்பாளையத்தில் உரக்கலவை அலகு ஒன்று உள்ளது. இச்சங்கம் சமையல் எரிவாயு முகமை அலகு ஒன்றையும் நடத்தி வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் (29.02.2020 வரை) இச்சங்கத்தின் மொத்த புரள் வணிகம் ரூ.77.88 கோடி ஆகும்.

[2020 மார்ச் 19

5. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் (APCMS)

தமிழ்நாட்டில், தற்பொழுது 112 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வேளாண் விளைபொருட்களைச் சந்தையிடுதல், உரம் மற்றும் இதர விவசாய இடுபொருட்களை விற்பனை செய்தல் ஆகியவற்றை முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. பெரும்பான்மையான விற்பனைச் சங்கங்கள், முதன்மைச் சங்கங்களாக செயல்பட்டு, அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்கின்றன. மேலும், இச்சங்கங்கள் நியாய விலைக் கடைகளையும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நடத்தி வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) இச்சங்கங்களின் மொத்த புரள் வணிகம் ரூ.2,321.86 கோடி ஆகும்.

5.1. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள்

(i) வேளாண் விளைபொருள் விற்பனை

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தனது உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை இலாபகரமான விலைக்கு விற்பதற்கு ஏதுவாக ஏல விற்பனைக் களங்கள், உலர் களங்கள் மற்றும் கிடங்குகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை விவசாயிகளுக்கு வழங்குகின்றன. மேலும், விவசாயிகளுக்கு, வேளாண் விளைபொருட்களின் சந்தை விலை நிலவரங்களை அளிப்பதுடன், வேளாண் விளைபொருட்களுக்கான நியாயமான சந்தைப்படுத்துதலை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. சில சங்கங்கள், வேளாண் விளைபொருட்களை, பதப்படுத்துவதற்கும் மற்றும் மதிப்புக் கூட்டுவதற்கும் நேரடியாக கொள்முதல் செய்கின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) இச்சங்கங்கள் ரூ.869.26 கோடி மதிப்பிற்கு வேளாண் விளைபொருள்களை விற்பனை செய்துள்ளன.

(ii) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்

கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு என்பதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் ஆகும். இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு

2020 மார்ச் 19]

விற்பனைச் சங்கங்கள் விவசாய உறுப்பினர்களின் விவசாய விளைபொருட்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்து, பெறப்படும் தொகையினை, உறுப்பினர்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பெற்ற கடனுக்கு ஈடு செய்யும் வகையில் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், கடன்தாரர்களுக்கு சந்தைப்படுத்துவதற்கான வசதியினை ஏற்படுத்திக் கொடுத்ததன்மூலம் 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) ரூ.3.78 கோடி அளவிற்கு கடன் நேர் செய்யப்பட்டுள்ளது.

(iii) தானிய ஈட்டுக்கடன்

அறுவடைக் காலங்களில், சிறு/குறு விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களை, அவசர பணத் தேவைகளுக்காக மிகக்குறைந்த விலைக்கு விற்பனை செய்வதைத் தவிர்க்க, கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தானிய ஈட்டுக்கடன்களை வழங்கியும், வாடகை அடிப்படையில் சேமிப்பு வசதி அளித்தும் வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.98.13 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக்கடன்கள் வழங்கியுள்ளன.

(iv) நகைக்கடன் வழங்குதல்

விவசாய உறுப்பினர்களின் அவசர பொருளாதாரத் தேவைக்காக 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) ரூ.313.65 கோடி அளவிற்கு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

(v) தரமான விதைகள் விற்பனை

அதிக மகசூல் மற்றும் மேம்பட்ட தரமான வேளாண் உற்பத்திக்கு, தரமான விதைகள் கிடைக்கச் செய்வது மிக இன்றியமையாததாகும். நெல், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், சிறு தானியங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் தரமான விதைகளை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) ரூ.5.41 கோடி மதிப்பிலான விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

(vi) உர விநியோகம்

வேளாண் உற்பத்தியை அதிகரித்திட,தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், விவசாயிகளுக்கு உரங்களை ரொக்கத்திற்கு விற்பனை செய்வதுடன், யூரியா, டி.ஏ.ப்பி., பொட்டாஷ் போன்ற உரங்களை பயிர்க்கடனில் ஒரு பகுதியாகவும் வழங்கி வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவை கூட்டுறவுச் சங்கங்களுக்கான மொத்த உர விற்பனையாளர்களாக செயல்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) கூட்டுறவு விற்பனை மையங்கள்மூலம் ரூ.586.21 கோடி மதிப்பிலான 4,01,166 மெட்ரிக் டன் உரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதில், 1,69,881 மெட்ரிக் டன் அளவிற்கு யூரியா மட்டுமே விற்பனை செய்யப்பட்டுள்ளது.

5.2. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்படுத்தி வரும் சிறப்புத் திட்டங்கள்

(i) சூரியசக்தி கொப்பரை உலர்கலன்கள் அமைத்தல்

தென்னை விவசாயிகள் பயனுறும் வகையில், 10 மாவட்டங்களில் 28 சூரிய சக்தி கொப்பரை உலர்கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வலகுகள் தேங்காயை குறைந்த செலவில், குறைந்த கால அளவில் தரமான கொப்பரையாக மாற்றுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) 4,22,491 தேங்காய்கள் கொப்பரையாக மாற்றப்பட்டுள்ளன.

(ii) கணினி எடைமேடைகள் அமைத்தல்

விவசாயப் பெருமக்கள் மற்றும் வணிகர்களின் வேளாண் விளைபொருட்கள் துல்லியமாக எடையிடப்படுவதை உறுதிப்படுத்திட பெருந்துறை, பவானி, உசிலம்பட்டி, நீலகிரி, துறையூர், பரமக்குடி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், மொத்தம் ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் கணினி எடைமேடைகள் நிறுவப்பட்டுள்ளன. இதன் விளைவாக, இந்த மண்டலங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

2020 மார்ச் 19]

(iii) ஏலமுறை நவீனப்படுத்துதல்

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ஏலத்தினை துரிதமாகவும், ஒளிவுமறைவற்ற முறையிலும் நடத்திட ஏதுவாக சேலம், ஆத்தூர், ஈரோடு, பெருந்துறை மற்றும் திருச்செங்கோடு ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.43.35 இலட்சம் மதிப்பில் மென்பொருள் பொருத்தப்பட்டு ஏலமுறை நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

(iv) உலர்களங்கள் அமைத்தல்

ஆலங்குடி, திருமயம், அறந்தாங்கி, திருமங்கலம், பெண்ணாகரம், கமுதி, தென்காசி, அவிநாசி, உடுமலைப்பேட்டை, கள்ளக்குறிச்சி மற்றும் திருச்செங்கோடு (கொங்கணாபுரம் கிளை) ஆகிய 11 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், 2014-2015 முதல் 2016-2017 வரையிலான ஆண்டுகளில் மொத்தம் ரூ.111.35 இலட்சம் மதிப்பில் உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை வேளாண் பெருமக்களின் விளைபொருட்களை உலரவைத்து, தரம் பிரித்து, ஆதாய விலையில் விற்பதற்கு உதவுகின்றன.

(v) விவசாயிகள் தங்கும் விடுதி புனரமைத்தல் மற்றும் சாலை வசதி ஏற்படுத்துதல்

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க கொங்கணாபுரம் கிளையின் வணிக வளாகம் மற்றும் விவசாயிகள் தங்கும் விடுதி ரூ.17.75 இலட்சம் மதிப்பில் புனரமைக்கப்பட்டதுடன் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் கொண்டு வர ஏதுவாக ரூ.25.00 இலட்சம் மதிப்பில் சாலை வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(vi) விதை சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவுதல்

தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிக்க ஏதுவாக, துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தில் ரூ.24.50 இலட்சம் மதிப்பிலும், கும்பகோணம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.10.00 இலட்சம் மதிப்பிலும், இலால்குடி சிவஞானம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.20.00 இலட்சம் மதிப்பிலும் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள வேங்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ரூ.20.00 இலட்சம் மதிப்பிலும் விதை சுத்திகரிப்பு

இயந்திரங்கள் 2011-2012 முதல் 2017-2018 வரையிலான ஆண்டுகளில் நிறுவப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் (29-02-2020 வரை) 334.910 மெட்ரிக் டன் விதைகள் சுத்திகரிக்கப்பட்டுள்ளன.

(vii) வேளாண் விளைபொருட்களைப் பதனிடுதல் மற்றும் அதன் மதிப்பினைக் கூட்டுதல்

சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பஞ்சு அரவை அலகுகள், பயறு பதனிடும் அலகுகள், மிளகாய் மற்றும் மஞ்சள் அரவை அலகுகள், குங்குமம் தயாரிக்கும் அலகுகள், எண்ணெய் பிழியும் அலகுகள், அரிசி ஆலைகள், நிலக்கடலை உடைக்கும் அலகுகள், பஞ்சு பொதியிடும் அலகுகள், சாமை, வரகு, புளி பதனிடும் அலகுகள் மற்றும் உறையிடும் அலகுகள் ஆகிய பதனிடும் அலகுகளை நடத்தி வருகின்றன. ஒரு புதிய முயற்சியாக, 2014 முதல் 2019 வரையிலான ஆண்டுகளில் ரூ.575.82 இலட்சம் மதிப்பிலான 65 பதனிடும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. இப்பதனிடும் அலகுகள் வேளாண் பொருட்களின் மதிப்பினைக் கூட்டி உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்க வழிவகை செய்து வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் (29-02-2020 வரை) இப்பதனிடும் அலகுகளில் 4,327.023 மெட்ரிக் டன் அளவிலான வேளாண் விளைபொருட்கள் பதனிடப்பட்டுள்ளன. இதன்மூலம் இப்பதனிடும் அலகுகளால் ரூ.165.41 இலட்சம் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

(viii) உரக்கலவை இயந்திரம் நிறுவுதல்

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், 2008 ஆம் ஆண்டு முதல் உரக்கலவையினை தயாரித்து வருகிறது. உரக்கலவை உற்பத்தியை அதிகரித்திட, 2014-2015 ஆம் ஆண்டில் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மேட்டுப்பாளையம் கிளையில் ரூ.15.00 இலட்சம் மதிப்பில் ஒரு புதிய உரக்கலவை இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) 8,791 மெட்ரிக் டன் அளவிலான ரூ.12.76 கோடி மதிப்பிற்கு இந்நிறுவனத்தால் உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(ix) சூரிய ஒளிமூலம் மின்சாரம் தயாரிக்கும் அலகு அமைத்தல்

மின்கட்டணத்தைக் குறைத்திடவும், சுற்றுச்சூழல் பாதுகாப்போடு போதிய மின்சாரம் பெறவும், திருச்செங்கோடு

2020 மார்ச் 19]

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தலைமை அலுவலகம் மற்றும் சுயசேவைப் பிரிவு ஆகியவற்றில், 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 2017-2018 ஆம் ஆண்டில் பட்டுக்கோட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டிலும் சூரிய ஒளிமூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.

(x) மின்னணு ஏல முறை (e-Trading)

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கும் சேவைகளை செம்மைப்படுத்தும் பொருட்டு, திருச்செங்கோடு, ஆத்தூர், சேலம், ஈரோடு, பெருந்துறை, அவிநாசி, இராசிபுரம் மற்றும் நீலகிரி ஆகிய 8 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் விவசாய விளைபொருள்களை மின்னணு ஏலமுறை மூலம் விற்பனை செய்யவும் அதன்மூலம் புரள் வணிகத்தை உயர்த்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) நிதியுதவியுடன், மேற்படி சங்கங்களில், 2017-2018 ஆம் ஆண்டில், ரூ.35.62 கோடி மதிப்பீட்டில் மின்னணு ஏல முறையை (e-Trading) நடைமுறைப்படுத்திட ஒருங்கிணைந்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இயக்க நிதியாக, 2018-2019 ஆம் ஆண்டில் ரூ.5.76 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

(xi) தொடர் சங்கிலி மேலாண்மைத் திட்டம் (Supply Chain Management)

2017-2018 ஆம் ஆண்டில்,வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் இணைந்து, பழங்கள், காய்கறிகள் மற்றும் இதர அழுகக்கூடிய விளைபொருட்களை விற்பனை செய்திடும் பொருட்டு சேகரிப்பு மையங்கள் நிறுவுவதற்காக கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய 10 மாவட்டங்களைத் தெரிவு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், பழனி மற்றும் கமுதி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் பிரதான சந்தைகள்

(Main Markets) மற்றும் துறையூர், பெண்ணாகரம் மற்றும் நீலகிரி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் தொடக்கநிலை செயலாக்க மையங்கள் (Primary Processing Centres) அமைக்கப்பட்டுள்ளன.

(xii) ஊரகப் பகுதிகளில் கிடங்கு வசதியை விரிவுபடுத்துதல்

ஊரகப் பகுதிகளில் அறுவடைக் காலங்களில் விவசாயிகள் விளைபொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்வதைத் தவிர்த்திடவும், முறையான சேமிப்புக் கிடங்கு இல்லாததால் ஏற்படும் சேமிப்பு இழப்புகளைத் தவிர்த்திடவும் வேளாண் விளை பொருட்களை சேமித்து வைக்கும் வசதிகளை விரிவுபடுத்துவது இன்றியமையாததாகும். அதன்படி, ஊரகப் பகுதிகளில் சேமிப்பு வசதிகளை மேம்படுத்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டு, நபார்டு வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF) மற்றும் சேமிப்புக் கிடங்கு உட்கட்டமைப்பு நிதியுதவியுடன் (WIF), 2011 முதல் 2015 வரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 3,879 கிடங்குகள், ரூ.489.62 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

தற்போது நபார்டு வங்கியின் சேமிப்புக் கிடங்கு உட்கட்டமைப்பு நிதியுதவியுடன் (WIF) 2018-2019 ஆம் ஆண்டிற்கு, 36,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 165 கிடங்குகள் ரூ.44.16 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசால் அனுமதி வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இதன்மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த கிடங்குகளின் கொள்ளளவு 11,93,126 மெட்ரிக் டன் ஆக உயர்ந்துள்ளது.

(xiii) அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் வகையில், 2014-2015 முதல் 2018-2019 வரையிலான ஆண்டுகளில், 29 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.7.51 கோடி மதிப்பில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகளும், பழைய கட்டடங்களைப் புனரமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2020 மார்ச் 19]

(xiv) பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல்

நகைக் கடனுக்கு ஈடாக வைக்கப்படும் உறுப்பினர்களின் நகைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும்பொருட்டு, 2013-2014 முதல் 2015-2016 வரை மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில், மொத்தம் ரூ.2.58 கோடி மதிப்பில், 41 பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் கட்டப்பட்டுள்ளன. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் சொத்தினை பாதுகாக்கும் பொருட்டு, திருமங்கலம், வாடிப்பட்டி, உசிலம்பட்டி, பேரையூர், மேலூர், திருப்பெரும்புதூர், மதுராந்தகம் மற்றும் தென்காசி-செங்கோட்டை ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், 2015-2016, 2018-2019 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளில் மொத்தம் ரூ.124.50 இலட்சம் மதிப்பில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது.

(xv) வாகனங்கள் வாங்குதல்

கட்டுப்பாட்டுப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்களை விநியோகம் செய்வதற்கு திருச்செங்கோடு, கிருஷ்ணகிரி, சத்தியமங்கலம் மற்றும் பெருந்துறை ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், மொத்தம் ரூ.58.47 இலட்சம் மதிப்பில் நான்கு வாகனங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

இயல்—III

நுகர்வோர் கூட்டுறவுகள்

1. நுகர்வோர் கூட்டுறவுகள், தரமான பொருட்களை நியாயமான விலையில் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சேவை நோக்குடன் வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. நுகர்வோர் கூட்டுறவுகள் இடைத்தரகர்களின்றி சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் விலை உயர்வினைக் கட்டுப்படுத்துவதில் பெரும்பங்காற்றி வருகின்றன.

தமிழ்நாட்டில், நுகர்வோர் கூட்டுறவு அமைப்பானது மூன்றடுக்கு அமைப்பாகச் செயல்படுகிறது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மாநில அளவிலும், 34 நுகர்வோர் கூட்டுறவு

[2020 மார்ச் 19

மொத்த விற்பனை பண்டகசாலைகள் மாவட்ட அளவிலும், 370 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் தொடக்கநிலையிலும் செயல்பட்டு வருகின்றன.

2. செயல்பாடுகள்

2.1 தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் (TNCCF)

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மாநிலத்தில் உள்ள அனைத்து நுகர்வோர் கூட்டுறவுகளின் தலைமை நிறுவனமாகும். இணைப்புச் சங்கங்களை ஒருங்கிணைத்து, அவற்றின் செயல்பாட்டிற்குத் துணைபுரியும் விதமாக அதிகமாக விற்பனையாகக்கூடிய நுகர்பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து, இணைப்புச் சங்கங்களுக்கு விநியோகம் செய்வது தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் முக்கிய நோக்கமாகும். எழுதுபொருட்கள் மற்றும் அச்சக மூலப்பொருட்களை தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மொத்தமாகக் கொள்முதல் செய்து அவற்றை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் கூட்டுறவு அச்சகங்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. கூட்டுறவு நிறுவனங்களுக்கான பட்டாசு கொள்முதல் பணியினையும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ஒருங்கிணைத்து செயல்படுகிறது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் இரண்டு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்களையும் நடத்தி வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் ரூ.4,193.87 இலட்சம் அளவிற்கு மொத்த விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.2 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்

நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மாவட்ட அளவில் செயல்படுகின்றன. தமிழ்நாட்டில் தற்போது 34 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தரமான பொருள்களை நியாயமான விலையில் நுகர்வோருக்கும், பொதுமக்களுக்கும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன.

2020 மார்ச் 19]

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், 143 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள், 17 பல்பொருள் அங்காடிகள், 48 சிறு பல்பொருள் அங்காடிகள், 61 சில்லறை விற்பனை நிலையங்கள், 54 சுயசேவைப் பிரிவுகள், 76 கூட்டுறவு மருந்தகங்கள், 34 அம்மா மருந்தகங்கள், 36 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், 20 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள், 30 சமையல் எரிவாயு வழங்கும் அலகுகள் மற்றும் 82 மண்ணெண்ணெய் வழங்கும் மையங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு முழுவதும் நடத்தி வருகின்றன.

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் முதன்மைச் சங்கங்களாக செயல்பட்டு, அத்தியாவசியப் பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு விநியோகம் செய்து, பொது விநியோகத் திட்டத்தினைச் சிறப்பான முறையில் செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

2.3 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள்

நுகர்வோர் கூட்டுறவுகளில், தொடக்க நிலையில் தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் செயல்படுகின்றன. தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் அத்தியாவசிய நுகர்பொருட்களை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன. இவை நியாய விலைக் கடைகள், சில்லறை விற்பனை அங்காடிகள், பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள், மாவு அரவை அலகுகள், மசாலாப் பொருட்கள் அரவை அலகுகள் மற்றும் சீயக்காய் அரவை அலகுகள் ஆகியவற்றையும் நடத்தி வருகின்றன.

தமிழ்நாட்டில், 370 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் செயல்பட்டு வருகின்றன. தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் 77 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள், 25 கூட்டுறவு மருந்தகங்கள், 27 அம்மா மருந்தகங்கள், 18 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 3 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன.

3. நுகர்வோர் கூட்டுறவுகளின் செயல்பாடுகள்

3.1 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், நுகர்பொருட்களை உற்பத்திமையங்கள்,

தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஆகியவற்றிடமிருந்து நேரடியாக மொத்தமாகக் கொள்முதல் செய்கின்றன. மேலும், கூட்டுக் கொள்முதல் குழு மூலமும் மொத்தமாகக் கொள்முதல் செய்து, நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பனை செய்து வருகின்றன.

அனைத்து கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் 2019-2020 ஆம் ஆண்டில், 29-2-2020 வரை ரூ.3129.36 கோடி மதிப்பிற்கு கட்டுப்பாட்டுப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் 2019-2020 ஆம் ஆண்டில், 29-2-2020 வரை ரூ.790.47 கோடி மதிப்பிற்கு கட்டுப்பாட்டுப் பொருட்களையும், ரூ.918.59 கோடி மதிப்பிற்கு கட்டுப்பாடற்ற பொருட்களையும் விற்பனை செய்துள்ளன.

3.2 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள், 2019-2020 ஆம் ஆண்டில், 29-2-2020 வரை ரூ.145.68 கோடி மதிப்பிற்கு கட்டுப்பாட்டுப் பொருட்களையும் ரூ.277.52 கோடி மதிப்பிற்கு கட்டுப்பாடற்ற பொருட்களையும் விற்பனை செய்துள்ளன.

4. சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கை

வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருட்களான துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, மிளகாய், புளி, அரிசி, நல்லெண்ணெய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலை திடீரென்று உயரும்போது கூட்டுறவுகள் சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அத்தியாவசியப் பொருட்கள் உபரியாகக் கிடைக்கும் இடங்களில் கொள்முதல் செய்து, கூட்டுறவுகளின் விற்பனை அலகுகள் மூலமாக வெளிச்சந்தையில் நிலவும் விலையைவிட குறைந்த விலைக்கு விற்பனை செய்வதன்மூலம் விலையைக் கட்டுப்படுத்துகின்றன.

வெங்காய விளைச்சல் அதிகம் உள்ள பகுதிகளான மகாராஷ்டிரம் மற்றும் கர்நாடகாவில் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் பெய்த அதிக மழையின் காரணமாக தமிழ்நாட்டிற்கு வெங்காய வரத்து குறைந்த காரணத்தினால் வெளிச்சந்தையில் வெங்காயத்தின் விலை உயர்ந்து காணப்பட்டது. வெங்காயத்தின் திடீர் விலை ஏற்றத்தினைக்

2020 மார்ச் 19]

கட்டுப்படுத்துவதற்காகவும், நியாயமான விலையில் நுகர்வோருக்கு வெங்காயத்தினை விற்பனை செய்யவும் சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கையாக கூட்டுறவு நிறுவனங்களால், வெளிச்சந்தை விலையைவிட குறைவான விலைக்கு வெங்காயத்தினை விற்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 79 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் சென்னையில் செயல்பட்டு வரும் 462 நியாய விலைக் கடைகள்மூலம் வெளிச்சந்தை விலையைவிட குறைவான விலையில் வெங்காயம் விற்பனை செய்யப்பட்டது.

8-1-2019 முதல் 4-3-2020 வரையிலும் 372 மெட்ரிக் டன் அளவிலான வெங்காயம், ரூ.1.67 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

4.1 மாநில விலை நிலைநிறுத்தும் நிதி(State Price Stabilisation Fund)

மாண்புமிகு அம்மா அவர்களால், 2011 ஆம் ஆண்டில் கூட்டுறவுகள் மேற்கொள்ளும் சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு ரூ.50.00 கோடி நிதியத்துடன் கூடிய விலை நிலைநிறுத்தும் நிதி ஏற்படுத்தப்பட்டது. மேலும், 2013-2014 ஆம் ஆண்டில், இந்நிதி ரூ.100.00 கோடியாக உயர்த்தப்பட்டது. மேற்படி நிதியினைப் பயன்படுத்துவதற்கான கால அளவு, மேலும் மூன்று ஆண்டுகளுக்கு, 1-11-2017 முதல் 31-10-2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களான துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, குண்டு மிளகாய், புளி, அரிசி மற்றும் நல்லெண்ணெய் விலை உயர்ந்தபோது சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கை மேற்கொள்ளவும், பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளுக்கு சுழல் நிதி மற்றும் வட்டியில்லா நடைமுறை மூலதனக் கடன் வழங்கவும், அம்மா மருந்தகங்கள் தொடங்குவதற்கு என இதுவரையில் ரூ.56.40 கோடி மாநில விலை நிலைநிறுத்தும் நிதியிலிருந்து அரசு வழங்கியுள்ளது.

5. அம்மா மருந்தகம்

2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் "100 அம்மா மருந்தகங்கள்" புதியதாகத் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, மாநிலம் முழுவதும் முக்கியமான இடங்களில் அம்மா மருந்தகங்கள் திறக்கப்பட்டன.

தற்போது, தமிழ்நாட்டில், 116 அம்மா மருந்தகங்களும் 173 கூட்டுறவு மருந்தகங்களும் தரமான மருந்துகளை, குறைவான விலையில் பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்கள், இம்மருந்தகங்களில் 20 விழுக்காடு வரை தள்ளுபடி அளித்து மருந்துகளை விற்பனை செய்வதன்மூலம் ஏழை, எளிய, அடித்தட்டு மக்கள் சேமிப்பதற்கு உதவுகின்றன.

26-6-2014 தொடங்கப்பட்ட தேதி முதல் 29-2-2020 வரை 116 அம்மா மருந்தகங்கள்மூலம் ரூ.360.40 கோடி மதிப்பிற்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 173 கூட்டுறவு மருந்தகங்கள்மூலம் 29-2-2020 வரை ரூ.586.40 கோடி மதிப்பிற்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 29-2-2020 வரை கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் 289 மருந்தகங்கள்மூலம் ரூ.946.80 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மூலக்கூறு மருந்துகள், தரம் மற்றும் செயல்பாடுகளில் வணிகப் பெயர் கொண்ட மருந்துகள் போன்றே செயல்படுவதோடு, குறைவான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் தரமான மருந்துகளை வழங்கும்பொருட்டு, சென்னை (டி.யு.சி.எஸ்., பூங்காநகர்), காஞ்சிபுரம், தருமபுரி, சேலம், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர், விருதுநகர், ஈரோடு, கரூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருப்பூர் ஆகிய மண்டலங்களில் செயல்பட்டுவரும் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் நீலகிரி–குன்னூர் நிக்கல்சன், உத்திரமேரூர் மற்றும் நங்கநல்லூர் தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளிலும் வணிகப் பெயர் கொண்ட மருந்துகளுடன் மூலக்கூறு மருந்துகளும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில், 29-2-2020 வரை ரூ.55.54 இலட்சம் மதிப்பிற்கு மூலக்கூறு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

6. பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்

சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கையாக, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், தரமான காய்கறிகளை நியாயமான விலையில் மக்கள் வாங்குவதற்கு உதவும் வகையில் நகர்ப்புறங்களில் திறக்கப்பட்டன. விவசாயிகளின் விளைநிலங்களிலிருந்து

2020 மார்ச் 19]

பசுமையான காய்கறிகள், இடைத்தரகர்களின்றி நேரடியாகக் கொள்முதல் செய்யப்பட்டு, உடனுக்குடன் தொகை செலுத்தி, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம், பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் நுகர்வோர்களையும், விவசாயிகளையும் நேரடியாக இணைக்கின்றன. மொத்த விற்பனைச் சந்தையிலும் காய்கறிகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

தற்போது, மாநிலத்தில் 79 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 3 நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் 14 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளும் உள்ளடங்கியுள்ளன.

20-6-2013 முதல் 04-3-2020 வரை பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்மூலம் 52,955 மெட்ரிக் டன் அளவிலான காய்கறிகள், ரூ.156.64 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இயல்–IV

சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள்

விவசாயிகள், பழங்குடியினர் மற்றும் அடித்தட்டு மக்களின் மேம்பாட்டுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் தங்களை பல்வேறு துறைகளில் ஈடுபடுத்திக்கொள்கின்றன. சில சிறப்பு நோக்கங்களுக்காக தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள், குறிப்பிட்ட பிரிவு மக்களின் குறிப்பிட்ட தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

(i) பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS)

மலைவாழ் மக்களின் வேளாண் உற்பத்தியை அதிகரித்தல், வேலைவாய்ப்பை உருவாக்குதல், ஒருங்கிணைந்த கடன்திட்டம் மூலம் அவர்களது வருவாயை அதிகரித்தல் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை மலைப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடி மற்றும் பழங்குடி அல்லாதோருக்கு விநியோகித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண் இடுபொருட்கள் வழங்குதல், வேளாண் விளைபொருள் விற்பனை செய்ய உதவுதல் மற்றும் சிறப்பங்காடி நடத்துதல் ஆகிய பணிகளையும் செய்து வருகின்றன. தற்போது மாநிலத்தில் 22 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) இச்சங்கங்களின் புரள் வணிகம் ரூ.163.15 கோடி ஆகும்.

பழங்குடியின மக்களின் சமூக-பொருளாதார நிலையினை மேம்படுத்தவும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஆதாய விலை கிடைக்கச் செய்யவும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால், பொதுவான வணிக முத்திரையிடப்பட்ட தேன், சாமை, புளி மற்றும் வரகு ஆகிய பொருட்களின் விற்பனை 20-06-2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், 29-2-2020 வரை 11,909 கிலோ தேன்,46,714 கிலோ சாமை,1,11,840 கிலோ புளி மற்றும் 10,361 கிலோ வரகு ஆகிய பொருட்கள் மொத்தம் ரூ.1.89 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

(ii) தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்

உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பினை ஒப்பந்தப் பணிகள்மூலம் உறுதி செய்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, தமிழ்நாட்டில் 54 தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 22,307 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

(iii) துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் லிட். (TUCAS)

துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம், கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூரில் செயல்பட்டுவரும் ஒரு சிறப்பு வகை தொடக்க விவசாயக் கூட்டுறவு நிறுவனமாகும். வேளாண் இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்குவதுடன், உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகிறது. இந்நிறுவனம் பயிர்க் கடன், அடமானக் கடன் மற்றும் நகைக் கடன் போன்ற கடன்களை உறுப்பினர்களுக்கு வழங்கி வருகிறது. 2019-2020ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) ரூ.107.80 இலட்சம்

2020 மார்ச் 19]

மதிப்பிற்கு விதைகளை விற்பனை செய்ததுடன், ரூ.57.36 இலட்சம் மதிப்பிற்கு வேளாண் உபகரணங்களை பிற கூட்டுறவு நிறுவனங்களுக்கு விற்பனை செய்துள்ளது.

(iv) கூட்டுறவு அச்சகங்கள்

மாநிலத்தில் தற்பொழுது 26 கூட்டுறவு அச்சகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை தத்தமது செயல் எல்லையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், அரசு அலுவலகங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் அச்சுத் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றன. இக்கூட்டுறவு அச்சகங்களின் புரள்வணிகம் 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) ரூ.54.60 கோடியாக உள்ளது. சென்னை, வேலூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய பெருநகரங்களில் செயல்பட்டு வரும் 7 கூட்டுறவு அச்சகங்கள் ரூ.3.68 கோடி மதிப்பீட்டில், தனியார் அச்சகங்களுடன் போட்டியிடும் வகையில் 2012–2013 ஆம் ஆண்டில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. இந்நவீனமயமாக்கப்பட்ட கூட்டுறவு அச்சகங்கள்மூலம் கூட்டுறவுச் சங்கங்கள், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் பெரும்பாலான அச்சுப் பணிகள் தரமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(அ) கூட்டுறவு அச்சகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்

2013-2014 மற்றும் 2016-2017 ஆம் ஆண்டில், திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்திட தலா ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு இவ்விரு கூட்டுறவு அச்சகங்களும் தற்போது புதிய கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மேலும் 2019-2020 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு அச்சகத்திற்கு ரூ.31.00 இலட்சம் செலவில் முதல் தளம் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்குதல்

இராமநாதபுரம் (இருப்பு-காரைக்குடி) மற்றும் தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்திட, 2016-2017 ஆம் ஆண்டில் முறையே ரூ.10.00 இலட்சம் மற்றும் ரூ.19.22 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 19

அதேபோன்று, 2017-2018 ஆம் ஆண்டில் விருதுநகர், சேலம், கடலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டக் கூட்டுறவு அச்சகங்கள் மொத்தம் ரூ.74.58 இலட்சம் மதிப்பில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில் தருமபுரி, திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களுக்கு முறையே ரூ.33.00 இலட்சம், ரூ.125.00 இலட்சம் மற்றும் ரூ.18.50 இலட்சம் ஆக மொத்தம் ரூ.176.50 இலட்சம் தொகையில் நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இயல்–V

பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு

1. முன்னுரை

1.1. தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ஐ நடைமுறைப்படுத்தி, அனைவருக்கும் உணவு பாதுகாப்பினை உறுதிசெய்வதில் பொது விநியோகத் திட்டம் முக்கியப் பங்காற்றுகிறது. தமிழகத்தில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் கூட்டுறவு நிறுவனங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. 29-2-2020 அன்று 23,486 முழுநேரக் கடைகள் மற்றும் 9,479 பகுதிநேரக் கடைகள் என மொத்தம் 32,965 நியாய விலைக் கடைகளுடன் பரவலான விநியோக தொடரமைப்பை கூட்டுறவுகள் கொண்டுள்ளன. இது மாநிலத்தில் செயல்படும் மொத்த நியாய விலைக் கடைகளான 34,773-ல் 94.80% ஆகும். அதன் விவரம் கீழ்க்கண்டவாறு:

வ. எண்	கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்	நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை (29-2-2020)
1.	மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை	3,365
2.	கூட்டுறவு விற்பனைச் சங்கம்	2,531
3.	பிரதம கூட்டுறவு பண்டகசாலை	1,919
4.	தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்	24,357

2020 மார்ச் 19]

5.	நகர கூட்டுறவு கடன் சங்கம்	471
6.	பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம்	238
7.	இதர வகை கூட்டுறவு சங்கம்	84
	மொத்தம்	32,965

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், ஏழை மற்றும் அடித்தட்டு மக்களின் நிலைத்த நீடித்த வளர்ச்சி ஏற்படுவதற்கும் பொது விநியோகத் திட்டம் முக்கியப் பங்காற்றுகிறது. இத்திட்டம் தொடர்ந்து சிறப்பாக செயல்படுவதை உறுதிசெய்யும் விதமாக, நியாய விலைக் கடைகளை நடத்துவதில் ஏற்படும் நட்டத்தினை தமிழ்நாடு அரசு மானியமாக வழங்கி வருகிறது.

1.2. அரிசி, கோதுமை, சர்க்கரை முதலிய அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்யும் பணியை 26 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், 58 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 10 பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் 2 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஆகியவை உள்ளிட்ட 96 முதன்மைச் சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன. இந்த முதன்மைச் சங்கங்கள் 4,163 இணைப்புச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்து வருகின்றன. இதைத்தவிர 3 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளும், 31 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், 150 பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளும், 126 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், 7 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், 8 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் மற்றும் 5 இதர வகை கூட்டுறவுச் சங்கங்களும், ஆக மொத்தம் 330 கூட்டுறவுச் சங்கங்கள் சுயஎடுப்பு சங்கங்களாக செயல்பட்டு வருகின்றன.

2. கூட்டுறவு நியாய விலைக் கடைகள்

2.1. அரிசி, சர்க்கரை மற்றும் கோதுமை ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்க ஏதுவாக, 32,965 நியாய விலைக் கடைகளை நடத்துவதுடன், அத்தியாவசிய எரிபொருளான மண்ணெண்ணெய்யை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க ஏதுவாக, பிரத்யேகமாக 252 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களையும் கூட்டுறவுச்

சங்கங்கள் நடத்தி வருகின்றன. மேலும், சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்களான துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவையும், நியாய விலைக் கடைகள்மூலம் தமிழக அரசால் வழங்கப்படும் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. கட்டுப்பாடற்ற பொருட்களான ஊட்டி தேயிலை, அம்மா உப்பு போன்றவையும் நியாயமான விலையில் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

3. நகரும் நியாய விலைக் கடைகள்

3.1. தமிழ்நாட்டில் 48 நகரும் நியாய விலைக் கடைகள்மூலம், மக்கள் எளிதில் அணுக இயலாத ஊரகப் பகுதிகள் மற்றும் மலைப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அவர்கள் வசிக்கும் இடங்களுக்கே சென்று விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த 48 நகரும் நியாய விலைக் கடைகள்மூலம் 351 கிராமங்கள் மற்றும் சென்னையில் 54 தெருக்களில் வசிக்கும் 39,311 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள மாவடப்பு மற்றும் குழிப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு 85 கி.மீ. தூரம் வரை சென்று நடமாடும் நியாய விலைக் கடைமூலம் முறையே 157 மற்றும் 301 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருச்சி மாவட்டம், பச்சமலைப் பகுதியில் எளிதில் அணுக இயலாத, மலைக் கிராமங்களான சின்ன பழமலை மற்றும் பெரிய பழமலை ஆகிய கிராமங்களில் உள்ள 57 குடும்ப அட்டைதாரர்களுக்கு நடமாடும் நியாய விலைக் கடைமூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் 19 நகரும் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப்பட்டு, 2,084 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

4. நியாய விலைக் கடைகளின் செயல்பாட்டினை கண்காணித்தல்

பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் உரிய நேரத்தில், உரிய பயனாளிகளுக்கு, முழுமையாக சென்றடைவதனை நிகழ்நிலையில் கண்காணிக்கும் வகையில் நியாய விலைக் கடைகளின் செயல்பாடுகள் அனைத்தும் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து

2020 மார்ச் 19]

நியாய விலைக் கடைகளிலும் விற்பனை முனையக் கருவிகள் (Point of Sale Devices - POS) இணைக்கப்பட்டு கிடங்குகளில் சரக்கு இருப்புப் பதிவு முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுவது வரை அனைத்துப் பதிவுகளும் பதிவு செய்யப்பட்டு, அதன்மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் நிகழ்நிலையில் கண்காணிக்கப்படுகிறது.

5. புதிய நியாய விலைக் கடைகள் அமைத்தல்

2011-2012 முதல் 2018-2019 வரை 670 முழுநேர நியாய விலைக் கடைகள் மற்றும் 1,718 பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. 2019-2020 ஆண்டில் 29-2-2020 வரை 40 புதிய நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டு, கடந்த ஒன்பது ஆண்டுகளில் 2,428 புதிய நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

6. நியாய விலைக் கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்

29-2-2020 அன்றைய நிலையில், கூட்டுறவு சங்கங்கள்மூலம் நடத்தப்படும் 32,965 நியாய விலைக் கடைகளின் கட்டட விவரம் பின்வருமாறு:

வரிசை எண்	விவரம்	நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை
1	சொந்தக் கட்டடம்	3,289
2	அரசுக் கட்டடம்	17,191
3	வாடகையில்லா கட்டடம்	5,424
4	வாடகைக் கட்டடம்	7,061
	மொத்தம்	32,965

மாண்புமிகு பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களால், ஒதுக்கீடு செய்யப்படும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதிமூலம் பல்வேறு கட்டங்களாக நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2018-2019 ஆம் ஆண்டு வரை 1,940 நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் 23 நியாய விலைக் கடைகளுக்கு புதிய

கட்டடங்கள் கட்டப்பட்டு, கடந்த ஒன்பது ஆண்டுகளில் 1963 நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

7. நியாய விலைக் கடைகளில் தேங்கியுள்ள காலிக் கோணிகளை எம்.எஸ்.டி.சி. நிறுவனம் வழியாக மின்னணு ஏலம் (e-auction) மூலம் விற்பனை செய்தல்

கூட்டுறவுத் துறையின்மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்வதன்மூலம் சேகரமாகும் காலிக் கோணிகளை “மாவட்ட காலிக் கோணி விற்பனைக் குழு” மூலம் விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் செப்டம்பர் 2017 முதல் அனைத்து நியாய விலைக் கடைகளிலும், தேங்கியுள்ள சணல் காலிக் கோணிகள், சம்பந்தப்பட்ட முதன்மை சங்கங்களில் சேகரிக்கப்பட்டு, காலி கோணி விவரங்கள் மத்திய அரசு நிறுவனமான MSTC (Metal Scrap Trade Corporation Ltd.) வலைப்பக்கத்தில் (Portal) பதிவேற்றம் செய்து, வெளிப்படைத்தன்மையுடன், MSTC நிறுவன மின்னணு ஏலப் பணித்தளத்தின்மூலம் (e-auction Platform) ஏலம் விடும் முறையினை நடைமுறைப்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் 29-2-2020 வரை 16,96,44,788 காலிக் கோணிகள் விற்பனையாகியுள்ளன.

8. இதர பொருட்களின் விற்பனை விவரம்

(i) ஊட்டி தேயிலை விற்பனை விவரம்

மாண்புமிகு அம்மா அவர்களால் 2001 ஆம் ஆண்டில், சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்கும்பொருட்டு, இண்ட்கோசர்வ் (INDCOSERVE-The Tamilnadu Small Tea Growers’ Industrial Cooperative Tea Factories’ Federation Ltd.) நிறுவனத்திலிருந்து ஊட்டி தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு பொது விநியோகத் திட்டத்தின்கீழ், கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 2,204 மெ.டன் ஊட்டி தேயிலை விற்பனை செய்யப்பட்டு, 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை 27,239 மெ.டன் கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(ii) அம்மா உப்பு விற்பனை விவரம்

அயோடின் பற்றாக்குறையால் ஏற்படும் நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும்பொருட்டு, தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து, அயோடின் கலந்த உப்பு கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவு சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகள்மூலம் விற்பனை செய்யப்படுகிறது. 2019-2020 ஆம்

2020 மார்ச் 19]

ஆண்டில் 29-2-2020 வரை 22,122 மெ.டன் அம்மா உப்பு விற்பனை செய்யப்பட்டு, 2011-2012 முதல் 2019-2020 வரை 2,38,597 மெ.டன் கூட்டுறவு நியாய விலைக் கடைகள்மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

9. நியாயவிலைக்கடைகளை நடத்தும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அரசு மானியம்

கூட்டுறவுச் சங்கங்கள் சேவை மனப்பான்மையுடன் நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. மேலும், விலையில்லாமல் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படும் விளிம்புத் தொகையுடன், கூட்டுறவுச் சங்கங்கள் பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்துவதால் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்யும்பொருட்டு, அரசால் மானியம் வழங்கப்படுகிறது.

2010-2011 முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு ரூ.2,360.22 கோடி பொது விநியோகத் திட்ட மானியமாக கூட்டுறவு நிறுவனங்களுக்கு, அரசால் விடுவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(தொகை ரூ.கோடியில்)

வ. எண்	நிதியாண்டு	வழங்கப்பட்ட மானியம்
1	2010-2011	150.00
2	2011-2012	150.00
3	2012-2013	120.00
4	2013-2014	120.00
5	2010-2011 முதல் 2013-2014 வரை (நிலுவை மானியம் நான்கு தவணைகளில் அளிக்கப்பட்டது - ரூ102.9325 x 4)	411.73
6	2014-2015 (120.00+214.76)	334.76
7	2015-2016 (120.00+207.24)	327.24
8	2016-2017	362.50
9	2017-2018	383.99
	மொத்தம்	2360.22

[2020 மார்ச் 19

10. அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 24-4-2018 அன்று கூட்டுறவுத் துறையின் சார்பாக நடைபெற்ற ஆய்வின்போது, முக்கிய நகரங்கள், மாவட்டத் தலைமையிடங்கள், வட்டத் தலைமையிடங்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகள் ஆகிய இடங்களில், அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடி திறப்பதற்கு ஆணையிடப்பட்டது.

அதனடிப்படையில், முதலாவது கட்டமாக 103 நியாய விலைக் கடைகளில் அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் திறக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விதி எண் 110-ன்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இரண்டாவது கட்டமாக மாநிலம் முழுவதும் 582 நியாய விலைக் கடைகளில் அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் திறப்பதற்கு ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, 653 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் திறக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடியில் 300 வகையான கட்டுப்பாடற்ற பொருட்கள் பொதுமக்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையில் இருந்து (MRP) 5%-க்குக் குறைவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் அனைத்திலும், இதர பொருட்களுடன் ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத் தயாரிப்புகளான "மங்களம் மஞ்சள் தூள், மசாலா தூள் மற்றும் குங்குமம்" போன்ற பொருட்களும், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தயாரிப்புகளான "அர்த்தநாரீஸ்வரா பிராண்ட் அரிசி, உளுத்தம் பருப்பு, நல்லெண்ணெய், கடலை எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய்" ஆகிய பொருட்களும், பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத் தயாரிப்புகளான "பசுமை பிராண்ட் நல்லெண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய்" போன்றவையும், மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தயாரிக்கும் "சிறுதானியங்களான வரகு, சாமை, தினை" மற்றும் இதர வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களால் கொள்முதல் செய்யப்படும் "ஏலக்காய், மிளகு, வெல்லம், புளி" போன்ற பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

2020 மார்ச் 19]

இதனால் ஏழை, எளிய மக்கள் பயன்பெறுவதோடு, அவர்களின் வாங்கும் திறன் அதிகரிக்கப்படுகிறது. மேலும், தரமான பொருட்களை நியாயமான விலையில் ஒரே இடத்தில் பெறுவதற்கு அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் பயன்படுவதோடு, கூட்டுறவுத் துறையின் சேவையை மக்கள் அறிய ஒரு வாய்ப்பாகவும் அமைகிறது.

11. பொங்கல் பரிசுத் தொகுப்பு - 2020

"தமிழக மக்கள் பொங்கல் 2020 திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட ஏதுவாக பச்சரிசி 1 கிலோ, சர்க்கரை 1 கிலோ, இரண்டடி நீள கரும்புத் துண்டு, 20 கிராம் முந்திரி, 20 கிராம் திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியவை அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரூ.1000/- ரொக்கப் பணம் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படும்" என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, புதிதாக அரிசி அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கும், இலங்கை அகதிகளுக்கும், பொங்கல் பரிசு வழங்கவும் அரசு அனுமதி வழங்கியதால், அவர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கப்பட்டது. மாநில அளவில் தகுதியான 2,00,30,431 அரிசி குடும்ப அட்டைதாரர்களில் 1,98,20,999 பேருக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பும், 1,982 கோடியே 9 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது. விநியோக சதவிகிதம் 98.95 ஆகும்.

இயல்–VI

கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

1. முன்னுரை

கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் பிரதான நோக்கத்துடன் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சியினை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட அளவில் 29 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் மேற்கொண்டு வருகின்றன. கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை கோட்பாடுகளை பொதுமக்களிடையே கொண்டு செல்லும்பொருட்டும், விழிப்புணர்வு ஏற்படுத்தும்பொருட்டும், பொருட்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டுறவு வார விழாக்களையும் ஏற்பாடு செய்து வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவுச் சங்கங்களின் நிகர

இலாபத்தில் ஒரு பகுதியை கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கும் மற்றும் கூட்டுறவுக் கல்வி நிதிக்கும் வசூலித்து வருகிறது. கூட்டுறவு ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி மற்றும் கூட்டுறவு தொடர்பான செய்திகளை மக்களிடையே கொண்டு செல்வதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது.

2. கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள்

மாநிலத்தில் 20 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவுத் துறைப் பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் குறுகிய காலப் பயிற்சிகளை நடத்தி வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் முறையான கூட்டுறவு பட்டயப் பயிற்சியை நடத்துவதுடன், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு அஞ்சல் வழிக் கல்விமூலம் கூட்டுறவு பட்டயப் பயிற்சியினையும் அளித்து வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) 20 பயிற்சி நிலையங்களில் 2,099 மாணவர்கள் முழு நேரக் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், 1,656 பணியாளர்கள் அஞ்சல்வழி கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சமையல் கலை கைவினைஞர்களை உருவாக்கும்பொருட்டு, ஏழு கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் மற்றும் இரண்டு கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையங்களில் சான்றிதழுடன்கூடிய சமையல் கலை கைவினைஞர் (பொது) பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதுவரை 772 மாணவர்கள் இப்பயிற்சியில் சேர்ந்துள்ளனர். இவர்களில் 436 மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

3. தொழிற்கல்வி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், இரண்டு கூட்டுறவுத் தொழிற்பயிற்சி நிறுவனங்களை பர்கூர் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது. மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடியில் ஒரு கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியையும் நடத்தி வருகிறது. இக்கூட்டுறவுத் தொழிற் பயிற்சி

2020 மார்ச் 19]

நிலையங்களில், கணினி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி, தையற்கலை, நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, மின் பழுதுபார்த்தல், சமையல் கலை கைவினைஞர் (பொது) பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) மேற்கண்ட இரு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் 174 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இலால்குடி கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரி, இயந்திரப் பொறியியல், கணினி பொறியியல், மின்சாரம் மற்றும் மின்னணு பொறியியல் ஆகிய மூன்று பட்டயப் பயிற்சிகளை வழங்கி வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) மேற்காணும் பட்டயப் பயிற்சிகளில் 90 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

4. கூட்டுறவு மேலாண்மை தொடர்பான உயர் பட்டயப் பயிற்சி மற்றும் குறுகிய காலப் பயிற்சி

தேசிய கூட்டுறவு பயிற்சிக் குழுவால் (புதுடெல்லி), சென்னை மற்றும் மதுரையில் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், நிதி உதவி அளித்து வருகிறது. இவ்விரு நிலையங்களில் கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப் பயிற்சி நடத்தப்பட்டு வருவதுடன் வணிக மேலாண்மையியல் முதுகலை பட்டப்படிப்பும் (MBA) நடத்தப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி நிலையங்களில், கூட்டுறவுத் துறை பணியாளர்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி நடத்தப்படுகின்றது. 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையம், சென்னையில் 70 குறுகிய காலப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளது. இதில் 1,598 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

இதே போன்று 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) கூட்டுறவு மேலாண்மை நிலையம், மதுரையில் 59 குறுகிய காலப் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. இதில் 1,676 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

5. பல்கலைக்கழகங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவில் ஆராய்ச்சி மேற்கொள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சென்னைப்

பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம் மற்றும் காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ரூ.5.00 இலட்சம் வைப்புத் தொகை வைத்துள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம்கூட்டுறவு மற்றும் அதன் தொடர்புடைய இனங்களில்ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை 25 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ரூ.21.25 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

6. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியின் பயன்பாடு

கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 3 விழுக்காடு தொகையை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கு அளிக்கின்றன. இந்நிதி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக் குழுவின் ஒப்புதல் பெற்ற பிறகே விடுவிக்கப்படுகிறது. இந்நிதியிலிருந்து கூட்டுறவு ஆராய்ச்சிக்கு மானியமாகவும், அதே சமயம் கூட்டுறவு வளர்ச்சிக்கு வட்டியில்லாக் கடனாகவும், கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

2011-2012 முதல் 2019-2020 (29-2-2020) வரை ரூ.59.22 கோடி மானியமாகவும், ரூ.266.22 கோடி வட்டியில்லாக் கடனாகவும் விடுவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை கூட்டுறவுச் சங்கங்களில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டுதல், அலுவலகக் கட்டடம் கட்டுதல், உலர் கலன்கள் அமைத்தல், வாகனங்கள் வாங்குதல், சூரிய உலர் கலன்கள் மற்றும் சூரிய தகடு நிறுவுதல், நுகர்வோர் சுய சேவைப் பிரிவை நவீனப்படுத்துதல், கூட்டுறவுச் சங்கங்களை நவீனமாக்குதல், சிப்பமிடும் கருவிகள் வாங்குதல், எடையிடும் இயந்திரம் அமைத்தல், பதனிடும் அலகுகள் அமைத்தல், கரும்பு அறுவடை இயந்திரம் வாங்குதல், கூட்டுறவு வளாகம் கட்டுதல் மற்றும் நெசவாளர்களுக்கு பெடல் தறிகள் வழங்குதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

7. கூட்டுறவுக் கல்வி நிதியின் பயன்பாடு

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவுக் கல்வி நிதிக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின்

2020 மார்ச் 19]

நிகர இலாபத்தில் 2 விழுக்காடு தொகையை வழங்குகின்றன. இந்நிதியிலிருந்து கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி, கூட்டுறவு பிரச்சாரம், கூட்டுறவு விளம்பரம் போன்ற பணிகளுக்கு கூட்டுறவுக் கல்வி நிதிக் குழுவின்ஒ ப்புதல் பெற்று நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 2011-2012 முதல் 2019-2020 (29-2-2020) வரை ரூ.62.95 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும், துறை அலுவலர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சிகள் நடத்துதல், மாவட்டங்களில் உறுப்பினர் கல்வித் திட்டம் மற்றும் இளைஞர் ஈர்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும் அகில இந்திய கூட்டுறவு வார விழாக்கள் கொண்டாடுதல் ஆகியவற்றிற்கு இந்நிதி பயன்படுகிறது.

இயல்—VII

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் (ICDP)

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் என்பது ஒரு மாவட்டத்திலுள்ள பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டமானது மாநில அரசு மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழக நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

2. தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழக ஆலோசனையின்படி, மாநில அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டத்தில் இத்திட்டமானது ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படுகிறது.

3. தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டமானது, 1989 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, 28 மாவட்டங்களில் ரூ.467.90 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

4. தற்போது ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டமானது நாமக்கல், திருவள்ளூர், கன்னியாகுமரி மற்றும் சென்னை ஆகிய நான்கு மாவட்டங்களில் ரூ.355.79 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

5. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த முறையில் செயல்படுவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதனை குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

[2020 மார்ச் 19

6. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்திற்கான நிதிஉதவிகள், தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து மறுநிதியாகப் பெறப்படுகிறது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது திட்ட செயலாக்க முகமையாக செயல்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதி உதவி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து தமிழ்நாடு அரசுக்குக் கடனாக வழங்கப்பட்டு, தமிழக அரசிடமிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனாகவும், பங்குத்தொகையாகவும் வழங்கப்படுகிறது. விவசாய விற்பனைத் திட்டத்திற்கும், பதப்படுத்துதல் மற்றும் கிடங்கு, அலுவலகக் கட்டடம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துகின்ற 'துணைத் திட்டங்களில்' நலிவடைந்த பிரிவினருக்கு திட்டத் தொகையில் 15% தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து மானியமாகப் பெறப்படுகிறது.

7. தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக மாநில அரசால் 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை ரூ.461.97 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

8. இத்திட்டம் முதற்கட்டமாக 32 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ள நிலையில் தற்பொழுது இரண்டாம் கட்டமாக 9 மாவட்டங்களில் செயல்படுத்த அரசு ஆணை வழங்கப்பட்டு அதற்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன.

இயல் - VIII

கூட்டுறவுத் தேர்தல்

தமிழ்நாடு அரசால் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்தம்) சட்டம் 2012-ன்படி 33-A என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, தேர்தல் ஆணையம் 8-2-2013 முதல் செயல்படத் துவங்கியது.

அரசியலமைப்பு 97-வது திருத்தச் சட்டம் 2011-ன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவில் ஒரு பட்டியல் வகுப்பு

2020 மார்ச் 19]

உறுப்பினரும் மற்றும் இரண்டு பெண் உறுப்பினர்களும் மட்டுமே இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி பெண்களுக்கான அதிகாரமளிக்கும் பொருட்டும், சமூக நீதியினை உறுதி செய்திடும் பொருட்டும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில், 2013 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின்படி, தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகக் குழுவில் 18% பட்டியல் வகுப்பினர் மற்றும்ப ட்டியல் பழங்குடியினருக்கும் மற்றும் 30% பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 14 ஆண்டுகளுக்குப் பின் 2013-ல் 22,552 சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு 2,04,889 நிருவாகக் குழு உறுப்பினர்கள் வெற்றிகரமாக தேர்வு செய்யப்பட்டனர்.

2013 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுக்களின் 5 ஆண்டு பதவிக்காலம் முடிவுற இருந்த தருவாயில் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 பிற செயற்பதிவாளர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிற 18,805 கூட்டுறவுச் சங்கங்களுக்கு நான்கு கட்டங்களில் தேர்தல் நடத்திட அறிவிப்பு வழங்கப்பட்டது. அவற்றுள் முதல் கட்டத்தில் 17,836 சங்கங்களுக்கும், இரண்டாம் கட்டத்தில் 185 சங்கங்களுக்கும், மூன்றாம் கட்டத்தில் 77 சங்கங்களுக்கும், நான்காம் கட்டத்தில் 53 சங்கங்களுக்கும் என மொத்தம் 18,151 சங்கங்களுக்கு தேர்தல் முடிவுற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவினர் பதவியேற்றுள்ளனர்.

ஐந்தாம் கட்டத்திற்குட்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு தேர்தல் அறிவிப்பு தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தினால் வெளியிடப்பட வேண்டும்.

இயல்–IX

கூட்டுறவுகளின் மூலமாக நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை அடைதல்

மாநிலத்தில் நிலையான வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் உயர்வை உறுதி செய்யும் வகையில் கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு 7% வட்டி விகிதத்தில்

பயிர்க்கடன் வழங்கி வருகின்றன. தமிழ்நாடு அரசு, உரிய காலத்தில் பயிர்க்கடனைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு, இந்திய அரசு வழங்கும் 3% வட்டி ஊக்கத் தொகையுடன் கூடுதலாக 4% வட்டி ஊக்கத் தொகை வழங்குகிறது. இதன் காரணமாக, உரிய காலத்திற்குள் கடனைத் திருப்பி செலுத்தும் விவசாயிகளிடமிருந்து வட்டி ஏதும் வசூலிக்கப்படுவதில்லை.

கடந்த மூன்று ஆண்டுகளில் கூட்டுறவுகளின் வாயிலாக விவசாயிகளுக்குப் பின்வருமாறு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது:

ஆண்டு	கூட்டுறவுகளின் வாயிலாக வழங்கப்பட்ட பயிர்க் கடன் (ரூபாய் கோடியில்)
2016-2017	4227.98
2017-2018	6220.27
2018-2019	8127.68
2019-2020 (பிப்ரவரி 2020 வரை)	8406.39

மேலும், விவசாயிகளின் நலன்களைக் காத்திடும் வகையில், தமிழ்நாடு அரசு கூட்டுறவு நிறுவனங்களில் 31-3-2016-ல் நிலுவையிலிருந்த சிறு மற்றும் குறு விவசாயிகளின் பயிர்க் கடன், மத்திய கால வேளாண்மைக் கடன் மற்றும் பண்ணை சார்ந்த நீண்ட காலக் கடன் ஆகியவற்றைத் தள்ளுபடி செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 12,02,075 விவசாயிகள் ரூ.5,318.73 கோடி அளவிற்கு தள்ளுபடி பெற்று பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு மக்கள் நலனைக் காக்கும் விதமாக, கூட்டுறவு நிறுவனங்களின்மூலம் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 97, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 1-11-2011 மற்றும் அரசாணை எண்112, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-7-2013 ஆகியவற்றின்படி ரூ.100 கோடியிலான விலை நிலைநிறுத்தும் நிதியினை ஏற்படுத்தி உள்ளது.

அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு வகைகள், புளி, எண்ணெய், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலை அதிகளவில் உயரும்போது விலை கட்டுப்படுத்தும் நிதியினைக் கொண்டு கொள்முதல் செய்து,

2020 மார்ச் 19]

கூட்டுறவுகளின் விற்பனை அலகுகள்மூலம் விற்பனை செய்வதன் மூலம் நுகர்வோருக்குக் குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கப் பெறுவதுடன், வெளிச்சந்தை விலையும் கட்டுப்படுத்தப்படுகிறது.

2011 ஆம் ஆண்டு முதல் நாளது தேதிவரை விலைக்கட்டுப்படுத்தும் நிதியினைப் பயன்படுத்தி, சந்தைக்குறுக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலை கட்டுப்படுத்தப்பட்டு நிலையான நுகர்வு உறுதி செய்யப்படுகிறது.

இந்தியாவிலேயே, அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் முதன்மை மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், ஏழை, எளிய மற்றும் அடித்தட்டு மக்களின் நிலைத்த நீடித்த வளர்ச்சி (Sustainable Development) ஏற்படுவதற்கும் பொது விநியோகத் திட்டம் முக்கிய பங்காற்றி வருகிறது. தமிழகத்தில் உள்ள 32,965 கூட்டுறவு நியாய விலைக் கடைகள்மூலம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்கள் தங்குதடையின்றி வழங்கப்பட்டு உணவு பாதுகாப்பானது (Food Security) உறுதி செய்யப்படுகிறது. மேலும், தமிழகத்தில் 17-5-2011 முதல் விலையில்லா அரிசி வழங்கப்படுவதுடன், 2-2-2017 முதல் விலையில்லா கோதுமையும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வழங்கப்பட்டு, தமிழக ஏழை, எளிய மக்கள் பசியின்றி வாழ வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் "அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம்" தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, ஆண்டு முழுவதும் பாதுகாப்பான உணவைப் பெறுவது உறுதி செய்யப்பட்டு வருவதால், "பட்டினிக்கு முடிவு கட்டுவோம்" (To end Hunger) என்னும் இலக்கு ஏற்கெனவே தமிழ்நாட்டில் எய்தப்பட்டுள்ளது.

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், பொது விநியோகத் திட்டத்தினை தொடர்ந்து சிறப்பாக செயல்படுவதை உறுதி செய்யும் விதமாகவும், நியாய விலைக் கடைகளை நடத்துவதில் ஏற்படும் நட்டத்தினை கூட்டுறவு சங்கங்களுக்கு தமிழ்நாடு அரசு மானியமாக வழங்கி, அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பையும், நிலைத்த நீடித்த வளர்ச்சிக்கான இலக்கினை 2030-க்குள் அடைவதையும் உறுதி செய்கிறது.

நிறைவுரை

தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் அனைத்துத் தரப்பு மக்களையும், அனைத்து வகையிலும் வளர்ச்சி பெறுவதை இலக்காகக் கொண்டு செயலாற்றுகிறது. அனைத்து மக்களின் முன்னேற்றத்திற்காகவும் குறிப்பாக ஏழை, எளிய மக்களின் முன்னேற்றத்திற்காகவும் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவினர் மூலமாக தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023-ஐ செயல்படுத்தும் நோக்கத்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் கூட்டுறவு நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 19]

இணைப்பு II

(136 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பினைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முகவுரை

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு அளிப்பதில் அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த இலக்கை அடைய அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை பொருளாதார பாகுபாடு இன்றி அனைத்து குடும்பங்களும் பயன்பெறுமாறு நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டம் உணவுப் பாதுகாப்பை வழங்கும் சிறந்த திட்டம் என அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளது.

நியாய விலைக் கடைகளுக்குக் குறித்த நேரத்தில் பொருட்களை விநியோகிக்கவும் அதனை சிறந்த முறையில் கண்காணிக்கவும் தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் முழு கணினிமயமாக்கப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிப்பதற்கு ஏதுவாக அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் விற்பனை முனைய இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது போலி குடும்ப அட்டைகள் மற்றும் போலிப்பட்டியல்கள் ஆகியவற்றைக் களைவதற்கும், பொது விநியோகத் திட்டத்தின்மூலம் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி மற்றும் இதர பொருட்களை முறைப்படுத்தவும் உதவியாக உள்ளது.

ஒருங்கிணைந்த பொது விநியோக மேலாண்மைத் திட்டத்தினை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தும் விதமாக, மாநிலத்திற்குள் இடம்பெயரும் குடும்ப அட்டைதாரர்கள் தமிழ்நாட்டில் உள்ள எந்த நியாய விலைக் கடையிலும் தங்களுக்குரிய பொது விநியோகத் திட்டப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் திட்டமானது பரிட்சார்த்த முறையில் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய இரு மாவட்டங்களில் 1-2-2020 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை நேர்த்தியான முறையில் நிறைவேற்றுவதற்காக மாநில உணவு ஆணையம் தலைவர் மற்றும் 0 உறுப்பினர்களைக் கொண்டு 16-2-2018 அன்று ஏற்படுத்தப்பட்டது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்

செயல்பாடுகள் குறித்து, மாநில உணவு ஆணையம் சீரான இடைவெளியில் கூட்டம் நடத்தி ஆலோசித்து வருகிறது.

பொது விநியோகத் திட்டத்தின்மூலம் விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களைச் கொள்முதல் செய்தல், சேமித்து வைத்தல் மற்றும் வழங்குதல் ஆகிய பணிகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மேற்கொள்கின்றது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் நவீன முறையிலான சேமிப்பு வசதிகளை விவசாயிகள் மற்றும் இதர வியாபார நிறுவனங்களுக்கு வழங்கும் பணிகளை மேற்கொள்கின்றது. அத்துடன் இந்நிறுவனம் சேமித்து வைக்கப்படும் பொருட்களின் இழப்பினைக் கட்டுப்படுத்துவதையும் பொருட்களின் சேமிப்புத் திறனை மேம்படுத்துவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு, சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியும், இயக்கியும் வருகிறது.

நுகர்வோர் பாதுகாப்பு என்பது இத்துறையின் மிக முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாக விளங்குகிறது. நுகர்வோரின் பாதுகாப்பிற்காக போதிய அதிகாரத்துடன் கூடிய தகுதி வாய்ந்த நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள் அமைக்கப்பட்டு அதன்மூலம் நுகர்வோர் குறைகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு நுகர்வோரின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அரசு விலைக் கண்காணிப்புக் குழு ஒன்றை மாநில அளவில் அமைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வினைக் கண்காணித்து கட்டுப்படுத்த காலமுறைப்படி கூட்டம் நடத்தி உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

அத்தியாவசியப் பொருட்களின் பதுக்கல் மற்றும் கடத்தலைத் தடுக்க குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் அமலாக்கப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை எய்திடும் வகையில் நம் மாநிலத்தில் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்மூலம் பசியினை முற்றிலுமாகப் போக்குவதுடன், அனைவருக்குமான உணவுப் பாதுகாப்பினையும் உறுதி செய்கிறது.

2020 மார்ச் 19]

இயல்-1

பொது விநியோகத் திட்டம்

1.1 முன்னுரை

இந்திய அரசியலமைப்பின் அரசு நெறிமுறைக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஊட்டச்சத்து உயர்வு மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றினை அடைய, மாநிலத்தில் வசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் மொத்த உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்ய தமிழ்நாடு அரசு கடமைப்பட்டுள்ளது. கடந்த 40 வருடங்களாக நடைமுறையில் உள்ள அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் வருமான அளவு அல்லது சமூக நிலை பாகுபாடில்லாமல் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் 1-11-2016 முதல் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (NFSA), 2013 அமல்படுத்தப்பட்டபோதிலும், அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் தன்மை மாறாமல், சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள வழங்கல் அளவின்படி செயல்படுத்தி வருகிறது. மாநிலத்தின் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் அனைவராலும் வியந்து போற்றப்படுகிறது. தமிழ்நாடு அரசு பெரும் மானியச் சுமையினைத் தாங்கி அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினைத் திறம்படவும், வெற்றிகரமாகவும் செயல்படுத்தி வருவதன் வாயிலாக, நமது மாநிலம் பட்டினியற்ற நிலையினை தக்க வைத்துள்ளது.

மாநிலத்தில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 அமல்படுத்தப்படுவதற்குமுன், குடும்ப அட்டை ஒன்றிற்கு குறைந்தபட்சம் 12 கிலோ, அதிகபட்சம் 20 கிலோ என்ற வழங்கல் அளவிற்கு உட்பட்டு, அரிசி அட்டைகளுக்கு மாதமொன்றிற்கு நபர் ஒருவருக்கு முறையே 4 கிலோ, 2 கிலோ என்ற அளவில் வயது வந்தோருக்கும், குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டன. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை 1-11-2016 முதல் அமல்படுத்திய பின்னர், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரருக்கும் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் தன்மை மாறாமல் முந்தைய வழங்கல் அளவு பாதுகாக்கப்பட்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அளவின்படி (ஒவ்வொரு குடும்ப உறுப்பினருக்கும் தலா 5 கிலோ) வழங்கப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டப் பயனாளிகள் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளதை விட அதிக அளவு அரிசியினைப் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பொது விநியோகத் திட்டத்தில் 1-6-2011 முதல் அரிசியும்,

2-2-2017 முதல் கோதுமையும் (அரிசிக்குப் பதிலாக குறிப்பிட்ட அளவு) விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் திறம்பட செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க ஒரு தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்களுடன் தமிழ்நாடு மாநில உணவு ஆணையம் 16-2-2018 முதல் செயல்பட்டு வருகிறது.

மாநில பொது விநியோகத் திட்டம் முழு கணினிமயமாக்கப்பட்டதன்மூலம் நியாய விலைக் கடைகளில் தானியங்கி முறையில் விற்பனை பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தியாவசியப் பொருட்களின் நகர்வு மற்றும் பல்வேறு விநியோக மையங்களில் உணவு தானியங்கள் இருப்பு ஆகியவை நிகழ்காலத்தில் கண்காணிக்கப்படுகின்றன. இத்திட்டம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை வழங்கி வரும் சேவைகளை எளிதில் அணுகுவதற்கும் வெளிப்படைத் தன்மையுடையதாகவும் அமைந்துள்ளது. குடும்ப அட்டைதாரர்களுக்கு விற்பனை முனைய இயந்திரம் மூலமாக மட்டுமே அத்தியாவசியப் பொருட்கள் மின்னணு குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தி வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு மாநிலத்திற்குள் எந்தவொரு நியாய விலைக் கடையிலும் குடும்ப அட்டைதாரர்கள் அவர்களுக்குரிய உரிமப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் 1-2-2020 முதல் பரிட்சார்த்த முறையில் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நிதி ஆண்டு 2020-2021-ல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் செயல்பாட்டினைப் பொறுத்து, திட்டம் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும்.

1.2 உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் முக்கியப் பணிகள்

மாநில அளவில் ஆணையாளர் தலைமையில் இயங்கி வரும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பொது விநியோகத் திட்டம் குறித்த அரசின் கொள்கைகளை அமல்படுத்துதல், மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்துதல் மற்றும் கூர்ந்து கண்காணித்தல், அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955-ன் பிரிவுகளையும், அதன்கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகளையும் நடைமுறைப்படுத்துதல் மற்றும்

2020 மார்ச் 19]

நுகர்வோர் உரிமைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-ன்கீழான சட்டக் கூறுகள் குறித்து மாநிலம் முழுவதும் பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்மூலம் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் ஆகிய இன்றியமையா பங்கினை ஆற்றி வருகிறது.

1.3 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பொறுப்புகள்

மாநில அரசினால் செயல்படுத்தப்பட்டு வரும் நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மாநில பொது விநியோகத் திட்டப் பயனாளிகளுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் வழங்குவதற்கு ஏதுவாக அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றினைக் கொள்முதல் செய்தல், சேமித்தல் மற்றும் விநியோகித்தல் பணிகளை மேற்கொள்கிறது. இந்நிறுவனம் மத்தியத் தொகுப்பிலிருந்து அரிசி மற்றும் கோதுமையினை இந்திய உணவுக் கழக கிடங்குகளிலிருந்து நகர்வு செய்தும், இந்திய உணவுக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவராகவும் நெல் கொள்முதல் செய்கிறது. இந்நிறுவனம் சர்க்கரையினை தமிழ்நாடு சர்க்கரை கூட்டமைப்பு மற்றும் தேவைக்கேற்ப வெளிச்சந்தையிலிருந்து கொள்முதல் செய்தும், துவரம் பருப்பினை மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனமான (NAFED)-டமிருந்து கொள்முதல் செய்தும் மற்றும் பாமாயிலினை வெளிச்சந்தையிலிருந்து ஏல முறையில் கொள்முதல் செய்தும் வருகின்றது. இந்நிறுவனம் நகர்வு/ கொள்முதல் செய்யப்பட்ட அத்தியாவசியப் பொருட்களை அதன் கிடங்குகளில் சேமித்து அவற்றை மாதாந்திர ஒதுக்கீட்டிற்கு ஏற்ப சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகளுக்கு விநியோகித்து வருகின்றது.

1.4 நியாய விலைக் கடைகள்

நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களை சேமித்து மின்னணு குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு மாதமும் விநியோகம் செய்வது பொது விநியோகத் திட்ட அமைப்பின் கடைநிலை அலகாகும். நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் கூட்டுறவுத் துறையினாலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினாலும், மகளிர் சுய உதவிக் குழுக்களாலும் மற்றும் இதர கூட்டுறவுச் சங்கங்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவுத் துறை, பிற நிறுவனங்களை விட அதிக எண்ணிக்கையில் நியாய விலைக் கடைகளை நடத்தி

வருகின்றது. தமிழ்நாட்டில் தனியார் எவரும் நியாய விலைக் கடையினைச் செயல்படுத்த அனுமதிக்கப்படுவதில்லை.

நியாய விலைக் கடைகளிலும் மின்னணு குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தி விற்பனை முனைய இயந்திரங்கள் மூலமாக மட்டுமே குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதால், நியாய விலைக் கடைகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் நிகழ் நேரத்தில் கண்காணிக்கப்படுகின்றன.

31-1-2020 நிலவரப்படி, மாநிலத்தில் செயல்பட்டு வரும் முழு நேர/பகுதி நேர நியாய விலைக் கடைகளின் நிறுவனவாரியான எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

வ. எண்	நிறுவனம்	முழு நேரம்	பகுதி நேரம்	மொத்தம்
1	கூட்டுறவுச் சங்கங்கள் (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குபவை)	23,444	9,439	32,883
2	இதர கூட்டுறவுச் சங்கங்கள்	319	164	483
3	தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்	1,178	277	1,455
4	மகளிர் சுய உதவிக் குழுக்கள் நடத்தும் நியாய விலைக் கடைகள்	379	44	423
	மொத்தம்	25,320	9,924	35,244

குடும்ப அட்டைதாரர்கள் இருப்பிடப் பகுதிக்குள்ளேயே அத்தியாவசியப் பொருட்களை வாங்கிச் செல்லும் வகையில் நியாய விலைக் கடைகளைத் திறக்க மாநில அரசு நடவடிக்கை மேற்கொள்வதால், குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்து 1.0 கிலோ மீட்டருக்கு மேல் நடந்து சென்று அத்தியாவசியப் பொருட்களை வாங்கும் நிலை தவிர்க்கப்படுகிறது. மக்கள் எளிதில் சென்று வர முடியாத பகுதிகள், மலைப் பகுதிகள்

2020 மார்ச் 19]

மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படக்கூடிய பகுதிகளில் நியாய விலைக் கடைகளைத் திறக்க தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. தேவைப்படும்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளைத் தளர்த்தி புதிய நியாய விலைக் கடைகள் திறக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

1.5 மின்னணு குடும்ப அட்டைகள்

நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தி அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. 31-1-2020 நிலவரப்படி, மொத்தம் 2,02,31,394 மின்னணு குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன.

1.5.1 மின்னணு குடும்ப அட்டைகளின் வகைகள்

மாநில பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களின் விருப்பம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஐந்து வகையான மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. மின்னணு குடும்ப அட்டை வகை, அதற்கான உரிம அளவு மற்றும் 31-1-2020 நிலவரப்படி, புழக்கத்தில் உள்ள மின்னணு குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

வ. எண்	குடும்ப அட்டையின் வகை	தகுதியான அத்தியாவசியப் பொருட்கள் விவரம்	மின்னணு குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை
1	முன்னுரிமை குடும்ப அட்டைகள் (PHH)*	அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும்	78,57,277
2	முன்னுரிமை குடும்ப அட்டைகள் – அந்தியோதயா அன்னயோசனா (PHH-AAY)	35 கிலோ அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும்	18,61,784

[2020 மார்ச் 19

வ. எண்	குடும்ப அட்டையின் வகை	தகுதியான அத்தியாவசியப் பொருட்கள் விவரம்	மின்னணு குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை
3	முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் (NPHH)**	அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும்	98,88,910
4	முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள்-சர்க்கரை (NPHH-S)	சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைகள் (அரிசி தவிர பிற அத்தியாவசியப் பொருட்கள்)	5,73,951
5	முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் – எப்பொருளும் இல்லாதவை (NPHH-NC)	எப்பொருளும் இல்லாதவை	49,472
	மொத்த மின்னணு குடும்ப அட்டைகள்		2,02,31,394

* மத்திய அரசின் ஒதுக்கீடு, ** மாநில அரசின் ஒதுக்கீடு

1.5.2 அந்தியோதயா அன்னயோசனா திட்ட குடும்ப அட்டைகள்

அந்தியோதயா அன்னயோசனா திட்டத்தின்கீழ் மாநிலத்தில் வசித்து வரும் வறியவர்களில் வறிய குடும்பங்கள் பயனாளிகளாகக் கண்டறியப்படுகின்றனர். அந்தியோதயா அன்னயோசனா திட்ட குடும்ப அட்டைகள் ௩௫ கிலோ விலையில்லா அரிசி பெறத் தகுதியுடையவராவர். இதைத் தவிர, அந்தியோதயா அன்னயோசனா திட்டப் பயனாளிகளுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பிற அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. நம் மாநிலத்திற்கு இந்திய அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அந்தியோதயா அன்னயோசனா திட்டப் பயனாளிகளின் எண்ணிக்கை 18,64,600 ஆகும். இப்பயனாளிகளுக்கு விலையில்லா அரிசித் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, தமிழ்நாடு அரசு மாநிலத்தில் முழு உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்துள்ளது. மின்னணு குடும்ப

2020 மார்ச் 19]

அட்டைகள் முதியோர் ஓய்வூதியத் திட்ட (OAP) மற்றும் அன்னபூர்ணா திட்டப் (ANP) பயனாளிகளுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது.

1.5.3 திருநங்கைகளுக்கான குடும்ப அட்டைகள்

அரசு, மாநிலத்தில் தனி நபர் அல்லது குடும்பமாக வசித்து வரும் திருநங்கைகளுக்கு குடும்ப அட்டைகள் வழங்கி வருகிறது. 31-1-2020 நிலவரப்படி 2,293 குடும்ப அட்டைகள் திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1.5.4 சர்க்கரை குடும்ப அட்டையினை அரிசி குடும்ப அட்டையாக மாற்றம்

மாநில பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 31-10-2019 அன்றைய நிலவரப்படி 10,19,491 சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைகள் புழக்கத்தில் இருந்தன. பெரும்பாலான சர்க்கரை குடும்ப அட்டைதாரர்கள் அரிசி குடும்ப அட்டையாக மாற்றம் செய்து தர விடுக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்று சர்க்கரை குடும்ப அட்டையினை அரிசி குடும்ப அட்டையாக மாற்றம் செய்ய அனுமதி வழங்கி அரசு உத்தரவிட்டது. இதன்மூலம் 19-11-2019 முதல் 29-11-2019 வரையிலான காலத்தில் 4,51,614 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அரிசி குடும்ப அட்டையாக மாற்றம் செய்யப்பட்டன.

1.5.5 நகல்/மேம்படுத்தப்பட்ட மின்னணு குடும்ப அட்டைகள் வழங்குதல்

துணை ஆணையாளர் (நகரம்) வடக்கு/தெற்கு மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலகங்களில் நகல்/மேம்படுத்தப்பட்ட மின்னணு குடும்ப அட்டைகள் அச்சடித்து வழங்கும் வகையில் நெகிழி அட்டை அச்சடிக்கும் இயந்திரம் வழங்குவதற்கும், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு அழித்தல் இயந்திரம் வழங்குவதற்கும், அரசினால் மொத்தம் ரூ.53,78,970/- ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அச்சடிக்கும் இயந்திரம் மற்றும் வெற்று குடும்ப அட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு துணை ஆணையாளர் (நகரம்) வடக்கு/தெற்கு மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டது. துறையின் இணையதளத்திலும் பொது மக்கள் விண்ணப்பிக்க ஏதுவாக வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 19

இதன் மூலம் பயனாளிகள் மின்னணு குடும்ப அட்டைகளை அவர்களது சொந்த மாவட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1.5.6 காவல்/சிறை மற்றும் வனத் துறைப் பணியாளர்களுக்கான குடும்ப அட்டைகள்

தமிழ்நாடு அரசு காவல், சிறை மற்றும் வனத் துறைப் பணியாளர்களுக்கு துவரம் பருப்பு, சர்க்கரை மற்றும் பாமாயில் ஆகிய அத்தியாவசியப் பொருட்களை பொது விநியோகத் திட்ட விலையின் பாதி விலையில் துவரம் பருப்பு ரூ.15.00, சர்க்கரை ரூ.12.50 மற்றும் பாமாயில் ரூ.12.50 என்ற விலையிலும், இதர அத்தியாவசியப் பொருட்கள் வழக்கமான விலையிலும் நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கப்படுகின்றன. மேற்படி மானியத்திற்கு தகுதியுடைய சீருடைப் பணியாளர்களின் துறை/பதவி வாரியான விவரம் கீழ்வருமாறு:-

வ. எண்	துறையின் பெயர்	மானியத்திற்குத் தகுதியுடைய அலுவலர்களின் பதவி நிலை
1	காவல் துறை	இரண்டாம் நிலை காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரை
2	வனத் துறை	வனக் காவலர் முதல் வனச் சரகர் வரை
3	சிறைத் துறை	இரண்டாம் நிலை காவலர் முதல் துணை சிறைக் காவலர் வரை

இச்சீருடைப் பணியாளர்களுக்கு முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் (Non Priority House Hold-NPHH) வழங்கப்பட்டு நியாய விலைக் கடைகளில் உள்ள விற்பனை முனைய இயந்திரங்களில் தனி அடையாளத்திற்காக 'காவலர் அட்டை' எனக் குறிக்கப்பட்டுள்ளது. 31-1-2020 நிலவரப்படி, இவ்வகையின்கீழ் 57,260 பயனாளிகள் உள்ளனர்.

1.5.7 பொது விநியோகத் திட்டத்தின்கீழ் முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கு அரிசி வழங்குதல் மற்றும் முதியோர் ஓய்வூதியத் திட்ட மற்றும் அன்னபூர்ணா திட்ட பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்குதல்

மாநிலத்தில் வசித்து வரும் 8,997 அன்னபூர்ணா திட்டப்

பயனாளிகள் மற்றும் 4,13,446 முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கு அரசினால் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாதமொன்றிற்கு தலா 10 கிலோ மற்றும் 5 கிலோ விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது. முதியோர் ஓய்வூதியத் திட்ட மற்றும் அன்னபூர்ணா திட்டப் பயனாளிகளுக்கு ரூ.48.51 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என அரசினால் முடிவெடுத்து உத்தரவிடப்பட்டது. அதன்படி, மேற்படி பயனாளிகளின் புகைப்படங்கள் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை பெறப்பட்ட சுமார் 4 இலட்சம் பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள பயனாளிகளுக்கு விரைவில் மின்னணு குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்படும்.

1.5.8 போலி குடும்ப அட்டைகளை நீக்குதல்

முழு கணினிமயமாக்கல் மற்றும் பயனாளிகளின் தகவல் தொகுப்பில் ஆதார் எண் உள்ளீடு செய்தல் ஆகியவை போலி குடும்ப அட்டைகளை நீக்குவதற்கும், அதிகபட்ச மானியத்திற்குட்பட்ட விலையில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டுமே விநியோகம் செய்வதையும் உறுதி செய்துள்ளது.

1.6 பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்களின் வழங்கல் அளவு

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய், துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பொருட்களின் வழங்கல் அளவு மற்றும் அவற்றின் விற்பனை விலை விவரம் பின்வருமாறு:-

[2020 மார்ச் 19

வ. எண்	பொருட்களின் பெயர்	மாதாந்திர வழங்கல் அளவு	விற்பனை விலை
1	அரிசி	அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு நபருக்கும் (குழந்தை உட்பட) தலா 5 கிலோ வீதம் (தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்துவதற்கு முன்) ஏற்கெனவே வழங்கப்பட்ட அரிசியின் அளவில் எது அதிகமோ அது வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து அந்தியோதயா அன்னயோசனா குடும்ப அட்டைகளுக்கு தலா 35 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.	விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது.
2	கோதுமை	சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு அரிசியின் அளவில் அரிசிக்குப் பதிலாக 10 கிலோ கோதுமை, இதர பகுதிகளில் 5 கிலோ கோதுமை, இருப்பின் அளவைப் பொறுத்து வழங்கப்படுகிறது.	விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 19]

வ. எண்	பொருட்களின் பெயர்	மாதாந்திர வழங்கல் அளவு	விற்பனை விலை
3	சர்க்கரை	மாதம் ஒன்றிற்கு ஒரு நபருக்கு 500 கிராம் வீதம் அதிகபட்ச அளவு 2 கிலோவும், சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு நபருக்கு மாதமொன்றுக்கு 500 கிராம் வீதமும், கூடுதலாக மாதமொன்றிற்கு 3 கிலோ சர்க்கரையும், அதிகபட்சமாக 5 கிலோவும் வழங்கப்படுகிறது.	அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின் (AAY) கீழ் உள்ள குடும்ப அட்டைகளுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ. 13.50 மற்றும் இதர குடும்ப அட்டைகளுக்கு ரூ. 25/-
4	மண்ணெண்ணெய்	குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடம் மற்றும் பெற்றுள்ள எரிவாயு இணைப்பின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், குடும்ப அட்டைகளுக்கு மாதம் ஒன்றிற்கு 3 லிட்டர் முதல் 15 லிட்டர் வரை.	லிட்டர் ஒன்றிற்கு ரூ. 13.60 முதல் ரூ. 14.20 வரை
5	துவரம் பருப்பு	குடும்ப அட்டை ஒன்றிற்கு 1 கிலோ	ஒரு கிலோ ரூ. 30/-
6	பாமாயில்	குடும்ப அட்டை ஒன்றிற்கு 1 லிட்டர் பாக்கெட்	ஒரு லிட்டர் ரூ. 25/-

1.6.1 அரிசி

அரிசி தமிழ்நாட்டு மக்களின் பிரதான உணவு. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி விநியோகம் செய்ய ஏதுவாக மத்திய தொகுப்பு ஒதுக்கீடு, இந்திய உணவுக் கழகம் மூலமாக பெறப்படுகிறது. தற்போதைய மாதாந்திர அரிசி ஒதுக்கீடு மற்றும் அதற்கான இந்திய உணவுக் கழக விற்பனை விலை விவரம் பின்வருமாறு:

[2020 மார்ச் 19

வ. எண்	வகை	மாத ஒதுக்கீடு (மெ. டன்னில்)	இந்திய உணவுக் கழக விற்பனை விலை (கிலோ ஒன்றிற்கு)
1	அந்தியோதயா அன்னயோசனா (AAY)	57,437	ரூ.3.00
2	முன்னுரிமை குடும்பங்கள் (Priority House Holds)	1,35,784	ரூ.3.00
3	ஈடுசெய் ஒதுக்கீடு (Tide Over)	99,773	ரூ.3.00
	மொத்தம்	2,92,994	

சென்ற மூன்று மாத சராசரி மாதாந்திர அரிசி நுகர்வு 3.30 இலட்சம் மெட்ரிக் டன்.

1.6.2 சர்க்கரை

சர்க்கரை ஆலைகளுக்கு லெவி கட்டுப்பாடுகளை ஜூன் 2013 முதல் மத்திய அரசு நீக்கியதன் விளைவாக மாநில அரசுகள் பொது விநியோகத் திட்ட சர்க்கரை விநியோகத்திற்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுமாறு மத்திய அரசினால் அறிவுறுத்தப்பட்டது. ஆனால், நியாய விலைக் கடைகளில் பொது விநியோகத் திட்ட சர்க்கரையினை கிலோ ஒன்றிற்கு ரூ.13.50 எனத் தொடர்ந்து விற்பனை செய்து வரும் மாநிலங்களுக்கு மத்திய அரசு பொது விநியோகத் திட்ட சர்க்கரை ஒதுக்கீடுகளுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.18.50 மானியமாக வழங்கி வந்தது. இதன்மூலம் மாதம் ஒன்றிற்கு வரையறுக்கப்பட்ட 10,820 மெ.டன் சர்க்கரைக்கு மட்டும் மானியம் வழங்கப்பட்டு வந்தது.

எனினும், 1-6-2017 முதல் மத்திய அரசு மாதம் ஒன்றிற்கு வழங்கி வந்த இந்த அளவினைக் குறைத்து அந்தியோதயா அன்னயோஜனா (AAY) குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டும் ரூ.18.50 என்கிற மானிய விலையில் 1,864 மெ.டன்னுக்கான மானியத்தினை மட்டும் வழங்கி வருகிறது. இது மாநிலத்தின் மானியச் சுமையை அதிகரித்துள்ளது. இந்த செலவினங்களைக் கட்டுப்படுத்த 1-11-2017 முதல் மாநில அரசு சர்க்கரை விலையினை மாற்றம் செய்து அந்தியோதயா அன்னயோசனா (AAY) அல்லாத இதர குடும்ப அட்டைகளுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.25/- என்ற விலையில் வழங்கி வருகிறது.

2020 மார்ச் 19]

1.6.3 கோதுமை

மத்திய அரசு இம்மாநிலத்திற்கு மாதந்தோறும் 13,485 மெட்ரிக் டன் கோதுமை ஒதுக்கீடு செய்து வருகிறது. 2-2-2017 முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசிக்குப் பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மற்றும் மாவட்டத் தலைமையிடங்களில் குடும்ப அட்டைதாரரின் விருப்பத்தின் அடிப்படையில் 10 கிலோ வீதமும், ஏனைய பகுதிகளில் 5 கிலோ வீதமும் நியாய விலைக் கடைகளில் இருப்பின் அளவினைப் பொறுத்து அரிசிக்குப் பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

1.7 மண்ணெண்ணெய் ஒதுக்கீடு

தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டு வந்த மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மத்திய அரசினால் படிப்படியாக குறைக்கப்பட்டு தற்போது மாநிலத்தின் மாதாந்திர தேவையில் 30 சதவிகிதம்மட்டுமே அதாவது ஜூலை 2019 முதல் 10,764 கி.லி. மாத ஒதுக்கீடாக வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், மண்ணெண்ணெய் பெறத் தகுதி உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு சீராக மண்ணெண்ணெய் வழங்க மாத ஒதுக்கீடாக 36,047 கி.லி. மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சீரான அளவில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்ற நோக்கில், மாநிலத்தின் மண்ணெண்ணெய் முழுத் தேவையினையும் ஒதுக்கீடு செய்ய மத்திய அரசினை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மேலும், மத்திய அரசு 1-7-2016 முதல் மண்ணெண்ணெய்க்கான கிடங்கு முன் இருப்பு விலையினை இதர காரணிகளை உள்ளடக்கி லிட்டர் ஒன்றிற்கு ரூ.18.62 (31-1-2020 வரை) என்று இதுவரை இல்லாத அளவில் உயர்த்தியதற்கு மாநில அரசின் எதிர்ப்பினை பதிவு செய்ததுடன், இவ்விலை உயர்வினை முழுவதுமாக திரும்பப் பெற மத்திய அரசினை வலியுறுத்தியுள்ளது. 1-8-2011 முதல் மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு லிட்டருக்கு ரூ.13.60 முதல் ரூ.14.20 வரையிலான சில்லறை விற்பனை விலையிலேயே பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 19

1.8 சிறப்புப் பொது விநியோகத் திட்டம்

வெளிச்சந்தையில் ஏற்படும் விலை ஏற்றத்திலிருந்து பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகளை கட்டுக்குள் வைத்திருக்கும் பொருட்டு, அரசு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் துவரம் பருப்பு ஒரு கிலோ மற்றும் பாமாயில் ஒரு லிட்டர் விநியோகம் செய்து வருகிறது. 20,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு மற்றும் 1,50,00,000 லிட்டர் (பாக்கெட்டுகள்) பாமாயில் ஆகியவை மாதந்தோறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் துவரம் பருப்பு/கனடா மஞ்சள் பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் ஆகியவற்றை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் பொருட்டு பிப்ரவரி 2021 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

1.9 ரமலான் மாதத்தில் இஸ்லாமியர்களுக்கு அரிசி வழங்குதல்

ரமலான் மாதத்தின்போது நோன்பு கஞ்சி தயாரிப்பதற்கு பள்ளிவாசல்களுக்கு அரசு ஆண்டுதோறும் சிறப்பு ஒதுக்கீட்டின்கீழ் பச்சரிசி வழங்கி வருகிறது. 2019 ஆம் ஆண்டு 5,450.384 மெட்ரிக் டன் பச்சரிசி கிலோ ரூ.1/- என்ற விலையில் 2,927 பள்ளிவாசல்களுக்கு ரமலான் நோன்பிற்காக மாநிலம் முழுவதும் வழங்கப்பட்டது. இதற்காக மாநில அரசு ரூ.15.52 கோடி செலவு செய்துள்ளது.

1.10 ரொக்கத்துடன்கூடிய பொங்கல் பரிசுத் தொகுப்பு

தமிழக மக்கள் அனைவரும் 2020 ஆம் ஆண்டு தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர் உட்பட அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, இரண்டு அடி நீள கரும்பு, 20 கிராம் முந்திரி, 20 கிராம் திராட்சை, 5 கிராம் ஏலக்காய் அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரூ.1,000/- ரொக்கத் தொகை அரசினால் வழங்கப்பட்டது. மொத்தம் 1,98,41,149 பொது விநியோகத் திட்டப் பயனாளிகளுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.1,000/- ரொக்கத் தொகை விநியோகம் செய்யப்பட்டது. இதற்காக, அரசினால் மொத்தம் ரூ.2363.13 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 19]

1.11 தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ஐ நடைமுறைப்படுத்துதல்

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை தமிழ்நாடு அரசு 1-11-2016 முதல் செயல்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின்படி நபர் ஒருவருக்கு மாதந்தோறும் 5 கிலோ அரிசி என்ற அளவில் முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும், இச்சட்டத்தினைச் செயல்படுத்தும்போது அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் ஏற்கெனவே பெற்று வந்த அரிசியின் அளவு அல்லது நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு 5 கிலோ என்ற அளவு இவற்றில் எது அதிகமோ அந்த அளவில் அரிசியினை விலையின்றி பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் தன்மை மாறாமல் இத்திட்டத்தைச் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், முன்னுரிமையுள்ள மற்றும் முன்னுரிமையற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கான மாதாந்திர வழங்கல் அளவில் வித்தியாசம் இல்லாவிட்டாலும், முன்னுரிமை பயனாளிகளைக் கண்டறிவது தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, அவசியமானதாகும். அதன்படி, மத்திய அரசு நிர்ணயித்துள்ளவாறு நகரப் பகுதியில் 37.79% மற்றும் கிராமப் பகுதியில் 62.55% என்ற மதிப்பீட்டின் அடிப்படையில் முன்னுரிமை பயனாளிகளைக் கண்டறியும் பொருட்டு 27-10-2016 அன்று அரசினால் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த அறிவுரைகள் வழங்கப்பட்டன. முன்னுரிமைப் பயனாளிகள் மற்றும் முன்னுரிமையற்றப் பயனாளிகளின் இறுதிப் பட்டியல் இணையதளம் www.tnpds.gov.in-ல் வெளியிடப்பட்டுள்ளது.

வயதானவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள், அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மூலம் அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்ள சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் எத்தரப்பினரும் விடுபடா வண்ணம் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள், 2017-ன்படி பொது விநியோகத் திட்டத்தின் பயன்கள் உரிய நபர்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்திட, கண்காணிப்புக் குழுக்கள், குறைதீர் அமைப்பு மற்றும் மாநில உணவு ஆணையம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 19

1.11.1 கண்காணிப்புக் குழுக்கள்

கண்காணிப்புக் குழுக்கள் மாநிலம்/மாவட்டம்/வட்டம் மற்றும் நியாய விலைக் கடை அளவில் அமைக்கப்பட்டன. மாநில/மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் காலாண்டிற்குக் குறைந்தது ஒரு முறையேனும், வட்டம்/மண்டலம் மற்றும் நியாய விலைக் கடை அளவிலான குழுக்கள் மாதத்திற்கு ஒரு முறையேனும் கூட்டப்பட வேண்டும்.

1.11.2 குறை தீர் அமைப்பு

அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் தொடர்பாக பொது மக்கள் தெரிவிக்கும் எவ்வித குறைகளையும் தீர்வு செய்யும் பொருட்டு மாவட்ட வருவாய் அலுவலர்கள் மாவட்ட குறை தீர் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், துணை ஆணையர் வடக்கு/தெற்கு ஆகியோர் மாவட்ட குறை தீர் அலுவலர்களாக செயல்படுகின்றனர். குறைதீர் அலுவலர்களின் தொடர்பு விவரங்கள், பொது விநியோகத் திட்ட வலைத்தளம் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குடும்ப அட்டைதாரர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்கும் வகையில் வலுவான குறைதீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு அங்கமாக குடும்ப அட்டைதாரர்கள் பயன்பாட்டிற்கு கட்டணமில்லா தொலைபேசி எண் 1967 மற்றும் 1800 425 5901, இணையதள வசதியும் செய்யப்பட்டுள்ளன.

1.11.3 மாநில உணவு ஆணையம்

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ஐ தமிழ்நாட்டில் செயல்படுத்தும் விதமாக தமிழ்நாடு மாநில உணவு ஆணையம் ஒரு தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்களுடன் 16-2-2018 முதல் செயல்பட்டு வரும் ஒரு தன்னிச்சையான சட்டமுறை அமைப்பாகும். இவ்வாணையம் மாவட்ட குறைதீர் அலுவலர்களின் உத்தரவுகளை எதிர்க்கும் மற்றும் மேல்முறையீடுகளை விசாரணை செய்யும் ஒரு மேல்முறையீட்டு அமைப்பாக செயல்பட்டு வருகிறது. ஆணையத்தினால் சீரான இடைவெளியில் கூட்டம் நடத்தப்படுகிறது.

2020 மார்ச் 19]

1.12 பொது விநியோகத் திட்டத்தினை கணினிமயமாக்கல்

தமிழ்நாடு அரசினால் முழு கணினிமயமாக்கல் திட்டத்தின்மூலம் மாநில பொது விநியோகத் திட்டம் முழு கணினிமயமாக்கம் செய்யப்பட்டது. பொது விநியோகத் திட்டம் முழு கணினிமயமாக்கலின் ஒரு பகுதியாக 1-4-2017 முதல் ஆதார் எண்கள் இணைக்கப்பட்ட குடும்பங்களுக்கு மின்னணு குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் அளிக்கும் வசதிகளாவன:

- குடும்ப அட்டைகள்/பயனாளிகள் தகவல் தொகுப்பினை எண்ணியலாக்கம் செய்தல்
- தொடர் விநியோகத்தினை கணினிமூலம் மேலாண்மை செய்தல்
- வெளிப்படைத் தன்மை கொண்ட இணையதளத்தினை உருவாக்குதல்
- திறன்மிகு குறை தீர் அமைப்பினை ஏற்படுத்துதல்
- பொது விநியோகத் திட்டத்திற்கான அத்தியாவசியப் பொருட்களின் ஒதுக்கீட்டினை இணையவழி மேற்கொள்ளுதல்
- கிடங்குகள் மற்றும் நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களின் நகர்வினை நிகழ் நேரத்தில் கண்காணித்தல் மற்றும் குடும்ப அட்டைதாரர்களுக்குரிய அத்தியாவசியப் பொருட்களின் உரிம அளவு சரியான முறையில் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்தல்
- பொது மக்கள் இணையம் மூலமாக புதிய குடும்ப அட்டைகள் பெற விண்ணப்பம் செய்வதற்கும், குடும்ப அட்டைகளில் விவர மாற்றம் மேற்கொள்வதற்கும், மின்னணு குடும்ப அட்டை தொடர்பான விண்ணப்பங்களின் நிலை பற்றி அறிந்து கொள்வதற்கும் வகை செய்கிறது.
- குடும்ப அட்டைதாரர்கள் தங்களுடைய குடும்ப அட்டை இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடையில் உள்ள அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு விவரங்களை தெரிந்து கொள்ளுதல்.

[2020 மார்ச் 19

➢ ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் அவர் பதிவு செய்துள்ள கைபேசிக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்ட விவரம் குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பப்படுவதால் இணைய வழி கண்காணிப்பு முறையானது முறைகேடாக ரசீது தயாரிப்பதை தவிர்க்க உதவுகிறது.

மின்னணு குடும்ப அட்டைதாரர்களின் பயோமெட்ரிக் அங்கீகார முறை 2020-2021 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

1.13 ஒருங்கிணைந்த பொது விநியோக மேலாண்மைத் திட்டம்

மத்திய அரசின் பொது விநியோகத் திட்ட முழு கணினி மயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக ஒருங்கிணைந்த பொது விநியோக மேலாண்மைத் திட்டத்தினை மாநிலத்தில் நடைமுறைப்படுத்த முடிவெடுத்து மாநில அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 2020-2021 ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களின் உள் மாநில பெயர்வுத்திறன் அமல்படுத்தப்படும். இதன்மூலம் குடும்ப அட்டைதாரர்கள் தமிழ்நாட்டிற்குள் எந்தவொரு நியாய விலைக் கடையிலும் தங்களுக்குரிய அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய இரு மாவட்டங்களில், உள் மாநில பெயர்வுத்திறன் பரிட்சார்த்த முறையில் 1-2-2020 முதல் ஒரு வார காலத்திற்கு செயல்படுத்தப்படுகிறது. முழுமையான வெற்றிக்குப் பின், இத்திட்டம் மாநிலம் முழுவதும் நீட்டிக்கப்படும்.

1.14 உணவு மானியம்

மாநில மக்கள் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும், இலக்கினை அடைவதற்கும், பசிப்பிணியற்ற மாநிலம் என்ற நிலையினை தக்க வைக்கவும் தமிழ்நாடு அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினைப்பின்பற்றி வருகிறது. அத்தியாவசியப் பொருட்களைக் கொள்முதல் செய்து பொது விநியோகத் திட்டம் (குறிப்பாக உணவு தானியங்களான அரிசி மற்றும் கோதுமை விலையின்றி வழங்கப்படுகிறது) மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டம் ஆகியவற்றின்கீழ் வழங்க பெரும் தொகை மானிய செலவினமாக மாநில அரசினால் ஏற்கப்படுகிறது. மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தினை சிறப்பாகச் செயல்படுத்திட, 2020-2021 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.6,500 கோடி உணவு மானியமாக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

2020 மார்ச் 19]

இயல்-2

நுகர்வோர் பாதுகாப்பு

2.1 முன்னுரை

அதிக அளவில் கல்வி கற்றவர்கள், வசதி படைத்தவர்கள், முற்றிலும் கல்வியறிவற்றவர்கள், வறியவர்கள் என அனைத்துத் தரப்பினரையும் நுகர்வோர்களாகக் கொண்டுள்ள தமிழ்நாட்டில், நுகர்வோர் விழிப்புணர்வினை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சென்றடையச் செய்யும் முக்கியப் பணியினை தகுந்த குறைதீர் அமைப்புடன்கூடிய தகவல், கல்வி, தகவல் தொழில்நுட்பங்கள் மூலமே மேற்கொள்ள இயலும். இந்த நோக்கத்திற்காக, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 குறித்த அறிவினை வளர்ப்பதற்கும், பரப்புவதற்கும் மாநிலம் முழுவதும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள்மூலம் பல்வேறு நுகர்வோர் விழிப்புணர்வுத் திட்டங்கள், நிகழ்ச்சிகள் அரசினால் மேற்கொள்ளப்படுவதால், ஒரு நுகர்வோர் என்ற வகையில் தங்களது உரிமைகள், பொறுப்புகள், குறை நிவர்த்தி நடைமுறைகள் குறித்து பொது மக்கள் விழிப்புணர்வு பெறுகின்றனர். பாதிக்கப்பட்ட நுகர்வோர்கள் உடனடி நிவாரணம் பெறுவதற்காக நீதிமுறை அமைப்புகளாக சென்னையில் உள்ள மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாவட்டங்களில் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் மற்றும் மாற்று குறைதீர் வழிமுறைகளாக மாநில அளவில் சமரச மையம், மாநில நுகர்வோர் சேவை மையம் ஆகியவை தமிழ்நாடு அரசினால் நிறுவப்பட்டுள்ளன.

2.2 நுகர்வோர் குறைகளுக்கான சட்டப்படியான தீர்வுகள்

1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தேசிய, மாநில மற்றும் மாவட்ட நிலைகளில் கீழ்க்கண்ட நீதிமுறைச் சார்புடைய 3 அடுக்கு குறைதீர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:-

1. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்
2. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும்
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்

2.2.1 தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்

இவ்வாணையம் அனைத்து மாநிலங்களிலும் உள்ள நுகர்வோர்

குறைதீர் ஆணையங்களுக்கும் மேல்முறையீட்டு ஆணையமாக புதுதில்லியில் செயல்படுகிறது. இவ்வாணையத்தில், ரூபாய் ஒரு கோடிக்கு மேல் மதிப்புள்ள நிவாரணங்களுக்கு நுகர்வோர் நேரடியாக வழக்கு தொடரலாம். அனைத்து மாநில ஆணையங்களில் முடிவுற்ற வழக்குகளின் மேல்முறையீடுகளுக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரமும் மற்றும் மாநில ஆணையங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் படைத்ததாகும்.

2.2.2 மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்

ரூபாய் இருபது இலட்சத்திற்கு மேல் ரூபாய் ஒரு கோடி வரை நிவாரணம் வேண்டும் நுகர்வோர், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் முறையிடலாம். இவ்வாணையம் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியை தலைவராகவும், இரண்டு நீதிமுறைசார் உறுப்பினர்களும் மற்றும் இரண்டு நீதிமுறை சாரா உறுப்பினர்களும் அவற்றில் ஒரு பெண் உறுப்பினரையும் கொண்ட அமைப்பாகும். மாநில ஆணையம் மற்றும் 32 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் நிருவாகத்தைக் கவனிக்க துறைத் தலைவராக செயல்பட பதிவாளர் உள்ளார். 13 தென் மாவட்ட நுகர்வோர்களின் நலன் கருதி, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் கிளையானது மதுரையில் 11-8-2012 முதல் உயர் நீதிமன்ற மதுரை கிளையைப் போன்று செயல்பட்டு வருகிறது.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மதுரை சுற்றுக் கிளை ஆகியவை அந்தந்த மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றகளின் தீர்ப்புகளின் மேல் எழும் மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்களை தீர்வு செய்யும் அதிகாரம் கொண்டதாகும். மாநில ஆணையம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து ஜனவரி - 2020 வரை 30,274 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதில் 25,918 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. அதன் சதவீதம் 85.61% ஆகும். ஜனவரி 2019 முதல் ஜனவரி - 2020 வரையிலான காலத்தில் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கைகளின் விவரம் பின்வருமாறு:

2020 மார்ச் 19]

மாதங்கள்	மேல்முறையீட்டு மனுக்கள்					நுகர்வோர் வழக்குகள்				
	மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள்	இம்மாதத்தில் பதிவான வழக்குகள்	மொத்தம்	முடிவு செய்யப்பட்ட வழக்குகள்	மாத இறுதியில் நிலுவையிலுள்ள வழக்குகள்	மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள்	மாதத்தில் பதிவான வழக்குகள்	மொத்தம்	முடிவு செய்யப்பட்ட வழக்குகள்	மாத இறுதியில் நிலுவையிலுள்ள வழக்குகள்
ஜனவரி 2019	2292	15	2307	45	2262	1793	16	1809	10	1799
பிப்ரவரி 2019	2262	43	2305	38	2267	1799	27	1826	10	1816
மார்ச் 2019	2267	58	2325	29	2296	1816	13	1829	12	1817
ஏப்ரல் 2019	2296	63	2359	41	2318	1817	18	1835	9	1826
மே 2019	2318	15	2333	1	2332	1826	9	1835	1	1834
ஜூன் 2019	2332	38	2370	27	2343	1834	14	1848	10	1838
ஜூலை 2019	2343	56	2399	49	2350	1838	21	1859	5	1854
ஆகஸ்டு 2019	2350	68	2418	38	2380	1854	19	1873	16	1857
செப்டம்பர் 2019	2380	43	2423	45	2378	1857	22	1879	7	1872
அக்டோபர் 2019	2378	31	2409	31	2378	1872	8	1880	6	1874
நவம்பர் 2019	2378	45	2423	19	2404	1874	10	1884	5	1879
டிசம்பர் 2019	2404	46	2450	30	2420	1879	6	1885	3	1882
ஜனவரி 2020	2420	31	2451	54	2397	1882	5	1887	5	1882

[2020 மார்ச் 19

2.2.3 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-ன்படி, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் இருக்க வேண்டும். தற்பொழுது நீதிமுறை சாரா 32 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் நுகர்வோர், ரூபாய் இருபது இலட்சம் வரையிலான நிவாரணங்களுக்கு வழக்குகள் தொடரலாம். மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றமானது ஓய்வுபெற்ற ஒரு மாவட்ட நீதிபதியை தலைவராகவும் மற்றும் இரண்டு உறுப்பினர்களை கொண்ட அமைப்பாகும். அவற்றுள் ஒருவர் பெண் உறுப்பினர். மாவட்ட மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து ஜனவரி 2020 வரை 1,24,003 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அதில் 1,14,681 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. அதன் சதவீதம் 92.48% ஆகும். ஜனவரி 2019 முதல் ஜனவரி 2020 வரையிலான காலத்தில் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கைகளின் விவரம் பின்வருமாறு:

மாதங்கள்	மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள்	இம்மாதத்தில் பதிவான வழக்குகள்	மொத்தம்	முடிவு செய்யப்பட்ட வழக்குகள்	நிலுவையில் உள்ள வழக்குகள்
ஜனவரி 2019	9120	227	9347	269	9078
பிப்ரவரி 2019	9078	246	9324	284	9040
மார்ச் 2019	9040	249	9289	242	9047
ஏப்ரல் 2019	9047	271	9318	260	9058
மே 2019	9058	221	9279	237	9042
ஜூன் 2019	9042	226	9268	197	9071
ஜூலை 2019	9071	321	9392	263	9129
ஆகஸ்டு 2019	9129	202	9331	220	9111
செப்டம்பர் 2019	9111	230	9341	201	9140

2020 மார்ச் 19]

அக்டோபர் 2019	9140	194	9334	157	9177
நவம்பர் 2019	9177	243	9420	206	9214
டிசம்பர் 2019	9214	232	9446	185	9261
ஜனவரி 2019	9261	208	9469	147	9322

2.3 சமரச மையம்

நுகர்வோர்களின் நன்மைகளைக் கருதி மாற்று முறை தீர்வுக்காக சமரச மையம் மாநில ஆணையத்தில் செயல்பட்டு வருகிறது. இத்தீர்வு மையத்தில் கட்டணம் ஏதுமின்றி பயிற்றுவிக்கப்பட்ட, நடுநிலையான மூன்றாம் நபர், நடுநிலையாளர் பேச்சுவார்த்தை மூலம் வாதி, பிரதிவாதி இருவருக்கும் இடையே தீர்வு காணும் வகையில் முன்னோடி திட்டமாகத் துவக்கப்பட்டு, 15-12-2011 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தை மாநில அரசே ஏற்று நடத்தி வருகிறது.

2.4. எதிர்கால செயல் திட்டம்

தற்போது மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் 11 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மேலும், 21 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக இலவசமாக காலி இடம் பெறுவதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் முதன்மை மாவட்ட நீதிபதிகளை அணுகி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் அனைத்து மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களும் சொந்தக் கட்டடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2.5 தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் அதிகார சங்கம் (டான்ஸ்கோப்)

"தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் அதிகார சங்கம்" என்ற மாநில அளவிலான அமைப்பு நுகர்வோர் நலன் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை மாநிலம் முழுவதும் மேற்கொள்கிறது. இவ்வமைப்பு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரை தலைவராகவும், அரசு மற்றும் அரசு சாராத் துறையில் உள்ளவர்களை

உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது. இச்சங்கம் மாநில நுகர்வோர் உதவி மையத்தினை செயல்படுத்துதல், "தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" என்ற மாத இதழை வெளியிடுதல் மற்றும் நுகர்வோர் நலன் குறித்த பயிற்சி, கருத்தரங்குகள் நடத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

2.6 மாநில நுகர்வோர் சேவை மையம்

தமிழ்நாடு அரசினால் மாநில நுகர்வோர் சேவை மையம் ஏற்படுத்தப்பட்டு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையம் நுகர்வோர்களுக்கு ஒரு மாற்று குறைதீர் அமைப்பாகச் செயல்படுகிறது. இம்மையம், தொடர்புகொள்ளும் பாதிக்கப்பட்ட நுகர்வோர்களின் புகார்களைப் பதிவு செய்கிறது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் குறித்த இனங்களுக்கு தெளிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குவதன்மூலம் குறைகளைத் தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தொலைபேசி எண் 044-28592828 (அல்லது) consumer@tn.gov.in அல்லது schtamilnadu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி (அல்லது) www.consumer.tn.gov.in–ல் ஆன்லைன் புகார் பதிவு (அல்லது) 8680018002 அல்லது 8680028003 என்ற கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பியும் சேவை மையத்தினைத் தொடர்பு கொள்ளலாம்.

2.7 தமிழ்நாடு நுகர்வோர் கவசம் - நுகர்வோர் விழிப்புணர்வு குறித்த மாதாந்திர இதழ்

பொது மக்களிடையே நுகர்வோர் விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் "தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" என்ற மாதாந்திர இதழினை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை வெளியிட்டு வருகிறது. இவ்விதழ் இந்திய செய்தித்தாள்களின் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஓர் இதழின் விலை ரூ.10/- ஆகும். இவ்விதழ் மாநிலத்தில் உள்ள பொது மக்கள், அரசு அலுவலகங்கள், தன்னார்வ நுகர்வோர்

2020 மார்ச் 19]

அமைப்புகள் மற்றும் பொது நூலகங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. தற்போது, இவ்விதழுக்கு 7,000 சந்தாதாரர்கள் உள்ளனர். இவ்விதழ் வாசகர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த நடவடிக்கைகளையும் மற்றும் பொது நடப்புகள் குறித்த அறிவையும் வழங்குகிறது.

இயல்-3

விலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்

3.1 முன்னுரை

மாநில மக்களுக்கு உணவுப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்தும் நோக்கில், அரசு சந்தை விலை நிலவரத்தினைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயரும்போது, உணவுக் கொள்கை மூலமாகவோ அல்லது சந்தையில் நேரடியாக தலையிடுவதன் மூலமாகவோ அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

3.2 விலைக் கண்காணிப்புப் பிரிவு

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் ஆணையாளரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் "விலைக் கண்காணிப்புப் பிரிவு" இயங்கி வருகிறது. அதன் முக்கியப் பணிகளாவன:

அ) அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, எண்ணெய் வகைகள் மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட 23 தேர்வு செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் வெளிச் சந்தையில் நிலவி வரும் சில்லறை மற்றும் மொத்த விலைகளை தினந்தோறும் கண்காணித்து வருகிறது.

ஆ) சந்தை விலை நிலவரத்தினை ஆய்வு செய்து, உணவுப் பொருட்களின் விலையில் வித்தியாசம் ஏற்படும்போது, அதனை அரசுக்கு முன்கூட்டியே தெரிவித்து தடுப்பு நடவடிக்கைகளை குறித்த நேரத்தில் மேற்கொள்ள விலைக் கண்காணிப்புப் பிரிவு துணைபுரிகிறது.

சில உணவுப் பொருட்கள் குறிப்பாக வெங்காயம் மற்றும் பருப்புகளின் விலை அதிகரித்தபோது இப்பிரிவில் தக்க தருணத்தில் வழங்கிய ஆலோசனைகள் அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக அமைந்தன.

[2020 மார்ச் 19

3.3 தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகள்

- மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் அரசினால் அமைக்கப்பட்ட "விலைக் கண்காணிப்புக் குழு" அத்தியாவசியப் பொருட்களின் வெளிச் சந்தை விலை நிலவரத்தினைக் கண்காணித்து வருகிறது. உரிய காலமுறையிலோ அல்லது சந்தை விலை நிலவரத்தில் அதிக வித்தியாசம் ஏற்படும்போதோ விலைக் கண்காணிப்புக் குழு கூட்டப்படுகிறது.
- அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம் அடையும்போது சூழ்நிலையினை எதிர்கொள்ளும் வகையில் அரசு, விலைக் கட்டுப்பாட்டு நிதியினை உருவாக்கி ரூ.100 கோடியினை நிதிய மூலதனமாக ஒதுக்கீடு செய்துள்ளது. வெளிச் சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ரூ.20 கோடி நிதிய மூலதனத்துடன் ஒரு முறை மானியத்தினைக் கொண்டு 72 அம்மா அமுதம் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 28 அங்காடிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- வெளிச் சந்தையில் உயர்ந்து வரும் காய்கறிகளின் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்திடும் வகையில் நுகர்வோர் கூட்டுறவு அங்காடிகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவை புதிதாக விளைந்த காய்கறிகளை பண்ணைகளில் நேரடியாகக் கொள்முதல் செய்து, 3 நடமாடும் கடைகள் உட்பட 79 பண்ணைப் பசுமை காய்கறிக் கடைகள்மூலம் விற்பனை செய்து வருகின்றன.
- தமிழ்நாடு அரசு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி மற்றும் கோதுமை போன்ற உணவு தானியங்களை அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையின்றி வழங்கி வருவதுடன் அந்தியோதயா அன்னயோசனா திட்டப் பயனாளிகள், அன்னபூர்ணா பயனாளிகள் மற்றும் ஓய்வூதியப் பயனாளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாடு பசிப்பிணியற்ற மாநிலமாக விளங்குகிறது.
- பருப்புகள் மற்றும் தாவர எண்ணெய்களின் வெளிச்சந்தை விலை உயர்வினால் எளிதில் பாதிப்படையக்கூடிய

2020 மார்ச் 19]

மக்களைக் காக்கும் வகையில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.30/-க்கும், ஒரு லிட்டர் பாமாயில் ரூ.25/-க்கும் நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் பிப்ரவரி 2021 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு எடுத்துள்ள முன்னெச்சரிக்கை மற்றும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் பலனாக மாநிலத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளன.

இயல்-4

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

4.1 முன்னுரை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. பின்னர் இந்நிறுவனம் பிரிவு 25, கம்பெனிகள் சட்டம், 1956-ன்கீழ் 1-4-2010 (பிரிவு 8, கம்பெனிகள் சட்டம், 2013) முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகம் பொது விநியோகத் திட்டம், சிறப்புப் பொது விநியோகத் திட்டம் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவு திட்டத்திற்கான அத்தியாவசியப் பொருட்களைக் கொள்முதல் செய்தல், சேமித்து வைத்தல் மற்றும் வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

4.2 நிறுவனக் கட்டமைப்பு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களை குழும இயக்குநர்களின் தலைவராகக் கொண்டு 11 இயக்குநர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

இந்நிறுவனம், 33 மண்டலங்களாக முதுநிலை மண்டல மேலாளர்கள்/மண்டல மேலாளர்கள் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும், சென்னையில் மட்டும் வடக்கு, தெற்கு என இரு மண்டலங்களாகச் செயல்பட்டு வருகிறது. இக்கழகத்தில் தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள், கிடங்குகள், நவீன அரிசி

[2020 மார்ச் 19

ஆலைகள், நியாய விலைக் கடைகள் மற்றும் மாநிலம் முழுவதிலும் உள்ள பல்பொருள் அங்காடிகள் ஆகியவற்றில் 7,620 நிரந்தரப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இது தவிர 5,537 சுமைதூக்கும் தொழிலாளர்கள், 14,420 பருவகால சுமைதூக்கும் பணியாளர்கள் கழகக் கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் பணிபுரிகின்றனர்.

4.3 செயல்பாடுகள் மற்றும் சேவைகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு, பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்களை மாநில அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் கொள்முதல் செய்தும், சேமித்து வைத்தும் அவற்றை விநியோகம் செய்திட வழிவகை செய்து வருகிறது. இதற்கென இந்நிறுவனம் பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டு செயலாற்றி வருகிறது:

1. 12.88 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 289 கிடங்குகள்
2. 1,455 நியாய விலைக் கடைகள் (முழுநேரக் கடைகள் 1,178 மற்றும் பகுதிநேரக் கடைகள் 277)
3. 21 நவீன அரிசி ஆலைகள்
4. 30 மாவட்டங்களில் 72 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள்
5. 22 அமுதம் பல்பொருள் அங்காடிகள் (சென்னை மற்றும் கடலூர் மாவட்டங்கள்)
6. 3 பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்
7. 36 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்
8. 5 சமையல் எரிவாயு விநியோக முகமைகள்
9. தேவைக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் (நடப்பு பருவத்தில் 26-2-2020 வரை 1861)

2020 மார்ச் 19]

4.4 பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள்

4.4.1 அரிசி

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படும் அரிசியின் அளவினை தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டம், 2013-ன்படி இந்திய உணவுக் கழகத்தின்மூலம் மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டிலிருந்தும், மீதியை நெல் அரவை மூலமும் பெறுகிறது. இந்திய உணவுக் கழகம் நிர்ணயித்துள்ள அரிசியின் விற்பனை விலை விவரம் பின்வருமாறு:

வரிசை எண்	வகை	மாதாந்திர ஒதுக்கீடு (மெ. டன்)	விலை (ரூபாய்/ கிலோ)
1.	அந்தியோதயா அன்னயோசனா	57,437.202	3.00
2.	முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்கள்	1,35,783.900	3.00
3.	ஈடு செய் ஒதுக்கீடு	99,773.138	8.30
	மொத்தம்	2,92,994.240	

மாநிலத்தின் பொது விநியோகத் திட்டம் மற்றும் அந்தியோதயா அன்னயோசனா உட்பட இதர நலத் திட்டங்களுக்கு மாதாந்திர அரிசி தேவை 3.40 இலட்சம் மெ. டன் ஆகும். அந்தியோதயா அன்னயோசனா, முன்னுரிமைப் பிரிவு மற்றும் ஈடு செய் பிரிவுகளின்கீழ் மத்திய அரசால் வழங்கப்படும் மாதாந்திர ஒதுக்கீடு 2.93 இலட்சம் மெ.டன் அரிசியை மாநில அரசு முழுமையாகப் பயன்படுத்துகிறது. பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மத்திய அரசின் சார்பாக கொள்முதல் செய்யும் நெல் முழுவதையும் அரவை செய்து பொது விநியோகத் திட்டத்திற்காகப் பயன்படுத்தி வருகிறது.

தற்போதைய பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாதாந்திர அரிசி நுகர்வு 3.30 இலட்சம் மெ.டன் ஆக இருப்பதால், மத்திய அரசின் ஒதுக்கீட்டிற்கும், மாதாந்திர பொது விநியோகத் திட்ட நுகர்விற்கும்

இடையேயான பற்றாக்குறையை மத்திய அரசின் வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின் மூலமாகவும் மற்றும் வெளி மாநிலங்களில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும் தேவையான அளவு அரிசியைக் கொள்முதல் செய்து ஈடு செய்யப்படுகிறது.

பொது விநியோகத் திட்டத்திற்கான அரிசி இயக்கம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது விநியோகத் திட்டத்திற்கு பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் மூலமும், இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து மாதந்தோறும் 2.93 இலட்சம் மெ.டன் அரிசியினை நகர்வு செய்கிறது. இந்திய உணவுக் கழகத்தில் 26-2-2020 அன்றைய நிலவரப்படி 57 கிடங்குகளிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலும் 13.80 இலட்சம் மெ. டன் அரிசி இருப்பு உள்ளது. இது தவிர 6.00 இலட்சம் மெ. டன் அரிசிக்கு ஈடான நெல் கொள்முதல் செய்யப்பட்டு தற்போது இருப்பில் உள்ளது.

4.4.2 சர்க்கரை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாதம் ஒன்றுக்கு தோராயமாக 31,000 மெ.டன் சர்க்கரையை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கி வருகிறது. அந்தியோதயா அன்னயோசனா குடும்ப அட்டை அல்லாதவர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரை கிலோ ஒன்றுக்கு ரூ.25/-எனவும், அந்தியோதயா அன்னயோசனா குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.13.50 எனவும் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது. அரசினால் கொள்முதல் செய்யப்படும் சர்க்கரையின் சராசரி வெளிச்சந்தை விலைக்கும், குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் மானிய விலைக்கும் உள்ள கூடுதல் செலவினத் தொகையான ரூ.443.52 கோடி தமிழ்நாடு அரசினால் பொது விநியோகத் திட்டத்திற்காக ஈடுசெய்யப்படுகிறது.

4.4.3 கோதுமை

மத்திய அரசு, தமிழ்நாட்டிற்கு மாதந்தோறும் 13,485 மெ.டன் கோதுமையினை தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ன் படி நவம்பர் 2016 முதல் ஒதுக்கீடு செய்து வருகிறது. அதன்படி அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களது விருப்பத்திற்கேற்ப நியாய விலைக் கடைகளில் அரிசிக்குப் பதிலாக கோதுமை இருப்பின் அடிப்படையில் விலையில்லாமல் வழங்கப்படுகிறது.

2020 மார்ச் 19]

4.5 சிறப்புப் பொது விநியோகத் திட்டம்

தமிழக அரசு சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக பருப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட சமையல் எண்ணெய் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது. இதனால் வெளிச்சந்தையில் விற்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலை கட்டுக்குள் கொண்டு வரப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு 20,000 மெ. டன் துவரம் பருப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட பாமாயில் ஒரு லிட்டர் வீதம், 1,53,00,000 பாக்கெட்டுகள் கொள்முதல் செய்யப்பட்டு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. சிறப்புப் பொது விநியோகத் திட்டத்திற்கான முழு மானியத்தையும் தமிழக அரசே ஏற்றுக்கொள்கிறது.

இத்திட்டத்தின்கீழ் மானிய விலையில் வழங்கப்படும் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு:

பொருட்கள்	மாதாந்திர ஒதுக்கீடு (மெ .டன்)	வழங்கப்படும் அளவு (குடும்ப அட்டை ஒன்றுக்கு)	விற்பனை விலை
துவரம் பருப்பு	20,000	1 கிலோ	ரூ. 30/–
செறிவூட்டப்பட்ட சமையல் எண்ணெய் (பாக்கெட்டுகள்)	1,53,00,000	1 லிட்டர் (910 கிராம்)	ரூ. 25/–

4.6 நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசிப் பொருட்களை இயக்கம் செய்தல்

நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் தொடர் இருப்பினை உறுதி செய்யும் வகையில் நியாய விலைக்

[2020 மார்ச் 19

கடைகளுக்கான மாதாந்திர ஒதுக்கீட்டில் 60 சதவீதப் பொருட்கள் முந்தைய மாதம் 30 ஆம் தேதிக்குள் முன்நகர்வு செய்யப்படுகின்றன. மீதம் உள்ள 40 சதவீதப் பொருட்கள் நடப்பு மாதம் 20 ஆம் தேதிக்குள் நகர்வு செய்யப்படுகின்றன. இந்நகர்வுகள் முடிவு பெற்றபின் வரும் மாதத்திற்கான முன் நகர்வுகள் சம்பந்தப்பட்ட அலுவலரிடம் முன் அனுமதி பெற்று நகர்வு செய்யப்படுகிறது.

4.7 விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்தல்

பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இந்திய உணவுக் கழகத்தின் முகவராக இருந்து நெல் கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு அனுமதித்து அதன்படி 2002-2003 ஆம் ஆண்டு கரீப் கொள்முதல் பருவத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. மேலும், காவிரி பாசன மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் (NCCF) ஆகியவையும் நெல் கொள்முதல் செய்ய அரசினால் ஆணையிடப்பட்டுள்ளது. கரீப் 2019-2020 கொள்முதல் பருவத்தில், மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதாரவிலை மற்றும் தமிழ்நாடு அரசால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை விவரங்கள் பின்வருமாறு:

ரகம்	மத்திய அரசு வழங்கும் குறைந்தபட்ச ஆதாரவிலை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்)	தமிழ்நாடு அரசு வழங்கும் ஊக்கத்தொகை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்)	விவசாயிகளுக்கு வழங்கப்படும் விலை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்)
சன்ன ரகம் (Grade A)	1,835/–	70/–	1,905/–
சாதாரண ரகம் (Common)	1,815/–	50/–	1,865/–

2020 மார்ச் 19]

கே.எம்.எஸ். 2019–2020 ஆம் ஆண்டிற்கான நெல் கொள்முதல் விவரம்

கே.எம்.எஸ்.	திறக்கப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்	சன்ன ரகம் (மெ. டன்)	சாதாரண ரகம் (மெ.டன்)	நெல் கொள்முதல் செய்யப்பட்ட மொத்த அளவு (மெ.டன்)	விலை குவிண்டால் (ரூபாயில்)		பயனாளிகளின் எண்ணிக்கை (விவசாயிகள்)
					சன்ன ரகம்	சாதாரண ரகம்	
2019–2020 (26-2-2020) வரை	1,861	7,53,798	4,28,295	11,82,093	1,905	1,865	2,15,867

கரீப் பருவம் 2019-2020 ஆம் ஆண்டிற்கு மின் பரிவர்த்தனை மூலம் விடுவிக்கப்பட்ட தொகை ரூ.2234.76 கோடி ஆகும்.

கொள்முதல் விவரங்கள் 2019-2020

		(மெ.டன்)
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்	:	11,27,431
தேசியக் கூட்டுறவு நுகர்வோர் இணையம்	:	47,750
கூட்டுறவுத் துறை	:	6,912
மொத்த நெல் கொள்முதல்		11,82,093

ரூபாய் 74,18,10,000/- ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

4.7.1 கண்டுமுதல் அரிசி

விவசாயிகளிடமிருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 21 நவீன அரிசி ஆலைகளிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் பதிவு செய்துள்ள 351 தனியார் அரவை முகவர்களின் ஆலைகள் மூலமும் அரிசியாக்கப்படுகிறது. மாநிலத்தின் மாதாந்திர பொது விநியோகத் திட்டத் தேவையில்,

[2020 மார்ச் 19

அரவையின்மூலம் பெறப்படும் அரிசிபோக, மிகுதியாகத் தேவைப்படும் அரிசியில் மாநிலத்திற்குரிய அளவினை இந்திய உணவுக் கழகத்திலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் இயக்கம் செய்யப்படுகிறது. நெல் கொள்முதல் செய்வதிலிருந்து அரிசியாக மாற்றப்படுவது வரை ஆகும் செலவினத் தொகை மத்திய அரசு நிர்ணயித்த பொருளாதார விலையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு மானியமாகப் பெறப்பட்டு வருகிறது.

4.8 கட்டுமானப் பணிகள்

4.8.1 சேமிப்புக் கிடங்கு கட்டுதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்தம் 289 சேமிப்புக் கிடங்குகளை வைத்து செயல்பட்டு வருகிறது. இவற்றில் 11.37 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 246 கிடங்குகள் கழகத்திற்குச் சொந்தமானதாகும். மீதமுள்ள 1.52 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 43 கிடங்குகள் வாடகை அடிப்படையில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனத்திடமிருந்து பயன்படுத்தப்படுகிறது. பொது விநியோகத் திட்டப் பொருட்களை பாதுகாப்பாக சேமித்து வைப்பதை உறுதிப்படுத்தவும், அதன் சேமிப்புக் கொள்ளளவினை மேம்படுத்தவும் அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

அரசு கடந்த ஒன்பது ஆண்டுகளில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.998.97 கோடி மதிப்பீட்டில் 342 இடங்களில் மொத்தமாக 8.05 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு திறனுடன் கிடங்குகள் கட்ட ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை 6.29 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 240 கிடங்குகள் ரூ.657.36 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

4.8.2 சைலோ அமைத்தல் (நவீன நெல் சேமிப்புக் கொள்கலன்)

நாகப்பட்டினம் மாவட்டம், எருக்கூர் கிராமத்தில் 50,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய நெல் சேமிப்புக் கொள்கலன் (சைலோ) ரூ.64.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2-7-2018 அன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டு தற்போது தொடர் பயன்பாட்டில் உள்ளது.

2020 மார்ச் 19]

4.8.3 நியாய விலைக் கடைகள் கட்டுதல்

தமிழ்நாட்டில் உள்ள 35,244 மொத்த நியாய விலைக் கடைகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் மொத்தம் 1,455 நியாய விலைக் கடைகள், 26 மண்டலங்களில் செயல்பட்டு வருகின்றன. இதில் 124 கடைகள் சொந்தக் கட்டடத்திலும், 1,114 கடைகள் வாடகைக் கட்டடத்திலும் மற்றும் 216 கடைகள் வாடகை இன்றி பிற அரசுத் துறை கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. 125 நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசால் அறிவிக்கப்பட்டு இதுவரை 90 நியாய விலைக் கடைகளின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

4.8.4 நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டுதல்

விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்வதற்கு நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. ஒவ்வொரு நேரடி நெல் கொள்முதல் நிலையமும் சுமார் 33 சென்ட் பரப்பளவில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு சேமிப்பு வசதி, உலர்களம், நெல் தூற்றும் இயந்திரம், மின்னணு தராசு, ஈரப்பதமானி ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது. விவசாயிகளின் கோரிக்கையின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் மாநிலம் முழுவதும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன.

விவசாயிகளின் நலனில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மிக முக்கியப் பங்கு வகிப்பதால், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் அரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரும் நடவடிக்கை படிப்படியாக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 273 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் 2011 ஆம் ஆண்டு வரை இயங்கி வந்தன. மேலும், கடந்த 2011-2012 முதல் 2019–2020 ஆம் ஆண்டு வரை 385 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசால் அறிவிக்கப்பட்டு, அவற்றில் 258 இடங்களில் ரூ.79.95 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

4.8.5 நெல் உலர்களம் அமைத்தல்

அரசு வரையறுத்துள்ள நெல்லின் ஈரப்பத அளவிற்கு நெல்லினை உலர்த்துவதற்கும், நெல்லினை சுத்தப்படுத்தி தரம் பிரிப்பதனால் ஏற்படும் இழப்பினைத் தவிர்க்கும் பொருட்டும், டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் நெல் உலர்களங்கள் அமைக்க அரசால் அறிவிக்கப்பட்டது. மேலும் கடந்த 2011–2012 முதல் 2019–2020 ஆம் ஆண்டு வரை 535 நெல் உலர்களங்கள் கட்ட அரசால் அறிவிக்கப்பட்டு, அவற்றில் 335 இடங்களில் ரூ.26.91 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள நெல் உலர்களம் கட்ட வருவாய்த் துறை அல்லது இனாம் சாசனமாக நிலம் கையகப்படுத்தப்பட்டு கட்டி முடிக்கப்படும்.

4.8.6 நவீன அரிசி ஆலைகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான 21 நவீன அரிசி ஆலைகளின் மாதாந்திர அரவைத்திறன் 52,500 மெ.டன் ஆகும். 15 நவீன அரிசி ஆலைகளில் புழுங்கல் அரிசியும், 6 நவீன அரிசி ஆலைகளில் பச்சரிசியும் அரவை செய்யப்படுகிறது. அரிசியின் தரத்தை மேம்படுத்திட அனைத்து நவீன அரிசி ஆலைகளிலும் நவீன இயந்திரங்கள்மூலம் செயல்படுவதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசினால் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு படிப்படியாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றில் முதல் கட்டமாக 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.26.27 கோடி செலவிலும், இரண்டாவது கட்டமாக 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.32.60 கோடி செலவிலும், நவீனமயமாக்கப்பட்டு நல்ல நிலையிலும் இயங்கி வருகின்றன. மூன்றாவது கட்டமாக 2015-2016 ஆம் ஆண்டு முதல் மீதமுள்ள 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.36.00 கோடி செலவில் நவீனமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

4.8.7 கிடங்குகளின் செயல்பாடுகளை இயந்திரமயமாக்குதல்

தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 11.37 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 246 சொந்தக் கிடங்குகள் செயல்பாட்டில் உள்ளன. பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்களை ஏற்றுதல், இறக்குதல், நகர்வு

2020 மார்ச் 19]

செய்தல் மற்றும் தேவையான உயரத்திற்கு அட்டியிடுதல் ஆகிய பணிகள் தற்பொழுது சுமை தூக்குவோரால் கையாளப்படுகின்றன. பொது விநியோகத் திட்ட பொருள்கள் தவிர சிமெண்ட் மூட்டைகள் போன்றவற்றையும் இவர்கள் கையாளுகின்றனர். மேலும், கொள்முதல் செய்யப்படும் அத்தியாவசியப் பொருள்களை கிடங்குகளில் இறக்குதல் மற்றும் சமச்சீர் செய்து சிப்பமிடுதல் போன்ற இதர பணிகளையும் மேற்கொள்கின்றனர். இவர்களின் பணிகளை எளிதாக்கும் வகையில் தற்பொழுது கட்டப்பட்டு வரும் அதிக கொள்ளளவு கொண்ட கிடங்குகளில் தானியங்கி இழுவை இயந்திரங்கள் (Conveyors), சுமையினை ஏற்றி இறக்கி அட்டியிடும் இயந்திரங்கள் (Stackers), தானியங்கி சுமைதூக்கி (Fork lift) மற்றும் மின்னாக்கிகள் (Generator) போன்றவற்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் கூடுதலாக 2018-2019 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள கிடங்குகளுக்கு மொத்தம் ரூ.40 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் இயந்திரமயமாக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டப் பேரவை விதி எண் 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டுள்ளது.

4.8.8 சேமிப்புக் கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலை ஆகியவற்றின் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள சேமிப்புக் கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலை வளாகங்களின் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளான சாலை, குடிநீர், கழிவறை, தொழிலாளர் ஓய்வறை மற்றும் பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள நிதியாண்டு 2011–2012 முதல் 2019-2020 வரை ரூ.215.94 கோடி அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.8.9 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல அலுவலங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுதல்

அரியலூர் மற்றும் திருவள்ளூர் மண்டல அலுவலகங்களுக்கு பணியாளர்களின் நலன் கருதியும், பொது விநியோகத் திட்டங்களின் செயல்பாடுகள் சிறப்பாக செயல்படுத்த வேண்டியுள்ளதாலும் அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய அலுவலகக் கட்டடங்கள்

[2020 மார்ச் 19

தலா ரூ.1.00 கோடி வீதம் மொத்தம் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் நிதியாண்டு 2016–2017-ல் அரசால் அறிவிக்கப்பட்டது. அதன்படி அரியலூர் மண்டல அலுவலகம் ரூ.1.00 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.02.2019 அன்று பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

4.8.10 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைமை அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைமை அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் ரூ.4.07 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களால் நிதியாண்டு 2014–2015–ல் அறிவிக்கப்பட்டது. அதன்படி தலைமை அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27-2-2019 அன்று திறந்து வைக்கப்பட்டது.

4.8.11 குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டுதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் சென்னை நந்தனம் பகுதியில் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநருக்கு ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 11-12-2013 மற்றும் 12-12-2013 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்களின் கலந்தாய்வுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. அதன்படி அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27-2-2019 அன்று பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

4.8.12 தமிழ்நாடுநுகர்பொருள்வாணிபக்கழகதொடர்பயன்பாட்டில் உள்ள பழைய சொந்த கிடங்குகளின் கல்நார் மேற்கூரை (AC sheet)அகற்றி நவீன இரும்புத் தகடு கூரை அமைப்பான (Galvalume sheet) மேற்கூரையினை அமைத்தல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 300 சொந்த கிடங்குக் கட்டடங்களில் தற்போது முதற்கட்டமாக

2020 மார்ச் 19]

100 கிடங்குகளின் மேற்கூரை அமைப்பான கல்நார் கூரை தகடுகளை அகற்றி, நவீன கூரை அமைப்பான வர்ணம் தீட்டப்பட்ட, ஸ்திரத் தன்மை கொண்ட துருப்பிடிக்காத இரும்புக் கூரையினை அமைக்க நிதியாண்டு 2018-2019-ல் ரூ.45 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டப் பேரவை விதி எண் 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டது.

4.9 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படும் இதர சேவைகள்

4.9.1 அமுதம் பல்பொருள் அங்காடிகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சென்னையில் 19 கடைகளும், கடலூரில் 3 கடைகளும் ஆக மொத்தம் 22 அமுதம் பல்பொருள் அங்காடிகளை நடத்தி வருகிறது. இவ்வங்காடிகளில் வெளிச்சந்தை அரிசி, சர்க்கரை, பருப்பு, தானியங்கள் மற்றும் அன்றாடம் தேவைப்படும் நுகர்பொருட்கள் குறைவான விலையில் விற்கப்படுகின்றன. இதனால் வெளிச்சந்தையில் பொருட்களின் விலையேற்றம் திறம்பட கட்டுப்படுத்தப்படுகிறது. இவ்வங்காடிகளின் மொத்த விற்பனை ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரையில் ரூ.28.20 கோடி ஆகும்.

4.9.2 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள்

அமுதம் பல்பொருள் அங்காடிகள் மட்டுமல்லாது அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பொது மக்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 30 மாவட்டங்களில் 72 பல்பொருள் அங்காடிகளை அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள் என்னும் பெயரில் செயல்படுத்தி வருகிறது. இவ்வங்காடிகளில் மொத்த விற்பனை ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரையில் ரூ.6.21 கோடி ஆகும்.

4.9.3 பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெய்வேலி, திருப்பத்தூர் மற்றும் பட்டுக்கோட்டையில் பெட்ரோல் /டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரையிலான நிகர இலாபம் ரூ.50.10 இலட்சம் ஆகும்.

[2020 மார்ச் 19

4.9.4 சமையல் எரிவாயு விநியோக நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் திருச்சி, திருவண்ணாமலை, உதகை, இராமநாதபுரம் மற்றும் மண்டபம் ஆகிய இடங்களில் சமையல் எரிவாயு விநியோக முகவராக செயல்படுகிறது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரையிலான நிகர இலாபம் ரூ.1.17 கோடி ஆகும்.

4.9.5 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 14 மண்டலங்களில் 36 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களை இயக்கி வருகிறது. இவற்றுள் 27 சில்லறை விற்பனை நிலையங்களாகவும், 8 சில்லறை மற்றும் மொத்த விற்பனை நிலையங்களாகவும், ஒன்று மட்டும் மொத்த விற்பனை நிலையமாகவும் செயல்படுகின்றன.

4.9.6 பண்ணைப் பசுமை நுகர்வோர் அங்காடிகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் காய்கறிகளை விற்பனை செய்வதற்காக பண்ணைப் பசுமை நுகர்வோர் அங்காடி திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. 14 பண்ணைப் பசுமை நுகர்வோர் அங்காடிகளை சென்னையில் நடத்தி வருகிறது. அவற்றில் 7 அங்காடிகள் நிரந்தரமாகவும் மற்றும் 7 அங்காடிகள் தற்காலிகமாகவும் செயல்பட்டு வருகின்றன. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை ரூ.11.46 இலட்சம் மதிப்பிலான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

4.9.7 அம்மா உணவகத்திற்கு உணவுப் பொருட்கள் வழங்குதல்

ஏனைய இதர திட்டங்களுடன் கூலித் தொழிலாளர்கள் மற்றும் ஏழை எளியோருக்கு சுகாதாரமான உணவு வழங்கும் பொருட்டு அரசால் 19-2-2013 அன்று அம்மா உணவகங்கள் துவங்கி வைக்கப்பட்டன. அரசு உத்தரவின்படி அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசியும், சென்னை மாநகராட்சி எல்லைக்குள் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசி மற்றும் கோதுமையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

2020 மார்ச் 19]

ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரையிலான காலத்தில் 6387.638 மெ.டன் அரிசியும், 1003.950 மெ.டன் கோதுமையும் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

4.10 இதர சேவைகள்

4.10.1 அம்மா சிமென்ட் விநியோகத் திட்டம்

இத்திட்டத்தின்மூலம் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் 50 கிலோ சிமென்ட் மூட்டை ஒன்று ரூபாய் 190/-க்கு (வரிகள் உட்பட) விற்பனை செய்யப்படுகிறது இந்தத் திட்டத்தின் வாயிலாக தகுதியுள்ள பயனாளிகள் தங்களது கட்டுமான மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்கு கீழ்க்கண்ட அடிப்படையில் சிமென்ட் மூட்டைகள் வாங்கிக்கொள்ள தகுதி பெறுகின்றனர்:

ஆவண ஆதாரம்	அங்கீகரிக்கப்பட்ட திட்ட வரைபடம் அல்லது கிராம நிருவாக அலுவலர்/ வருவாய் ஆய்வாளர்/ ஒன்றிய மேற்பார்வையாளர்/ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சாலை ஆய்வாளர் வழங்கும் அங்கீகாரக் கடிதம்
கட்டடம் பழுது பார்க்க	குறைந்தபட்சம் 10 மூட்டைகள் அதிக பட்சம் 100 மூட்டைகள்
வீடு கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட அளவு	500 சதுர அடிக்கு-250 மூட்டைகள் 501-1000 சதுர அடிக்கு- 500 மூட்டைகள்
அதிகபட்சம் 1500 சதுர அடி 1500 சதுர அடிக்கு 50 மூட்டைகள் வீதம்	1001-1500 சதுர அடிக்கு – 750 மூட்டைகள்

தமிழ்நாடு சிமென்ட் கழகத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் சிமென்ட் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

அம்மா சிமெண்ட் விற்பனை விவரம் ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை பின்வருமாறு:

ஆரம்ப இருப்பு (மூட்டைகள்)	வரவு (மூட்டைகள்)	மொத்த (மூட்டைகள்)	மொத்த விற்பனை (மூட்டைகள்)	இறுதி இருப்பு	மூட்டை ஒன்றிற்கு ரூ. 3.50 வரை விற்பனை வரவு (ரூபாய்)
43,269	62,84,176	63,27,445	62,53,400	74,045	2,18,86,900.00

4.10.2 அம்மா உப்பு விற்பனை

மக்களின் அயோடின் குறைபாடுகளைக் களையும் வண்ணம் பொது மக்களின் பயன்பாட்டிற்கு சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு, இருமடங்கு செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் குறைந்த அளவு சோடியம் உப்பு ஆகிய மூன்று விதமான உப்புகள் தமிழ்நாடு உப்பு நிறுவனம்மூலம் பெறப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அமுதம் பல்பொருள் அங்காடிகள், அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள் மற்றும் நியாய விலைக் கடைகள் மூலமாக பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இக்கடைகளின்மூலம் மாதந்தோறும் சராசரியாக 105.768 மெ.டன் உப்பு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

4.10.3 ஊட்டித் தேயிலை

தமிழ்நாடு அரசு ஆணையின்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நியாய விலைக் கடைகள், அமுதம் பல்பொருள் அங்காடிகள் மற்றும் அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகளின் மூலம் ஊட்டித் தேயிலைத் தூள் 100 கிராம் ரூ.19/- என விற்பனை செய்யப்படுகிறது. மேலும் அரசு TANTEA-யினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அமுதம் சில்லறை அங்காடிகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் மூலமும் விற்பனை செய்ய ஆணையிட்டுள்ளது.

2020 மார்ச் 19]

TANTEA-தூள் 100 கிராம் பாக்கெட் ஒன்றிற்கு ரூ.21/- என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4.11 தகவல் தொழில் நுட்பம்

4.11.1 கண்காணிப்பு முழு கணினிமயமாவதை கண்காணித்தல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் முழு கணினிமயமாக்குதல் திட்டம் (End to End computerization) துவங்கப்பட்டு பொது விநியோகத் திட்டத்திற்காக மேற்கொள்ளப்படும் கொள்முதல் பணிகள் துவங்கி குடும்ப அட்டைதாரர்களிடம் விநியோகம் செய்யப்படும் நிலை வரை கண்காணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப் பொருட்கள் விநியோகிக்கும் முறைகள் எளிமையாக்கப்பட்டு உடனடியாக ஏற்பளிப்பு வழங்கப்படுகிறது. மேலும் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு வழங்கப்படும் அனைத்து நிகழ்வுகளும், G2G வலைதளம் மூலம் கண்காணிக்கப்படுகிறது. கிடங்குகள் மற்றும் சில்லரை அங்காடிகளில் உணவுப் பொருட்களின் இருப்பு விவரம் MIS இணையவழி மூலமாக துல்லியமாக அவ்வப்போது கண்காணிக்கப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின் அனைத்து நிகழ்வுகளையும் www.tnpds.gov.in என்ற இணையதளம்மூலம் அனைத்து பொது மக்களும் அறிந்துகொள்ளும் வகையில் இச்சேவை தமிழக அரசின் மூலம் நடைபெற்று வருகிறது.

4.11.2 மின்னணு கொள்முதல்

டெல்டா மற்றும் இதர மாவட்டங்களில் நெல் கொள்முதல் முறைகள் முழுமையாக கணினிமயமாக்கப்படும் வகையில் விவசாயிகளிடம் பெறப்படும் நெல்லுக்கான கொள்முதல் தொகையினை மின்னணு முறையில் (ECS) அவரவர் வங்கிக் கணக்கிலேயே வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தினசரி கொள்முதலின் விவரங்கள் இணைய முகப்பு (https://nfpp.nic.in) மூலம் மத்திய அரசுக்கு பகிரப்படுகிறது.

[2020 மார்ச் 19

4.11.3 மின் கண்காணிப்பு அமைப்பு (CCTV-Camera and GPS-Devices)

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள 260 கிடங்குகளில் செயல்படும் 3,000 லாரிகளில் GPS கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், 2869 CCTV கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் கிடங்குகளைக் கண்காணிக்க ஏதுவாக கிடங்கு மென்பொருளை இணைய பயன்பாட்டு மென்பொருட்களுடன் இணைத்தும் மற்றும் நவீன கட்டுப்பாட்டு அறை அமைத்தும் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4.12 தரக்கட்டுப்பாடு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிருவாகம் நன்றாக வடிவமைக்கப்பட்ட தரக்கட்டுப்பாட்டுத் துறை செயல்பாட்டினால் ஒவ்வொரு வட்ட செயல்முறை கிடங்கிலும் அறிவியல் முறைப்படி செம்மையாக சேமித்து வைக்கப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை, பருப்பு மற்றும் பாமாயில் போன்ற உணவுப் பொருட்களின் தரம் தொடர்ச்சியாக அளவிடப்படுகிறது. அவ்வப்போது உணவுப் பொருட்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு தரம் 100% உறுதி செய்யப்படுகிறது. விஞ்ஞான முறையில் கிடங்குகள் அமைக்கப்பட்டு காலமுறைப்படி பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டும், புகை மூட்டம் செய்யப்பட்டும், தரத்தினைப் பாதுகாக்கவும், சேமிப்பு இழப்பைத் தடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், உணவுப் பொருட்களின் ஈரப்பத அளவினை அறிய ஈரப்பதமானி, பகுப்பாய்வு செய்வதற்கான ஆய்வக உபகரணங்கள், புகை மூட்டம் செய்ய கருப்பு பாலிதீன் உறைகள், அட்டி அமைக்க இரும்பு மற்றும் பாலி பெல்லட் அட்டி கட்டைகள், புற ஊதா விளக்குப்பொறி மற்றும் மருந்து தெளிப்பான் போன்ற உபகரணங்களைக் கொண்டு பூச்சிகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தியும் உணவு தானியங்களின் தரம் உறுதி செய்யப்படுகிறது. இதே மாதிரியான தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள் நவீன அரிசி ஆலைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 19]

4.13 நிதி நிலை

இந்நிறுவனத்தின் தற்போதைய அனுமதிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ.100 கோடி மற்றும் ரூ.71.73 கோடியாக உள்ளது.

2014-2015 முதல் 2018-2019 வரை இக்கழகத்தின் விற்றுமுதல் கீழ்க் கண்டவாறு உள்ளது:

வருடம்	ரூ.கோடியில்
2014-2015	ரூ.8422.55 கோடி
2015-2016	ரூ.10153.42 கோடி
2016-2017	ரூ.9739.99 கோடி
2017-2018	ரூ.7853.84 கோடி
2018-2019	ரூ.11085.50 கோடி (தோராயமாக)

2020-2021 ஆம் நிதியாண்டிற்கு ரூபாய் 6.500.00 கோடி உணவு மானியமாக தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இயல்–5

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

5.1 முன்னுரை

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், விவசாயப் பொருட்கள் மற்றும் இதர வியாபார நிறுவனங்களில் பொருட்களுக்கு தகுந்த பாதுகாப்பு வசதிகள் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, விஞ்ஞான ரீதியிலான சேமிப்பு வசதிகளை விவசாயிகள் மற்றும் இதர வியாபார நிறுவனங்களுக்கு வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. இது வேளாண் உற்பத்தி (மேம்பாடு மற்றும் சேமிப்புக் கிடங்கு) நிறுவனச் சட்டம், 1956-ன்படி தோற்றுவிக்கப்பட்டு, 2-5-1958 முதல் தனது பணிகளைத் தொடங்கியது.

5.2 செயல்பாடுகள்

இந்நிறுவனம் பொருட்களின் சேமிப்பு இழப்பினைக் கட்டுப்படுத்தவும் பொருட்களின் சேமிப்புத் திறனை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, சேமிப்புக் கிடங்குகளை கட்டியும், இயக்கியும் வருகிறது. மேலும், சந்தை வாய்ப்புகளை ஆய்வு செய்து சேமிப்புக் கிடங்கு வசதிகளை மாநிலம் முழுவதும் உருவாக்கி மாநிலத்தின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள விவசாயிகள் மற்றும் இதர வியாபார நிறுவனங்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை சேமிப்பதற்காக இக்கிடங்கு வசதிகளை உருவாக்கியுள்ளது. தற்போது இந்நிறுவனத்திற்கு மாநிலம் முழுவதும் 60 இடங்களில் 270 கிடங்குகள் உள்ளன.

5.3 நிறுவனத்தின் அமைப்பு

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனங்கள் 7 மண்டல அலுவலகங்களாக கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் செயல்பட்டு வருகின்றன. இம்மண்டல அலுவலகங்கள் முதுநிலை மண்டல மேலாளர்/மண்டல மேலாளர் கட்டுப்பாட்டிலும் மற்றும் சேமிப்புக் கிடங்குகள் அனைத்தும் கிடங்கு மேலாளர்களாலும் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்தின் ஒட்டுமொத்த மேலாண்மை மற்றும் கண்காணிப்பு 11 (பதினொரு) இயக்குநர்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. குழுமத் தலைவர் மற்றும் 5 (ஐந்து) இயக்குநர்கள் மாநில அரசாலும், 5 (ஐந்து) இயக்குநர்கள் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பாகவும் நியமனம் செய்யப்படுகின்றனர்.

5.4 சேமிப்புக் கொள்ளளவு

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மொத்த சேமிப்புக் கொள்ளளவு 7.62 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். இவற்றில் 7.60 இலட்சம் மெட்ரிக் டன் சொந்த சேமிப்புக் கிடங்குகளிலும், 0.02 இலட்சம் மெட்ரிக் டன் வாடகை வளாகங்களிலும் செயல்படுகின்றது.

2020 மார்ச் 19]

5.5 பயன்பாடு

இந்நிறுவனத்தின் சேமிப்புக் கிடங்குகள், முக்கியமாக இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், ஆவின், தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம், சர்க்கரை ஆலைகள், உர உற்பத்தி நிறுவனங்கள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், இந்திய புகையிலை நிறுவனம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தேசிய கூட்டுறவு விற்பனை இணையம், தனியார் வியாபார நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 2019-2020 ஆம் நிதியாண்டில் மொத்தக் கொள்ளளவில் 73% சதவீத பயனீட்டு அளவைத் தொடர்ந்து எய்தியுள்ளது. மேலும், 31-1-2020 வரை கொள்ளளவு 80 விழுக்காடாகும்.

5.6 சேமிப்புக் கிடங்கினைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் இருப்பு வைப்புக் கட்டணத்தில் தள்ளுபடி

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் அரசு/ பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுக்கு இருப்பு வைப்புக் கட்டணத்தில் கீழ்க்கண்டவாறு தள்ளுபடி அளித்து வருகிறது:

வ. எண்	சேமிப்புக் கிடங்கு பயன்படுத்துபவர்	பொருள்	தள்ளுபடி (விழுக்காட்டில்)
1.	விவசாயிகள்	உணவு தானியங்கள்	30
2.	தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்	உணவு தானியங்கள்	30
3.	தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்	நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பாடப் புத்தகங்கள்	25
4.	வருவாய்த் துறை	மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்	20

வ. எண்	சேமிப்புக் கிடங்கு பயன்படுத்துபவர்	பொருள்	தள்ளுபடி (விழுக்காட்டில்)
5.	கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்	சர்க்கரை	20
6.	ஆவின்	பால் பொருட்கள்	20
7.	MFL, IFFCO, FACT மற்றும் KRIBHCO போன்ற பொதுத் துறை உர உற்பத்தி நிறுவனங்கள்	உரம்	10
8.	கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் / தமிழ்நாடு மாநில விற்பனை இணையம், தேசிய கூட்டுறவு விற்பனை இணையம் முதலியன	வேட்டிகள், சேலைகள் விவசாயப் பொருட்களான கொப்பரை, சோளம் முதலியன	10
9.	தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC)	இந்தியத் தயாரிப்பு வெளிநாட்டு மதுபானம்	10
10.	தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்	காகித தயாரிப்புகள்	30
11.	இந்திய உணவுக் கழகம்	மத்திய அரசு நிர்ணயிக்கும் சேமிப்புக் கட்டணம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.	

5.7 சேமிப்புக் கொள்ளளவை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

2019–2020 ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள புதிய கிடங்கானது தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன சொந்த நிதிமூலம் கட்டப்பட்டுள்ளது:

2020 மார்ச் 19]

வ. எண்	அமைவிடம்	கிடங்குகளின் எண்ணிக்கை	கொள் அளவு (மெ. டன்)	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)
1.	சின்னதம்பி பாளையம் கிராமம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.	1 (புதியது)	3,500	5.27

5.8 சேமிப்பு வசதியை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

5.8.1 பூச்சித் தடுப்பு நடவடிக்கைகள்

(அ) கிடங்கில் சேமித்து வைக்கப்படும் சரக்குகளை விஞ்ஞான முறையில் பராமரிக்கவும் மேலும் பூச்சித் தொல்லைகளில் இருந்து பாதுகாத்திடவும் தொடர்ந்து பூச்சிக் கொல்லி மருந்துகள் அடிக்கப்பட்டும் மற்றும் புகை மூட்டம் மூலமும் சரக்குகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இந்நிறுவனம் (கட்டுமானப் பணிக்கு முன்னர் மற்றும் கட்டடம் கட்டிய பிறகு ஏற்படும் கரையான் தடுப்பு உட்பட) அரசுத் துறைகள் மற்றும் அரசு பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு பூச்சித் தடுப்பு நடவடிக்கைகளை செய்து வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் இந்நடவடிக்கைகள் மூலம் ரூ.80.00 இலட்சம் வருவாய் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5.8.2 ஊழியர்களுக்குப் பயிற்சி

ஒவ்வோர் ஆண்டும் சேமிப்புக் கிடங்கு நிறுவன ஊழியர்களுக்கு ஐதராபாத்தில் உள்ள ஐஜிஎம்ஆர்ஐ (IGMRI) பயிற்சி நிறுவனம் மூலம் பல்வேறு வகைகளில் பூச்சிக் கொல்லிகள் உபயோகம் மற்றும் தரக்கட்டுப்பாடுமூலம் விவசாய பொருட்களில் ஏற்படும் சேமிப்பு இழப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 19

5.9 நிதிச் செயலாக்கம்

கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிதிச் செயலாக்க நடவடிக்கைகள் பின்வருமாறு:-

விவரம்	2017-2018	2018-2019	2019-2020 (உத்தேசமாக)
	(ரூபாய் கோடியில்)		
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (மாநில அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தலா 50%	7.61	7.61	7.61
மொத்த வருமானம்	69.55	69.38	73.20
செலவு	46.58	45.42	48.73
வரி செலுத்தும் முன் இலாபம்	22.97	23.96	24.47

5.10 ஆதாயப் பங்கு

2018–2019 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஈட்டிய நிகர லாபமான ரூபாய் 17.52 கோடியிலிருந்து முன்மொழியப்பட்ட 30% ஆதாயப் பலனான ரூ.5.25 கோடி தனது பங்கு முதலீட்டாளர்களுக்கு கடந்த 22-1-2020 அன்று வழங்கப்பட்டது.

5.11 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளின்மீது கடன் வசதிகள்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் அனைத்து சேமிப்புக் கிடங்குகளையும் ‘‘சேமிப்புக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம், 2007"-ன்கீழ் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தற்போது மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை மின்னணுப் படிவம் மூலம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்முலம் சேமிப்புக் கிடங்கு பயனாளிகள் ரசீதுகளை

சுலபமாக அடகு வைக்கவோ அல்லது மாற்றிடவோ இயலும். மேலும் பயனாளிகள் மின்னணு சேமிப்புக் கிடங்கு ரசீதுகள்மூலம் சுலபமாக வங்கிக் கடன் பெற இயலும். மேலும், இவ்வசதிமூலம் அவர்களது சரக்குகளை இணையவழி வசதியில் விற்பனை செய்திடலாம். சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை அடமானம் வைப்பதன்மூலம் தங்களது சரக்கு இருப்பின் மதிப்பில் 60% முதல் 80% வரை கடன் பெற்று வருகின்றனர். 2019-2020 ஆம் ஆண்டில் 99 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகள் வழங்கப்பட்டு அவற்றின்மீது ரூ.1.46 கோடி கடன் பெறப்பட்டுள்ளது.

5.12 சமூகக் கூட்டாண்மைப் பொறுப்பு (CSR Activities)

2019-2020 ஆம் ஆண்டில் சமூகக் கூட்டாண்மைப் பொறுப்புத் திட்டத்தினைச் செயல்படுத்திட நிகர இலாபத்தில் ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு பயனாளி கண்டறியப்பட்டு (ஹியுமன் அப்ளிப்ட்ஸ் டிரஸ்ட், பெரம்பலூர்/ Human Uplifts Trust, Perambalur) அதற்கு ரூ.9.00 இலட்சம் சமூகக் கூட்டாண்மைப் பொறுப்பு நிதி வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதர பயனாளிகளைக் கண்டறியும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இப்பணி விரைவில் முடிவடையும்.

இயல்-6

அமலாக்கம்

6.1 முன்னுரை

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955, கள்ளச் சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்பு சட்டம், 1980-ன்கீழ் மத்திய அரசாலும், மாநில அரசாலும் வெளியிடப்பட்ட பல கட்டுப்பாட்டு ஆணைகளை அமல்படுத்துகிறது. இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் வாயிலாக கைது, கைப்பற்றுதல், பறிமுதல் செய்தல், பறிப்பிழக்க விசாரணை மற்றும் சோதனை மேற்கொள்ளப்படுகிறது. கடத்தல்காரர்களை முன்னெச்சரிக்கையாக 6 மாதம் வரை தடுப்புக் காவலில் வைக்க கள்ளச் சந்தைத் தடுப்புச் சட்டம் அனுமதிக்கிறது.

6.2 குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அமைப்பும் அதன் செயல்பாடுகளும்

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, காவல் துறை இயக்குநர் தலைமையில் ஒரு காவல் துறைத் தலைவர், 2 காவல் கண்காணிப்பாளர்கள் (சென்னை மற்றும் மதுரை மண்டலம்) மற்றும் நான்கு துணைக் கண்காணிப்பாளர்களைக் (சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை) கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தத் துறையில் உள்ள 33 அலகுகளில், 22 அலகுகள் காவல் ஆய்வாளர்கள் தலைமையிலும் மற்றும் 11 அலகுகள் காவல் உதவி ஆய்வாளர்கள் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன. இதைத் தவிர எல்லையோர மாவட்டங்களான கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் ஐந்து சிறப்பு ரோந்துப் படைகள் இயங்கி வருகின்றன.

6.3 குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலானாய்வுத் துறையின் சாதனைகள்

2019 ஆம் ஆண்டு மற்றும் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 31 வரை மொத்தம் 6,947 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கீழ்க்கண்டவாறு அத்தியாவசியப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன:-

1. 17,640 குவிண்டால் பொது விநியோகத் திட்ட அரிசி மதிப்பு ரூ.4,95,67,163.60.
2. 13,233 லிட்டர் மண்ணெண்ணெய் மதிப்பு ரூ.1,98,495.
3. 661 எண்ணிக்கை எரிவாயு உருளைகள் மதிப்பு ரூ.5,94,900.

கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.5,34,16,925.60 ஆகும். 4,870 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 1339 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

தென் மாநிலங்களில் துடிப்புடன் செயல்பட்டு வந்த கடத்தல்காரர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. உறுதியான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 19]

6.4. கள்ளச் சந்தை தடுப்புக் காவல்

2019 ஆம் ஆண்டு மற்றும் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 31 வரை 29 நபர்கள் கள்ளச் சந்தை தடுப்புக் காவல் சட்டம், 1980-ன்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

6.5 சமுதாய வலைத்தள பகுப்பாய்வு


வலைத்தளம் மற்றும் வரைபடம் மூலம் சமுதாய அமைப்பைப் பற்றித் தெரிந்துகொள்வதே சமுதாய வலைத்தள பகுப்பாய்வு என்பதாகும். இத்தகைய பகுப்பாய்வுகள், சட்ட அமலாக்கத்தில் குற்றவாளிகள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பயன்படுத்தும் அலைபேசி எண்கள், அவர்களின் தங்குமிடம்/பதுங்குமிடம், உடந்தையாட்கள்/ கூட்டாளிகள் மற்றும் அவர்களது தொடர்பு அலைபேசி எண்கள், குற்றவாளிகள் பயன்படுத்தும் வாகனங்கள் அவர்கள் தொடர்பான ஆவணங்களைப் பராமரித்தல் மற்றும் உடனுக்குடன் அனைத்து விவரங்களையும் மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுக்க உறுதுணையாக இருக்கும்.

முடிவுரை

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்ந்து பெரும் முயற்சி மேற்கொள்கிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்களை குறித்த நேரத்தில் வழங்குவதற்காக விநியோக முறைகளை சீராக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய பரந்த அளவிலான பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்திடவும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையினைக் கட்டுக்குள் வைத்திடவும் அரசு தொடர்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.


நுகர்வோரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானது என அரசு ஏற்றுக்கொள்கிறது. இது தவிர நுகர்வோரின் குறைகளைக் களைந்திட வலுவான கட்டமைப்பு மற்றும் நுகர்வோருக்கான உரிமைகள் மற்றும் கடமைகளைத் தெரிந்துகொள்ள விழிப்புணர்வினை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


பயிர்க் கடன் வ



பயிர்க் கடன்(ரூபாய் கோடியில்)
10400
9100
7800
6500
5200
3900
2600
1300
0
5868.31
4227.98
2015-2016
2016-2017


ழங்கியது



6220.27
8127.68
8406.39
2017-2018
2018-2019
2019-2020
(29-2-2020 முடிய)
ஆண்டு



சுயஉதவிக்
1900.00
1650.00
1500.00
1350.00
1200.00
1050.00
900.00
750.00
600.00
450.00
300.00
150.00
0
(ரூபாய் கோடியில்)
617.89
525.99
2015-2016
2016-2017


ளுக்குக் கடனுதவி






பண்ணைப் பசுமை நுகர்
விற்பனை அளவு (மெ
14000
12000
10000
8000
6000
4000
2000
0
7013
8530
976
2015-2016
2016-2017
2017

ர்வோர் கடைகளில்
மெட்ரிக் டன்னில்)



அம்மா மருந்தகங்கள் ம
மருந்தகங்கள் விற்ப





ற்றும் கூட்டுறவு
னை விவரம்
38
159.39
149.65
3
2018-2019
2019-2020
(29-2-2020 முடிய)

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.